45
1-1/72-4

இராஜ புத்திர விஜயம்

அல்லது

வீர புருஷர் சரித்திரம்

இது

[illegible]

எழுதியது.

சென்னை

மயிலாப்பூர் [illegible] கம்பெனி.

இராஜபுத்திர விஜயம்

2 - JAN 1924

954
4018

இந் நூலாசிரியர்

எழுதியுள்ள இதர நூல்கள்

1. ராஜாமணி மாரன்
2. திருக்குறள் நீதிக்கதைகள்
3. ஆரிய சரித்திரம்
4. மகாத்மாவின் ஜீவிய சரித்திரம்
5. இந்தியாவும் சுய ஆட்சியும்
6. இதர தேசங்களில் ஒத்துழையாமை
7. ஐசுவரிய சக்கரம்
8. ஒப்பந்தக் கூலிமுறை
9. குட்டிக் கதைகள் (அச்சில்)

இராஜ புத்திர விஜயத்தின் இதர ஐந்து பாகங்களும் எழுதி முடிந்துள. அவற்றை ஆண்டவனது அருளையும் தமிழ் மக்களின் ஆதரவையும் முன்னிட்டு, விரைவில் அச்சிட்டு, வெளியிடக் கருதியுள்ளோம்.

இராஜபுத்திர விஜயம்

அல்லது

வீரபுருஷர் சரித்திரம்

2 - JAN 1924

முதல்பாகம்

(சித்திரப் படங்களுடன்)

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

எழுதியது

மயில்வாகன் கம்பெனி
32, ஐயப்ப செட்டி வீதி
மண்ணடி, மதருஸ்.

விலை ரூ. 1—4—0]   1923   [தபால்கூலி வேறு

காபிரைட்

மத்தியபதி சரித்திரம்

முதல் பாகம்

முதல் பதிப்பு 2000,

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார்

2-JAN 1924

உரிமையுரை

"ஊருணி நீர் நிறைந்தற்றே, உலகவாம்
பேரறிவாளன் திரு."

என்ற

திருவள்ளுவர்தம் வாக்கினுக்கோர் இலக்காகிப்
பலருக்கும் பேருதவி புரிந்துவரும் பெருமானும்,
நம்மவர்தம் சுகபோக நலத்தினுக் கோராதாரமாந்
தேசிய மகா சபையின் திலகமெனத் திகழ்வானும்,
தாயவட்கு ஊழியஞ்செய் தொண்டர்தம துளங்களிக்க
அன்னையைப்போ லணைத்துதவுங் கருணைநிதி யாவானும்,

ஆன

நம் சென்னை நகர்ச் செல்வன்
ஸ்ரீமான்
எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களின்
அருள்கொண்டு நிலவிவரும்
"இராஜபுத்திர விஜய"மதை
அவர்தமக்கே சமர்ப்பிப்பேன் சிறப்பாக.

INTRODUCTION

To introduce this book, the first of a projected series, describing the exploits of the heroes and heroines of Rajasthan, to the Tamil reading public, is an exceedingly pleasant task to me, as it affords me the most appropriate occasion to express my appreciation of the literary work that Mr. M. S. Subramania Iyer has done for the political and moral education of our people. He is a Tamil scholar gifted with the true charm of style; and moreover he is fully equipped with the knowledge of our political life and history. Trained as a journalist in the "Swadesa Mitran" office under the influence of the late Mr. G. Subramania Iyer, the most fearless and learned publicist of those days, and under Mr. A. Rangaswami Iyengar, the present able Editor, he has acquired a deep love of the motherland, not to speak of his literary accomplishments. He has been the author of several books, viz., Thirukkural Moral stories', 'Arya Charitram,' 'India and Home Rule,' 'The Wheel of Fortune' etc., read widely by all classes of people. As is well-known, his political activities attracted even the benevolent attention of Lord Wellingdon's Government and he was obliged to encroach on the hospitality of His Majesty's prison accomodation at Cuddalore for one year. It was during this enforced rest that he drew up the plan of the series, the first of which is now published.

The historical interest of the narrative is deeply absorbing. The annals of Rajput chivalry abound in instances of dauntless heroism and deathless fame. The deeds of chivalry are equal to, if not more exalted than those of European chivalry in the middle ages, with which Indians have become acquainted through the fascinating pages of Scott's Talisman. Not only in valor and love of motherland and Dharma of the military caste, did those heroes shine, but in the written and unwritten laws of honor, loyalty and fidelity to plighted word. I may assure those who read these words that Mr. M. S. Subramania Iyer has opened up the halls of ancient and mediaeval romance to our imagination; and we can see the Rajput knights and ladies riding by as in the tournaments of courts, or in the fiery ordeal of battle. What Indian will be left unmoved when he reads of the Rajput women throwing themselves into the fire without any fear, to escape the humiliation of capture to save the precious jewel of chastity! In these days when Indian nationhood is being devoleped to resume its ancient vigour and nobility, it is necessary that we should live near and drink deep of these fountains of patriotism and devotion to our national DHARMA. Beginning from the early Christian era, the author has traced the memorable periods in the history of the several Rajput states, the chief of which is Mewar, with its celebrated Chittoor, the CHITRAKUTA of Ramayana, the scene of the matchless deeds of valor in the history of Rajasthan. To enable the reader to grasp at a glance the contents of each page, the subject treated in it is mentioned at the top. Two illustrations adorn the book, one that of Pratap Singh the formidable

antagonist of Akbar, and the other that of the far-famed Chittore fortress, which had echoed and re-echoed to the tread of the armed chivalry of Aryavarta. In these pages we have history and not fable, teaching, as Bacon said, the philosophy of glowing life by means of golden deeds. I have no doubt that the TAMIL NADU will accord to the work a hospitable welcome, and it will by its appreciation of it and its rapid and wide sale, encourage the author to bring out the other volumes in succession. It must have been to him in those days of his incarceration in Cuddalore a labour of love and the Tamil Public ought thus to encourage his patriotic labour and literary zeal.

Egmore. }
21—11—23 }

V. Chakkarai. B. A., B. L.,
Editor, *The Christian Patriot.*

முகவுரை.

சீரிலும் சிறப்பிலும் பாரதமக்களுக்கு இணையாக வேறு எத்தேசத்தினரையும் இயம்பமுடியாதென மேனாட்டு மேதாவிகள் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். அத்தகைய பெருமைவாய்ந்த நம்மவரின் சரித்திரம் உள்ளது உள்ளபடி, நமது கலாசாலைகளிலும் பாடசாலைகளிலும் போதிக்கப்படுவதில்லை. மேலும், நம் இந்திய தேச சரித்திரத்தை உண்மையாகக் கூறும் நூல்களும் அவ்வளவாக வெளிவரவில்லை. ஆதலின், அத்தகைய நூலொன்று எழுதவேண்டுமென எனக்கு நெடுநாளாக ஆசையிருந்துவந்தது. அதற்காக ஆதி சரித்திர ஆசிரியர்கள் நம் தேசத்தைக் குறித்து எழுதிவைத்துள்ள பல ஆங்கில நூல்களை ஆவலுடன் படித்து வந்தேன். அப்பொழுது, நம் பாரதமக்களில் மிகச்சிறந்த ராஜபுத்திரர், மகாராஷ்டிரர், சீக்கியர், தமிழர் முதலிய பற்பல பெருமக்களின் சரிதத்தையாவது எழுத வேண்டுமென்று எனக்கு மிக்க ஊக்கம் உதித்தோங்கியது. அப்பால், கப்பலில் பாதிப்பாக்குப் போடுவதுபோல், இச்சென்னைமா நகரில் ஒரு சிறிது தேசசேவகம் புரிந்துவந்தேன. உடனே, நமது அரசாங்கம்என்மீது கருணைகூர்ந்து, ஒருவருஷ காலம் கூடலூர் சிறையிலே என்னைத் தனது விருந்தினரில் ஒருவனாக ஏற்றுக்கொள்ளலாயிற்று. அக்காலையிலே, எனக்குக் கிடைத்த அவகாசத்தை வீணே கழிக்க விருப்பமில்லாது, நெடுநாளாக இருந்துவந்த ஆவலை நிறைவேற்றலானேன். அதன் பயனாக, இராஜபுத்திரர்களின் சரித்திரம் ஆதியோடந்தமாக ஒருவாறு எழுதி முடிந்

தது. அதற்கு, ஆங்கிலத்திலே 1. கர்னல் டாட் என்பவர் எழுதியுள்ள இராஜ புதன சரித்திரம், 2. ஹாவல் என்பவர் எழுதியுள்ள ஆரியர் ஆட்சி, 3. கின்கெயிட் என்பவர் எழுதியுள்ள மகாராஷ்டிரர் சரித்திரம், 4. ஆசிரியர் யது நாத சர்க்கார் எழுதியுள்ள அவுரங்கசீப்பின் சரித்திரம், 5. மொகலாயரின் சரித்திரத் துணுக்குகள், 6. ஹரிவிலாஸ சாரதர் எழுதியுள்ள ஹிந்துக்களின் மேன்மை, 7. வின் ஸெண்டு ஸ்மித் எழுதியுள்ள இந்தியாவின் ஆதி சரித்திரம், முதலிய அரிய நூல்கள் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

இந்நூல் இராஜபுத்திரர் சரித்திரத்தின் முதல்புத்தக மாகும். இதனைத் தொடர்ந்து யான் எழுதி முடித்துள்ள இதர ஐந்து பாகங்களும் சனநுனையும் தமிழ்மக்களின் ஆதரவையும் முன்னிட்டு, விரைவில் வெளியாகும். அங்ஙனமாயின், வீர சிங்கங்களான இராஜ புத்திரரின் சரித்திரம் ஒருவாறு புத்தக வடிவாக முற்றுப்பெறும். எனது அரிய நண்பர்களான பாரிஸ்டர் ஸ்ரீமான் இ. எல். ஐயர், பி. ஏ., ஸ்ரீமான் வி. சக்கரைச் செட்டியார், பி. ஏ., பி. எல்., ஆகிய இருவரும் எனக்கு ஊக்கமும் உற்சாகமு மளித்து, இதனை வெளியாக்கும் வண்ணம், என்னைத் தூண்டிவந்தனர். அவ்விரு நண்பரும் எனக்குப் பல விதத்திலும் புரிந்துள்ள பேருதவியை நான் என்றும் மறக்க முடியாது.

சென்னை.
நவம்பர் 1923.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

இராஜபுதனம்

நமது பாரதகண்டத்தின் வடபாகத்திலே இராஜபுதனம் என்பது ஒருபெரிய நாடு. அது மத்தியபதி, மாருவாரம், ஜெயபுரி, ஜெயசிலமேரு, கோட்டை, பூண்டி, பேகநேரு எனப் பற்பல பாகமாக உள்ளது. அப்பாகங்களை இக்காலத்திலே அவற்றின் தலை நகரங்களைக் கொண்டு, உதயபுரி, ஜோதிபுரி என அழைத்து வருகின்றனர். இராஜ வமிசத்தைச் சேர்ந்தோர் வசித்துவரும் நாடாதலின், இராஜபுதனமென அப் பெருநாட்டுக்குப் பெயர் வந்ததுபோலும். அங்கே வசித்துவருவோர் அன்றும் இன்றும் இராஜபுத்திரர் என அழைக்கப்படுவர். அவர்கள் அனைவரும் ஆதி க்ஷத்திரிய வருணத்தினர். இந்துக்களின் புராண இதிகாசங்களில் கூறப்படும் வண்ணம், க்ஷத்திரிய ஜாதி மூன்று பெரிய பிரிவாகும். அம்மூன்று பிரிவும், சூரியகுலம், சந்திரகுலம், அக்கினிகுலம் எனப்படும். இனி, ராஜபுத்திரருக்குள்ளே முப்பத்தாறு உட்பிரிவுகள் உள. முதல் பாகமாகிய மத்தியபதியின் சரித்திரத்தில் சொல்லப்படும் இராஜபுத்திரர் சூரியகுலத்தினர். அம் மத்தியபதி மன்னவர் ஸ்ரீராமபிரானது குமாரன் இலவனது சந்ததியார்.

தேச பக்திக்கும் சுத்த வீரத்துக்கும் உறைவிடமாக விளங்குவோர் இராஜபுத்திரரே. தாய் நாட்டுக்காக வாட்போர் புரிந்து, வைரியை வதைத்து மடியின், அதுவே உடலெடுத்ததின் பெரும் பேறுகும், வீர சுவர்க்கம் புகுவதற்கும் ஏற்ற வழியாகும், என்பதே அவ் வீரரின் கொள்கை. ஆதி முதல், அன்னியவாசை இங்கே தலைகாட்டா வண்ணம் தடுக்க முயன்றவர்களும், அதற்காக

உடல், பொருள், ஆவி மூன்றையும், ஒருங்கே வழங்கினவர்களும் அவர்களே. படைமுகத்திலே குலப் பகைவரிடத்தும் பெருந்தன்மை காட்டிப் பெருமைபெறுதல் அக் குலத்தினரிடமே யுண்டு. பகையாளி பலங்குன்றிப் போய்விடின், அவனை அச்சமயம் அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். முதல் போரிலே இலங்கேசன் முறிபட்டுத் தனியே நின்றகாலையில், ஸ்ரீராமபிரான் கருணை கொண்டு, "அப்பனே! இன்று போய் நாளை வா" என்றருளியது போல், அவர்களும் அருள் புரிவார்கள். இராஜபுத்திரர் என்றால், சுத்த வீரத்துக்கும் தேசபக்திக்கும் விளைவிடமாவோர் என்பதே பொருளெனலாம். ஸ்ரீராமபிரான், அர்ச்சுனன், கர்ணன், கிருஷ்ணன், பீமன், பலதேவன் முதலிய வீரப் பெருமான்களைப் பற்றிப் புராணங்களில் பலரும் படித்திருப்பர். அன்னவரின் மறுபிறப்பாக, மத்தியபதி மன்னவன் பிரதாப சிம்மன், மாருவார வீரசிங்கம் துர்க்கதாஸன், அஜமேரு நாட்டின் அரிய வீரன் பிருதிவிராஜன் முதலியோரைச் சொல்ல வேண்டும். இப்பூவுலகிலுள்ள எத்தேசத்தினரின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தபோதிலும், அவ்வீர சிகாமணிகளுக்கு இணையாக எவரையும் காண முடியாது. முன்னம் இராஜ புத்திரரின் விரோதிகளாய் அவர்களுடன் மூர்க்கமாக மொய்யமர்புரிந்த அல்லவுதீன், பேபர், அக்பர், முதலியவர்களும் அவர்களின் வீரதீரத்தையும் தணியாத தேசபக்தியையும் வாயாரப் புகழ்ந்து, மனமார மதித்து எழுதி வைத்துப் போயுளர்.

அக் காலம் அன்னியரா யிருந்த முகம்மதிய மரபினர் இத் தேசத்திலே காலடிவைத்த காலந்தொட்டு, அதாவது 8-வது நூற்றாண்டி லிருந்து பதினெட்டாவது நூற்றாண

டின் முடிவுவரை, ஓராயிர வருஷகாலமாகத் தேச பக்தி யும் ராஜ பக்தியுங் கொண்டு, சமர்புரிந்து வந்தவர்கள் இராஜ புத்திரர்களே. எட்டாவது நூற்றாண்டின் துவக்கத் திலே அரேபியர் இத்தேசத்தில் தோன்றிய பொழுது, அவர்களைப் போரில் புறங்கண்டு வாகைசூடிய வீரன் மத்தியபதி மன்னவனான நூபசிம்மனே. கடைசி வரையில் அன்னியவரசுக்குத் தலைவணங்கேன் என்று கூறி, வீரமே விளைத்தவனும் மத்தியபதியின் காவலனான பிரதாபசிம்மன். பாரத தேசத்திலே மொகலாயவரசு மகா உன்னதபதவி யடைந்திருந்த காலையிலும், அதனை எதிர்த்து நின்று போர் புரிந்தோரும் மத்தியபதியின் தலைவராவர். அக்பர், ஷாஜிஹான், முதலிய சக்கரவர்த்திகளின் காலத்தில் மொக லாய வரசு தலைசிறந்து நின்றதற்கு இராஜ புதன வீரரின் பக்கபலமே காரணம். இராஜ புத்திரரின் போரா தரவு இல்லாமல்போயின், இங்கே அரசு நிலைக்காதென்று தோன்றியவுடனே, அவர்களின் நட்பையும் பிரியத்தை யும் அம்மொகலாய மன்னவர் பற்பல வழியிலும் தேடிக் கொண்டனர். அப்பால் ஆங்கிலேயர் நம் தேசத்திலே தோன்றி, நிலையாகநிற்கக் கருதியபொழுது, அவர்களும் இராஜபுத்திரவீரரின் பெருதவியைத் தேடிக்கொள்ளாம லில்லை. இன்றும் நாளையும், ஆங்கில ஆட்சியின் சேனை யிலே இராஜபுதன வீரர் சிறந்து விளங்குகின்றனர். மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காதென்பர். அதுவே போல், பழைய பெருமையும் பதவியும் அந்த க்ஷத்திரிய குலத்தி னருக்கு இப்போது அவ்வளவாக இல்லாமற் போயினும், அவர்களது பரம்பரை வாசனை அவர்களை விட்டகலாமல் விளங்கியே வருகிறது. முதல் நூற்றாண்டிலிருந்து, பற்பல

ஜாதியினரும் வமிசத்தினரும் இங்கே தோன்றி, எவ்வளவோ விபரீதம் விளைத்திருப்பினும், இன்றும் ராஜபுதன நாடுகளிலே அக்காலத்திய அரச பரம்பரையார் வாழ்ந்து வருகின்றனர் வெற்றி வேந்தர்களாக.

அத்தகைய வீர புருஷர்களின் சரித்திரமே "இராஜ புத்திர விஜயம்" என்னும் பெயருடன் வெளியாகிறது. அவர்களின் வீரச் செயல்கள் ஒவ்வொன்றும், வெகு விரிவாக இந்நூலில் காணப்படும். தமிழ் மக்கள் அனைவரும் இதனை அன்புடன் வாங்கிப் படித்து, ஆனந்தமடைய வேண்டுமென வேண்டிக் கொள்ளுகிறோம். அன்று தொட்டு நேற்றுவரை இராஜ புத்திரர், முகம்மதியருடன் போர்புரிந்து வந்திருப்பதே இந்நூலில் காணப்படும். அதில் இரு திறத்தினரும் காட்டிய போர்த்திறமை, ஏற்றபடி விரித்துரைக்கப் பட்டுள்ளது. அன்று முகம்மதியர் இந்நாட்டினருக்கு அன்னியராக இருந்தனர்; இன்றோ நாட்டு மக்களாகி விட்டனர். இப்போது, நாம் எந்த மதத்தினராயினும் ஜாதியினராயினும் பிரிவினராயினும் ஒருமனங் கொண்டே நிற்கிறோம். ஆதலால் இராஜ புத்திர வீரரைச் சிறப்பாகக்கூறி யிருக்குமிடத்தில், முகம்மதியரைக் குறைவு படுத்திக் கூறி யிருப்பதாக ஒருவரும் கருதக் கூடாதென மிகவும் வணக்கமுடன் வேண்டிக் கொள்ளுகிறோம். சுபம்!

மயில்வாகன் கம்பெனி.

அட்டவணை

		பக்கம்.
1.	மத்தியபதியின் மகிமை ...	1
2.	கனகசேனன்	4
3.	சிலாதித்தன்	6
4.	குகாதித்தன்	9
5.	நாகாதித்தன்	14
6.	பூபசிம்மன்	15
7.	கோமான்	31
8.	சமாசிம்மன்	34
9.	ராணி கூர்மதேவி	38
10.	இரகூபன்	40
11.	ராணு லட்சுமணன்	42
12.	,, அமாசிம்மன்	61
13.	,, செயித சிம்மன் ...	84
14.	,, இலட்சசிம்மன் ...	92
15.	,, மோகலன்	102
16.	,, கும்பன்	116
17.	,, உதயசிம்மன்	130
18.	,, ரவிமல்லன்	133
19.	,, சங்காசிம்மன் ...	168
20.	,, ரத்தினசிம்மன் ...	188
21.	,, விக்கிரமஜித்தன் ...	195
22.	,, வனவீரன்	210
23.	,, உதயசிம்மன் II ...	218

மகா ராணு பிரதாப சிம்மன்

12

உ

இராஜ புத்திர விஜயம்

மத்திய பதியின் மகிமை

இராஜபுதன நாடுகளில் மத்தியபதி அல்லது நடு நாடு என்பது ஒன்று. இக்காலத்தே அது ஆங்கிலத்தில் மீவார் என வழங்கி வருகிறது. தலைநகரின் நாமத்தைக் கொண்டு உதயபுரி என்றும் சொல்லுவர். இதர புலநாடுகளில், அதனையே முதன்மையாகக் கூறவேண்டும். அந்நாட்டரசர் சூரிய வமிசத்தினர். அவர்களை ரகுவமிசத்தினர் எனவும் புகல்வதுண்டு. இந்துக்களின் இதிகாசங்களில் சிறந்தது, ஸ்ரீமத் ராமாயணம். அதில் கதாநாயகமாக விளங்கும் மூர்த்தியின் பெயர் ஸ்ரீராமபிரான். அவர் மும்மூர்த்திகளில் விஷ்ணுவின் அவதாரம். கொடிய அரக்கரைக் குலைத்து, சீரிய முனிவரையும் பிறரையும் காக்கவந்தவர். இங்ஙனமே இதிகாச புராணங்கள் கூறும். அப்பெருமானுக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களில் ஒருவன் பெயர் குசன். மற்றவன் பெயர் இலவன். மத்திய பதியின் மன்னவர் இலவனது சந்ததியார். இது அவ்வேந்தரின் வமிசாவளி நூலிலிருந்து விளங்குகிறது. அவ்விரு மைந்தரில் இலவன் என்பான் உலோககூடம் என்னும் நகரை நிருமித்தான். இப்பொழுது, அந்நகரம் ஆங்கிலத்

திலே லாகூர் என வழங்கிவருகிறது. அதுவே பாஞ்சால நாட்டின் தலைநகரமாகும். அந்த உலோககூட நகரிலே இலவனது சந்ததியார் வாழையடி வாழையாக வெற்றி வேந்தர்களாய் வாழ்ந்து வந்தனர். இரண்டாவது நூற்றாண்டிலே அந்நகரில் அரசு செலுத்தியவன் பெயர் கனகசேனன். முதல் நூற்றாண்டிலிருந்து அக்கனகன் காலம் வரையில், அங்கு ஆண்டுவந்த அரசர் மகாரதன், அந்தரதன், அசைலசேனன் எனப்படுவர். கனகசேனன் தலையெடுக்கும் வரையில்தான், இலவனது வமிசம் அங்கே நிலைத்திருந்தது. அவர்களில் கனக சேனனைப் பற்றியே சரித்திர வாயிலாகச் சிற்சில விவரங்கள் புலப்படுகின்றன. ஆதலின், மத்தியபதி மன்னரிலே சரித்திர வாயிலாக விளங்கும் முதல் வேந்தன் அவனே.

அந் நாடுகளில் மத்தியபதியே மிக்க மேன்மை பெற்றதென மேலே சொன்னோம். கடந்த ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு அதிமாக அந்நாட்டில்தான் அரசர்பலர் இடைவிடாமல் ஆண்டுவந்துள்ளர். ஆதியிலே சிறந்த தலைநகராக விளங்கியது சித்தூரே. அதுதான் சித்திரகூடமெனப்படும். அச் சித்திரகூடத்தில்தான், ஸ்ரீராமன் தமது தேவியுடன் வனவாசஞ்செய்துவந்தார். ஆதலின் சித்தூர் மிக்க சிறப்புள்ளதென அந்நாட்டுள்ளோர் கூறுவர். சித்திராங்க மௌரி என்பவனால் அந்நகரம் ஆக்கப்பெற்றது. ஆதலின் அது சித்தூர் என வழங்கலாயிற்று என்றுரைப்பாரும் உளர். இது எங்ஙனமாயினும், முன்னம் அச் சித்தூர் நகரம் மிக்க சீரும் சிறப்பும் பொருந்தி யிருந்ததென்பதில் ஐயமில்லை. முன்னாள் முகம்மதிய மன்னரில் பலரும் அந்

நகரைத் தம் வசமாக்கப் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு அன்று. அப்பொழுது அது மும்முறை மண்மேடு மண்ணாக அழிக்கப்பட்டது. எண்ணிறந்த ராஜபுத்திர வீரர் களப்பலி யாக்கப்பட்டனர். அல்லாவுதீன், பேபர், அக்பர், அவுரங்கசீப் முதலிய மன்னவர் அந்நாட்டை அடிப்படுத்த அளவு கடந்த முயற்சி புரிந்தனர்; அக்காலம் நாட்டின் நலத்துக்கும் மக்களின் சுதந்திரத்துக்குமாக உயிரைப் பறிகொடுத்த ராஜபுத்திர வீரருக்குக் கணக்கில்லை. இங்ஙனம் பல நூற்றாண்டுகள் அந்நாடு அடைந்த கஷ்டநஷ்டம் சொல்லத் தரமன்று.

எனினும், அந்நாடும் சரி, அந்நாட்டரசரும் சரி, வளமையிலும் வீர தீரத்திலும் குன்றிவிட வில்லை; அதனால் அன்றுதொட்டு இன்றுவரை, இதர ராஜபுத்திரவேந்தரும் வீரரும் நடுநாட்டின் நரபதிகளை பயபக்தி விசுவாசத்துடன் போற்றி வருகின்றனர். நம் பாரத பூமியின் புராதன சரிதமெழுதிய ஆதிசரித்திர ஆசிரியர் அனைவரும் மத்திய பதியை மகிமையுடன் மதித்துப் பேசியிருக்கின்றனர். பரம்பரையாக அந்நரபதிகளுக்கு ஹிந்து சூரியன், ஹிந்துபதி என்னும் பட்டப் பெயர்கள் வழங்கிவருகின்றன. இதர நாட்டினர் இப்பாரத பூமியில் காலடிவைத்த காலந்தொட்டுக் கடைசி வரையில் போர்புரிந்து, ஹிந்துராஜ்யத்தை நிலைநாட்ட முயன்றவர்களில் அந்நாட்டரசரை விசேஷமாகக் குறிப்பிடலாம். ஆயினும் பாரத பூமியின் தலையில் பரமன் வேறுவிதமாகப் பொறித்து விட்டார். எல்லாம் ஈசன் செயல்.

கனகசேனன் 145.—கி. பி.

ஸ்ரீராமபிரான் காலம்வரையில், சூரியவமிசத்தின் தலைநகராக விளங்கியது அயோத்திமா நகரே. அப்பால் பல்லாண்டுகள் வரையில் உலோககூட நகரே தலை நகராக இருந்துவந்தது. கனகசேனன் முடிசூடிய காலத்திலே, அது கைதவறிவிட்டது. இதன் காரணம் புலப்படவில்லை. தன் புராதன தலை நகரை இழந்தானாயினும், தன் மரபினுக் குரிய தோள்வலியையோ வாள்வலியையோ அவன் இழக்க வில்லை. மனவலியும் அவனிடம் நிரம்பிக்கிடந்தது. ஆதலின், அவன் பாஞ்சால நாட்டைத் துறந்து, சௌரர் நாடடைந்தான். பம்பாய் மாகாணத்திலுள்ள சூரத்து என்ற நகரம் அக்காலம் சௌரர் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாகும். சூரியனை வணங்குவோர் சௌரர் என அந்நாளில் வழங்கிவந்தனர். அவர்கள் விசேஷமாக அங்கே வசித்து வந்தார்கள். அதனால், நாடும் சௌரர்நாடு என்றாயிற்று. அக்கினி குலத்தைச்சேர்ந்த பௌரனொருவன் அச்சமயம் சௌரர் நாட்டில் அரசுபுரிந்து வந்தான். அப்பௌரனுக்கும் கனகனுக்கும் 145-ம் வருஷம் கடும்போர் நிகழ்ந்தது. அதில் பகைவனைப் புறங்கண்டு வெற்றிமாலை சூடியவன் நம் கனகசேனனே. அவன் அடைந்த வெற்றி மிகப் பெருமித வெற்றியாம். ஆதலின், அவன் வீரநகரம் என்ற நகரைக் கட்டினான். விராடகிரி யெனவும் அதற்கு வேறொரு பெயருண்டு. அந்நகரில் பொருந்தி யிருந்த அமைப்பும் வனப்பும் செப்பத்தரமல்ல.

அப்பால் கனகசேனன் தன் குலத்தை அங்கே நிலை நிறுத்திச் சிறிதுகாலம் அரசுபுரிந்து வந்தான். அது தவிர, வேறுவிவரம் எதுவும் தெரியவில்லை. அவனுக்குப் பின், மகாமுக்தசேனன், சுதாந்தசேனன், என இருவர் அந் நாட்டைப் பரிபாலித்து வந்தனரென அறிகிறோம். கனக னுக்கு நான்காவது தலைமுறையிலே தலையெடுத்துத் திகழ்ந்த வேந்தன் விஜயசேனன் எனப்படுவான். அஜய சேனன் எனவும் அவனைச் சிலர் அழைப்பர். அவ் விஜ யன் தன் பெயருக்கேற்ப விஜயபுரி என்னும் பட்டண மொன்று உண்டுபண்ணினான். அங்ஙனம் தோன்றிய வேறொரு நகரின் பெயர் வல்லபபுரம். இதுவே இதர நகரங்களைவிட மிகச் சிறந்தது; சரித்திர வாயிலாகவும் புகழ்பெற்றதாகும். வீரவாழ்வினால் விஜயன் தன் பெய ரைக் காரணப் பெயராக்கிக் காலங்கழித்தான் என்று புலப் படுகிறது. இதர விவரங்கள் தெரியவில்லை. அந்நாளிலே சௌராஷ்டிரனது துறைமுக நகரின் பெயர் காயனி. அது இப்போது காம்பே எனப்படுகிறது. நகரங்களின் நாமத்தை யுற்றுநோக்கின், வேந்தர்களிற் பலரும் வீரசிங்கங்களாக விளங்கியிருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஹிந்து மதத்தினர். ஆயினும் சர்வ சமய சமரஸிகளாக இருந்த னரென அறிகிறோம். அவர்கள் ஜைன மதத்தினரிடம் மாறுகொள்ளவில்லை, பேராதரவே புரிந்துவந்தார்கள். அந் நாள்வரை அவர்கள் தரித்துவந்த பட்டப் பெயர் சேனன். சேனன் என்றால் பெருஞ் சேனையை நடத்தும் சூரன் என்று பொருள். விஜயசேனன் கட்டிய வல்லபபுரம் சரித்திர சம் பந்தம் வாய்ந்தது. வல்லபசகாப்தம் எனவும் காலவரை வழங்கலாயிற்று.

சிலாதித்தன் 524—கி. பி.

அவ் விஜயனுக்குப் பின்னர் ஆண்டுவந்த அரசர் பத்மாதித்தன், சிவாதித்தன், ஹரிதாதித்தன், சூரியாதித்தன், சோமாதித்தன் எனப்படுவர். இவர்களைப்பற்றிய செய்தி எதுவும் தெரியவில்லை; ஆனால், விஜயசேனனுக்குப் பின்பு பட்டப்பெயர் ஆதித்தன் என மாறிவிட்டதாக மட்டும் புலப்படுகிறது. ஆறுவது நூற்றாண்டிலே சோமாதித்தனுக்குப் பின், முடிசூடியவன் சிலாதித்தன். இவன் சாந்த குணசீலன், பரம தயாநிதி, குடிமக்களிடம் பேரன்பு பூத்தவன். ஆதலால் இவன் பெயர் காரணப் பெயராயிற்றெனலாம். சூரியவமிச வேந்தர்களுக்கு அதிதேவதை அல்லது குலதெய்வம் சூரியனே. அவர்கள் அனைவரும் நாள்தோறும் தினகரனைத் தொழுவர். இக்காலத்திலும் இந்துக்களிற் பலர் சூரியனைத்தொழுது இஷ்டசித்தி பெறுவதுண்டு. சிலாதித்தனும் ஆதித்தனைத் தொழுவதில் சிறிதும் தவறியதில்லை. பகையரசரால் பேராபத்து நேரின், அவ் வமிசத்தினர் பகலவனைப் பணிவர்; உடனே அக் கடவுள் அருள் பாலித்துத் தனது சப்தமா என்னும் பரியை யளிப்பான். அத் தெய்வப்பரியைத் துணைகொண்டு போரில் புகுந்தால், பகைவரை முதுகுகண்டு வாகைசூடியே திரும்பலாம். 524-ம் வருஷத்திலே மிலேச்சர்கள் என்போர் அந்நாட்டின்மீது தண்டெடுத்து வந்தனர். உடனே சிலாதித்தன் தனது குலதெய்வத்தைத் துதிக்கலானன். நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைக்கும்

என்பர் பெரியோர். சிலாதித்தனது அமைச்சர்குழாத்திலே கொடும்பாவி யொருவன் இருந்தான். மந்திரிகளின் முதற்கடமையை அவன் மதிக்கவில்லை. மதிவளருங்காலையில் அதனிடமுள்ள முயற்களங்கம் தானும் வளரும், தேயுங்கால் தானும் தேய்ந்துபோம். அங்ஙனமே அரசனுக்கு வாழ்வு வருங்காலத்து, அமைச்சரும் உடனிருந்து வாழ்வைப் பெருக்கித் தாமும் போகந்துய்ப்பர்; தாழ்வுவரின் அதனைத் தணிக்க முயலுவர்; முயன்றும் முடியாதாயின் தாமும் கூடவிருந்து வேந்தனைத் தேற்றுவர். முன்னம் அயோத்தி மன்னன் அரிச்சந்திரன், தன்பதியையும் நிதியையுமிழந்து, சுடலைகாத்த காலத்தே, சத்தியகீர்த்தி அச்சக்ரவர்த்தியின் துயரைத் தணித்தா னல்லவா?

சிலாதித்தனது அமைச்சனோ அரசனுக்கு உதவிபுரிய வரும் பரியை வழிமறிக்கலாயினன். ஸப்தயாவந்து சமரில் தலைகொடுக்கு மென்பதை அப் பாவியின் மூலம் பகைவர் உணர்ந்துகொண்டனர். அவ்வளவுதான் தாமதம். அவர்கள் ஒரு பசுவைக் கொன்று அதன் உதிரத்தை அக்குதிரை தோன்றும் சூரியகுண்டத்தில் கொட்டிவிட்டனர். அமைச்சனது வஞ்சனையை யாரும் அறியவில்லை. தன் மந்திரசக்தியாலும் பூஜாபலத்தினாலும் அப் பரியை அழைத்தான் சிலாதித்தன். அழைத்து மென்ன? அப்பரி வரவில்லை. ஆதலின் தெய்வசகாயம் இல்லையென அவனுக்குத் தோன்றியது. எனினும் வீரசிங்க மாதலின் அவன் சிறிதும் மனந்தளரவில்லை. இதுவே ராஜபுத்திரரின் இலட்சணம். ஒருதவியு மின்றித் தனியே நிற்பினும் ஆவிபோமளவும் கொடும்போர் புரிவதே அக்குலக் குமாரின் முதற் குணம்.

தன் படைகளனைத்தும் போர்க்களத்தில் திரளவேண்டு மென அவன் முரசறைவித்தான். அவ்வாறே ராஜபுத்திர வீரர் அனைவரும் வாளும் வேலும் வில்லுந் தாங்கி வந்தனர். முன்னோர் மொழிந்த முறைமைக்கிணங்கத் தன் சேனையை அணி வகுத்தான் சிலாதித்தன். இருபக்கத்து வீரரும் கைகலந்து போர்புரிந்தனர். இக்காலத்தரசர் போர்க்களத்தே முன்னணியில் நின்று சமர் செய்யார். முன்னமோ முன் வரிசையில் நின்று வீரமுடன் அமர் புரிவர். அங்ஙனமே சிலாதித்தன் சமர் செய்தான். செய்து மென்ன? பகைவன் சேனையோ புற்றீசல் போல் புறப்பட்டு வந்தது. ராஜபுத்திரர் புறங் கொடாமல் போர் புரிந்து ஆருயிரீந்து அமரருலகு சென்றனர். சிலாதித்தனும் வீர சுவர்க்கம் புகுந்தான். அவ்வளவில் மிலேச்சர் அவ் வல்லப நகரில் புகுந்து அதனை நிர்மூலம் செய்தனர்; நாட்டையும் அங்ஙனமே நாசப்படுத்தினர்.

ஈன்றெடுத்த தாயே தன்குழந்தையைக் கொல்வது போல் கொடிய பாதகம் புரிந்த மந்திரியைக்குறித்து நாம் என்னென் றியம்புவது? தோழனை வஞ்சித்தவன், பிறன் மனைவியை நயந்தவன், கன்னியைக் கலக்கியவன், உயிர் கொன்று உடல் தின்றவன், அமைச்சனாயிருந்து அரசு கொன்றவன் ஆகிய ஐவரும் பஞ்சமா பாதகர். அவர்கள் இம்மையிலே பெருநோய்க்கு இரையாகி, மறுமையிலே மாநரகில் வீழ்வரென சமய நூல்கள் சாற்றுகின்றன. வல்லப நகரம் வாழ்வற்று, நாடும் மிலேச்சர் வசமாயினபின் எஞ்சி நின்ற முப்பதாயிரம் ராஜபுத்திர குடும்பங்கள் வேற்றுநாடு சென்றுவிட்டன.

குகாதித்தன்

சிலாதித்தன் போர்முனையில் மாண்டவுடன் அவன் தேவியரனைவரும் உடன்கட்டை ஏறிவிட்டனர். அக்காலத்தே உடன்கட்டை ஏறுதல் வெகு பிரபலம். வடநாட்டில் மட்டுமன்றி நந் தென்னாட்டிலும் பிரபலமே. “காதலர் இறப்பின் கனையெரி பொத்தி, ஊதுலைக்குருகின் உயிர்த்து அகத்தடங்காது, இன்னுயிர் ஈவர்; ஈயாராயின், நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்; நளியெரி புகாராயின், அன்பரோடு உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர் பத்தினிப் பெண்டிர்.” என்று மதுரைப் புலவர் மணிமேகலையில் கூறியுள்ளார். சிலாதித்தன் தேவியரில் பலரும் அவனுடன் தெய்வஉலகம் போயினர். எனினும் புஷ்பவதி என்பாள் மட்டும் உயிர் தப்பி இருந்தனள். அச்சமயம் அவள் வல்லபபுரத்தில் இருக்கவில்லை. இருந்திருப்பின், அவளும் தன் பதியுடன் பரலோகம் போயிருப்பாள். போர்மூளு முன்பே அவள் தன் தாயகம் சென்றிருந்தாள். அக்காலை அம்மையின் அருளால், அவள் கருத்தரித் திருந்தனள். அதுபற்றி அத் தெய்வத்திற்குப் பிரார்த்தனை செலுத்தத் தலயாத்திரை போயினள். அப்பொழுதுதான், தன் பதிக்கு நேர்ந்த கதி அவளுக்குத் தெரியவந்தது. அவ்வளவில் தீயில் குளித்து உயிர் துறக்கத் துணிந்தாள். ‘ஆனால் வயிற்றிலிருக்கும் கருவின் கவலை வந்து சூழ்ந்து கொண்டது. ஆதலின் கரை காணாது கண் கலங்கினள்.

அதனையும் கொல்ல அவள் மனங்கொள்ளவில்லை ஆதலின், அந்தோ காலக்கிரமத்தில் இக் கருவளர்ந்து உலகில் உதித்து நங் குலத்தை விளக்காதா? என்னும் ஆசை கொண்டு சிறிதுகாலம் உயிருடனிருக்கக் கருதினள். ஆனல் எங்கிருப்பது? தாயின் அகத்தே தங்கியிருக்க மனமில்லை. நாதன் தீர்ந்தபின்பும் உயிர்தாங்கித் திரிகின்றனளே யென உறவினரும் ஊராரும் ஏசக்கூடும். புருஷனது பதியோ பகைவன் கையில் பட்டுக்கிடக்கின்றது. எனவே தாயகத்திலும் தலைவனகத்திலும் தங்கவகையில்லை. ஆதலின் மலைய மலைக் குகையிலே மறைந்து நின்றனள் மைந்தனைப் பெற்றெடுக்கும் வரையில்.

காலக்கிரமத்தில் அழகின் கனியென ஒரு குமரன் பிறந்தான். அவ்வளவில் தன் புதல்வனை நோக்கி "என் கலியை மாற்றவந்த குலமணியே! அரசனது அந்தப்புரத்தே ஆடம்பரத்துடன் வாழவேண்டிய நீ, இக்கானகத்தே எங்ஙனம் வளருவையோ அறியேன்; கொடிய விலங்குகள் வாழும் மலைக்குகையிலா நீ பிறப்பது? இதுவும் உன் தலைவிதி போலும். விதியை வெல்லவல்லார் யாவர்? கடவுளரையும் விதிவிடாது. பந்தமுள்ள மானிடரை விடுமோ? உன்னைச் சீராட்டிப் பாராட்டும் பாக்கியமில்லாப் பாவியானேன் யான். இனி அழுதுபயனென்ன? நொந்து தான் என்னபயன்? ஆவதொன்றுமில்லை. நம் அம்மை பவானியே உன்னைப் பாதுகாக்கவேண்டும். பிள்ளைவரம் பெற்றுப் புருஷனையிழந்து பொன்றுகின்றேன்" என்று வருந்துகின்றனள். அப்பால், அப்பாலனை அரசகுல ஆச்சாரியன் மகளான கமலாவதி யென்பாளிடம் அடைக்கலமாக வைத்து,

"என் அன்னாய்! இனி நீயே இக் குழந்தையின் தாயாவாய். தோன்றும்பொழுதே தாயையும் தந்தையையும் இழக்கும் துர்ப்பாக்கியனான இப்பாலன் உன் அடைக்கலம். உங்கள் குலச் சிறுவனைப்போல் இவனை வளர்த்து வருவாயாக. தக்க வயது வந்ததும் ராஜபுத்திர மங்கையொருத்தியை மதித்து இவனுக்கு மணமுடிக்கவேண்டும். இதுவே எனது வேண்டுகோள்" என் றிரந்தபின் தீயில்குளித்துத் தன் நாதன் போன நல்லுலகம் போயினள்.

வேதியர் குலத்தில் வந்த கமலாவதி, தன் குழந்தையினும் பன்மடங்கு பரிவுடன் அவனை வளர்த்து வந்தாள். உரியகாலத்தே அவனுக்கு நாமகரணம் நடந்தேறியது. மலைக்குகையில் பிறந்து மதித்தற்குரிய அழகு பொருந்தியிருந்ததனால் குகன் என்னும் நாமமே சிறந்ததெனச் சூட்டினர். அந்தணற்குரிய முறையில் அவன் வளர்ந்து வந்தான். ஆயினும் அவன் அக் குலச்சிறாருடன் சேருவதில்லை, பள்ளிக்குப் போவதுமில்லை; படிப்பதுமில்லை; ராஜபுத்திர குலமக்களுடன் கூடியே குலவுவான், உண்டை வில்லும் அம்பும் கொண்டு பட்சிகளை வதைப்பான். வாளும் வேலும் தேடியடைந்து வனவிலங்குகளை நாடித்திரிவான். வீடு வரும்பொழுது, உடலெங்கும் உதிரம் படிந்திருக்கும். ஊரார் அது கண்டு ஓலமிடுவர், கமலாவதியைக் கூவியழைத்து ஈதென்ன கோலமென்று கூறிப் பேசுவர். இங்ஙனம், ஐந்தாவது வயதிலேயே மாபின்மதி தலையெடுத்தாடியது. இதனைக் கண்ட கமலாவதி கண்கலங்கினள். அவளோ பரிசுத்தமான பார்ப்பன குலத்தில் பிறந்தவள். அரிய நூல்களைக் கற்றறிந்த ஆச்சாரியன் மகள். உயிர்க்

கொலையென்றால் உள்ளம் நடுங்குபவள். புண்ணியத்தைக் கருதிப் பாலனை வளர்க்கப் புகுந்து குலப் பெருமையைக் குலைத்துக் கொள்ள அவளுக்கு மனமொப்புமோ? கமலாவதியின் குமரன் வேதியர் வித்தில்லை போலும் என்ற எச்சை அவள் எங்ஙனம் சகிப்பாள்? இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஏங்கி யுழன்று பாலனுக்குப் பக்குவமாகப் புத்தி புகட்டிப் பார்த்தாள், பயமூட்டியும் பாடுபட்டாள். ஒன்றிலும் அவன் திருந்தவில்லை. இதனால், குலத்தைப் பெரிதாக மதித்து அவனைக் கை விடலாகுமா? கைவிடின் அடைக்கலப் பொருளை அலக்ஷியம் செய்த அரும்பாவத்துக்கு ஆளாகநேரும். ஆபத்துக்குப் பாவமில்லை யென்பர் அறிவுடையோர். அதன்படி "ஈசனே இதுவும் உன் திருவிளையாடல் போலும்" என்றுதேறி அப்பாலனை அன்புடன் போற்றி வருவதில் ஒரு சிறிதும் குறையாதிருந்தாள்.

அந் நாளிலே மலையமலைக்கப்பால் ஈதூர் என்ற பிரதேசமொன்று இருந்தது. வில்லவர் மரபினரொருவன் அதனைப் பரிபாலித்து வந்தான். அவன் பெயர் மண்டலீகன். அக்குலச்சிறுவருடன் கூடியிருந்து குலவுவதில் குகனது காலம் கழியும். அவர்களுடன் அவன் காடும் மலையும் கடந்துசெல்வான், வேங்கையையும் மானையும் வேட்டையாடுவான், அதில் வீரங்காட்டி அச்சிறுவரின் கருத்தைக் கவருவான்; அங்ஙன மிருக்கையில் குகனது முகவிலாசமும் வீரச்செயலும் மண்டலீகனுக்குத் தெரியவந்தன. உடனே அப்பாலனிடம் அவனை அறியாது அன்பும் ஆர்வமும் பிறந்துபெருகின. அவனுக்கோ புத்திரப் பேறில்லை. ஆதலின் அன்பும் ஆர்வமும் நாள்தோறும் கொழுந்துவிட்

டுக் குகனைக் கனிந்துநின்ற தியற்கையே. வில்லவ வாலிபருக்கும் குகனிடம் பக்திவிசுவாசம் பழுத்துவந்தது. விளையாட்டிலும் குகனையே அவர்கள் காவலனாகக் கொள்வர். அவனிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு நடப்பர். ஒருதினம் அவர்கள் ராஜா,மந்திரி என்ற விளையாட்டு விளையாடினர். குகனே அதில் அரசனாக விளங்கினான். வனமல்லிகை முல்லை முதலிய மலர்கொண்டு அவனுக்கு முடிசூட்டினர். அம்மரபினருக்குள் விசித்திரமான வழக்கமொன்றுண்டு. அஃதாவது முடிசூட்டும் சமயத்திலே, முதியோ ரொருவன் வாள்கொண்டு தன் பெருவிரலை நறுக்கி, அதிலிருந்து பாயும் உதிரத்தைத் தொட்டு நெற்றியிலே திலகம் இடுவதாகும். அவ்வாறே அச்சிறுவரிலொருவன் குகனுக்குத் திலகமிட்டான்.

அங்ஙனம் விளையாட்டில் வேந்தனாக விளங்கிய குகன் அப்பால் உண்மையிலும் அரசனாயினன். மண்டலீகனுக்கு அந்தியகாலம் கிட்டியது. பட்டத்திற்கோ பிள்ளையில்லை. குகனையே புதல்வனாகப் பாவித்து அவனுக்கு முடிகவித்தான். அன்னை இறந்த காலத்தே அனாதையான குகன், வாலிபவயதிலே வேந்தனாகும் பாக்கியம் பெற்றனன். முன்னவனது அருளிருப்பின், முடிதரித்து மகிழ்தல் ஒரு பெரிதோ? அக் குகநாமன் பார்த்திப னாகியபின், அவனது சரித்திரம் புலப்படவில்லை. ஆனால், அவன் பெரும்பெயரும் புகழும் பெற்றவன். அவன் சந்ததியார் குகாதித்தர் அல்லது குகலாதியர் என அழைக்கப்படலாயினர். தன்னை வேந்தனாக்கி முடிகவித்த மண்டலீகனை அவன் மாய்த்தானெனச் சொல்லப்படுகிறது. இதன் காரணம் யாதோ?

நாகாதித்தன்

தன்னை வேந்தனுக்கிய வில்லவர் தலைவனை அக் குகநாமன் கொன்றானாபினும், அவனும் அவன் வமிசத்தின ரும்பன்னெடுங்காலம் அந்நாட்டைப் பரிபாலித்துவந்தனர். குகனுக்குப் பின்னர் ஒருவர்பின் ஒருவராக அரசுசெலுத்தி வந்த அரசர் அறுவர். அவர்கள் பாகாதித்தன், தேவா தித்தன், அசாதித்தன், காளபோஜன், கிரசாதித்தன், நாகா தித்தன் எனப்படுவார்கள். குகனுக்கு எட்டாவது தலை முறையில், ஈதூர் நாட்டின் நரபதியாக விளங்கியவன் பெயர் நாகாதித்தன். இவன் மிக்க நேர்மையும் சீர்மையுங் கொண்டே அரசு புரிந்து வந்தான். ஆயினும் ஏழு தலை முறைவரையில் வாளாவிருந்த வில்லவர், அன்னியரின் ஆட்சியிலே வெறுப்புக்கொண்டனர். நேரேநின்று நாகாதித் தனை எதிர்த்துப் போர்புரிய அவர்கள் துணிவு கொள்ள வில்லை. வஞ்சனைபுரிந்து வதைக்கவே, காலங்கருதி நின்ற னர். ஒருநாள் நாகாதித்தன் விலங்கினம் நிரம்பிய கானக மேகினன் வேட்டையை நாடி. வழக்கம்போல் அவ் வில்ல வரே மெய்காவலராகத் துணைபோயினர். விலங்கினங்களை வேண்டுமளவு நாகாதித்தன் கொன்று குவித்தான். அதன் மத்தியிலே வேங்கைப் புலியொன்றைக் குறிபார்ப்பது போல், அவ்வில்லவர் பாசாங்கு பண்ணி, வேந்தனை விண்ணேற்றினர்; அக்கணமே நாட்டையும் தம்வசப்படுத் திக் கொண்டனர். அதுகண்ட அரசன்தேவியர் அனை வரும் வழக்கம்போல உடன்கட்டையேறி உயிர்துறந்தனர்.

பூபசிம்மன் 713—கி.பி.

நாகாதித்தன் மரிக்குந்தருவாயில், அவனுக்கு மூன்று வயதுள்ள மைந்தனொருவன் இருந்தான். அவன் பெயர் சைலாதிபன். ஆனால் பூபன் என்ற செல்வப்பெயரே பிரபலமானது. தன் மூதாதையான குகனைப் போல் பூபனும் அனாதையானான் இளம்பிராயத்திலே. குகனை வளர்த்து வந்த கமலாவதியின் சந்ததியாரே பூபனையும் போஷித்து வரும் பாக்கியம் பெற்றனர். அவர்களே அன்றுபோல் ராஜகுலப் புரோகிதர் பதவி வகித்து வந்தார்கள். பூபனை அப்பதியிலேயே வைத்து வளர்ப்பின், அபாயத்து விளையுமென்று தென்பட்டது. ஆதலின், அப்பாலனை வனதீரம் என்னும் கோட்டைக்குக் கொண்டுபோயினர். அச்சமயம் யதுவம்ச வில்லவனொருவனே அவனது மெய்காப்பாளனாக இருந்து வந்தான். வினைப்பயன் ஒருவனை விடாது தொடருமென்பர் பெரியோர். அதுவே போல், வனதீரத்திலும் அவனை அபாயம் அணுகும் போலிருந்தது. எனவே, [illegible] என்னும் வனத்திற்கு அவனை அழைத்துப் போயினர். தவமுனிவர் யோகுபுரிய அது மிகவும் யோக்கியமான இடமாகும்.

அவ்வனத்தின் நடுவே திரிகூடம் என்ற சிறு மலையொன்றுளது. அதன் அடிவாரத்தில் இருந்த நகரம் நாகேந்திரம் என்பதாகும். அங்கே வேதியர் பலர் வசித்து வந்தனர். அவர்கள் [illegible] மாகேசுவரியை வணங்கும்

சமயிகள். இயற்கை வளத்தின் வனப்புக்கு அம் மலையடிவாரம் ஓர் உறைவிடமாகும். நிலமகளின் மணிமுடி போன்ற மலையின் சிகரமும், அம்மகளின் மார்பிலிட்ட உத்தரியம் போல் தெள்ளிய நீர்வாய்ந்த அருவியும், மலர்மகள் மகிழ்வுடன் அமரும் தாமரை மலர் நிரம்பிய தடாகங்களும், எப்பக்கமும் பழமரங்கள் நிரம்பிய பழுவமும், நறுமலர் வீசும் பூஞ்செடிகள் அடர்ந்த சோலைகளும், முனிவரும் பிறரும் மோனவிரதம் பூண்டு முன்னவனைத் துதிக்கத் தகுந்த ஏகாந்த இடங்களும், அங்கே நிரம்பியிருந்தன. மேலும் ஆங்கே மகாதேவ மூர்த்திக்கு நான்மறையாளர் நிருமித்த மிக அழகிய ஆலய மொன்று மிருந்தது. அது பண்டைக் காலத்திய சிற்பவேலையைச் சிறப்பித்துக் காட்ட வல்லதாகும். இத்தகைய மலைச்சாரலில் தான், பூபசிம்மன் தன் பால்யவயதில் வசித்துவந்தான்.

ராஜபுத்திரர் சூரியவமிசத்தினராயினும், பூஜைக்குரிய பசுமாடு மேய்க்குந் தொழிலை மேன்மையாகவே மதிப்பர். இக்காலத்திலும் அங்ஙனமே கருதிவருகின்றனர். எண்ணிறந்த பார்த்திபரின் மூல புருஷனை பூபசிம்மன் தன் இளமைப் பருவத்திலே அத்தொழிலில் அமர்ந்திருந்தான். அப்பொழுது, வருங்காலத்திலே வரிசையளிக்கும் பற்பல அற்புதச் செயல்கள் நிகழலாயின. அவன் மேய்த்து வந்த பசுமந்தையில் ஒன்று சிவலைப் பசு. அது தன் இனத்தில் மிகவும் சிறந்தது; பார்ப்பதற்கு மிக நேர்த்தியாக இருக்கும், வேளைக்கு ஒரு குடம் பால் கறக்கும், வனத்திலே வயிறார இளம்புற்களை மேய்ந்து, மாலைப் பொழுதில் வீடு திரும்பும், ஆனால் திரும்புங்காலையில்

அதன் மடியில் ஒரு துளி பாலும் இருப்பதில்லை. சேங் கன்று, தன் தாயின் மடியை முட்டிப் பார்த்தும் பாலின்றி ஏமாறிப்போம். இதனை நம் பூபன் அறியான். ஆவுக் குரியோர் அறிந்துகொண்டனர். உடனே அவனையழைத்து, "அப்பா! பசுவின் மடியில் பாலைக்காணேமே. அதற்குயாது காரணம்" என்று வினவ, அவனே ஆந்தைபோல் பரக்க விழித்து அச்சங்கொண்டான்.

அங்ஙனமே ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து வந்தது. பசுவின் வீட்டார் பூபன்மீது ஐயப்பட்டனர். அவன் எவ் வளவோ சொல்லியும், அவர்கள் அவனைச் சிறிதும் நம்ப வில்லை; எங்ஙனம் நம்பமுடியும்? ஆதலின், வாளா மேயும் ஆவின் மடியில் பாலில்லாது போவதின் காரணத் தையறிய அவன் ஆவல்கொண்டான். அன்றுமுதல் அவன் ஆவின்மீதே கண்ணு யிருந்தான். ஒரு தினம் அப்பசு ஒரு பள்ளத்தாக்கில் புகுந்தது. அவனும் கூடப்புகுந்தான். பள்ளத்தாக்கிலே மிகவு மடர்ந்த பிரம்புப் புதரொன்றிருந் தது. அதனை யணுகியதுதான் தாமதம். அப்பசு தன் மடி யிலிருந்த பாலனைத்தையும் பரிவுடன் சொரியலாயிற்று. உடனே பூபன் அப்புதரைச் சிறிது விலக்கி உள்ளே உற்று நோக்கினான். அங்கே தவமுனியொருவர் யோக நித்திரை யில் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே மகாலிங்க மூர்த்தியொன்று சோதிமயமாக விளங்கி நின்றது. சிவலைப் பசுவின் பாலாபிஷேகத்தில் மூழ்கிக்கிடந்த அம்மூர்த்தியை நோக்கிய வுடனே, பையன் பரவசமாயினன். நெடுநேரம் அவன் நினைவற்று நின்றானெனல் மிகை யாகாது. பின்னர், முன்னைய நல்வினையின் பயனால், மூர்த்தியின் தரிசனம் கிடைத்ததென் றவன் உள்ளம் பூரித்தான். இதற்குள் தவ

முனியின் யோகநித்திரையும் கலைந்தது. கலைந்ததும், அவர் பூபனைக் கடைக்கணித்தார். அவ்வளவில் பையனுக்கு அன்பும் பக்தியும் கரைகடந்து பெருகி வழிந்தன. உடனே அவன் அப்பெரியவரின் அடியிணையில் வீழ்ந்து வணங்கினான். அவரும் அகங்குளிர ஆசிர்வதித்தார். அப்பால் அவன் தன் நிலையைத் தவயோகியிடந் தெரிவிக்க அவர் "அப்பனே! அஞ்சேல், அமலநாதன் உளன், அவனை நம்பியிரு; நீ அருளும் பெறுவாய், அரசும் அடைவாய், உன் வமிசமும் வளர்ந்தோங்கும்" என்று திருவாய் மலர்ந்தார். அன்று முதல் பூபன் நாள்தோறும் அம் மகானையடைந்து, பாதபூஜை புரிந்து, பாலும் பழமும் சமர்ப்பித்து, மகாலிங்க மூர்த்திக்கும் பன்மலர் கொய்து சூட்டிப் பயபக்தி விசுவாசத்துடன் பூஜைபுரிந்து வரலானான்.

ஆனிரை காக்கும் பாலனாகவும் மகாலிங்கமூர்த்தியின் தாசனாகவும், அவன் சிலதினங்கள் கழித்தான். ஒரு நாள் ராஜபுத்திரரின் வசந்தகால விழாவந்தது. அன்று சிறுவரும் சிறுமியரும் பூங்காவனஞ் சென்று அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து, பல்வகையான ஆடல்பாடல் புரிவர். அவ் ஆடல்பாடலிலே [illegible]தத்தில் கயிற்றூசல் கட்டியாடிக் களித்தலும் ஒன்றாகும். அதற்காக அச்சிறுவரும் சிறுமியருஞ்சேர்ந்து அறநூறு பெயர் நந்தவனஞ் சென்றனர். ஆனால் ஊசலாடி உள்ளங்களிக்க ஒருவ[illegible]து கயிறு கொண்டு போகவில்லை. ஆதலின் அனைவரும் ஒன்றுந்தோன்றாது திகைத்து நின்றனர். அச்சமயம் நம் பூபதிமன் அங்கே தோன்றினான். தோன்றவே, அவர்களிற் பலரும் பரிவுடன் "பூபா! கயிறுதேடிக் கொணரின் நாம் அனைவரும் ஊசலாடி உள்ளங் களிக்கலாம்" என்று கூறி

வேண்டிக் கொண்டனர். அதற்கு அவன் "அங்ஙனமே செய்யத் தடையில்லை. ஆனால், ஒரு வேண்டுகோள்; நாம் ஊஞ்சல் விளையாட்டுடன், விவாக விளையாட்டும் விளையாட வேண்டும். இதற்கும் நீங்கள் இசைந்தாலன்றிக் கயிறு கொணர இயலாது" என்றியம்பி நின்றான்.

இக்காலத்தும் நந்தமிழகத்தே குழந்தைகள் மரப்பாவைகளைக் கணவன் மனைவியாகக் கருதிக் கடிமணஞ் செய்து களிப்புறுதைப் பலரும் அறிவர். மரப்பாவை யில்லாது போயின், தங்களில் ஒருவனை நாயகனாகவும் மற்றொருவனை நாயகியாகவும் நினைத்து, மணக்கோலங்கண்டு மகிழ்வதுண்டு. அங்ஙனமே நாகேந்திரக் குழந்தைகளும் விளையாடிமகிழ முற்பட்டனர். அச்சமயம் சாளுவ குலத்தலைவனொருவன் நாகேந்திரத்தில் அரசு செலுத்தி வந்தான். அவனது குமாரியும் அக் கூட்டத்தில் இருந்தனள். அவளையே மணப் பெண்ணாகவும் பூபனையே மணமகனாகவும் அக்குழந்தைகள் பாவித்து, இருவர் முன்தானையையும் முடிந்துபோட்டு, அத்தம்பதிகளைச் சுற்றிவந்து சோபனம் பாடிச் சோளமடித்துக் குதூகலித்தார்கள். அப்பால், இதா விளையாட்டுடன், விவாக ஊஞ்சலும் விமரிசையாக நடந்தேறியது. பின், நாட்கள்பல சென்றன. அவளுக்கு மங்கைப் பருவம் வந்தது. அப்பொழுது, ராஜபுத்திர வாலிபனொருவன் அம்மகளை மணக்கக்கருதி மணவோலை யனுப்பினான். உடனே சாளுவ மன்னவன் சோதிடரை வரவழைத்து, அப்பெண்ணின் வாழ்வை ஆராய்ந்து பார்த்தான். பெண்ணின் கைரேகைகளை நோக்கிய வளவில், அரசே! இம் மங்கைக்கு முன்னமேயே மணவினை நடந்திருக்கவேண்டும், என்றான் சோதிடன். அதுகேட்ட

அரசனுக்கு அச்சமும் திகிலும் அகத்தேழுண்டன. விளையாட்டில் நடந்த மணத்தை யுணராத மன்னவன், உண்மையை உணர்ந்துவர ஒற்றரை ஏவினான் ஊரெங்கும்.

ஈதிங்ஙனமிருக்கத் தான் செய்த காரியம் தீங்காய் முடியுமென முன்னமேயே மதித்தறிந்த பூபன் அச்சிறுவர் சிறுமியரிடம் வாக்குறுதி பெற்றிருந்தான் உண்மையை வெளியிடா வண்ணம். ஆயினும் அறுநூறு பெயர் அறிந்த விஷயம் அந்தரங்கமாக எங்ஙனம் இருக்கமுடியும்? முடிவிலே பூபசிம்மனது விளையாட்டு விவாகம் அம்பலத்துக்கு வந்துவிட்டது. அதனையறிந்த அரசனே கௌசிக முனிவனைப்போல் கொதித்தெழுந்தான் பூபனை மாய்ப்பதாக. இதற்குள் பூபன் தனது உயிர்த்துணைவரான பலவான், தேவன் ஆகிய இரு வில்லவருடன் திரிகூடமலையின் குகையொன்றில் மறைந்துகொண்டனன். அக்குகையே அவன் உயிருக்கு ஓர் அரணாயிற்று. எதுவும் நமது நன்மைக்கே என அவ்விருவரும் அவனுக்கு ஆறுதல் சொல்லி வந்தனர். குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பது பழமொழி. அதன்படி நாள்தோறும் மூர்த்தியையும் முனிவரையும் தரிசித்துவந்த பூபனுக்கு முன்னவனது அருள் கைகூடலாயிற்று. மலைக்குகையில் மறைந்திருந்த காலத்தும், தன் தெய்வ வழிபாட்டில் அவன் தவறவில்லை. பக்தி பண்ணும் ஒருவனுக்கு அப்பெருமான் இகத்தையும் பரத்தையும் இனிது அளிப்பன். பால்மணம் மாறப்பெறாத பாலனாயிருந்தும், பக்திநிரம்பிப் பரவசமான துருவனுக்கு அந்நாளில் பரந்தாமன் பரமபதமளிக்க முன்வந்தானல்லவா? அங்ஙனமே நம் பூபனுக்கு ஆறுமுக அப்பனது அருள் நோக்கம் கிட்டியது. நம்பாலன் அப் பெரும்பேறடைய

மூல புருஷனா யிருந்தவர் அம்மகானே. அவர் பெயர் ஹாரதாஸர்; பையனது பக்தியை வளர்க்கவேண்டி, அவர் நாள்தோறும் சிவதத்துவங்களை அவனுக்குப்புகட்டிவந்தார் ஒருவாறு சுட்டிச்சொல்லியும் ஈசுவர சொரூபத்தை விளக்கிக் காட்டினார். அதனால் மகாலிங்கமூர்த்தி மகிழ்பூத்தார். மாகேசுவரியும் அருள்சுரந்து அம்மைந்தன் முன்னே சிம்மத்தின்மீது தோன்றிக் காட்சி தந்து, தெய்வத் தன்மை வாய்ந்த வேல்கம்பு, வில், அம்பு, அம்பறாத்தூணி, உடைவாள், கேடயம் முதலியன அளித்தனள். அல்லாமலும் அவ் அரிய உடைவாளைத் தானே அச்சிறுவனது அரையில் செருகி ஆசிபுகன்றனள். முன்னவளே முன்னின்று முகமலர்ந்து பூபனுக்குப் படைக்கலம் வழங்கினளென்றால், அவ்வாலிபனது பெரும் பாக்கியத்தை நாம் எங்ஙனம் அளவிட்டுரைக்க இயலும்? அனைத்துயிரையும் அன்னை போல் காத்தளிக்கும் அம்மையின் அருளுக்கு அவன் என்ன கைம்மாறு இயற்றுவான்? முன்னையிலும் மும்மடங்கு பக்தி விசுவாசங் கொள்ளலானான்.

மற்றொரு பாக்கியமும் அம்மைந்தனுக்குக் கிட்டியது. நாகேந்திரத்தின் அருகாமையில் வேங்கைக் குன்றம் என ஒருசிறுமலையுண்டு. இன்றும் அக்குன்றம் ராஜபுதனத்திலே பெருமையுடன் விளங்கிவருகிறது. அதன் சாரலிலுள்ள வனத்திலே மத்தியபதி மன்னவர் வேட்டையாடி விநோதமாகக் காலங்கழிப்பர். அங்கே ஒருநாள் பூபன் திரிந்துநின்றான். அப்பொழுது கோரகநாதர் என்னும் மற்றொரு மகானுடைய தரிசனம் அவனுக்குக் கிடைத்தது கௌரியின் காட்சி கிடைக்கப் பெற்றவனுக்கு அப்பெரியவரின் காட்சிகிடைத்தல் அரிதாமோ? அப் பெரியவரைக்

கண்டதும், அவன் அஷ்டாங்க தண்டனிட்டான். உடனே அவர் அவனை ஆசிர்வதித்து, இருபுறமும் கூருக்கமைந்த வெற்றிவாளொன்று அளித்தருளினார். அதற்குரிய மந்திரத்தை உச்சரித்து, வாளை யுருவி நின்றால், அவனை வெல்ல ஒருவராலும் ஆகாது. அவ்வாளினால் பாறைகளையும் பிளந்தெறிந்துவிட முடியும். பிறவிப் பிணியைப் போக்க வல்ல ஞானவாளை யருளக்கூடிய மகான் மனமுவந்தளிக்கும் பட்டாக்கத்தி பாறையைப் பிளக்குமோ என எவரும் ஐயுறத்தேவையில்லை. நல்வினைப்பேறு சித்திபாகுங் காலத்தில் எதுதான் கைகூடாது?

இங்ஙனமிருக்கையில், பூபன் தினந்தோறம் ஹாரதாஸரைக் கண்டு வணங்குவதிலும், ஏகலிங்க மூர்த்திக்கு இஷ்டபூஜை புரிவதிலும், சிறிதேனுங் குறைவதில்லை. தன் சீடனுக்குப் பரம்பொருளின் பேரருள் சித்தியானதையும் தனது பூதவுடலைப் போக்கும் காலம் நெருங்கியதையும், அத்தவயோகி மதித்து, "என் குழந்தாய்! இனி நீயே ஏகலிங்க மூர்த்தியின் திவான் அல்லது பிரதிநிதி. யான் என் உடலை நீத்து நாளைத்தினம் கைலையங்கிரி சென்றுவிடுவேன், அதிகாலையே தெய்விக விமானம் வந்துவிடும். ஆதலின் பொழுது புலருமுன் இங்கு வருவாயாக" என்று கூறினார். மைந்தனும் தன் வீடுசென்றான் மாலைப்பொழுதில். மறுதினம் குறித்த காலத்திலே அவன் முனிவரிடம் போய்ச் சேரவில்லை. சிறிது தாமதித்தே சென்றான். சீஷனுக்காகக் கொஞ்சநேரம் காத்திருந்தும் அவன் வாராமல் போகவே, புறப்பட்டு விட்டார் அம் முனிபுங்கவர். புஷ்ப விமானமும் ஆகாயத்தே சிறிது தூரம் சென்று விட்டது. இதற்குள் அப்பாலன் ஓடிவந்தான் வெகுவேகமாக. அது

கண்ட அம்முக்தர் அந்தாத்தி விருந்தவண்ணம் விமானத்தை நிறுத்தி, "என் அப்பனே! வாயைத்திற, உச்சிஷ்டத்தை உட்கொள்" என்றருளினர். அதற்கு அவன் "ஈதென்னவிந்தை! மகானாக இருப்பினென்? ஒருவரது உச்சிஷ்டத்தையா ஏற்றுக்கொள்வது?" என்று தாமதித்தான் மதிமயங்கி. அன்று திருவானைக்காவல் என்னும் தலத்திலே அருந்தவ மியற்றிய அந்தணன்பால் அருள் சுரந்த அம்மை, பாலை வடிவங்கொண்டு பிரசாதமளிக்க வந்தகாலத்தில், வேதியன் விழித்துநிற்கவே, ஆங்கோரிடத்தில் அயர்ந்துகிடந்த காளமேகனுக்கு அப்பிரசாதம் கிட்டியது. அவ்வந்தணன்போல், பூபன் மதியிழந்துபோனதால், வாய்தனில் விழவேண்டிய உச்சிஷ்டம், காலிலேவிழுந்தது. அங்ஙனமின்றி, வாயில் வீழ்ந்திருப்பின், வச்சிரசரீரம் பெற்றிருப்பான். பாதத்தில் வீழ்ந்ததால், தீர்க்கமான ஆயுள்மட்டுமே கிட்டியது. பையனது பாக்கியம் இவ்வளவுதானென மதித்த முக்தர் அந்தாத்தே மறைந்து விட்டார்.

அங்ஙனம் மூர்த்தியின் இன்னருளும், அம்மையின் அருங்கலமும், முக்தாது ஆசிமொழியும், முனிவரது வாளும் பெற்றபின்னர், பூபசிம்மனிடம் அஷ்டலட்சுமிகளும் வந்து குடிகொள்ளலாயினர். பசுமேய்க்குந் தொழில் பெருமையே யாயினும் எத்தனைநாள் அத்தொழிலில் இருப்பதென அவன் சிந்தித்தான். அக்காலை, அவனை வளர்த்து வந்த அன்னை தன் மைந்தனை நோக்கி, "நீ கோபாலனாகக் காலங்கழித்து அலுத்துவிட்டாய், இனி பூபாலனாக ஆக வேண்டும். சித்தூரிலே மௌரியகுல மன்னவன் அரசு செலுத்தி வருகின்றான். அவன் உனக்கு ஒரு முறையில் மாமனாதல் வேண்டும். ஆதலின், அவனது அவைக்களம்

சென்று, உன் பாக்கியத்தைத் தேடிக்கொள்வாயாக" என்று கூறவே அவன் சித்தூரை யடைந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பதினைந்து. தன் மருமகன் வந்ததை யறிந்த மௌரியன் மனங்களித்து, அவனை யன்புடன் வரவேற்று, ஒரு சிறு நாடளித்து வரிசைகள் பல வழங்கினான். அன்றுமுதல் மௌரியனுக்கு அப்பூபனிடமே அதிக அன்பும் ஆசையும் தோன்றிவளர்ந்தன. நாளடைவில் பூபன் அரசவையிலே முதன்மைபெற்றான்.

அச்சமயம் மௌரியனுக்கு உட்பட்டிருந்த பாளையக்காரர் பலராவர். அவர்கள் பரம்பரையாகப் போரிலே வீரங்காட்டிப் புகழ்பெற்றவர்கள்; பெருக்குமட்டும் ஒரு சிறு தொகையே கப்பமாகக் கட்டுவது வழக்கம். போர்நிகழுங்காலத்தே, தத்தம் நிலைமைக்கு எற்ற படைத்தொகையுடன்வந்து சமர்முருக்கித் தலைகொடுப்பது அவர்கள்கடமை அக்கடமையில் அவர்கள் ஒருபொழுதும் குன்றியதில்லை: ராஜவிசுவாசத்திற்கு ஓர் உருவாகவே விளங்கிவந்தார்கள். எனினும் நேற்றுவந்த சிறுவனை உச்சியிலேற்றிவைத்து உபசரிப்பதா என அவர்கள் பிணங்கினார்கள். பாளையப்பட்டுகளின் மனக்கோளை யறிந்தோ அறியாமலோ மௌரியன் மௌனமா யிருந்துவிட்டான். அதனால் அவர்களில் பலரும் அரசவையில் அலங்காரமாக வீற்றிருப்பதையும் துறந்து, தங்கள் நாட்டுக்குச் சென்றுவிட்டனர் வாட்டத்துடன். ஒரு சிலரோ அப் பூபனிடம் அசூயைகொண்டு மனம்புழுங்கி மாறுபட்டு நின்றனர்.

அக்காலம் அரேபியா நாட்டில் கலிபாவாக விளங்கிய பெருமான் பெயர் வாலித். அவனே அந்நாட்டின் அரசனுமாவான். அவன் படைத்தலைவரில் ஒருவன் பெயர்

முகம்மது பின் காஸிம். அக்காஸிம் என்பான் ஒரு படையுடன் வந்து சிந்து நாட்டை வசப்படுத்தி யிருந்தான். அவ் வெற்றியுடன் அவன் நிற்கவில்லை. சித்தூரின்மீதும் 713-ம் வருஷம் படையெடுத்து வந்தான். அப்பொழுது தான், முகம்மதியர் முதன்முதலாக அச்சிந்து நதியையும் கடந்து உள் நாட்டிலும் புகுந்தனரெனப் புலப்படுகிறது. வேற்றரசனால் படையெடுப்பு நேர்ந்து விட்டதைக் கண்டு பதை பதைத்த பார்த்திபன், படைதிரட்டி வரும் வண்ணம் ஓலை யனுப்பினன் தன் பாளையக்காருக்கு. அதற்கு அவர்களோ "நேற்றுவந்த பையன் எங்கே? அவனே போரில் தலைகொடுக்கட்டும். அரியபதவியும் பட்டமும் அளித்த பையனை நாடுக' என்று பரிகசித்துப் பதிலளித்தார்கள். இதனால் கோப வெறிக்கு ஆளான கொற்றவன் அவர்களது பாளையங்களைப் பறித்துக் கொண்டான். இதற்குள் பகைவர், சித்தூர் நகரை நெருங்கி விட்டதாகத் தூதுவர் வந்து விளம்பினர். அதுகண்ட பூபன் "இத்தகைய உட்பகைக்கு நாமே காரணம். அம்மையின் அருளால் இருபகையையும் போக்கலாம்" என்று துணிவுகொண்டு போர்க்கோலம் பூண்டான். அரண்மனையில் காவலாயிருந்த ஒரு சில வீரரைக் கொண்டு எங்ஙனம் வாகை சூடுவதென அவன் சிறிதும் தயங்கவில்லை. சிறு விரலில் வைத் தெண்ணத்தக்க சில வீருடன் பூபன் போருக்குப் புறப்பட்டதையும், அவன் முகத்திலும் தோளிலும் வீரமாது விளங்கி நிற்பதையும், பகையரசன் முன் னிற்கும் பொழுதா உட்பகையென ஊரார் ஏசுவதையும், உய்த்துணர்ந்த பாளையக்காரர் தம் மாபின் மானத்தைக் காக்கக் கருதி, விரைவில் போர்க்கோலம் பூண்டு பூபனுக்

குப் பக்கபலமாகப் போயினர். தனது தோள்வலியும் பாளையக்காரரின் துணைவலியுங் கொண்டு, பகைவரைப் புறங்கண்டான் நம் பூபசிம்மன்.

உடனே அவன் சித்தூருக்குத் திரும்பவில்லை. அப் பெரிய படையுடன் தன் மூதாதைகளின் நாடான சௌரர் நாடடைந்து, அங்கு அரசு செலுத்திவந்த ஸெலீம் என் பானைப் படைக்களத்தே முறியடித்து, அவனை அரியணையிலிருந்து அகற்றித் தன் இனத்தினரில் ஒருவரைச் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தான். அப்பூபனது வெற்றியைக் கேள்வியுற்ற அந்தாதியம் என்னும் நாட்டின் அரசன் தன் மகள் சுபாகினியை அவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். அப்பால் பூபன் சிந்துநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அதையும் கைப்பற்றிக் கொண்டனன். வெற்றிமேல் வெற்றி பெற்றுவரும் வீரத்தைக்கண்டு களித்த ஸெலீம் என்னும் முகம்மதியன் தன்மகளை அப் பூபனுக்கு மனைவியாகக் கொடுத்து, அவனது நட்பை நாடிக் கொண்டனன் பின்பே பூமன்சித்தூர் திரும்பினான்.

போரில் துணைபுரிய அப் பாளையப்பட்டுகள் மூணாந்து வந்தனராயினும், பிணக்கைப் போக்கி முன்போல் மௌரியனது சபையில் வீற்றிருக்க விரும்பவில்லை. ஒரு வருஷ காலம் அரசவையை அணுகாமல் விலகி நின்றனர். உட்பகை நீடித்திருப்பின் நாட்டின் நலம் பாழ்படுமென மதித்த பூபன், ராஜப் புரோகிதர் போன்ற பெரியோரை யனுப்பி, அப்பாளையக்காரரைச் சாந்தப்படுத்த முயன்றான். அதற்கு அவர்கள் இணங்கவில்லை. பின்பு தானே நேரில் சென்று நன்மொழி புகன்று பார்த்தான். மனக்கோணலை மாற்றுதல் அரிதாகிவிட்டது. ஆனால் பூபனது உயரிய நடையையும்

சிரிய குணத்தையும் கண்டுகளித்த பாளையக்காரர் அவனையே அரசனாக்க ஆவல்கொண்டனர். அவனும் வேறு வகையின்றி மனமுவந்தான் முடிதரிக்க. அதன் பயனாகப் போரிலே மௌரியன் மாண்டுபோனான். பூபனும் சித்தூரில் சிம்மாசனம் ஏறினான் ஆடம்பரத்துடன். அச்சித்தூர் நகரும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசமுமே இப்போது மத்தியபதி அல்லது நடுகாடாகும்.

அங்ஙனம் பட்டத்துக்கு வந்ததும், மத்தியபதி வாசிகள் அவனது போர்த் திறமையைக் கண்டு வியந்து, ஹிந்துக்களின் சூரியன், ராஜதிலகன் என்னும் பட்டங்களை வழங்கினர். நாகேந்திரத்தை யாண்டுவந்த அச்சானுவ மன்னவனும் தான் முன்னங் கொண்ட கோபந்தணிந்து களிகூர்ந்தான். உடனே, விளையாட்டில் நடந்த விவாகத்தை உலகமறியச் செய்து, தன்மகளை அவனுக்கே தேவியாக்கினன். அப்பெண்ணினிடமாக நம் பூபனுக்கு அசைலன் என்ற பிள்ளை பிறந்தது. இந்த அசைலனே அவனது மூத்த பிள்ளை. அந்தா தீபத்திலிருந்து தேவியாகவந்த குமரியினிடமும் ஒரு குமரன் தோன்றினான். இவன் பெயர் அபாராஜித்தன். அத்தீவிலிருந்து ஒரு மனைவியைப் பெற்றுவந்ததோடு, ஆங்கு எழுந்தருளியிருந்த அவனி மாதா என்னும் தெய்வத்தின் சிலையொன்றையும் பூபன் பெற்றுவந்து, அதனைச் சித்தூரிலே பிரதிஷ்டைசெய்து அழகிய ஆலயமொன்றும் கட்டுவித்தான்.

இருமனைவியரைத் தேடியடைந்ததுடன் அப்பூபசிம்மன் திருப்திகொள்ளவில்லை. ராஜபுத்திர குலத்திலிருந்து பல மங்கையரை மகிஷிகளாகக் கொண்டனன். அவர்களிடமாக மொத்தத்தில் அவனுக்கு 98 பிள்ளைகள் பிறந்தனர். அப்

புதல்வரில் பலரும் சௌராஷ்டிரம், மாருஸ்தானம் முதலிய பலநாடுகள் சென்று, ஆங்காங்கே தங்கள் தோள்வலியால் வாகைசூடி அரசுகொண்டு, தந்தையின் வமிசத்தை எங்கும் பரப்பினர். இதனால் பூபனது பெயரும் புகழும் பலவிடங்களில் பரவி நின்றன. மகன் தன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்னோ தவஞ் செய்தனனோ என்னும் சொல்லை நிலைநாட்டுவதன்றோ?

வட இந்தியாவிலே பலநாடுகளைத் தன் வசஞ்செய்து வெற்றிக்கொடி தூக்கியும், தோள்வலியோ பூபனை வாளாவிருக்க விடவில்லை. ஆதலின், அவன் சித்தூரைத் துறந்து, காச்மீரம், காந்தாரம், துருக்கிஸ்தானம், பாக்தாது முதலிய பலதேசங்களுக்கும் பெரும்படையுடன் சென்று, ஆங்காங்கே தன் வெற்றிக் கொடியை நிலைநாட்டினன். அந்நாட்டரசர்களோ தங்களுக்குரிய நிலமகளைக் கொடுத்ததுமல்லாமல், பெண்மக்களையும் மனைவியாகத் தந்து மகிழ்ந்தார்கள். இங்ஙனம் பூபசிம்மன் பல முகம்மதிய மாதரை மணந்துகொண்டான். அம்மங்கையரிடமாக அவனுக்கு நூற்றுமுப்பது மைந்தர் பிறந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பட்டாணிய வமிசத்தின் மூதாதையாயினர் பிற்காலத்திலே எனப் புலப்படுகிறது.

பாக்கியவானொருவனுக்குப் பதினறு பிள்ளைகளுக்குமேல் இருப்பின், பலரும் மூக்கில் விரல் வைத்து வியப்பர். ஆதலின் ஒரு மனிதனுக்கு ஹிந்து மனைவியரிடம் 98 பிள்ளைகளும் முகம்மதிய மனைவியரிடம் 130 புதல்வரும் தோன்றியிருக்கமுடியுமோ என்ற ஐயம்பிறக்கும். ஆயினும் 1800-ம் வருஷம் நம் இந்தியாவுக்கு வந்து, முதலிலே ஆங்கிலச் சேனையில் ஒரு வீரனயிருந்து, அப்பால் ராஜபுதன

நாடுகளின் மேலதிகாரி என்னும் பதவி வகித்து, சுமார் முப்பது வருஷகாலம் வேலைபார்த்து, ராஜபுதனத்தின் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதிவைத்து, இதர சரித்திர ஆராய்ச்சியிலும் தேர்ச்சிபெற்றுக் கீர்த்திவாய்ந்த கர்னல் ஜேம்ஸ் டாட் என்ற ஆங்கில கனவான் தமது காலத்திலே நடு நாட்டின் அரசனாயிருந்த பீம சிம்மனுக்கு நூறு மக்கள் இருந்ததாகக் கண்கூடாகக் கண்டு எழுதி வைத்திருக்கிறார். மேலும் இக்காலத்தில் கூட :ராஜபுத்திரர் மிக்க சரீரபலமும் கட்டும் வாய்ந்தவர்கள்; பல மங்கையரை அவர்கள் மனைவியராகக் கொண்டு மகிழ்வதுண்டு; 'பூபனோ சுமார் ஓராயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவன்; வீராதி வீரன்; சக்திதேவியின் அருள் பெற்றவன்; பலமங்கையரை மகிஷிகளாகக் கொண்டவன்; அவனது ஆற்றலும் கொஞ்சமன்று. இவையனைத்தையும் ஆழ்ந்து நோக்கின், அத்தனை மக்கள் அவனுக்குப் பிறந்திருத்தல் ஓர் ஆச்சரியமாகாது.

மனிதருக்கு வயது நூறு என்பர். அவ் வயதளவும் பூபன் சுகஜீவியாக வாழ்ந்து வந்தான். தனது ஆயுளின் கடைநாளில்தான் அவன் முகம்மதிய நாடுகளின்மீது படையெடுத்துச் சென்றான். அவ்விதம் படையெடுத்துச் சென்று, போனவிடமெல்லாம் புகழ்க்கொடி தூக்கியபின்பு, அவன் துருக்கிஸ்தானத்திலே உயிர் துறந்தான் எனப்படுகிறது. அவனது உடலை யடக்கஞ் செய்வதில் குடிமக்களுக்குள் சச்சரவு நிகழ்ந்ததாக அறிகிறோம். ஹிந்துக்கள் தங்கள் குலமுறைமைக்கேற்ப, உடலைத் தீயிலிடவேண்டுமென வாதாடினர்; முகம்மதியரோ தங்கள் மதக்கொள்கைக்கிணங்க உடலைப் புதைத்துவிட வேண்டுமென்று வற்புறுத்

தினர். முடிவிலே, உடலை மூடியிருந்த ஆடையை அகற்றி நோக்கிய பொழுது தாமரைமலர்களே காணப்பட்டன. இச் சந்தர்ப்பத்தில், தெய்வப்புலமைத் திருவள்ளுவரது உடல் தங்கமயமானதாகச் சொல்லப்படுதல் தமிழருக்கு ஞாபகம்வரும். பூபசிம்மனது முடிவைக் குறித்து அங்ஙனம் ஒரு சாரார் கூற, மற்றொரு சாராரோ, அவன் மேருமலைச் சாரலை யடைந்து, தவமியற்றி ஜீவன் முக்தனாக விளங்கலானான் என்று விளம்புகின்றனர். பூபன் கைப்பற்றிய அச் சித்தூர் பூமி நமது புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள மாந்தாதா காலந்தொட்டுச் சிறப்பு வாய்ந்தது.

கோமான் 312—836 கி. பி.

பூபசிம்மனுக்குப் பின் அவனுடைய இரண்டாவது புதல்வன் அபாராஜித்தன் என்பான் பட்டத்துக்கு வந்தான். அவனுக்குக் காளபோஜன், நந்தகுமாரன் என இரு பிள்ளைகள் பிறந்தனர். காளபோஜனுக்குக் கர்ணன் என மற்றொரு பெயருண்டு.

தன் தந்தை காலமாயின பின், காளபோஜனே பட்டமேறினன். இவன் மத்திய பதியின் வளத்தைப் பெருக்க ஒரு பெரிய ஏரியை வெட்டி வைத்தானென விளங்குகிறது. தன் பாட்டன் பூபசிம்மனுச்குக் காட்சியளித்த குலதெய்வமான ஏகலிங்க மூர்த்திக்கு மிகவும் அழகிய ஆலயமொன்று முதலில் சமைத்தவன் இவனே. அக்கோயில் ஹாதாஸர் யோகநித்திரை செய்துவந்த இடத்திலேயே சமைக்கப் பட்டுள்ளது. போரில் ஒருவருக்கும் புறங்கொடாமல், வெற்றிமாலே சூடும் வீரசிங்கமாக அவன் விளங்கி வந்தான். இதனை யறிவிக்கும் சிலாசாஸன மொன்று இன்றும் இருந்து வருகிறது.

காளபோஜன் காலகதி யடைந்த பின்னர், காவலனுக முடிசூடியவன் பெயர் கோமான். மத்தியபதியின் சரிதத்திலே இவன் மிக்க மகிமை பெற்றவன். கோமன ராஜ விஜயம் என்னும் அரிய ஆதிநூலொன்று இன்றும் அவன் பெயரை நிலைநாட்டி வருகிறது. பௌரர் மரபினனொருவன் ஆட்சிபுரிந்து வந்தகாலத்தில்தான், சித்தூர் முதன்முதலாக முசம்மதியரால் தாக்கப்பட்டதென மேலே சொன்னோம்.

கோமான் சிம்மாசனம் ஏறியதும், முகம்மதியர் மீண்டும் தண்டு கொண்டு வந்து, சித்தூரை முற்றுகை யிட்டனர். அன்னிய மதத்தினர் வந்து தாக்குகின்றனரெனத் தெரிந்தவுடனே, ராஜபுதன நாடுகளிலுள்ள அத்தனை ராஜ புத்திரரும் கோமானுக்குப் பக்கபலமாகக் குழுமிநின்றனர். இவனுக்குத் துணையாகவந்த முடிமன்னர் ஏறக்குறைய நாற் பதின்மராவரென அறிகிறோம்.

முகம்மதியருக்கும் ராஜபுத்திரருக்கும் நெடுநாள் போர் நடந்துவந்தது. ஆரம்பத்தில் ஒருவரும் வெற்றிபெறவில்லை. முகம்மதியரின் பக்கத்திலே பெருமிதமான தொகைவாய்ந்த சேனையிருந்தது. அதற்குத் தலைவனாக நின்று சமர்புரிந்த வன் முகம்மது எனப்படுவான். ஒருசமயம் போரிலே ராஜ புத்திரர் சிறிது களைத்துப்போயினர். அதுகண்ட முகம் மது, "மத்தியபதி மன்னவன் கப்பங்கட்டி அடிபணிவதா யின், போரை நிறுத்துவோம்" என்றுரைத்துத் தூதுவிடுத் தான். அப் பேச்சைக் கேள்வியுற்ற ராஜபுத்திரருக்கு அதிலும் சிறப்பாக நம் கோமானுக்குக் கோபம் பொங்கி விட்டது. அவ்வளவில், கோமான் தன் மரபினரை முறைப் படி அணிவகுத்து, மூர்க்கமாகப் போர் தொடுக்கவே, முகம் மதின் சேனை வெள்ளம் முதுகு காட்டலாயிற்று. அப் பொழுதும் கோமான் போரை நிறுத்தவில்லை. பகைவனைத் துரத்திச்சென்று, அவன் சேனையைப் பிளந்தெறிந்து, முகம் மதையும் சிறைகொண்டு திரும்பினான். இவ் வெற்றியை விளக்கவே கோமன ராஜ விஜயம் என்னும் நூல் இயற்றப் பட்டது.

கோமான் மகாபராக்கிரமசாலி. ராஜபுத்திர வீரரின் திலகம். மிக்க புத்திகூர்மை பொருந்தியவன். எதற்கும்

சலியாத ராஜதந்திரி; ஏழையாயினும் சீமானாயினும் ஆபத்தென்று வந்தால் உடனே உதவி புரியச்சென்று தலைகொடுக்கும் வள்ளல். எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றும் ஆற்றல்படைத்த அண்ணல். இப்பொழுதும், ராஜபுதனத்திலே யாரேனும் மதிமோசமாக வினை புரிந்து உதவியின்றிப் பரிதபித்தால், "கோமான் வந்து கை கொடுப்பானே" என்று பலரும் பேசுவர். இங்ஙனம் பலரும் போற்றிப் புகழும் வண்ணம், இவன் பெரும் பெயர் பெற்றவன். சுருங்கச் சொன்னால், இவன் தன் பூதவுடம்பை யிழந்தானாயினும், புகழுடம்பை இன்னும் இழக்கவில்லை, ஆயிரம் வருஷங்களுக்கு அதிகமாகியும், இவன் பெயர் இன்றும் நின்று நிலவுகிறது. எனினும் சரித்திர வாயிலாகப் புலப்படும் கோரமான சம்பவமொன்றை யிங்கே குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. கோமான் தனது சபையிலிருந்த அந்தணரின் ஆலோசனையை மதித்துத் தனது இளையபிள்ளை ஜகராஜனுக்கு அரசை யீந்தான். அப்பால், யாது காரணமோ தெரியவில்லை, அவன் தன் புதல்வனை மாய்த்து மீண்டும் அரசைக் கைக்கொண்டு, அந்தணர் அனைவரையும் தன் நாட்டிலிருந்து தூத்திவிட்டான். முடிவில், அவனுக்குத் தன் மற்றொரு மகன் கையினாலேயே மாரணம் சேர்ந்தது.

அவன் காலத்திற்குப் பின்னர் பர்த்திருபட்டன், சிம்மன், உல்லதன், நரபாகன், சாலிவாகனன், சக்திகுமாரன், அம்பாபூஜ்யன், நரவர்மன், தேஜஸ்வர்மன் எனப் பல வீரபுருஷர் மத்தியபதியைப் பரிபாலித்து வந்தனர். அவர்கள் அனைவரும் பெருங்கீர்த்தி வாய்ந்தவர்கள். அதனை விளக்க இன்றும் பல கல்வெட்டுகள் காணப்படும்.

சமரசிம்மன் 1193-கி. பி.

கோமானுக்குப் பின்னர் சரித்திர வாயிலாக மிக்க பிரசித்தி பெற்றவன் சமரசிம்மன். அவன் அரியணை ஏறிய காலத்திலே, பாரதபூமியின் வடபாகத்தில் பல இந்து ராஜ்யங்கள் சிறப்புடன் விளங்கிவந்தன. அவற்றில் டில்லி ராஜ்யம் ஒன்றாகும். இதனை அரசாண்டுவந்த வேந்தன் பெயர் பிருதிவி ராஜன். இவனுக்கும் சமரசிம்மனுக்கும் இளமைமுதல் இயற்கையாகவே பெருநட்பு நிகழ்ந்து வந்தது. மேலும் பிருதிவிராஜனது சோதரியை நம் சமரசிம்மன் மணந்துகொண்டான். அப் பெண்ணின் பெயர் பிருதை. அவ்விரு வேந்தருக்கும் இடையே நிகழ்ந்துவந்த நட்பு, அம் மணவினையின் பயனாக இன்னும் நெருங்கி வளரலாயிற்று. தவிர, அவ்விருவரின் நடை, உடை, பாவனைகளும ஒத்திருந்தன. அங்ஙன மிருக்கையில், பிருதிவிராஜனுக்கும் அவன் பங்காளி ஜயசந்தனுக்கும் கடும்பகை தோன்றி முற்றிவிட்டது. இதன் விவரம் ஆதியோடு அந்தமாக, இந்நூலின் இரண்டாம் பாகத்தில் வெகு விரிவாக எடுத்துரைக்கப்படும். எனினும், இங்கே சிறிது சுருக்கிச் சொல்லவேண்டும்.

பிருதிவியும் ஜயசந்தனும் நெருங்கிய பங்காளிகள். ஜயசந்தன் கன்னோசி நாட்டரசன். ஒருசமயம் நம் பிருதிவி ராஜனுக்கு இலட்சக் கணக்கான பொன்புதையல அகப்பட்டது. அதில் தனக்கும் ஒருபங்கு வேண்டுமென ஜயசந்தன் விரும்பினான். ஆனால், பிருதிவிராஜன் அதற்கு

உடன்படவில்லை. தக்க காரணமின்றியே தாயாதிக் காய்ச்சல் தலைதூக்கியாடும். அதிலும், கருந்தனம் வந்து குறுக்கிட்டுக் கொண்டால், அது அனர்த்தம் விளைக்குமென்பது இயற்கையே. இது ஒருபுறமிருக்க, ஜயசந்தனது மகள் ஸம்யுக்தை என்பாளை மணக்க அப் பிருதிவிராஜன் ஆவல் கொண்டான். இதற்கு ஜயசந்தன் இசையவில்லை. இனி, தானே சக்ரவர்த்தியென டில்லியரசன் முடிசூடிக் கொள்ளவே கன்னோசி நாட்டின் காவலனுக்குச் சிறிதும் மனந்தாளவில்லை. அதனால் ஜயசந்தனுக்கோ. எங்ஙனமேனும் பிருதிவியின் கொட்டத்தைக் குலைத்துவிடவேண்டுமென வைரம் பாய்ந்துவிட்டது. ஆகவே பாரதபூமிக்கு மேற்கே கஜனியில் ஆண்டுவந்த ஷாபூதீன் என்பானுடைய உதவியை நாடினன். அங்ஙனமே, ஷாபூதீன் தனது சேனையொன்றைத் துணையாக அனுப்பிவைக்கத் தாமதிக்கவில்லை. பெரும்படையுடன் ஜயசந்தன் போருக் கெழுந்ததைக் கண்ட பிருதிவிராஜன் பக்கபலம் தேடிக்கொள்ளாமலிருக்க முடியுமோ?

அச்சமயத்தில், பிருதிவிராஜனுக்கு உற்ற துணையாகச் சென்று தலைகொடுத்தவன் நம் சமர சிம்மனே. கஜனியிலிருந்து வந்த சேனை சமரசிம்மன் கையில் சிக்கிச் சின்னபின்னமாயிற்று. அவன் தன் பெயருக்கேற்ப அக் கொடுஞ்சமரில் சிம்மமாகவே விளங்கி வெற்றிபெற்றான். பாரததேச பார்த்திபருக்குள் நேர்ந்த பகையைக்கொண்டு, இங்கே காலடிவைத்துக் காவலனாகிக் களிக்கலாமென அந்த ஷாபூதீன் கொண்ட ஆசை அச்சமயம் அவலமாகியது. வேற்றரசனது படைவகுப்பைப் பாழ்படுத்தியதுமல்லாமல், படைத் தலைவனையும் சிறைசெய்து

வந்த சமானைக் கண்டு பிருதிவிராஜன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. அன்று சமாசிம்மன் காட்டிய போர்த் திறனையும் தோள்வலியையும் ராஜ புதனத்திலே இன்றும் கவிஞர் போற்றி வருகின்றனர். அப்பால் நாட்கள் பல கழிந்தவுடனே, ஜயசந்தனது புதல்வியைத் தன் வாள் வலியால் பிருதிவிராஜன் கவர்ந்து கொண்டான். அது கண்டு ஜயசந்தன்கொண்ட சூழ்ச்சி நம் பாரத பூமிக்கே பெருங்கேடாக முடிந்தது. மீண்டுமவன் ஷாபுதீனுடைய துணையை நாடவே, முகம்மதியச் சேனைகள் திரண்டு வந்துவிட்டன. ஷாபுதீன் நேரில் புறப்பட்டு வந்தான் போருக்கு. இச்சமயத்திலும் பிருதிவி ராஜனுக்கு உண்மையில் தலை கொடுத்தவன் சமானே. மத்தியபதி வீரில் பதின்மூவாயிரவர் சமாசிம்மனுடன் சென்றனர். இரு பக்கத்துப் படைகளும் டில்லி நகருக் கப்பால் கைகலந்தன. அன்னிய அரசனை அண்டவிடுவதா என அன்று ராஜ புத்திரர் புரிந்த கோரயுத்தம் செப்புந் தரமன்று. மூன்று தினம் வரையில், போர்க்களத்தே பிணமலைகள் குவிந்து கொண்டே வந்தன; ஓடிய இரத்த ஆறே வீரரின் உள்ளத்தையும் கரைத்துவிட்டதெனலாம். அங்ஙனம் சமாசிம்மனும் பிருதிவிராஜனும் கடுஞ்சமர் மூறக்கியும் முடிவில் பயன்படவில்லை. இருவரும் பகைவன்கையில்பட்டுப் போர்க்களத்தில் மாண்டுபோயினர். பிருதை யென்பாள் ஒவ்வொரு நிமிஷமும் போரின் நிகழ்வை உணர்ந்து வந்தாள். புருஷன் பொன்றினன் எனக் கேட்டவுடனே, அவள் உயிர்தரித்திருக்க ஒருப்படவில்லை, அக்கினியில் குதித்து ஆவிதுறந்தனள். இதற்குள் ஷாபுதீன் டில்லியில் புகுந்து அடித்த கொள்ளையும் இழைத்த நாசமும் இயம்புந் தரமல்ல.

அப்பால் கன்னோசி நாட்டுக்கும் அதன் காவலனுக்கும் அதே கதிதான் நேர்ந்தது. அன்று நடந்த போரின் பயனாக, முகம்மதியர் நாளடைவில் இத்தேசத்திலே நிலைத்து விடலாயினர். அப்பால் பல்லாண்டுகள் வரையில் பாரதபூமி பரதேசத்தினரின் கையில் சிக்கிப் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. கொள்ளையும் கொலையும் அழிவும் நாசமும் அளவிட்டுரைக்க முடியா. வீரசிங்கங்களான ராஜபுத்திரர் வாளா விருந்து விடவில்லை. தோள்வலியும் வாள்வலியும் கொண்டு தார்த்தாரியர், பட்டாணியர் முதலிய வமிசத்தினரைத் தீரமுடன் எதிர்த்துச் சிறிதும் சலியாது சமர்செய்து வந்தனர். அம்முயற்சியிலே அவர்களுக்கு வெற்றியும் தோல்வியும் மாறிமாறிக் கிடைத்து வந்தன. ராஜபுதனத்திலுள்ள ஒவ்வோரிடத்திலும், பிணக்காடு நிரம்பி, இரத்த ஆறு பெருகியும், முடிவிலே ராஜபுத்திரர் பலனடையவில்லை. பல வமிசங்கள் பூண்டற்றே போயின. எனினும், அவ்வீரரின் பெயரும் புகழும் அழிந்துவிட வில்லை.

அக்காலம், டில்லி யரசவையில் அமர்ந்திருந்த சந்திரகவி கூறியிருக்கும் வண்ணம், சமரசிம்மன் மகாமேதாவி; மிக்க தீரபுருஷன், வீரரில் வீரன், ஞானசாஸ்திர நிபுணன், வாக்கு வன்மைபெற்றவன், ஈசுவர பக்தி நிரம்பியவன், போர்நூலைக் கரைகண்டவன், படைகளை யணிவகுப்பதில் பரம சாமர்த்தியசாலி. கற்றோரையும் உள்ளங்குளிர்விக்கும் உத்தமன். அவனது கொலுமண்டபத்திற்கு இந்திரசபையும் இணையற்ற தென்னலாம்.

ராணி கூர்மதேவி

சமர சிம்மனுக்குப் புத்திர பாக்கியம் மிக அதிகம். அவன் மூத்தபிள்ளையின் பெயர் கலியாணராவ். அவ்விருவரும் டில்லியிலேயே பிருதிவி ராஜனுக்காக உயிர் வழங்கி விட்டனர். ஆதலின் சமரசிம்மன் மைந்தரில் ஒருவனான கர்ணன் என்பான் பட்டத்துக்கு வந்தான். அப்பொழுது அவன் அதிபால்யனாக இருந்ததால், அவன் அன்னையே அரசைநடத்தி வந்தனள். அவள் பெயர் ராணி கூர்மதேவி. அந்நங்கையின் வெகு நேர்மையான ஆட்சியைப் புகழ்ந்து பேசாதார் இல்லை. வடக்கே ஷாபுதீன் அடைந்த வெற்றியின் விளையாக இந்து ராஜ்யங்கள் நிலைகுலையலாயின. ஆயினும், மத்தியபதி மாத்திரம் தலைதூக்கியே நின்று வந்தது. அதன் மகிமையைக் குத்புதீன் என்பான் மதித்துப் பார்க்கவில்லை. அதனால் பெரும்படையுடன் வந்தான் நடுநாட்டின்மீது. பெண்ணரசு எம்மாத்திரமென அம் முகம்மதியன் மதித்துவிட்டான் போலும். ராஜபுத்திரப் பெண்மணிகளில் வீரமங்கையர் உண்டு. அத்தகைய மங்கையருக்குள் நம் கூர்மதேவி திகழும் திலகமாவாள். ஆதலால், பகைவனது படையின் வருகையைக்கேட்டு அவள் இம்மியளவும் திகைக்கவில்லை. தயங்கவுமில்லை. மத்தியபதி வாசிகளான ஆண்மக்கள் அனைவரும் போர்க்கோலங் கொள்ள வேண்டுமென்று பறை யறைவித்தாள். அவ்விதமே ராஜபுத்திர வீரர் பலரும் புறப்பட்டனர். ராணி கூர்மதேவி அச் சேனைக்குத் தானே தலைமைவகித்துப் போர்புரியப்

போயினள். தம் மாபிலுதித்த மங்கை யொருத்தி முகம் மதியனுடன் சமர்செய்யப் போவதையுணர்ந்தவுடன், ராஜ புதன வேந்தரில் ஒன்பதின்மரும் குலத்தலைவரில் பன்னிரு வரும் பக்கபலமாக வந்து போர்க்களத்தில் குவிந்தார்கள். அம்பாம் என்னும் நகரின் அருகே மகா மும்முரமான யுத் தம் நடந்தது. முசம்மதியனே மிக மூர்க்கமாகப் போர் புரிந்தான். புரிந்துமென்ன? முடிவிலே அம் மங்கைக்கு முதுகுகாட்டி ஓட்டம் பிடித்தான் படுகாயத்துடன்.

அப்பால், அவள் தன் பிள்ளைக்கு வயது வந்த உடனே அரசியலை அவனிடம் ஒப்படைத்து, மதிமந்திரி போல் இருந்து வந்தாள். அவன் நீண்டகாலம் அரசுபுரியவில்லை. குடும்பக்கவலை அவனைச் சூழ்ந்து கொள்ளலாயிற்று. அவ னுக்கு பகீபன் என ஒரு மைந்தன் பிறந்தான். இவனைப் பேதை யெனவும் மக்களில் பதரெனவும் பகரவேண்டும். தந்தைக்குப் பின் அரசையடைய வேண்டுமென இவன் விரும்பவில்லை. தன் தாய் மாமன் மாளிகையில் தங்கியிருக்க மனங்கொண்டு தகப்பனைத் துறந்துவிடலானான். அது கண்டு கர்ணன் கொண்ட துயரம் கூறுந்தரமன்று. மூத்த வன் பேதையாயின னென்றால், முடிக்குரிய மற்றொரு மைந்தனும், முகம்மதியருக் கிணங்கி மத்தியபதியை மற ந்து விட்டான். அங்ஙனம் இரு புதல்வரும் பதராகி விடவே, கர்ணனுக்கு அரசவாழ்வில் வெறுப்புத்தட்டி விட் டது. அதுகாரணமாக அவன் அரசையும் துறந்து ஆவியை யும் விட்டுப் பரகதி போயினன்.

இரகூபன் 1201. 1239—கி.பி.

கர்ணன் அரசைவிட் டகலவே, ரகூபன் என்பான் அரியணையில் அமர்ந்தான். அவன் பட்டமேறிய காலத்தில் மத்தியபதி தன் மகிமையில் சிறிது நிலை குலைந்திருந்தது. பற்பல பீடைகள் நடுநாட்டில் தோன்றி, ஜனங்களை வாட்டி வந்தன. அங்ஙன மிருந்தும் ரகூபன் தனது குன்று வலிமையால், அக்குறைகளையகற்றிக் குடிகளுக்கு நலம்பயக்கும் சீர்திருத்தம் பல செய்தானெனப் புலப்படுகிறது. அக் காலத்திய முகம்மதியருக்கு எப்போதும் மத்தியபதியின்மீதுதான் கண்ணோக்கம். ரகூபனது காலத்தில் ஷம்சுதீன் என்பான் தன் படையுடன் வந்தெதிர்த்தான். உடனே நடுநாட்டின் நரபதியும் பொங்கி யெழுந்தான் போருக்கு. இருதிறத்துப் படையும் நாகதுர்க்க நகரிலே சந்தித்தன. அச்சமரின் முடிவில், ஷம்சுதீன் சலித்துப் போய், உயிர் தப்பினால் போதுமென ஓடிவிட்டான். அன்று முதல் ரகூபனது புகழ் எங்கும் பரவலாயிற்று. அவன் காலம்வரையில் மத்தியபதி மன்னவருக்கு ராவல், ராவ், ரவுத்து என்ற பட்டப் பெயர்கள் இருந்து வந்தன. ரகூபன் காலத்திலே அப்பட்டப்பெயர் ராணா என மாறியது. அப்பெயரையே இன்றும் நாளையும் நடுநாட்டின் நரபதிகள் தரித்து வருகிறார்கள். பெயர் மாறியதற்குக் காரணம் பின்வருமாறு: அக்காலத்திலே மந்தாரம் என்னும் நாடு மிக்க பெயர்பெற்றிருந்தது. அதனை ஆண்டுவந்த அரசன் மோகலன் எனப்படுவான். அவன் ராஜபுத்திரனே யாயினும்,

அக்கினிகுலத்தைச் சேர்ந்தவன். இவனுக்கும் ரகூபனுக்கும் நெடுநாளாகக் கடும்பகை இருந்துவந்தது. பகை முடித்தலென்பது ராஜபுத்திரரின் பரம கடமைகளில் முதன்மையானது. போரைத் தவிர்த்து எவ்வித உடம்பாட்டுக்கும் மோகலன் மனமொப்பவில்லை. ரகூபனுக்கோ கோபம் பொங்கிவிட்டது. ஆதலின், வீரப்படையொன்று திரட்டி, மந்தார நாட்டில் புகுந்து, அரண்மனையிலேயே மோகலனைச் சிறைசெய்து திரும்பினான். திரும்பியதும், அவ் வெற்றியின் அறிகுறியாக, ரகூபனுக்கு ராணா என்ற தன் பட்டப் பெயரைத் தந்து, கோத்துவாரம் என்னும் குறு நாட்டையுங் கொடுத்து மோகலன் விடுதலை பெற்றானென்று சரித்திரம் சொல்லும்.

ரகூபனுக்குப் பின் ஏறக்குறைய ஐம்பது வருஷகாலம் ஒன்பது பெயர் அந் நடுநாட்டில் அரசுசெலுத்தி வந்தனர். அந்த ஒன்பதின்மரில் அறுவர் போர் முனையில் வீரம்விளைத்து உயிர் நீத்தனரென அறிகிறோம். மற்ற மூவரோ தம் மதத்தைக் காக்க உயிர் வழங்கினோராவர். கயா என்னும் புண்ணிய நகரம் முகம்மதியரின் வசப்பட்டுக் கிடந்தது. அதனை மீட்க முயன்றதிலேயே அம்மூவரும் ஒருவர்பின் ஒருவராக உயிர் துறந்தனர். அவர்களுடைய வீரச்செயலைக்கண்டு பகைவர் மனம் பதைத்துப் போயினரென அறிகிறோம். அப்பால் சிறிது காலம்வரையில், முகம்மதியர் முடங்கியே கிடந்தனர். இனி, அந்த ஒன்பதின்மரின் ஆட்சிக்காலத்திலே, ஒரு சமயம் சித்தூர் நகரம் அன்னியரிடம் அகப்பட்டுச் சிதையலாயிற்று, ஆயினும், பாண சிம்மன் என்பான் அத் தலைநகரைமீட்டு, ராஜபுத்திரரின் வீரத்தை மீண்டும் விளங்கச் செய்தான்.

ராணு இலட்சுமணன் 1275—கி. பி.

ராணு இலட்சுமணன் என்பான் மத்தியபதி மன்னவனுக 1275ம் வருஷம் சித்தூரிலே சிம்மாசனம் ஏறினன். நடுநாட்டின் சரித்திரத்திலே அவன் காலம் மிகவும் பிரசித்தி பெற்றது. அச்சமயம் டில்லியில் பட்டாணிய முகம்மதியர் சக்கரவர்த்திகளாக விளங்கிவந்தனர். அவர்களில் பலரும் பெரும் படையுடன் வந்து, ராஜபுதன நாடுகளையும் இதர நகரங்களையும் தாக்கி நிர்மூலஞ் செய்தனர். ஆயினும், நடுநாடுமட்டும் அங்காசத்திலிருந்து சிறிதுகாலம் தப்பி நின்றது. ராணு இலட்சுமணனது காலத்தில் டில்லியிலே சக்கரவர்த்தியாக அரசுபுரிந்தவன் அல்லாவுதீன். அவன் பெயரும் புகழும் படைத்தவன்; சேனையுடன் சென்றவிடமெல்லாம் சிறப்பெய்தியவன். நாடு பிடிப்பதில் அவனுக்கிருந்த ஆசைக்கு அளவுகிடையாது; மேலும் ராஜபுத்திர மங்கையரை மனைவியாகக் கொள்ளவேண்டுமென்ற மையலும் அவனுக்கு மிக அதிகம்.

ராணு இலக்குவன் பட்டத்துக்கு வந்த காலத்தில் வாலிப வயது பெறவில்லை. குழந்தையாகவே யிருந்தான். அச்சமயம் அவனது சிற்றப்பனே போஷகனுகவும் பிரதிநிதியாகவும் இருந்தவன். அச்சிறிய தந்தையின் பெயர் பீமசிம்மன். இவனுக்கு மிக்க அழகுவாய்ந்த மனைவியொருத்தியிருந்தனள். அவள் பெயர் பத்மினி. மங்கையரின் நலத்தையும் குணத்தையும் மதித்து, அவர்களை நம் முன்னோர், பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி, என நால்வகையாக

வகுத்துளர். அந்நாலவரில் பதுமினியே சிறந்தவள். பீம னது மனைவியின் பெயரே பத்மினி. தன் பெயருக் கேற்ப அவள் பேரழகு பொருந்தியவள். அப்பேரழகை உவமை காட்டிக் கூறலா மென்றால், சொல் ஒக்குமே யொழியப் பொருள் ஒவ்வாது. அவளது பாதம்பட மத்தியபதி பாக் கியம் படைத்த தெனலாம். சுருங்கச் சொல்லின், அக் காலம் பாரத நாட்டிலிருந்த பெண்மணிகளுக் கெல்லாம் அவளே திலகமாவாள்.

அப்பட்டாணிய வரசன் பத்மினியின் பேரழகைக் கேள்விப்பட்டே சித்தூரின்மீது படையெடுத்து வந்தான். ஜானகியின்மீது இலங்கை வேந்தன் ஆசைநோய் கொண் டதுபோல், அல்லாவுதீனும் ஆசைகொண்டான் போலும்! திரண்ட படையுடன்வந்து சித்தூரை மும்முரமாக முற்று கையிட்டும், ராஜபுத்திர சிங்கங்களின்முன்னே அவன் வீரர் நிற்க முடியவில்லை. தவிர அச்சமயம் சித்தூரைச் சுற்றி ஏறக்குறைய ஐம்பது கற்கோட்டைகள் இருந்தன. ஒவ் வொன்றும் ஓரொரு மலையைப்போல் பட்டாணியச் சேனை வெள்ளத்தைத் தடுத்துநின்றது. கோட்டையைக் குறு கினால், அப்புமழை அடிக்கும்; ராஜபுத்திர வீரரை யணுகி னாலோ வாள்வீச்சு வதைக்கும். என்ன செய்வான் அல்லா வுதீன்! கோளரியினால் குலைக்கப்பட்ட குஞ்சரத்தைப்போல் கலங்கிநின்றான். ராஜபுத்திர வீரரிலும் சேதம் இல்லாம லில்லை. பலர் பராக்கிரமத்துடன் போர்புரிந்து வீரசுவர்க் கம் புகுந்தனர். ஒருவரும் முதுகுகாட்டவில்லை. இங்ஙனம் நெடுநாள் போர் நிகழ்ந்ததில் இருதிறத்தினரும் களைத்துப் போயினர். வெற்றியு மில்லை; தோல்வியு மில்லை. வெற்றி மாலை சூடிப் பத்மினியைக் கைபிடிக்கலாமென அப் பட்டா

ணியன் கொண்ட எண்ணம் மண்ணாயிற்று. அவன் படை வகுப்பிலே பலரும் களப்பலியாகிவிட்டனர். அதுகண்டு அவன் கலங்கினனாயினும், பத்மினியின் மீதிருந்த மையலை மட்டும் கைவிடவில்லை. ஆதலின், பத்மினியைக் கண்ணால் காணப்பெறின் கடும்போரை நிறுத்துவதாக அறிவித்தான்.

இக்கோரிக்கையை ராஜபுத்திரர் செவியிலேற்கவில்லை எங்ஙனம் ஏற்றுக்கொள்ள முடியும்? கண்ணெதிரே காணப் பெறும் பாக்கியம் பெறாமல் போயினும், நிலைக்கண்ணாடியின் மூலமேனும் அழகைப்பருக அருள்புரிய வேண்டுமென மீண்டும் தூதுவிடுத்தான். நெடுங்காலமாக நடந்தபோரில் களைத்துப் போனதோ, குலவாலிபரிலே வீராதிவீரர் பலரைப் பறிகொடுத்ததோ, யாதோ அறிகிலோம்! அல்லாவுதீனுடைய வேண்டுகோளுக்கு ராஜபுத்திரர் சம்மதித்தனர். அவ்வளவில், அவன் சித்தூருக்கு வந்தான் பத்மினியின் பிரதிபிம்பத்தைக் காண. சக்கரவர்த்தியாக முடிசூடிய ஒருவன் பெண்ணரசியொருத்தியின் பேரழகைக் கண்ணாடியில் கண்டு களிக்க வந்தான் என்றால், அவனது பேதைமதியை என்னென்று எடுத்துரைப்பது? வாலியும் வல்லரக்கரும் கோலமுடி மன்னவரும் பெண்ணின்மீது வைத்த மையலால் மாழ்கிப் போயினரென்றால், அல்லாவுதீன் எம்மாத்திரம்!

பகையரசனாயிருப்பினும், ராஜபுத்திரரின் சத்திய வாக்கை நம்பி, மெய்காவல் அதிகமின்றியே வந்தான். வந்து கண்ணாடியின் மூலம் வடிவைக் கண்டு களித்ததும் திரும்பினான் தன் பாசறையை நோக்கி. தங்கள் வாக்கை நம்பி மிக்க காவலின்றி வந்த வேந்தனை, பீமசிம்மன், கோரசிம்மன் முதலிய சிலவீரர் சிறிதுதூரம் தொடர்ந்துசென்று

வழியனுப்பினர்; உள்ளங்களிக்க உபசார வார்த்தையும் உரைத்தனர். அல்லாவுதீனும் உபசாரவார்த்தை சொல்லத் தவறவில்லை. அங்ஙனம் இரு பக்கத்தினரும் உரையாடிக் கொண்டே கோட்டையின் மதில்புறமடைந்தனர். அச் சமயம் அருகே மறைந்திருந்த பட்டாணிய வீரர்கள் திடீரென அங்குத்தோன்றி நம் பீமசிம்மனைச் சிறை செய்து சென்றுவிட்டார்கள். அல்லாவுதீனும் தக்க மெய்காவல் பெற்று, மகிழ்வுடன் போனன். போயினபின், பத்மினியை மரியாதையாக அனுப்பித்தரின், பீமசிம்மன் உயிர்தப்புவான், அவனுக்கு விடுதலையும் கிடைக்கும். இல்லையேல், அவன் இரண்டையும் இழக்க நேரும், சித்தூரும் சின்ன பின்னமாகும் என்று கடிதம் விடுத்தான் கம்பீரமாக.

பீமன் பகைவன்கையில் பட்டதையும், பத்மினியை யனுப்பாமல்போயின் பேராபத்து நேருமென்பதையும், உணர்ந்தவுடனே சித்தூர் வாசிகள் தீயில்விழுந்த புழுவே போல் துடித்தார்கள். பத்மினியை இழந்து மானத்தைப் பறிகொடுக்க மனம் வருமோ? அல்லது பத்மினிக்காக பீமனைத்தான் இழக்க இயலுமோ? இரண்டு கன்றினுக்கு இரங்கும் பசுவைப்போல் பதைத்தனர் அத்தனை ராஜ புத்திரரும். இவ்விஷயம் பத்மினிக்கும் எட்டியது. பார்த்தாள் அப் பெண்ணரசி. அந்தோ! நம் எழில்நலமன்றோ இத்தனை இழவுக்கும் காரணமாயிற்று. இது பற்றியே பேரழகு படைத்த மனைவி பகையாவாளென முன்னோர் மொழிந்துபோயினர். விதியையும் மதியால் வெல்லலாம் ஒருகால் என்பர் பெரியோர். அங்ஙனமே நமது உயிருக்கும் உயர்வுக்கும் பங்கம் வாராவண்ணம் அம்மை பவானியின் அருளால் முயன்று பார்ப்போம், என அம்மாதரசி மிக்க துணிவுடன்

தனது மாமன் கோரசிம்மனையும் மருமகன் பத்மலனையும் வரவழைத்து ஆலோசனை செய்தனள்.

அப்பொழுதும், அல்லாவுதீனுடைய சேனைகள் சித்தூரைச் சுற்றி முற்றுகையிட்டு நின்றிருந்தன. ஆதலின், "முற்றுகையை நீக்கிவிட்டு வீரரையும் அப்புறப்படுத்தின் பத்மினியை அனுப்புவோம். ஆனால் அவள் தன் மரபுக்குரிய காவல் பூண்டு அரசிக்குரிய ஆடம்பரத்துடனேயே வருவாள். சேடியரும் செவிலித்தாயரும் சூழ்ந்து வருகையில், அவசரப்பட்டு அவளது நாணத்தையும் கூச்சத்தையும் அவலப்படுத்தக் கூடாது" என்று ராஜபுத்திரர் அப்பட்டாணிய வரசனுக்கு அறிவித்தனர். கஞ்சி வரதப்பா என்றால் எங்கே வரதப்பா என்ற ஏழையேபோல் அண்ணாந்து நின்ற அல்லாவுதீன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்துவிட்டான்.

பத்மினியுடன் பாதுகாவலாகச் செல்ல எழுநூறு மூடிப்பல்லக்குகள் ஆயத்தமாயின; வீரர்திலகமான ஒவ்வொருவர் ஒவ்வொரு சிவிகையிலும் ஏறிக் கொண்டனர்; அப்பல்லக்குகள் ஒவ்வொன்றையும் தூக்கிச்செல்ல, ஆறு ஆறு சூரர்கள் போகிகள்போல் வேடம் பூண்டனர். ஒவ்வொரு வீரனிடமும் உடை மறைவில் ஈட்டியும் பட்டாக்கத்தியும் பதிவாக இருந்தன. அவ்விதம் ஆயத்தமான எழுநூறு சிவிகைகளும் பட்டாணியனது பாசறை சேர்ந்து அங்கே இறங்கினவுடன், பீமனும் பத்மினியும் கடைசிமுறையாகக் கலந்துபேச அரைநாழிகை அவகாசம் கிடைத்தது. அவ்வாறே இருவரும் ஒரு கூடாரத்திற்குள் பேசியிருந்தனர். பின்னர் பீமனை ஒரு சிவிகையிலேற்றிச் சித்தூர் செல்லச் சிலர் தருக, மற்றப் பல்லக்குகளோ டில்லிக்குச் செல்ல அங்கேயே காத்திருந்தன.

அந்த அரை நாழிகை கழிவதும் அல்லாவுதீனுக்கு ஒரு யுகமாயிருந்தது. இதற்குள் பீமனுக்கேன் விடுதலையெனவும் அல்லாவுதீன் ஆலோசித்தான்; இவ்வளவு நாழிகையா கண்டு பேச என்றும் பொருமினன். பத்மினியின் வடிவத்தைக் கண்ணெதிரே கணப்பொழுதில் காண்போம் எனவும் வினடிகளை விரல்கொண்டு எண்ணியிருந்தான். அவ்வண்ணம் அவன் அண்ணாந்து நிற்கையில், கிங்கரரைப் போன்ற வீரர் பலர் வாளும் ஈட்டியுந்தாங்கிச் சிவிகையிலிருந்து கிளம்பினர். போகிகள்போல் வேடம் பூண்டு வந்த சூரர் வேல்கம்புடன் வெளிப்பட்டனர். இன்னுஞ்சிலர் ஈட்டியை நீட்டிக்கொண்டு சிங்கநாதஞ் செய்தனர். உடனே அரிமாவைக் கண்ட கரிமாவைப் போல் அல்லாவுதீன் ஆசைநீங்கி அடங்கா நடுக்கங் கொண்டான். என்றாலும் ராஜபுத்திரரை எதிர்க்கும் வண்ணம் தன் சேனைக்குக் கட்டளையிட அவன் மறக்கவில்லை. அவ்வாறே பட்டாணியரும் படைக்கலங்களுடன் பாய்ந்தனர். இதற்குள் பீமன் கனவேகம் பொருந்திய ஒரு பரிமீதேறிச் சித்தூர்க் கோட்டையை நெருங்கிவிட்டான். அவனைத் துரத்திவந்த பட்டாணியப் படைகளைச் சித்தூர்வீரர் சும்மா விடவில்லை. மறித்துப் போர்புரிந்து அவர்களை வதைத்துத் தாங்களும் மரித்தனர். ராஜபுத்திரரில் உயிர் தப்பியவன் பத்மலன் ஒருவனே. மரபின் மானமும் மன்னவன் மகிமையும் அரசியின்கற்புமே அவர்களுக்கு ஆருயிர். உடல் கூட்டிலுள்ள உயிர் ஒரு பொருட்டன்று. ஆதலால் நடுநாட்டிலிருந்த வாலிப திலகங்கள் அனைத்தும் அன்று தீர்ந்துபோயின எனலாம்.

ஆயினும் அல்லாவுதீனை அக்கணமே மீண்டும் முற்றுகைபோட முனையவில்லை. ஏனெனில் ராஜபுத்திரரின்

சலியா வீரத்தைக் கண்டு தளர்ந்துபோனான்; தன் சேனையின் பெரும்பாகத்தையும் பறிகொடுத்துவிட்டான். தனது வஞ்சனையும் அவர்களது தந்திரத்தின் முன்னே தலையெடுக்க முடியவில்லை. எனவே சிறிதுகாலம் தன் ஆசையைக் கட்டிவைத்து வீரத்தையும் களத்தே போட்டு வெறுங்கையுடன் டில்லிபோய்ச் சேர்ந்தான்.

பன்னிரண்டு பிராயமும் நிரம்பப் பெறாத பாலன் படுகாயத்துடன் உயிர்தாங்கி வந்ததை அறிந்த கோரசிம்மன் மனைவி, அவனை வாரியணைத்து "அப்பா! என் பர்த்தாவின் வீரத்தை விளம்புவாயாக, அதனைக்கேட்ட பின்பே உயிரை யிழக்கக் கருதியுள்ளேன்" என்றனள். அதற்கு அவன் "அன்னாய்! என் மாமனது வீரத்தை என்னென்று எடுத் துரைப்பேன். போர்க் களத்திலே பகைவனது படை வீரரைக் கொன்றுகுவித்துப் போர் வேய்ந்துவர, யானே உடனிருந்து வாளைக் கருக்கிட்டு நீட்டும் சிற்றுள் வேலையில் சிரத்தை கொண்டு நின்றேன். பகைவரது பிணக்காட்டின்மீது வீரமென்னும் போர்வையிட்டுப் பட்டாணியப் படைத்தலைவர் சிரத்தையே தலைக் கணையாகக் கொண்டு படுத்துறங்குகின்றான்; இன்னும் எங்ஙனம் யான் விரித்துரைப்பேன் என் மாமனது வீரச் செயலை! என் மாமன் கோரசிம்மனது வீரத்தைக் கண்டு வியக்கவோ, விம்மி யழவோ பகைவரில் ஒருவரும் எஞ்சவில்லை," என்று சொன்னான். அதுகேட்ட தேவி நல்லதென நவின்று, புன்முறுவல் பூத்து "என் குழந்தாய்! என் காலதாமதமென என் நாதன் சினங்கொள்வார். ஆதலின் சீக்கிரம் செல்கின்றேன் அவர்தம் சீரடியைச் சேவிக்க," என்று புகன்று, அக்கணமே அமரருலகு சென்றனள்.



சித்திரகூடக் கோட்டை

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது பழமொழி. அங்ஙனமே அல்லாவுதீனுக்கு அம் மங்கையின் மீதிருந்த மையல் அகலவில்லை. சித்தூரைத் தரையோடு தரையாக ஆக்கிவிட வேண்டும், அவ் வண்ணமாக்கி அப் பெண்ணரசியை அடைந்தாக வேண்டும், என்ற கோபக் கொதிப்பும் காமக்கனலும் அவனை அடிமை கொண்டுவிட்டன. அதனிமித்தம் தன் நாட்டின் நாலுபாகங்களிலிருந்தும் கணக்கற்ற படைகளைத் திரட்டினான்; போருக்கு வேண்டிய இதர தளவாடங்களையும் வேண்டுமளவு தேடி வைத்தான்; வைத்த பின்னர் 1290-ம் வருஷம் வந்தான் சித்தூரை முற்றுகையிட. முதல் முற்றுகையிலும் அழிவிலும் களைத்துப்போய் ஆறித் தேறுதிருந்தும், ராஜபுத்திரர் தமக்குரிய பேராண்மையைக் கைவிட்டு விடவில்லை. உயிர் போகும் தருணத்திலும் நிமிர்ந்து நின்று உருமக்கூடிய ராஜபுத்திரர், கிடைக்கக்கூடிய படையை எல்லாம் கூட்டினர். கூட்டி வழக்கம்போல் சிங்கநாதத்துடன் சமர் செய்தனர். ஆயினுமென்ன? பட்டாணியனது படைவகுப்பு கும்பல் கும்பலாகக் கிளம்பிவர, சித்தூர் சேனையோ நாளுக்கு நாள் நலிந்துகொண்டே வந்தது. எண்ணிறந்த படைவீரரைப் பறிகொடுத்து, நகரின் தென்பாகத்திலுள்ள ஒரு குன்றை அல்லாவுதீன் வசப்படுத்திக் கொண்டான்.

அத்தென்பாகம் சித்தூர்க் கோட்டைக்கு உயிர்நிலையானது. பன்னிரண்டு வருஷம் மீண்டும் கடும்போர் புரிந்து, பல வீரரையு மிழந்து ஊருக்கு உயிர்நிலையான குன்றையும் கைவிட்ட ராணா இலச்சுவனுக்கு ஏக்கம் உண்டாகி விட்டது. கம்பீரமான ஆண்சிங்கமானாலும் நகமும் பல்லும் இழந்தபின் அது கலங்குமன்றோ? தன் ஆருயிருக்காக

அவன் அஞ்சவில்லை, தன் வமிசம் போய்விடுமே, என்ன செய்வது. என்பதுதான் அவனுக்குதித்த ஏக்கத்திற்கும் அச்சத்திற்கும் மூலகாரணம். அவனுக்குப் பன்னிரண்டு பிள்ளைகள். எள்ளும் தண்ணீரும் இறைக்கவும், பழிக்குப் பழி வாங்கவும், ஒரு பிள்ளையாவது பிழைத்தால் போது மென நினைத்து: அவன் ஒருதினம் துயர்க்கடலில் ஆழ்ந்தவனாய் அமளியிலே அயர்ந்திருந்தான். வித்தை யுள்ளவனும் விசாரமுள்ளவனும் பணம் படைத்தவனும் பைத்தியங் கொண்டவனும் படுத்துறங்க முடியுமோ? அங்ஙனமே ராணா இலக்குவன் தூங்கவில்லை கண்ணிமைகள் மட்டும் மூடி இருந்தன. அப்பொழுது "பசி! பசி! பசியதிகம்!" என்னும் குரல் கேட்டது. உடனே கண்ணைத்திறந்து பார்க்கையில் அம்மை பவானியின் உருவம் ஒருபால் தென்படலாயிற்று. இது கனவோ அல்லது நினைவோ, என அவன் கலங்கினான். மறுபடியும், ''பசிதாளாது பசிதாளாது'' என்னும் அரவம் காதில் விழுந்தது. அவ்வளவில் பவானி அம்மை தானெனத் துணிந்த இலக்குவன், "அன்னாய்! என் குலமக்களிலே எண்ணிறந்தவரை உனக்குக் களப்பலி யூட்டியும் இன்னமுமா பசி யடங்கவில்லை." என்றிரந்தான். அதற்கு அவ்வம்மை "அப்பனே! எனக்கு முடித்தலைகள் வேண்டும். அதிலும் ஒன்றுகூடக் குறையாமல் பன்னிரண்டு பலி தேவை. இல்லையேல் சித்தூர் உன் வழிமுறையிலிருந்து எக்காலும் விலகியே நிற்கும்" என்றருளினள். பின்னர் அம்மையின் உருவம் மறையலாயிற்று. பொழுது புலர்ந்ததும் ராணா தன் பாளையக்காரரை வரவழைத்து, இரவில் நிகழ்ந்ததை யறிவித்தான். அவர்களிற் சிலரோ 'அரசன் புத்திதடுமாற்றத்தால் புலம்புகின்றான். அம்மை

யாவது இரத்தபூஜை விரும்பவாவது' என்றனர். எனினும் முடிவிலே அவர்கள் அனைவரும் அன்றிரவு அரசனுடன் அரண்மனையில் படுத்துறங்கிப் பரீட்சை பார்ப்பதென எற்பாடாயிற்று. அவ்வாறே பாளையக்காரர் படுத்துறங்கினர்; நள்ளிரவிலே பத்திரகாளி பிரசன்னமானாள். உடனே அனைவரும் பரவசங்கொண்டு நிற்க, “அரசே! ஆயிரக்கணக்கில் மிலேச்சர்களை உன் வீரர் வாளுக்கு இரையாக்கி, இரத்த பூஜை செய்திருப்பினும், அது எனக்கு எம்மாத்திரம்? ஒவ்வொரு முறையும் உன் மைந்தரில் ஒருவனை இறைவனாக்கி, அவனுக்கு முடிகவிப்பாயாக. மூன்றுதினம் அவன் குடை, கொடி, சாமரம் முதலிய கோலத்துடன் விளங்கிப் போரை நடத்தி, நான்காவது தினத்திலே தன் பகைக்கும் விதிக்கும் இரையாக வேண்டும். இங்ஙனம் 12 முடித்தலைகள் களப்பலியாகின், யான் திருப்தியடைய முடியும்” என்று கூறினாள். காளியின் கூற்றைக்கேட்ட பாளையக்காரர் அனைவரும் வேறுவகை காணாது கலங்கினர். இச்செய்தி ராணாவின் குமாரர் பன்னிருவருக்கும் எட்டியது. உடனே அவர்களில் ஒவ்வொருவரும், “நான்தான் முதலில் முடிசூடிக் காளியைக் களிக்கச்செய்து, வீரசுவர்க்கம் புகுவேன்” என்று பிரமாதமாக வாக்குவாதம் செய்யலாயினர். என்னே ராஜபுத்திரச் சிறுவரின் வீரம்! சூரிய வமிசத்தில் உதித்த உண்மை க்ஷத்திரியர் அன்றோ?

அப் பன்னிருவரில் ஹரசிம்மன் என்பான், “யானே மூத்தவன். மூத்தவனுக்கே முதலில் முடிசூட்ட வேண்டும். முதலில் யானே முடிசூடி வீர சுவர்க்கம் புகுவேன்” என்று மன்றாடினான். மற்ற மைந்தரும் அதற்கு ஒருவாறு மனமொப்பி அவனுக்கு முடிகவித்தனர். ஒற்றை வெண்

கொற்றக் குடையும் இரத்தநிறக் கொடியும் வெண்சாமரையும் மூன்றுதினம் அவனை அலங்கரித்து நின்றன. நான்காவது தினத்திலே காளியின் அகங்குளிர, அவன் போர்முனையிலே பகைவரின் படையை மார்பில் தாங்கி, மகிமையான மரணமடைந்தான். அப்பால் வரிசைப்படி இரண்டாவது பிள்ளையாகிய அஜய சிம்மனுக்கு முடிசூட்டி அவனைப் பலிகொடுக்க வேண்டும். அவனும் அதற்குத் தயங்காது மனமுவந்தான். ஆனால் அவனே ராணாவின் அருமைப் புதல்வன். ஆதலின், முதலில் மற்றையோருக்கு இடங் கொடுப்பாயாக என்று இரந்தனன் இலக்குவன். அதனால் இதர பிள்ளைகள் பதின்மரும ஒருவர்பின் ஒருவராக முடிசூடி, மாண்டுபோயினர். மூத்தவனுடன் 11 முடித்தலைகள் கணக்காகிவிட்டன. இனி பன்னிரண்டாவது தலை கொடுத்தாக வேண்டும். ராணா இலக்குவனும் அஜயசிம்மனுமே எஞ்சி நிற்பவர்கள். அவ்விருவரில் யார் பலியாவது என்ற விவாதம் விளைந்தது. அஜயசிம்மன் தன் தந்தையை நோக்கி, "எந்தாய்! புத்திரனாகப் பிறந்தவன் தன் தந்தையையும் தாய் நாட்டையும் பாதுகாக்க வேண்டும். ஆதலின் யானே முடிசூடி மரிப்பேன். எனது மற்றைச் சோதரர் மரித்தபின், யான்மட்டும் உயிர்வாழின், உலகம் என்னை ஏசாதோ? வானுலகிலிருந்து என் சோதரரும் என்னைக் கண்டு நகையாரோ? தாங்கள் இங்கு இருங்கள்," என வினயமுடன் வேண்டினன். மணி மணியாயுள்ள பதினொரு புத்திரரைப் பறிகொடுத்த இலக்குவனுக்கோ ஒருபக்கம் துக்கமும் ஒரு பக்கம் களிப்பும் கலந்துதோன்றின. உடனே மைந்தனை விளித்து, "என்னருமைப் புதல்வ! பன்னிரு மைந்தரைப் பெற்றெடுத்த யான் புத்திரனே யின்றி மடிந்து கிடப்பதா

மண்மேல்? எனக்கோ வயதாகிவிட்டது. இனி நெடுங்காலம் உயிருடன் இருக்க முடியாது. நீயோ சிறுவன். நீண்ட நாள் உயிருடன் இருக்கலாம். அங்ஙனம் இருப்பின் பழிக்குப்பழி வாங்கி, நாட்டையும் மீட்கலாம். ஆதலால் யானே செல்கின்றேன். இவ்வரமே யான் உன்னிடம் பெற விரும்புவது" என்று கோரினன். பிதாவின் பரிவுரையைக் கேட்டபின், அஜயசிம்மன் மனமிளகி ஒருப்பட்டான் வேறு விதியின்றி. உடனே ராணு தன் பாளையப்பட்டுகளைக் கூட்டி வைத்து, 'வீரர்காள்! யானே முடிவில் சித்தூருக்காக மடியப்போகின்றேன். யான் போரில் பொன்றியபின், என தருமைப் புதல்வன் அஜயசிம்மம் ஒருசமயம் அம்மையின் அருளால் நாட்டை மீட்கும். அச்சமயம் உங்களிலே யாரேனும் உயிருடனிருப்பின், நாட்டை மீட்கும் முயற்சியில் நீங்களும் பக்க பலமாக நிற்கவேண்டும்" என்று கூறிச் சித்தமானுன் கடைசிப் போருக்கு.

ஆனல் அதற்குமுன் வேறொரு கோரச்செயல் நிகழவேண்டியதாயிற்று. அதன் விவரம் யாதெனில், சித்தூர்க் கோட்டையின் உயிர் நிலையான குன்று பகைவன் கையில் சிக்கிவிட்டதால், இரண்டொரு தினத்திலே கோட்டை விழுந்துவிடும். புஜபல பராக்கிரம சாலிகளான பல ராஜபுத்திரர் முன்னமேயே போரில் ஆவிதுறந்து விட்டனர். எஞ்சியுள்ள வீரர் கொஞ்சமே. அல்லாவுதீனே காம வெறியுடன் கோபவெறியும் கொண்டவன். கோட்டை விழுந்தபின், பத்மினியையேயன்றி மற்ற மங்கையரையும் மானபங்கப்படுத்துவான். ஒரு பெண்ணின் மானத்துக்காக அவ்வளவு இரத்தபூசை செய்துவிட்டு, எல்லாப் பெண்களையும் சந்தியில் விட்டுப்போக அவர்களுக்கு இஷ்டமில்லை. தனது

வாலிலுள்ள மயிர்க்கற்றையிலே ஒருமயிரை யிழப்பினும், கவரிமான் உடனே உயிர்விடு மென்பர். அம்மானினும் மானத்தைப் பெரிதாக மதித்துப் பிராணனைத் திரணமாகக் கருதும் ராஜபுத்திரர் அக்கோரத்துக்கு ஒருக்காலும் இடங்கொடார். இதனை உலகமறியும். அறியாதாயின் பின்வரும் சம்பவம் தக்க சாட்சியமாகும்.

போரிலே தமக்கு வெற்றிகிடைக்காதெனத் தோன்றின், ராஜபுத்திரர் முதலிலே தம் மனைவியரையும் குமரிகளையும் தீக்கிரையாக்கி விடுவர். பின்னர், மஞ்சள் உடைதரித்து, நெற்றியில் குங்குமத்திலகங்கொண்டு, கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டு, வாளுடன் பகைவரின் மத்தியிலே பாய்வர். அதன்படி, சித்தூரிலுள்ள ஆண்மக்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மங்கையர் அனைவரையும் தீக்குளிக்கத் தயாராகும் வண்ணம் தெரிவித்தனர். அவ்விதமே ஒவ்வொரு பெண்ணும் நறுநீராடி, அழகிய ஆடைதரித்து, அணிகலன் அனைத்தும் பூண்டு, அம்மை பவானியைத் துதித்து வணங்கி, வசந்தகால விழாவினுக்குச் செல்லும் மகிழ்பூத்த மாதர்போல் புறப்பட்டனர். அக்கோட்டையின் ஒருபுறத்தே நிலவறை யொன்றுண்டு. அதில்தான் மாதரைத் திரட்டித் தீயிடுவது. தாமரை மலர்தனில் அன்னப் பறவைகள் ஆர்வமுடன் அமர்வது போலவும், முன்னாளிலே சீதாதேவி சந்தனக் குழியெனக் கருதித் தீயில் இறங்கியது போலவும், ராஜபுத்திர மங்கையர் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து, ஒருவர்பின் ஒருவராக அம்மையின் ஆயிரநாமங்களையும் நவின்றுகொண்டு, நிலவறையிலுள்ள அக்கினி குண்டத்தில் குளித்தனர். இக்கோலத்திற்கு ஒருவிதத்தில் மூல

காரணமான பத்மினியும் பரமகளிப்புடன், கொழுந்து விட்டெரியும் தீயில் குளித்தனளென நாம் சொல்லத் தேவையில்லை. அங்ஙனம் ஆயிரக் கணக்கான கன்னியர் களிப்புடன் செல்லும் கோலத்தை அவர்கள் தந்தை, தநயன், புருஷன் முதலியோர் கண்டுநின்று பரமனைத் துதித்தனர். அரசிமுதல் வாயில்கூட்டும் பெண்வரையில் பெண்ணெனப் பெயர் படைத்த அனைவரையும் அக்கினி பகவானுக்கு அளித்தபின்னர், ராணா இலக்குவனும் எஞ்சிநின்றவீரரும் போர்க்கோலங்கொண்டு கிளம்பினர் கவலையின்றி. இதற்குள், அஜயசிம்மன் தன்தந்தையின் கட்டளைக்கிணங்க வெகு தந்திரத்துடன் பகைவனது அணிவரிசையைக்கடந்து சென்று சேமமான ஓரிடமடைந்தான்.

இதனை யறிந்தவேந்தன் கோட்டையின் கதவுகளைத் திறந்துபோட்டுப் பகைவரின் படைநடுவே புகுந்தான். துணைவரும் புகுந்தனர் தொடர்ந்துவந்து. உடனே பட்டாணியச் சேனைகளும் கைகலக்கக் குறுகின. அந்நாள் பாரதப் போரிலே அபிமன்னன் கௌரவசேனையின் நடுவே சென்று, அனைவரையும் கலக்கியதுபோல் இலக்குவனும் அல்லாவுதீனுடைய சேனையைக் கலக்கினான். இதர வீரரும் அப்படையில் பாய்ந்து, மத்திட்டுத் தயிர் கடைவது போல், பட்டாணியரைப் பதறவடித்தனர். ஒருசமயம் அல்லாவுதீனே, போர் யாதாக முடியுமோ என்று கலங்கினான். எனினும் ஓர் ஆறு கருங்கடலை நிலைகுலையச் செய்ய இயலுமோ? இயலாது. ராணாவும் ராஜபுத்திரரும் வீரங்காட்டி உயிர்விட்டனர் விதிவலியால். பன்னிரண்டு வருஷகாலம் கடும்போர் நடந்தபின்பு சித்தூர்க்கோட்டை சிதறிவீழ்ந்தது. உடனே அல்லாவுதீன் அடங்காமகிழ்ச்சியும்

ஆவலுங்கொண்டு, சித்தூருக்குள் புகுந்தான். புகுந்து மென்ன? உயிரற்ற உடலைக்காண்பதுபோல் நீறுபூத்து நின்ற ஊரையே கண்டனன். இவ்வளவு தூரம் உயிரைப் பறிகொடுத்தும், ராஜபுத்திர வீரரைப் பலிவாங்கியும், தன் ஆசைக்கு இருப்பிடமான பத்மினியைக் காணாது கலங்கினான் என்பதில் ஐயமில்லை. ராணாவின் அந்தப்புரம் வெறும் புரமாக விளங்கியது. அதற்கு அருகே ஆகாயமளாவப் புகைப்படலம் கிளம்புவதைக்கண்டு, "ஓ! எல்லோரும் தீக் குளித்தனர் போலும். மலைக்கல்லி எலிகூடப் பிடிக்க வில்லையே" யென்று பொருமினான் அப்பட்டாணியன். அந் நகரின் வனப்பையும் அலங்காரத்தையும் நோக்கவே, அவனது கோபக்கனல் கொழுந்து விட்டெரியத் தலைப்பட்டது. அச்சினவெறி தலைமட்டங் கொண்டுவிடவே புராதனமான அழகிய ஆலயங்களை யெல்லாம் அவன் இடித்துத் தள்ளினான்; அரண்மனைகளை அடியோடு பாழாக்கினான்; விசித்திர வேலைப்பாடமைந்த மண்டபங்களை மண்ணோடு மண்ணாக்கினான்; சுருங்கச் சொன்னால், குரங்கு தன் கையி லகப்பட்ட நறுமலர் மாலையை நாசஞ்செய்வது போல் அந் நகரைப் பாழ்பண்ணினான். அதனை விரித்துரைக்க மனம்பதைக்கும். பீமனும் பத்மினியும் வசித்து வந்த மாளிகை மட்டுமே அவனது கோபவெறிக்கு இலக்காகாது எஞ்சிநின்றது. இதற்கு யாது காரணமோ கடவுள் தான் அறியவேண்டும். அப்பால் அக்கொடியோன் தன் சிற்றரசரில் ஒருவனான மாலதேவன் என்பானிடம் அந் நகரை ஒப்படைத்து டில்லிக்குத் திரும்பினான்.

சித்தூர்க் கோட்டை அல்லாவுதீன் கையில் சிக்கியதும், மாலதேவன் அதன் அதிபதியாக விளங்க

லாயினன். அல்லாவுதீனுக்கும் இலக்குவனுக்கும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அஜயசிம்மன் பட்டாணியனது படைவரிசையைக் கடந்துபோயினனென முன்பே சொல்லியுள்ளோம். அவ்விதம் அஜயசிம்மன் போனவிடம் கயிலைவாரம். அது மத்தியபதியின் மேற்கெல்லையில் உள்ளது; நெருங்கிய மலைப்பிரதேசம்; தக்க நீர்வளமும் பொருந்தியது; அறவல்லி மலையில் நடுநாயகமான இடத்தைக் கொண்டது. அத்தகைய விடத்துக்கு அஜயசிம்மன் போகையில், சில உயிர்த்துணைவரும் தொடர்ந்துபோயினர். சித்தூர் வீழ்ந்தபின்னர் குடிமக்களில் பலருக்கு அக்கொடுங்கோ லாட்சியில் உட்பட்டிருக்க உடம்பாடில்லை. ஆதலின் பலரும் தங்கள் ராஜகுமாரனைப் போற்றி வரலாயினர். காலங் கருதியிருப்பர் கலங்காது ஞாலம் கருதுபவர் என்ற வள்ளுவர் வாக்கின் வண்ணம் அஜயசிம்மன் தன் தாய்நாட்டை மீட்க நற்காலத்தை எதிர் நோக்கியிருந்தான். அக்கணமே சென்று தாக்கலாமென்றாலோ, போதுமான படைவலியும் துணைவலியுமில்லை. தவிர சித்தூரிலே பட்டாணியப் படைகள் பலமாயிருந்து வந்தன.

அங்ஙனமிருக்க, அவன் சித்தூரைவிட்டு வருகையில், சனியனும் அவனைத் தொடர்ந்துவந்தது போலும். கயிலைவாரம் என்னும் மலைச்சாரலி னருகே இதர பல பிரதேசங்களும் உள; அவைகளிலே ஒன்றின் தலைவனாக விளங்கியவன் பெயர் முஞ்சன். ஏழையைக் கண்டால் மோழையும் பாயும் என்பது பழமொழி. அங்ஙனமே முஞ்சன் கயிலைவாரத்தின்மீது படையெடுத்து வந்தான். வீராவேசத்துடன் ராணா போர்புரிந்தும் முதலில் பலிக்கவில்லை. முடிவில் அவனைப் புறங்கண்டான். ஆனால் அவனோ அச்சமயம்

அஜயனை மண்டையிலே காயப்படுத்திவிட்டான். அந்த அவமானம் அஜயசிம்மனைப் பெரிதும் வருத்திக்கொண்டேயிருந்தது. அச்சமயம் ராணுவுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் சுஜனசிம்மன்; இளையவன் பெயர் அஜமசிம்மன். இருவருக்கும் முறையே வயது பதினான்கும் பதினைந்துமாகும். அவர்களை யழைத்து முஞ்சனைப் பழிக்குப் பழிவாங்கிவரும் வண்ணம் தன் புதல்வருக்குப் புகன்றான். ஆனால் அக்காரியம் அவர்களால் ஆகவில்லை. ராஜபுத்திர வாலிபரிலே அவ் விருவரைப் போல் பேதையானோரைப் பார்ப்பதரிது. பத்மலன் என்பான் பன்னிரண்டாவது வயதிலேயே போர்க்களம் புகுந்து வீரங்காட்டியதை முந்திய சரித்திரத்தில் கூறியுள்ளோம். விளையும் பயிர் முளையிலே என்பர். அத்தகைய மைந்தரைக் கொண்டு எங்ஙனம் பகைமுடிப்பது, எக்காலம் சித்தூரை மீட்பது, முன்னை வினையின் பயனால் வலிகுன்றிய புதல்வரைப் பெற்று விட்டோமே, என்று அஜயசிம்மன் அனுவரதமும் சிந்தாகுல மடைந்தாநின்றான்.

தன் தமையன் அரசிம்மனது மைந்தன் அமரன் இருப்பதாக அஜய சிம்மனுக்கு ஞாபகம் வந்தது. உடனே அவனுக்கு ஆளனுப்பித் தருவித்தான். தருவித்ததும் விஷயத்தை விளம்பினான் அம்மைந்தனிடம். அதுகேட்ட அமரன் தன்தந்தையின் பாதத்தில் பணிந்து, "எந்தாய்! இக்கணமே கடுகிச்சென்று, பகைவன் முஞ்சனது முடியுடன் திரும்பிவருவேன். இல்லையேல் உயிர்தாங்கி இவ்வுலகில் உழலேன்" என்று சபதங்கூறி விடைபெற்றுப் போயினன். அப்பால் நாட்கள்சில சென்றன. ஒருதினம் வாலிபனொருவன் கனவேகமான பரிமாவின் மீதேறிச்

கயிலைவாரத்தை நோக்கிவரலாயினன். அவனுக்கு உத்தேசம் பதின்மூன்று வயதிருக்கும். அவன் ஏறிவந்த குதிரைச் சேணத்தின் கால்மிதியருகே உடல்நீங்கிய மண்டையொன்று இரத்தஞ்சொட்டத் தொங்கிக்கொண்டிருந்தது. கயிலைவாரத்திலே ராணுவின் மாளிகைக்குள் அந்த இளைஞன் புகுந்து, அரசனுக்குத் தண்டனிட்டு, எந்தாய்! இதுதானே நம்பகைவன் தலை? தயைகூர்ந்து நோக்குக, என்று பணிவுடன் பகர்ந்தான். வைரியை வதைத்து வாலிபன் வெற்றியுடன் வந்ததைக் கண்டதும், சித்தூரை மீண்டும் அடைந்ததுபோல் அஜயசிம்மனுக்கு ஆனந்தம் பிறந்தது. உடனே அவன் தன் அருமைப் புதல்வனைக் கட்டியணைத்து மார்புறத்தழுவி, "என் அப்பனே! நீதான் நம்மரபை விளக்கவந்த மாணிக்கம். எனக்கோ வயதாகிவிட்டது. இனி என்னால் சித்தூரைமீட்க முடியாது. ஆதலின் நம் தாயகத்தை மீட்கும் கடமை உன் தலையில்தான்" என்றனன். அப்பொழுது, முன்னம் தன்தந்தை கூறிப்போனதும் நினைவுக்கு வரலாயிற்று. அது யாதெனில், கடைசியாக ராணு இலக்குவன் போர்புரியப் புறப்படுமுன், தன்பிள்ளை அஜயசிம்மனை நோக்கி, உனக்கு நூறுவயதானதும், உன் அண்ணனது மகனுக்கே நீ முடிசூட்டவேண்டும் என்று சொல்லிப்போன செய்தியாகும்.

அவ்வுரை பொய்த்துப்போகாமலிருக்கும் வண்ணம், அஜயசிம்மனது மக்கள் இருவரும் விதிவசத்தால் வெறும் பிள்ளைகளாயினர் போலும்! தன் குமார் வலிகுன்றிக் கிடந்தது ஒருபுறமிருக்கத் தன் தந்தையின் வார்த்தையை நிறைவேற்றவேண்டியது அஜயனது கடமையாயிற்று. அதற்கு அறிகுறியாக, முஞ்சனது சிரத்திலிருந்து சொட்டும்

இரத்தத்தைத் தொட்டு, அமரனுக்குத் திலகமிட்டு ஆசீர் வதித்தான் அஜயசிம்மன். சித்தூர்க்கோட்டை யழிந்த காலத்தே அமரன் அறியாப்பிள்ளையா யிருந்ததோடு, தன் தாய் மாமனது வீட்டிலேயே காலங்கழித்தும் வந்தான். ஆதலின் பூர்வகதை அவனுக்குத் தெரியாது. தன் சிறிய தந்தையின்மூலம் தகவல் தெரியவந்தவுடனே, எச் சமயம் பகைமுடிப்போம்; எப்போது சித்தூரை மீட் போம், என்பதிலேயே அமரன் அல்லையும் பகலையும் கழித்து வந்தான். இதற்குள் அஜயசிம்மன் காலமானன். மூத்தவனுகிய சுஜனன் தனக்கே அரசு வேண்டுமெனக் கலகம் விளைத்தனன். ஆனல் பாளையக்காரரும் பிறரும் அவனை ஆதரிக்கவில்லை. தந்தையின் விருப்பத்திற்கு மாருக அவன் நடக்க முயன்றதைக் கண்டு அனைவரும் அவனை வெறுக்கலாயினர். அப்பால் அவன் என்ன செய் யக்கூடும்? நாட்டைவிட்டுப் போய்விடுவதே மேலென அவ னுக்குத் தோன்றியது. அங்ஙனமே அவன் மத்திய பதி யைத் துறந்து, தட்சிணதேசம் போய்ச் சேர்ந்தனன். அத் தட்சிணத்திலே அவன் வமிசம் வளர்ந்தோங்க லாயிற்று. அவனது வழிமுறையில் ஒருவர்பின் ஒருவராகப் பலவீர புருஷர் வாழ்ந்து வந்தனர். 11-வது தலைமுறையில தலை யெடுத்தவன் வீரசிங்கமாகிய சிவாஜி மகாராஜன் என்று மத்திய பதியின் சரித்திர நூல்கள் சாற்றுகின்றன. இதன் படி, மகாராஷ்டிரர் ராஜபுத்திர குலத்தினராவர். இதற்கு வேறு சில அத்தாட்சிகளும் காணப்படுகின்றன. நேபாள வாசிகளான கூர்க்கர் எனப்படுவோரும் ராஜபுத்திர பரம் பரையினரென நடுநாட்டின் சாஸனங்கள் நன்கு புலப் படுத்தும்.

ராணா அமரசிம்மன் 1301, 1365—கி.பி.

அமரசிம்மன் என்பான் 1301ம் வருஷம் அரியணை ஏறினன். அவன் அரசுகொண்டு முடிசூடிய நகரம் கயிலைவாரம் எனப்படும். புராதன தலைநகரான சித்தூர் அல்லாவுதீன் வசமாகி விட்டதென முன்பே சொல்லியுள்ளோம். அதனைப் பகைவன் கையில் படாவண்ணம் காக்கவேண்டுமென அவன் பாட்டன் ராணா இலக்குவன் எவ்வளவோ பாடுபட்டான்; அவன் தந்தையான அஜயசிம்மன் அதனை மீட்கவேண்டுமென அடங்கா ஆவல் கொண்டிருந்தும் முடியாது போயிற்று. அங்ஙனம் மூதாதையும் தந்தையும் கொண்ட கோரிக்கையை ஈடேற்றியவன் அமர சிம்மனே. இதன் விவரத்தை விரித்துரைக்கு முன்னம், அவன் பிறப்பைச் சிறிது விளங்கக் கூறுவோம்.

ராணா இலட்சுமண சிம்மனது மூத்த பிள்ளையின் பெயர் அரசிம்மன். அந்த அரசிம்மன் தன் வாலிப வயதில் ஒருதினம் வேட்டையாடப் போயினன். அப்பொழுது அரசவையிலிருந்த சில பாளையக்காரரும் அவனுடன் போயினர் துணைவராக. முள்ளம்பன்றி வேட்டை ராஜபுத்திருக்கு மிகவும் விருப்பமான பொழுது போக்கு. அவ்வேட்டையை விடாது வருஷமொருமுறை நடத்துவதும் அவர்களது பரம்பரை வழக்கம். வேங்கை, புலி, ஓநாய் முதலிய விலங்கினங்களை வேட்டையாடுவதினும் முள்ளம் பன்றி வேட்டையே மிக்க ஆபத்துக் கிடமானது. எனினும், அந்த ஆபத்தை மதியாது, ராஜபுத்திரர் வேட்டையாடியே தீருவர். அரசிம்மனும் அவன் துணைவரும் அவ்

வேட்டையில் முனைந்து நின்றனர். பெரிதும் பருத்துக் கொழுத்த பன்றியொன்று அவர்கள் கண்ணில் தென்பட்டது. உடனே அவர்கள் அதனை விடாது துரத்திச் சென்றார்கள். ஆனால், அப்பன்றியோ அவர்களை ஏமாற்றி அங்குமிங்கும் ஓடிச்சென்று, அல்லலிழைத்தது. அதுபற்றி அவ்விளைஞர் அனைவரும் களைத்துப் போயினர். என்றாலும் தங்களது மெய்வருத்தத்தை அவர்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை; தங்கள் கருமத்திலேயே கண்ணுறயிருந்தார்கள். முடிவிலே அப்பன்றி ஒரு சோளக் கொல்லையில் புகுந்து மறைந்து கொண்டது. அக்கொல்லை மிக்க செழிப்பானது. சோளத்தண்டு ஒவ்வொன்றும் ஓர் ஆள் உயரத்திற்கு மேல் ஓங்கி வளர்ந்திருந்தது.

அரசிம்மன் இளவரசனாயிருந்தும், ஊராரின் கொல்லையிலே உத்தரவின்றி நுழையத் துணியவில்லை. ஆதலின் திகைத்து நின்றான் அத்தோட்டத்துக்கு வெளிப்புறத்தில். துணைவரும் தயங்கிநின்றனர் தம் இளவரசுடன். அந்நாளிலே வள்ளியம்மை தினைப்புனத்தில் ஆலோலம் பாடிக்கொண்டு, பறவைகளை வெருட்டி நின்றதுபோல், அக்கொல்லையிலே பரண்மீது ஒரு பெண்ணரசி நின்றுகொண்டு, கவண் கல்லினால் குருவிகளை ஓட்டிநின்றாள். முரளம்பன்றி அப்புனத்தில் வந்து புகுந்ததையும், அரசிளங்குமரன் அதனைத் தொடர்ந்து வந்து வேசாறிப்போய் வெளியே நிற்பதையும் அம்மங்கை யுணர்ந்து கொண்டனள். அவ்வளவில் பன்னிரண்டுஅடி உயர்ந்து வளர்ந்த சோளத் தண் டொன்றைப் பறித்து, அதனை ஈட்டிபோல் கூர்மையாக்கித, தன்பரண் மீது எறிநின்று அப்பன்றியைக் குறிபார்த்துத் தண்டை வீசி யெறியவே, அது அடிபொறுக்க மாட்டாமல்

மாண்டுபோய் விட்டது. உடனே அவள் அதனை யிழுத்துவந்து, அரசிளஞ் சிங்கத்தின்முன்னே போட்டு, நீங்கள் விரட்டிவந்த விலங்கு இதுதானே என்று கூறிப் போயினள். தம் குல மங்கையரின் வீரச்செயல்களை அவ்வாலிபர் அறிவாராயினும், அவ் வீரமாதின் செய்கை அவர்களுக்கு மிக்க ஆச்சரியமே விளைத்தது.

அவ்வாலிபர் பன்றியைத் தூக்கிச்சென்று, ஓர் ஆற்றங்கரையை யடைந்து, அதனைச் சமைத்துப் புசித்தனர் வழக்கம்போல். அங்ஙனம் ஊனைப்புசித்து நிற்கையில், இத்தகைய வீரமாதை மணப்பவனே பாக்கியவானென அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் உண்டைவில்லொன்று வேகமாகவந்து, ராஜகுமாரனது குதிரையின் காலில் தாக்கியது. தாக்கிய வளவிலே, அப்பரி பாத மொடிந்து நினைவற்று நிலத்தில் சாய்ந்துவிட்டது. அதுகண்ட வாலிபர் திடுக்கிட்டு. உண்டைவில் வந்ததிசையை யுற்று நோக்கினர். நோக்கியதும், அப் பெண்ணரசியின் பாணியிருந்தே உண்டைவில் வந்திருக்க வேண்டுமென அவர்கள் அறிந்து கொள்ளாமலில்லை. தான் வீசிவிட்ட உண்டைவில்லால் அசுவம் காலைப்பரப்பிக்கொண்டு குப்புறச் சாய்ந்ததை அம்மங்கை யுணர்ந்து கொண்டு விரைந்துவந்து, வாலிபரை யணுகி, விளையாட்டு வினையமானதை மன்னிக்கும் வண்ணம் வேண்டினபின் விடைபெற்றுப் போயினள். அப்பால் மாலைப்பொழுதுவரையில் அவர்கள் வேடிக்கையாகக் காலங்கழித்துவிட்டு வீடு திரும்பினார்கள்.

அச்சமயம் நம் நங்கைக்கரசியும் தன்தலைமீது பால் குடந்தாங்கி, இரண்டு கையிலும் இரண்டு எருமைகளைப் பிடித்துக்கொண்டு, வீடுநோக்கிப் போய்க்கொண் டிருந்த

னள். அப்பெண்ணைப் பார்த்ததும், அவ்வாலிபர், "இவளோ கேவலம் பெண்பிள்ளை; நாமோ ஆண்மக்கள், அங்ஙன மிருந்தும் இவள் நம்மை இருமுறை விளையாட்டாக அவமானஞ்செய்து விட்டாள். நாமும் கேலிவிளையாட்டாகப் பதிலுக்குப் பதில் செய்து காட்டவேண்டும். இல்லையேல் ஒரு பெண்பிள்ளையிடம் நாம் தோல்வியடைந்தது போலாகும்" என்று பேசிக் கொண்டனர். உடனே அவ்வாலிபரில் ஒருவன், "இது ஒரு பெரிதன்று; அவளுடைய பால்பானை பூமியிலே விழும்வண்ணம் ஒரு கணப்பொழுதில் செய்து விடுவேன். அதுகண்டு நீங்கள் மனமாரக் கைகொட்டி மகிழலாம்" என்று வீரம் பேசினான். பலரும் அது ஆகாதகாரியமென்றனர். ஆயினும், சபதம்பேசிய சிறுவனே தன் பரியை நாலுகால் பாய்ச்சலில் விட்டி, அப்பெண்ணைக் கீழேதள்ளுவான்போல் போயினன். குதிரைசெல்லும் வேகத்தில் அக்குமரி பயப்படைந்து பால்பானையைப் போட்டு விடுவாள் எனவும் சிலர் கருதிநின்றனர். அவ்வாறே பரிமாவும் மயிரிழைதூரத்தில் அம்மங்கையை நெருங்கியது. இதனை அம்மாதரசி உய்த்துணர்ந்தும், ஒரு சிறிதும் உள்ளம் பதையாமல், ஓர் எருமையின் கயிற்றை நீட்டிக் குதிரையின் காலில் மாட்டி வலிக்கவே, அவ்வாலிபனுடன் குதிரையும் குப்புறச் சாய்ந்து மண்ணைக் கவ்வியது. அது கண்ட மைந்தர் அனைவரும் மூன்றாவது முறையும் வெட்கிப் போயினர். வேறு என்ன செய்ய முடியும்?

அப்பால் அவ்வாலிபர் தத்தம் மாளிகைபோய்ச் சேர்ந்தனர். அரசிம்மனுக்கோ உண்டியிலும் உறக்கத்திலும் கருத்துச் செல்லவில்லை. அவ்வீரமாது யாருடைய மகள், அவளை எங்ஙனம் மணப்பது, என்ற சிந்தனையில்

இரவு முழுவதும் ஆழ்ந்து கிடந்தான். பொழுது புலர்ந்ததும் புலம் விசாரித்ததில், அவள் ஓர் ஏழை ராஜபுத்திரனது செல்வக்குமரியெனப் புலப்பட்டது. உடனே அரசிம்மன் தன் தோழருடன் அவ்வேழையின் வீடுநோக்கிப் போனான். போனதும், ஏழையை யழைத்து, அவன் மகளை மனத்தில் கொண்டு, மணம் பேசினான் கூச்சமின்றி. அப்பொழுது ஏழை சிறிதும் அச்சமின்றி இளவரசுக்கு நேரே வீற்றிருந்து, வார்த்தையாடியதைக் கண்ட வாலிபர் சிலர் திகைக்கலாயினர். உண்மையான ராஜபுத்திர வீரபுருஷர் தமது கம்பீரமான குணத்தையும் சுதந்திரத்தையும் சிறிதும் விட்டுக்கொடார். ஆதலின், வேறு சிலர் அவ்வேழையின் தோற்றத்தையும் நடையையுங் கண்டு மனத்தகத்தே மகிழ்பூத்து நின்றனர். அரசிம்மன் மணம்பேசியதற்கு அவ்வேழை மறுத்துவிட்டான். அருகிலிருந்தோர், அரசிம்மன் அரசிளங்கோ என அறிவித்தும், அரசிளஞ் சிங்கமாயினென்? ஆண்டியின் மைந்தனாயினென்? நான் சொன்னது சொன்னதுதான் என்று அவன் செப்பிவிட்டான். உடனே அரசிம்மன் அரண்மனை யடைந்தான் அடங்காக் கவலையுடன். அரசிளங்குமரன் வந்து, மகளை மணம்பேசிய விஷயம் ஏழையின் தாய்க்குத் தெரியவந்தது. வலுவில்வந்த ராஜவாழ்வை வேண்டாமென்று விளம்பி விட்டுவிடுவதா என அத்தாய் கோபித்தனள். சுருங்கச்சொல்லின் முடிவிலே ராஜகுமாரன் அவ் வீரமாதை வேத விதிப்படி மணந்துகொண்டான். அவ்விருவருக்கும் பிறந்த பிள்ளையே நம் அமரசிம்மன். புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடுமோ? அதனை இளமையிலேயே அமரன் விளக்கிக் காட்டின விவரத்தை முந்திய கதையில் கூறியுள்ளோம்.

முடிசூடிய தினத்திலேயே அமரசிம்மன் திக்கு விஜயஞ்செய்யப் புறப்பட்டான். திக்கு விஜயத்தின் விவரத்தை இங்கே சிறிது சொல்வோம். திக்கு விஜயமென்பது ராஜபுத்திர வேந்தரின் பரம்பரை வழக்கங்களில் ஒன்று. ஆதிகாலத்திலே ஆண்மை படைத்த ஒவ்வோர் அரசனும் திக்கு விஜயஞ்செய்து எங்கும் புகழ் பரப்புவதுண்டு. முடிதரித்ததும், தான் அரசுரிமைக்குத் தகுதியுள்ளவன் என்பதைத் தனது புஜபல பராக்கிரமத்தால் ராஜகுமாரன் புலப்படுத்த வேண்டும். அதற்காக அவன் தன் பரிவாரங்களுடன், வைரியின் நகரொன்றைத் தாக்கி, வாகைசூடி வருவான்; தன் நாட்டின் அருகே பகைவர் எவரும் இல்லாதுபோயின், குறும்புபுரிந்து திரியும் ஒரு குறுநில மன்னவனையாவது தாக்கி வருவான்; அத்தகைய குறுநில மன்னன் இல்லையாயின், போலி நகரொன்று நிருமித்து, அதனை யழித்து, ஆடம்பரத்துடன் திரும்புவதுமுண்டு. அதன்படி அமரசிம்மன் தன் படையுடன் புறப்பட்டு, முன்னம் தன் சிறிய தந்தை அஜயசிம்மனை அவமானஞ்செய்த முஞ்சனது நாட்டில் புகுந்து, அதன் முக்கிய நகரொன்றை வசஞ்செய்து, வெற்றியுடன் திரும்பிவந்தான். அதுகண்ட துணைவரும் பிறரும் அமரசிம்மனது ஆற்றலை வியந்து, அவனை வாழ்த்தினர். அவ் வெற்றிகொண்டு அவன் திரும்பியது தான் தாமதம். எப்பாடு பட்டேனும் சித்தூரை மீட்கவேண்டுமென்பதே அவன் சிந்தனையாயிற்று.

தன் குலத்தைச் சேர்ந்த மாலதேவன் என்பான் சித்தூரிலே பட்டாணியரின் சிற்றரசாக விளங்கிவருவதை நினைக்க நினைக்க, அமரசிம்மனது உள்ளமும் உடலும் ஒருங்கே பதைத்தன. உடனே அவன் தன் குடிமக்களுக்கு

விளம்பரமொன்று விடுத்தான். அதற்கிணங்க, "மத்திய பதி வாசிகளான தேசாபிமானிகளே! அன்னிய ராட்சியில் அடங்கிக் கிடக்க உங்கள் மனம் ஒப்புமோ? பட்டாணிய னது பிறைக்கொடியா நம் பதியில் பறப்பது? சூரிய வமிசக் கொடியன்றோ ஆகாயமளாவ விளங்கிவர வேண் டும்? ராணா அஜயசிம்மன் இல்லையே யென எவரும் மன வாட்டங் கொள்ளவேண்டாம். அப்பெருமானது பேராணை யும் கட்டளையையும் தலைமீதுதாங்கி நம் தாய்நாட்டை மீட்க, அடியேன் ஆவல்கொண்டு காத்திருக்கின்றேன். ஆத லின், மானிகளான மக்கள் அனைவரும் தமது குடும்ப சகிதம் கயிலைவாரத்திற்கு வந்துசேரவேண்டும். அக் கயிலை வாரத்திலே வளத்திற்குக் குறைவில்லை. அங்குவர மன மில்லாது, பகைவனது கொடியின்கீழ் வாழவிரும்புவோர் அவனுடன் மண்ணோடு மண்ணாக மடியத்தான் வேண்டும்" என்று மத்தியபதி யெங்கும் முரசறையப்பட்டது. அம் முரசொலியைச் செவியேற்ற மானிகள் அனைவரும் அக் கணமே கயிலைவாரஞ் சென்று குடியேறலாயினர். சிறிது காலத்திற்குள் அவ்விடமெங்கும் குடிமக்கள் குழந்தை குட்டிகளுடன் நிரம்பி விட்டார்கள்.

அங்ஙனம் தேசமக்களின் பக்கபலம் பெற்றவுடனே, அமரசிம்மன் வாளை யுருவிப் புறப்பட்டான் போருக்கு. அவ்வளவில், சித்தூரைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் பாழா யின; ராஜபாட்டைகள் சீரழிந்தன, விளைநிலங்கள் வெறுந் தரையாயின; முன்னம் அல்லாவுதீன் கையில் பட்டபாடு போதாமல், இப்போது அமரன் கையிலும் சிக்கி, அந்நில மகள் அழகுகுன்றி வருந்திநிற்கலாயினள். எனினும், "பழைய ராஜவமிசம் மீண்டும் தலையெடுக்கும். அச்சமயம்

காம் முன்னையிலும் பன்மடங்கு தளிர்த்து வாழலாம்" என அப்புவிமாது பொறுமைபூண்டு ஒருவாறு ஆறுதல் கொண்டிருப்பாள். அவ்வண்ணம் மீவார்ப் பிரதேசம் ரணகளம் போல் கிடக்கவே, கோட்டை கொத்தளமுள்ள நகரங்களில் தான் பகைவரும் பிறரும் வசித்துவந்தனர். கோட்டையை விட்டு வெளியே தலைகாட்டினால் வந்துவிட்டது மோசம். மாலதேவனுக்குப் பின்பலமாகப் பட்டாணியப் படைகள் சித்தூரில் தங்கியிருந்தும், அவை அமரசிம்மன் முன்னே தோன்ற அஞ்சிநின்றன. கயிலைவாரஞ்சென்று அப்படைகள் தாக்கலாமென்றாலோ, அது ஆகாத காரியம். ஏனெனில் அவ்விடம் இயற்கையாகவே கோட்டை போல் மலையாணும் காட்டாணும் நன்கு பொருந்தியது. தவிர நிலமட்டத்திற்கு மேல் மூவாயிரமடி உயரத்தில் உள்ளது; அத்தகைய பீடபூமியில் ஏறிச்செல்வதே முடியாத காரியம். ஒரு சமயம் ஏறிச் சென்றாலோ, உயிர்ப்பிச்சை பெற்றாலன்றிப் பகைவரெவரும் திரும்பிவர இயலாது. போதாக்குறைக்கு அம்மலைப்பிரதேச வாசிகளான வில்லவரோ அமரசிம்மனுக்கு உயிர்த்துணை. அங்ஙனமாக, மாலதேவன் என்ன செய்வான்? போரிலே அமரனைப் புறங்காண முடியாது; ஆதலின் வஞ்சனைபுரிந்து மானபங்கஞ் செய்யலாமென மதிக்கலானான். அமரசிம்மனோ காலங்கருதியிருந்தான் சித்தூரை முற்றுகையிட.

அவ்வாறிருக்கையில் தூதுவனொருவன் விரைந்து வந்து, அமரசிம்மனை யடைந்து அடி பணிந்து, " அரசே! தன் மகளை மணக்கும் வண்ணம் மாலதேவன் தாம்பூலமும் தேங்காயும் தந்தனுப்பியுள்ளான். அதனைத் தாங்கி யானும் இங்கு வரலானேன். சமூகத்தின் சித்தம் எங்கள் பாக்கி

யம்" என்று பணிவுடன் பகர்ந்தான். பகையாளியின் பக்கமிருந்து, மணவோலை வந்திருப்பதைக் கேள்வியுற்ற பலரும் பற்பல விதம் மயங்கிப் பேசலாயினர். ஒரு சமயம் அமரசிம்மனை மணவலையில் படச்செய்து, மாய்த்துவிட அம்மாலதேவன் கருதியுள்ளான் போலும் என்று சிலர் சிந்தித்தனர்; வேறு சிலரோ, குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்புபோன்ற மாலதேவன் நம்மரசை மான பங்கஞ்செய்யச் சதிசெய்கின்றான் போலும் என்று கலங்கினர்; மற்றுஞ் சிலரோ, என் விபரீதமாக ஆலோசனை செய்ய வேண்டும்? உண்மையாகவே பகையைப் போக்கக் கருதி, நம் நட்பை நாடி, நம் குல வொழுக்கின்படி புதல்வியைத் தந்து, பெருமைபெறக் கருதியிருக்கலாம் என்று கூறிவந்தனர். அவ்வண்ணம் பற்பலரும் பகர்ந்து நிற்க, அமரன் தனது மதிமந்திரிகளை வரவழைத்து, அவர் தம் புத்திமதியை நாடிநின்றான். அவ்வமைச்சர் அனைவரும் மணவினையில் வஞ்சனையே தென[illegible]கிற தென்றனர்.

அனைவர் சொல்லையும் அமரன் அமர்ந்து கேட்டபின், "வஞ்சனை புரிய அவன் கருதிநிற்பினும், நாம் அவ்வஞ்சனையை வஞ்சனையேகொண்டு வதைக்கலாகாதோ? மணத்திற்கழைத்து மாய்க்க முயலின், நம்மவரின் வாள்வலியும் தோள்வலியும் எங்கே போயின? எங்ஙனமாயினும் சித்தூரை மீட்கவேண்டு மென்பதே என் சிந்தனை. அம்முயற்சி கைகூடினும் கூடாமற் போயினும், அச் சித்தூருக்காக என் ஆருயிரை வழங்கப் போகின்றேன்," என்று கர்ஜ்ஜனை செய்தான். அமைச்சரும் பாளையக்காரரும் அது கேட்டு ஒன்றுந்தோன்றாது நின்றனர், மீண்டுமவன் அவர்களை நோக்கி, "என தன்பர்காள்! உங்கள் யோசனையை நான்

தள்ளிவிடவில்லை. மாலதேவனைப் போர்முனையில் சந்திக்க நாம் அனைவரும் துணிந்து நிற்கின்றோம். அதற்கு அவன் அஞ்சி, வஞ்சனையாக மணம்பேசி நம்மை யழைப்பின், அதற்கு நாம் தயங்கலாகுமோ? தயங்கின், வெற்றி அவன் பக்கமேயாகும். ஆகுங்காலத்து எல்லாம் ஆகும், அழியுங்காலத்து எதுவும் அழிந்துபோம். என் மூதாதைகளின் வாழ்விடமான சித்தூரிலே என் காலடி படவேண்டுமென்று எனக்குப் பேராவலுளது. ராஜபுத்திரனைகப் பிறந்த ஒருவன் வாழ்வுக்கும் தாழ்வுகக்கும் ஆயத்தமாகவே இருத்தல் வேண்டும். முதல்தினம் உடலெங்கும் காயமுண்டு ஊரைவிட்டுப் போகநேரலாம்; மறுதினமே மகிமையுடன் முடிசூடிக்கொள்ளவும் அவ்வூருக்குத் திரும்பலாம். சுருக்கக்கூறின், வருவது வருக, வாள்வலியும் தோள்வலியும் உங்கள் துணைவலியும் உள" என்று சிங்கநாதஞ் செய்தவுடனே, தாம்பூலத்தை ஏற்றுக்கொள்ள எல்லோரும் தட்டாது இணங்கிவிட்டனர்.

அங்ஙனமே, தாம்பூலம் அங்கீகரிக்கப்பட்டது. மணமாலையை நாடிப் பகைவன் பதிக்குச் செல்லுகையில், அதிக ஆடம்பரமின்றி ஐந்நூறு வீரர் வந்தால் போதுமென அமரன் அறிவித்தான். அவ்விதமே வீரர் ஆயத்தமாயினர். அவர்களுடன் அமரன் தன் பழம்பதிக்குப் போயினன். மதில்புறத்தை யணுகியவுடனே, அம் மாலதேவனது புதல்வர் ஐவரும் வந்து, அமரசிம்மனை எதிர்கொண்டழைத்தனர். ஆனல் கோட்டை வாயிலிலும் சரி, ராஜ வீதிகளிலும் சரி, மணவினைக்குரிய அலங்கார ஆடம்பர மெதுவும் காணப்படவில்லை. எதிர்கொண்ட வாலிபரிடமும் முகமலர்ச்சியில்லை; சித்தூர் வாசிகளின் வதனத்திலும் விளக்க

மில்லை. அமரனுக்கோ மிக்க சிந்தனை பிறந்து விட்டது. எனினும் சிறிதும் பதறாமல், சபாமண்டபம் போய்ச்சேர்ந்தான். அங்கே, ராவ் மாலதேவன் தன் பரிவாரத்துடன் தோன்றி, அமரனை வரவேற்கவே, அருகிலிருந்தோர் அம் மாலதேவனது வஞ்சனை விபரீதமாக முடியுமேயென மனத்தகத்தே பதைத்து நின்றனர். மதிமந்திரிகள் மொழிந்தவண்ணம், மணவினையில் வஞ்சனையே யுளதென அமரன் கண்டு கொண்டானாயினும், சிறிதும் கோபக்குறி காட்டவில்லை. தனது கம்பீரமான தோற்றத்திலும் இணையற்ற ஆண்மையிலும் குன்றாதிருந்தான். அதுகண்ட பலரும் மாலதேவனது சூழ்ச்சி அமரன்முன்னே பலியாதெனப் பகர்ந்து போயினர். பின்னர் மாலதேவன் என்பான் யாதொரு வேத விதியுமின்றித் தன் புதல்வியை யழைத்து வந்து, அவளை அமரன்பக்கலில் அமர்த்திவைத்து, இருவர் முன்தானையையும் முடிந்துபோட்டு, மௌனமாகப் போய் விட்டான் மாளிகைக்குள். அதுவரையில் அமரனுக்கு அகத்தே தோன்றியிருந்த அடங்காச் சினக்குறி, அப்பால் புறத்திலும் தலைகாட்டியது. அப்பொழுது, அருகிலிருந்த அரசகுலப் புரோகிதர் வெகுதந்திரமாக அக் கோபக்கனலை யவித்துவிட்டார். பிறகு அனைவருக்கும் அறுசுவை கலந்த உண்டி யளிக்கப்பட்டது. அமரசிம்மன் தன் தோழருடன் கூடிக் குலவுவதில் பகல்பொழுதை ஒருவாறு தீர்த்தான். மாலையிலே மணமகனும் மணமகளும் மஞ்சத்திலே சந்தித்தனர். சிந்தனை தேங்கிய முகத்தனாய் அமரன் அமளியடைந்தும், தன் மனைவியின் முகவிலாசத்தையும் பொன்னையும் பார்த்தவுடனே, அவனது சிந்தனை சற்றே தணியலாயிற்று. மங்கையின் முகத்தை மீண்டும் எதிரிட்டு

நோக்கினான். அவள் வதனம் வெகுபிரகாசமாக விளங்கிய போதிலும், மங்கைக்கு யாதேனும் ஊனமிருக்க வேண்டு மென நன்கு புலப்பட்டது. பின்னர் இருவரும் உரை யாடி நிற்கையில், அவள் கைம்பெண்ணென அவன் கண்டுகொண்டான். உடனே அவன் மனம் படாதபாடு படலாயிற்று. அக்குமரியின் மீது யாதொரு குறையும் கூறுவதற்கில்லை; தன்னை இக் கோலங் காணப்போகின் றான் தந்தை என்பதை அவள், அமரசிம்மனைக் காணும் வரையில் அறியவில்லை. அதிபால்யத்திலேயே அவளை வேறொரு வாலிபனுக்கு மாலதேவன் மாலையிடச்செய்திருந் தான். அப்பொழுதே அவ் விளைஞன் ஆவி நீங்கிவிட்ட தால், அப் புருஷனது முகத்தை அவள் நன்கு நோக்கிய துமில்லை; அவன் ஞாபகமுமில்லை. அவள் மகா புத்திசாலி; அழகின் வடிவம்; அடக்கத்தின் அவதாரம்; அவள் கூறிய இரண்டொரு வார்த்தையிலிருந்தே அவள்மீது அமரனுக் குத் தன்னையறியாது அன்பும் ஆர்வமும் பரிதாபமும் பெருகிவிட்டன. அவனது உள்ளத்துடிப்பை அக்காரிகை உய்த்துணர்ந்த வுடனே, தனது கட்டுரையினாலும் வீர வசனத்தினாலும் தான் உற்ற துணையாக உதவி புரிய முடியுமென அவனுக்கு அறிவுறுத்தினள். அதன்மேல் அமரசிம்மனுக்கு ஓரளவு ஆறுதல் பிறந்தது, கவலையும் அகன்றது; களிப்பும் தலைகாட்டியது; சுருங்கச் சொல்லின், அம் மங்கையின் மதிவன்மையால், மத்தியபதியின் தலை நகரை இலகுவில் மீட்டுவிடலாமென அவனுக்குத் துணிவும் உண்டாயிற்று.

அப்பால் பதினைந்து தினம் அவன் சித்தூரிலேயே தங்கியிருந்தான் துணைவருடன். மானக்கேடான மண

வினையைக் குறித்துத் தான் வருந்துவதாக அவன் யாருக்கும் காட்டிக்கொள்ளவில்லை. வேதவிதிப்படி விவாகம் நடவாமற் போயினும், விவாகமென்று விளம்பியே அமரனை வரவழைத்ததனுல், மாலதேவன் தன் மருமகனுக்கு வரிசை பல வழங்கினுன். வரிசை விஷயத்தில் ராஜ புத்திரருக்குள்ளே பரம்பரை வழக்கமொன்றுண்டு. அது யாதெனில், மணமகன் விரும்பிக்கேட்கு மொன்றை மாமன் தட்டாது தரவேண்டுமென்பதே. அதன்படி அப் பெண் தன் புருஷனது உள்ளக்கருத்திற்கு உதவியாக, அந்நகரின் பிரதம அதிகாரியான சிலன்என்பானைச் சீராகக் கோரும் வண்ணம் தன் நாயகனுக்கு நவின்றனள். அவ்வாறு அமரன் வேண்டவே, மாலதேவன் அச் சிலனை ஸ்ரீதனமாகத்தந்தான் தடையின்றி. பின்பு அமரசிம்மன் தன் பரிவாரத்துடன் கயிலவாரம் போய்ச் சேர்ந்தான்.

மதிமந்திரிபோன்ற மனைவியிருப்பின், கணவன்கவலை கணத்தில் அகலுமென்பர் அறிவுடையோர். அம் முதுமொழிக்கு அமரனது தேவி ஓர் உதாரணமாக விளங்கினள். எங்ஙனமெனில், சித்தூரை மீட்பதற்கான உபாயங்களை யெல்லாம் அவள் உய்த்துணர்ந்து, தன் நாயகனுக்கு அவ்வப்போது உதவியாக விளங்கிவந்தாள். அங்ஙனம் இருவரும் காலங்கழித்து வருகையில், அத்தேவி கருக்கொண்டனள். காலகெடுவிலே சுபமுகூர்த்தத்தில் ஒரு புத்திரன் பிறந்தான். அக்குழவிக்குக் கைதசிம்மன் என்னும் நாமம் சூட்டப்பட்டது. சோதிடரைத் தருவித்து ஜாதகமெழுதிய காலையில், புத்திர பாக்கியத்தின் பலனுக நாடு திரும்பக் கிடைக்குமென்று தென்பட்டது. அதனுல் தாயும் தந்தையும் பெரிதுங் களித்தனர். ஈதிங்ஙன மிருக்கையில்,

போன் பிறந்தசெய்தி மாலதேவனுக்கு எட்டியது. அது கேட்டு அவனும் உள்ளம் பூரித்தான். பூரித்து மத்தியபதியின் மலைப்பிரதேசங்களில் சிலவற்றை அமரசிம்மனுக்கு வரிசையாகத் தந்தனன்.

ஒரு வருஷமானதும் அக்குழந்தைக்கு முதலாண்டு நிறைவுவிழா நடந்தது. அப்போதும் மாலதேவன் சில வரிசைகள் விருப்பமுடன் வழங்கினன். அப்பாலனுக்குக் கிரக தோஷத்தினல் கொடுநோய் கண்டது. அதற்காக எவ்வளவோ மருத்துவம் செய்து முயன்றும் பலிக்கவில்லை. உண்மையில் நோயாயின், மருத்துவம் பலன் தராதுபோமோ? சித்தூரைக் கைப்பற்றும் சூழ்ச்சிகளில் ஒன்ருகவே அப்பாலனுக்கு நோய்கண்டது. ஆதலின், "குழந்தையின் நோய் வயித்தியத்தில் தீருவதாயில்லை. ஆண்டவன் அருளால்தான் அகலவேண்டும். இதற்காக அம்மை பவானிக்குப் பிரார்த்தனை செலுத்த உத்தேசம்." என்று அம்மாது தன் தந்தைக்குக் கடிதம் வரைந்தனள். உடனே அவள் சகோதரன் வனவீரன் என்பான் வந்தனன் அவளை யழைத்துப்போக. அவளும் தன் குழந்தையுடன் புறப்பட்டுப் போய், முன்னம் தான் தெரிவித்த வண்ணம் அம்மை பவானிக்கு அரிய பூசை செய்தனள். பின்பு, சித்தூரை மீட்பதற்கான பேதோபாயங்களும் நன்கு நடந்தேறின. சீலன் என்னும் அதிகாரி தன் உற்ருர் உறவினரைக் காண வருவான்போல் சித்தூர் சேர்ந்து, அங்கிருந்த வீரரில் பலரையும் தன் வசஞ்செய்து வந்தான். இவ்விதம் சூழ்ச்சிகளெல்லாம் பரம ரகசியமாக ஒருபுறம் நிறைவேறி வந்தன. சூழ்ச்சி முற்றமுற்ற அப்பாலனது பாலாரிஷ்டம் குறைந்துகொண்டே வந்தது. அச்சமயம் மாதரம் என்னு

மிடத்திலே மேரவர் என்னும் மலைநாட்டினர் கலகமாகக் கிளம்பினர். அவர்களை யடக்க மாலதேவன் ஒரு படை வகுப்புடன் போக, இதுவே சமயமென் றுணர்ந்த நங்கை தன் நாயகனுக்குத் தகவல் கொடுத்தனள். அதனை எதிர் பார்த்து நின்ற அமரசிம்மன் சில குறிப்பான வீருருடன் சித்தூருக்குப் பயணமாயினன். அக்கோட்டையை அவன் அடைந்ததும், ஹாரசிம்மன் என்னும் அவனது மைத்துன னுக்கு ஏதோ ஐயம் நிகழ்ந்தது. ஆதலின் அமரனை அவன் வழி மறிக்கலாயினன். கைக் கெட்டினது வாய்க்கெட்டா மல் போய்விடுமோ என்று அச்சமயம் அமரன் சிந்தாகுலம் அடைந்தான். ஆயினும் பதறுமல் வாளையுருவினுன் போர் புரிய. அமரசிம்மன் வந்துவிட்டான் என்று தெரிந்த வுடனே, அவன் மனைவி ஒரு வீரப்படையை யனுப்பினள் தன் மணாளனை வரவேற்க. அதன் நிலையைக் கண்ட தும், ஹாரசிம்மன் போனவிடம் தெரியவில்லை. அப்பால் அமரன் அப்படையுடன் அத்தாணி மண்டபம் போய்ச் சேர்ந்தான் பரம களிப்புடன்.

இதற்குள் சிலனும் சித்தூர் அதிகாரிகளும் மணிமுடி யுடன் மகிழ்பூத்துவந்து அவ்வீரனை வரவேற்றனர். அக் கணமே அவனுக்குச் சிறப்பாக முடி சூட்டப்பட்டது. நகர மாந்தர் அனைவரும் சபாமண்டபத்தே திரண்டு நின்று, அமரசிம்மனே அரசனென அடிபணிந்து, உரியகாணிக்கை யும் செலுத்தினர். உடனே சித்தூர்க் கோட்டையிலிருந்த பட்டாணியக் கொடியைப் பறித்தெறிந்து, சூரியவமிசக் கொடியை நாட்டினர். இவ்விஷயம் நாடெங்கும் முரசொலி யின் மூலம் பரவியது. மேகத்தைக்கண்டு மயில்கள் மகிழ்வது போல், மத்தியபதிவாசிகள் மனங்களித்தார்கள்;

மலைப் பிரதேசங்களிலே மனவாட்டத்துடன் மறைந்திருந்த மக்களும் திரள் திரளாக வந்து சித்தூரில் குவிந்தார்கள். அருகிலிருந்த இதா நாட்டரசரும் நடு நாட்டிலே அன்னியரின் ஆதிக்கம் தொலைந்ததென அகமகிழ்ந்தன ரென்றால், நாம் அதிகஞ்சொல்லத் தேவையில்லை. அதனால் அவர்களும் அமானுக்கு ஒருவிதத்தில் பக்கபல மாயினர். சித்தூரை வசப்படுத்தியதுடன் அமரன் நின்று விடவில்லை. மத்தியபதியிலே முகம்மதியரிடம் பட்டுக்கிடந்த இதா இடங்களையும் கைப்பற்றிக் கொண்டான்.

மலைப்பிரதேச மேரவருடன் போர்புரிந்துவிட்டு மாலதேவன் சித்தூருக்குத் திரும்பினன். கோட்டை வாயிலைக் குறுகியவுடனே, அம்புமழையும் வாள்வீச்சுமே அவனை வரவேற்றன. ஆதலின் அவன் டில்லிக்கு ஓடினன் ஓலமிட்டுக் கொள்ள. இதற்குள் அல்லாவுதீனுடைய காலம் ஆகிவிடவே, முகம்மது என்பான் சக்கரவர்த்தியாக விளங்கி வந்தான். அம் முகம்மதும் தன் முன்னவனைப் போல் பெயரையும் புகழையும் விரும்பியவன். ஆதலின் அவன் ஒரு பெரிய படைகொண்டு போருக்கு வந்தான். ஆயினும் குட்டிக் கொள்ளும் பொழுதே கண்ணில் சுட்டிக் கொண்டான் என்னும் பழமொழிக் கிணங்க, அம்முகம்மது சரியான பாட்டையை நாடி வரவில்லை; மத்தியபதியின் கிழக்கெல்லை வழியே வந்தான். அங்கே சதுப்பு நிலங்கள் மிக அதிகம். தவிர நல்ல பாதைகளும் கிடையா. ஒரு பீடபூமியில் ஏறியிறங்கவும் வேண்டும். அத்தகைய வழி நடுவில் பகைவன் வந்துள்ளான் என்பதை அமரன் அறிந்து, நாட்டினுள்ளே அவனைப் புகவிடாமல், அச்சதுப்பு நிலத்திலேயே சந்தித்தான் சேனையுடன். நிலத்தின் குணக்கேட்

டால், முகம்மது மிக்கபடை பலம்பெற்றிருந்தும் பயன் படாது போயிற்று. மாலதேவனது பிள்ளைகளில் ஒருவனை ஹரசிம்மனை அமரன் கொன்றுபோட்டு, முகம்மதையும் சிறைகொண்டனன். மாலதேவனே மண்ணுலகைத் துறந்து விண்ணேறினன். தன் தலைவிதியாலும் மதி மோசத்தாலும் முகம்மது மூன்று மாத காலம் சித்தூரிலே சிறை கிடந்தான். அப்பால், அஜமேரு, ரணதம்பரம், நாகதுர்க்கம், சிவபுரம் முதலிய பிரதேசங்களுடன் 50 லட்சம் வெள்ளிக்காசும் ஒரு நூறு யானையும் காணிக்கையாகச் செலுத்தி விடுதலை பெற்றான். பெற்றுத் திரும்புகையில், "இனி யான் சித்தூரைக் கனவிலும் கருதுவதில்லை" யென அவன் மொழிந்தனன். அதற்கு அமரசிம்மன், "எனக்கு அத்தகைய வாக்குறுதி தேவையில்லை. உனக்கு வாள்வலி யிருக்குமேல் நீ வீரருடன் வரலாம்; எனது எல்லைக்குள் புகுமுன்பே உன்னை எதிர்த்துப் புறங்காண என் வீரர் காத்திருப்பர்" என்று கூறினன் கம்பீரமாக.

இங்ஙனம், முகம்மது நாடும் பணமுங்கொடுத்து விடுதலை பெற்றதையும், தன் தந்தையும் சோதரரும் போரில் மடிந்ததையும் கண்ட வனவீரன் அமரனுக்கு அடங்கிவாழ ஒருப்பட்டு அவனை வேண்டி நின்றான். தன் மனைவியின் வமிசம் வாழவேண்டுமெனவும் அமரனுக்கு எண்ணம் உதித்தது. ஆதலின், அக்குலத்தை நிலை நாட்டவேண்டி, ரத்தினபுரம், கயிரவம் முதலிய நான்கு நகரங்களை அவனுக்கு அளித்து, "வனவீர! முன்னம் நீங்கள் துருக்கரது கையாளா யிருந்தீர்கள். இப்போதோ உங்கள் மரபினனொருவனிடமே சேவிக்கிறீர்கள். இதில் உங்களுக்குத் தாழ்வில்லை. என் முதாதைகளின் இரத்தம் படிந்ததும், அம்மை

பவானியின் அருள்கொண்டதுமான எனது நாட்டையே யான் மீட்டுக்கொண்டேன். இதில் உனக்கு மனவருத்த மிருக்க அவசியமில்லை. போகபோக்கியத்துடன் வாழ்ந்து வா; நன்றியறிவுங் கொண்டிரு" என்று புத்தி புகட்டினன். வனவீரன் தன் நன்றியறிவின் அறிகுறியாக, வைனசரௌரம் என்னும் பிரதேசத்தை முகம்மதியரிடமிருந்து மீட்டு, மீண்டும் நடுநாட்டுக்கு உட்படும்படி செய்தான். அக்காலத்திலே வட இந்தியாவில் மிக்க கீர்த்திவாய்ந்த ஹிந்துவரசன் அமரசிம்மனே. டில்லி யாசனைப் புறங் கண்டு, சிறைகொண்டு, பல நாடுகளைக் கப்பமாகப் பெற்று விடுதலை யளித்ததனால் அமரனது புகழ் எங்கும் பரவிற்று. அதனால், ஜோதிபுரி, ஜயபுரி, பூண்டி, முதலிய பல நாட்டரசர்களும் அமரனையே தங்களிலும் சிறந்தவனென மதித்துப் போற்றி வந்தார்கள். அவன் விரும்பிய பொழுதெல்லாம், சித்தூர் சென்று சேவித்தும் வந்தார்கள். மீவார் ராணுக்களின் பரம்பரை மிக்க மகிமை பொருந்தியதென முன்னுரையிலேயே கூறியுள்ளோம். அல்லாவுதீன் சித்தூரைக் கைப்பற்றுமுன், நடுநாட்டின் பரப்பு நான்கு திசையிலும் வெகுவாக நீண்டிருந்தது. அமரன் சித்தூரைக் கைப்பற்றிய பின்பும், அவ்வண்ணமே அதன் பரப்பு அதிகமாயிற்று. டில்லியரசனை முகம்மதை அவன் சிறை பிடித்து வைத்தபின், அவ்வரசர் சித்தூரின்மீது கண் வைக்கவில்லை. தவிர, டில்லி யரசுக்காக, முகம்மதியரிலே, கில்ஜி, லோடி, என்ற வம்மிசத்தினர் போராடி வந்ததனாலும், மத்தியபதியைப் பற்றிக் கருதவும் அவர்களுக்கு அவகாசம் இல்லாது போயிற்று. ஆதலால் நடுநாட்டினர் அன்னியரின் படையெடுப்புக்கு ஆளாகாமலிருந்தனர். அமரனும்

அவனுக்குப் பின்வந்த அரசர்களும் நிம்மதியாக நாட்டின் வளத்தைப் பல விதத்திலும் பெருக்கிவந்தனர். சித்தூரின் அலங்கார மாளிகைகளிலும் மண்டபங்களிலும் முன்னம் அல்லாவுதீனுடைய கோபக்கனலுக்கு இரையாகாமல் தப்பியது ஒன்றேயாம். ஆயினும் அமரனது காலத்திற்குப்பின், ஒரு இருநூறு வருஷத்திற்குள் சித்தூர முன்னைய அழகும் அலங்காரமும் பெற்றுவிளங்கும் பாக்கியம் பெற்றது. பல வித கலைகளையும் சித்திர வேலைகளையும் மத்தியபதி மன்னர் மகிழ்வுடன் ஆதரித்து வந்தனர். அவர்கள் அவ்விதம் ஆதரவளிப்பதற்கு அனுகூலமாகப் புவிமாது பல வளங்களையும் சுரந்தளித்து வந்தாள்.

ராஜபுதன நாடுகளிலே, சிறப்பாக மத்தியபதியிலே கவிகளாகவும் சோதிடராகவும் வியாபாரிகளாகவும் வழி காட்டிகளாகவும் விளங்கும் ஜாதியினர் சரணர் எனப்படுவர். அவர்கள் ராஜபுதனத்தின் பூர்வீகக் குடிகளல்லர். அமரசிம்மனது காலத்தில்தான் அவர்கள் நடுநாட்டில் வந்து குடியேறினர்கள். அதன் விவரத்தை இங்கே சுருக்கிக் கூறுவோம். அமரசிம்மனுக்கு ஒரு சமயம் கைதனில் வெண்குஷ்ட நோய் கண்டிருந்தது. அக்கொடு நோயைப்போக்க அவன் கைதேர்ந்த மருத்துவரைத் தருவித்துப் பார்த்தான். அது அகலவில்லை. ஆதலின், கூர்ஜ்ஜர நாட்டிலுள்ள ஒரு கோயிலுக்குப்போயின் நோய்தீருமென்று பெரியோரில் பலரும் புகன்றனர். அவ்வண்ணமே அவன் தன் பரிவாரத்துடன் போயினன். அத்தலஞ் சேர்ந்தவுடனே, அவனும் அவனுடன் வந்த வீரரும் வழிப்பிரயாணத்தினல் களைத்துப்போயினர். உடனே சரணர் என்னும் ஜாதியினர் வசித்துவந்த இடத்தினருகே அமரன்

தன் குதிரையை நிறுத்தினன். அவ்வளவில் அருகே பாகம் பண்ணிக்கொண்டிருந்த சாண மங்கையொருத்தி அமானை உற்று நோக்கி, "இவன் வேற்று நாட்டான்போல் காண்கின்றான். மலர்வதனத்திலே ராஜலட்சணம் பெரிதும் ததும்பி நிற்கின்றது. தவிர, இத்தலத்திற்கு வரும் அன்னியரை வரவேற்று வழிகாட்டி உபசரிப்பதும் நம் கடமை." என்று தனக்குள்ளே நினைத்து, விரைந்து வந்து, "அரசே! மிகவும் களைத்துப் போயிருப்பதாகக் காண்கிறது. ஆதலின் தாங்களும் தங்கள் பரிவாரமும் எனதகத்தே தங்கியிருந்து களையாறலாம்" என்று மிகவும் பிரியமாகப் பேசினள். அவள் காட்டிய அன்பையும் பரிவையுங் கண்ட அமானுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. தவிர பசியும் அதிகமாயிருந்தது. உடனே வேடிக்கையாக அவன், "பெண்ணே! உன் வீட்டில் நீ செய்யும் சமையல் கம் என்று வாசனை வீசுகிறது, அத்தகைய உணவு என் துணைவருக்குக் கிடைப்பின், மிக்க நலமாயிருக்கும்" என்றனன். அதற்கு அந்நங்கை, "அரசே! என் வீட்டுச் சமையலே அங்ஙனமே உன் பரிவாரத்துக்கு அமர்ந்தளிக்கக் காத்துள்ளேன்" என்றனள் ஆர்வமுடன். அதன்மேல் அமான், "நங்காய்! என் பரிவாரத்தினர் நூற்றுக்கணக்காவர். நீ செய்துள்ள உணவு ஓரிருவருக்கே காணும். பெரும்பசிபிடித்த அத்தனை பெயருக்கும் எப்படிப் போதும்" என்றவுடன், "ராஜதிலக! இத்தலத்து ஆண்டவனது அருளிருப்பின், ஆயிரக்கணக்கான பெயருக்கும் அவ்வுண்டி கண்டு மிஞ்சும்" என்றனள் அவ்விளம் பெண். பின்பு அவள் தான் சமைத்திருந்த ஒரு சிறுபானையன்னத்தையெடுத்துவந்து அத்தனை பெயருக்கும் வயிறாறவிருந்திட்டாள். அரசபரிவாரத்தின் மிகுதியைக்கண்டு, இத்

தனை வீரருக்கும் நன்னீர் வேண்டுமெனக் கருதி, அவ்விடத்தே பூமியைச் சிறிது தோண்டினள். உடனே நீர் ஊற்றெடுத்து வெள்ளமாகப் பெருகியது. அந்நாளிலே தூர்வாச முனிவர் தமது சிஷ்ய கோடிகளுடன் வந்தகாலையில், மாயவனது பேருளால் பாஞ்சாலியின் அட்சய பாத்திரம் எல்லோருக்கும் அமோகமாக இனிய விருந்தளித்ததுபோல், அத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனருளால் அச்சிறு பானையிலிருந்த அமுது அமரனது பரிவாரத்துக்கு விருந்தளித்தது போலும். கடவுளின் பெயரைப் பகர்ந்த மாத்திரத்தில், இவ்வளவு நன்மை விளையுமென்றால், அவனை மெய்யன்புடன் துதிப்போருக்கு எல்லாம் இனிது சித்திக்குமென அமரன் கருதி, அக்கடவுளைத் தொழுதான்; ஆகம விதிப்படி பூசனையும் புரிந்தான். அதனால் அவனது குஷ்டநோய் அடியோடு மறைந்துவிட்டது.

பின்னரே அமரசிம்மன் தன் நாடு திரும்பினன். திரும்புகையில், அச் சரண மங்கையின் குடும்பத்தையும் தன்னுடன் அழைத்துவந்து, அவர்களுக்கு மூலம் என்னும் நன்னகரை மானியமாக அளித்தனன். அது கேட்டு அக் குலத்தைச் சேர்ந்த வேறு சிலரும் அந்நகரில் வந்து குடியேறினர். நாளடைவில் அவர்களது வமிசம் அங்கே மிகவும் பெருகிவிட்டது. அவர்கள் தங்களுக்குப் பாரம்பரையான கவித்வம், சோதிடம், வர்த்தகம், வழிகாட்டுதல் முதலிய தொழில்களில் அமர்ந்தனர். அக்குலத்து ஆண் மக்களும் சரி, பெண் மக்களும் சரி, மிக்க அழகு பொருந்தியவர்கள்; சமயத்திற்கேற்ற வண்ணம் சாமர்த்தியம் காட்டுபவர்கள்; தெய்வ பக்தியில் சிறந்தவர்கள்; நாநயமும் நாணயமும் வாய்ந்தவர்கள். அவர்கள் தரிக்கும் உடை வெகு

சேர்த்தியாயிருக்கும். பெண்மக்கள் பலவித நகைகளணிவதிலும், வர்ணச்சேலைகள் தரிப்பதிலும் பிரியமுள்ளவர்கள். அமரனுக்கு அம்மங்கை நல்விருந்து நடத்தியதனால், அவனுக்குப்பின் வந்த ராணுக்கள் அம்மூால நகரின் பக்கமாகப்போயின், அக் குலமாதர் தம்மரசனை அன்பென்னும் தளையிட்டுச் சிறைசெய்து விடுவர். அப்பால் அவன் அவர்களுக்கு அறுசுவை கலந்த விருந்தளித்து, வேண்டுமளவு திரவியமும் தந்தால்தான் விடுதலை பெறலாம். இது நிற்க,

அக் குலத்தினரின் தொகை பெருத்தவுடனே, மூால நகரின் நிலங்களை அவர்கள் ஆளுக்குக் கொஞ்சமாகப் பாகம் பண்ணிக் கொள்ளலாயினர். அதற்காக அவர்களுக்குள்ளே ஒரு சமயம் மிக மூர்க்கமான சச்சரவு உண்டா[illegible] விட்டது. ஆதலின் பல ஆண்மக்கள் ஆவியிழந்து மாண்[illegible] போயினர். போனதும், அவ் வாண்மக்களின் மனைவியர் உடன்கட்டை யேறுங் காலத்திலே, "மண் காரணமாக வன்றோ இத்தனை மக்கள் மண்ணாயினர்? ஆதலின், இனி ந[illegible] குலத்திலே எவரேனும் பூமியை யுழுது பயிராக்கின், அவ[illegible] களும் மண்ணாகி மடிவர்" என்று சாபமிட்டுப் போனதாக[illegible] புலப்படுகிறது. அச்சாபத்திற்கு அஞ்சிய அனைவரு[illegible] அன்றுமுதல் நிலங்களை யுழுது பயிர் செய்யவில்லை. பூ[illegible] யனைத்தும் தரிசாகவே கிடக்கலாயிற்று. எனவே, அ[illegible] வார்த்தைக்குள்ள அச்சமும் மதிப்பும் எவ்வளவென [illegible]ாவ வரும் ஊகித்துக் கொள்ளலாம். இனி, அக்குலத்தின[illegible] பிர பல வியாபாரிகளாதலின், நூற்றுக்கணக்கான பொ[illegible]மாடு களின்மீது சுமையை ஏற்றிக்கொண்டு, பற்பல இடங் களுக்கும்போய் வாணிபஞ் செய்வர். இரவிலே ஓரிடத்தில் தமது கால்நடைகளை நிறுத்தித் தங்குவர். அவர்களுக்கு

மட்டும் அக்காலம் எங்கும் சுங்கவரி கிடையாது. தவிர, சாரணரின் சரக்கு என்றால், தெய்வசாபம் நேர்ந்துவிடு மென்று கானகக் கள்வரும் கவராதிருப்பர். துருக்கரும் மகாராஷ்டிராரும் அங்ஙனமே அக் குலத்தினரைப் பயபக்தி யுடன் மதிப்பதுண்டு. அம்மூரால ஜில்லாவின் எல்லைக்குள் அக்காலம் யாரும் எதையும் அபகரியார்.

அக் காலத்திலே வடஇந்தியாவில் வன்மையுடன் விளங்கிவந்த ஹிந்துவரசன் அவனே. புராதனமான இதர ராஜ வமிசங்கள் அநேகமாக அழிந்து போய்விட்டன. ஆதலின், மாருவாரம், ஜயபுரி ஆகிய நாட்டரசர் மட்டுமே யல்லாமல், பூண்டி, குவாலியர், ரவிசேனம், கல்பி, அற்புதம், முதலிய பற்பல நாட்டரசரும் அமரசிம்மனையே ராஜாதி ராஜனாகப் போற்றிவந்தனர். சித்தூரிலிருந்து ஸ்ரீமுகம் வந்ததென்றால், அதனை யவர்கள் சிரமேல் தாங்கிச் சிறப்பே செய்வார்கள்.

அமரசிம்மன் அறுபத்து நான்கு வருஷகாலம் அரசாண்டு வந்தான். மத்தியபதியிலே அன்று தொட்டு இன்றுவரை அரசுபுரிந்த சிறந்த அரசர்களில் அமரனும் ஒருவன்; அவன் மிக்க புத்திமான். பரம ராஜ தந்திரி. போராண்மையில் இணையற்றவன். சரீர வன்மையிலே யாருக்கும் சளைக்காதவன். குடிமக்களால் பெரிதும் போற்றப் பெற்றவன். பகைவரைப் பதைக்கச் செய்யும் போர் வீரன். 1365-ம் வருஷம் அவன் இகவாழ்வைத் துறந்து பரகதி யடைந்தான்.

ராஜ கெயித சிம்மன் 1365,1373—கி.பி.

அமரசிம்மன் பரகதி யடைந்ததும், அவன் பிள்ளை கெயித சிம்மன் சிம்மாசனம் ஏறினன். அவன் தன் தந்தையைப் போலவே பராக்கிரமசாலி; நற்குண நற்செய்கை நிறைந்தவன். தன் பிதாவின் போர்வன்மையை இளமையிலேயே கண்டுங்கேட்டு மறிந்தவன். ஆதலின் அங்ஙனமே போர்த்திறனல் புகழ்பெற எப்போது சமயம் வாய்க்குமென்று ஆவலுடன் இருந்து வந்தான். பட்டத்துக்கு வந்ததும், மத்தியபதியின் மகிமையை நன்கு நிலைநாட்டுவதில் முனைந்து நிற்கலாயினன். அதற்காகப் பல பிரதேசங்களை வசப்படுத்தினன். தவிர டில்லியிலே முகம்மதுக்குப் பின் பட்டத்துக்குவந்த ஹுமாயூன் (இவன் பெருடைய பிள்ளையல்லன்) என்பவனைப் போரிலே புறங்கண்டு, முகம்மதியரின் மனத்தில் அச்சத்தை யூட்டினன். பின்னர் மண்டலகிரி என்னும் நகரை மீட்டுத் தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டான். இச் சந்தர்ப்பத்திலே அந்நகரின் சரித்திரத்தைச் சிறிது குறிப்பிட வேண்டும்.

மண்டலகிரிக்கு முன்னம் வழங்கிவந்த பெயர் பாலநதம். அக்கினி குலத்தின் ஓர் உட்பிரிவான பாலநாதர் என்போர் அதனை யாண்டு வந்தனர். ஆதலால், அதற்கு அப் பெயர் உண்டாயிற்று. பத்தாவது நூற்றுண்டு முதல் 14-வது நூற்றுண்டுவரை அக்குலத்தினரிடம் அது இருந்து வந்தது. அதன் தலைவனுக்கு மண்டலன் என்னும பணியாளன் ஒருவன் இருந்தான். அவன் வில்லவர் மரபினன். கரும்புத் தோட்டத்தில் காவல் புரிவதே அவ

னது வேலை. முள்ளம் பன்றிகள் முனைந்துவந்து கரும்புப் பயிரைப் பாழ்படுத்துவதுண்டு. ஒருதினம் மண்டலன் அத் தோட்டத்தைச் சுற்றிவருகையில், முள்ளம் பன்றி யொன்று உறங்கிக் கிடப்பதைக் கண்டனன். கண்டதும், அதனை ஒரே யடியில் கொன்று போட்டுவிடக் கருதித் தனது அம்பை ஒரு பாறையிலே தீட்டினன். அவ்வளவில், அவ்வம்பு பொன்மயமாகி விட்டது. அப்போது அவனுக் குண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. அவ் வதிசயத்தை அவன் தன் தலைவனுக்கு அறிவித்தான். உடனே அத் தலைவன் வந்து பார்த்துப் பரமானந்தமெய்தி, அப் பாறையை ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு போயினன். உடனே, பன்றி மறைந்துவிட்டது. ஆதலின் வராக மூர்த்தி யின் பேரருளால் புதையல் கிடைத்ததென அவனுக்குத் தோன்றியது. அப்பால் அப்புதையலைக் கொண்டு, அவன் பாலநதத்தைப் புதுப்பித்தனன் வெகு அழகாக. அப்புதிய நகருக்கு யாது பெயர்தரலாமென அவன் ஆலோசிக்கையில், மண்டலனது முயற்சியே காரணமென மதித்து, மண்டல கிரி எனப் பெயரிட்டனன். இது நிற்க.

தன் தந்தையின் பெயரையும் குலச் சிறப்பையும் நன்கு நிலைநிறுத்திவந்த கெயிதசிம்மன் நெடுங்காலம் அரசு புரியக் கொடுத்து வைக்கவில்லை. அதன் விவரம் யாதெனில், ராஜபுத்ன நாடுகளில் பூண்டி என்பது ஒன்று. அது தனி யரசாயினும், ஒருவிதத்திலே நடுநாட்டினுக்கு உட்பட்ட குறுநாடே யாகும். அவசியம் நேர்ந்தகாலையில், பூண்டி நாட்டரசர் நடுநாட்டின் வேந்தருக்குப் போரில் உற்ற துணை யாவர். அந்நாட்டின் ஒரு பிரிவு பூமதம் என்பதாகும். அப் பூமதத்தின் அதிபதி அலூஹான் எனப்படுவான். அவன்

பெருஞ் சிறப்பு வாய்ந்தவன். அப்பூமதம் 24 பிரிவுகள் பொருந்தியது. அப்பிரிவுகளிலே ஒன்றின் தலைவனது பெயர் லாலாஜி. அவனுக்கு அழகிற் சிறந்த குமரி யொருத்தி யிருந்தனள். அவளுக்கு மங்கைப் பருவம் வந்தது. ஆதலின் அவளை யாருக்கு மணம் பேசுவதென அவன் ஆலோசித்தான். முடிவில், ராணு அமரனுக்கே கொடுப்பதென்று தீர்மானமாயிற்று. அதன்படி, தனது பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமென, அவன் அமர சிம்மனுக்குத் தாம்பூலமும் தேங்காயும் அனுப்பினன். வலுவில் ஒருவன் வந்து, தன் பெண்ணைத் தருவதாகச் சொல்லின், அதனை ஏற்றுக்கொள்ளுவதே ராஜபுத்திரரின் வழக்கம்: மரியாதையுமாகும். மாட்டேனென மறுத்து விடல், மரியாதையுமன்று ; அழகுமன்று. தவிர, மறுத்து விடுதல் கடும்பகைக்கும் காரணமாகும். எனினும் சித்தூர் வேந்தனுன அமரசிம்மன் மணத்திற்கு இசையவில்லை. ஆதலின், லாலாஜியின் புரோகிதன் மனவாட்டத்துடன் திரும்பி வந்தான் பூமதத்தை நோக்கி.

அச்சமயம் அமரனது மைந்தனுன செயித சிம்மன் வேட்டையாடிச் சித்தூருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பர். அதன்படி, புரோகிதனைக் கண்ட செயிதன், "பெரியோரே! முகவாட்டங்கொண்டு வழிநடப்பதின் காரணம் யா"தென வினவினன். புரோகிதனும் நடந்த செய்தியை நவின்றுன். பூண்டிநாட்டு ராஜபுத்திரர் மகா பராக்கிரமசாலிகள். மானத்தையே பெரிதாக மதிப்பவர்கள் ; உயிரை ஒரு பொருட்டாக மதியாதவர்கள். மத்திய பதியின் பாளையக்காரரைப் போலிருப்பினும், அவர்களின் மனத்தைப் புண்படுத்த நம்

கெயித சிம்மனுக்கு இஷ்டமில்லை. ஆதலின், "ஆச்சாரிய சில! வருந்த வேண்டாம். லாலாஜியின் மகளை என் தந்தை மணக்காமற்போயினும், சிறிதுகாலஞ் சென்றதும் யானே மணந்து கொள்ளுகிறேன். சித்தூர் ராணாவின் குடும்பத் தில் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்பதுதானே உங்கள் கோரிக்கை. யான் அதனை ஈடேற்றுவேன்" என்று சொல்லியனுப்பினான் ஆறுதலாக. பின்னர், கெயித சிம்மன் முடிசூடியதும் ஆடம்பாத்துடன் போனான் பூமதத்திற்கு. ராஜபுத்திர மன்னவரும் சரி, பாளையக்காரரும் சரி, விவாகத் துக்கோ போர்முனைக்கோ போகும் சமயத்தில், சமஸ் தான கவிகளையும் கூட அழைத்துக்கொண்டு போவர். முற்காலத்தே நம் தமிழ் வேந்தர் மூவரும் கவிவாணரைப் பெருமையுடன் போற்றிவந்தது போலவே ராஜபுத்திரரும் போற்றி வந்தனர். விவாக சமயத்தில் கெயித சிம்மனுடன் போன புலவன் பெயர் பீமசேனன். அவன் காசிவாசி. பின் நிகழப்போகும் சம்பவத்தை மதித்து, அவனது சரி தத்தை இங்கே குறிப்பிடல் வேண்டும்.

அமரசிம்மனது காலத்தே ஓர் ஏரியை வெட்டிப்பழுது பார்க்கையில், கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்த தங்க விக்கிரகமொன்று கண்டெடுக்கப்பட்டது. அதற்கிருந்த நான்கு கைகளில் ஒன்றுமேல் நோக்கியும், மற்றொன்று கீழ் நோக்கியும், இன்னொன்று அவ்விரண்டுக்கும் மத்தியில் நேராகவும், நிற்க நான்காவதுகை சாதாரணமாக இருந்தது. இத்தகைய விக்கிரகத்தைக் கண்டவுடனே, அமரசிம்மன் ஈதென்ன விந்தை! மூன்று கைகள் மூன்றிடங்களைச் சுட்டி நிற்கின்றன என்று ஆச்சரியங்கொண்டான். அக்காலத்தே அந்நாட்டிலிருந்த கவிகளும் திருமலைராயனது சமஸ்

தான கவி அதிமதுர கவிராயரைப் போல் செருக்குற்றிருந்தனர். அவர்களின் கர்வத்தை யடக்க வேண்டுமென்று அமானுக்கு எண்ணம் உதித்தது. ஆதலின், தன் பதியிலிருந்த புலவரனைவரையும் வரவழைத்து, விக்கிரகத்தின் கைகள் விசித்திரமா யிருப்பதை விளக்கின், தக்க பரிசு கிடைக்குமெனத் தெரிவித்தான். கவிஞரில் எவரும் அதனை விளக்க முடியவில்லை. ஆதலின், அமாசிம்மன் அனைவரையும் தன் நாட்டைவிட்டுப் போய்விடும் வண்ணம் கட்டளை யிட்டுவிட்டான்.

அனைவரும் அவ்வாறே வேற்றுநாடு சென்று வருந்தியிருந்தனர். அச்சமயத்திலே பீமசேனன் என்னும் புலவன் அமானது சபைக்கு வந்தனன். அவனையும் அமான் வினவினன் விக்கிரகத்தைப் பற்றி. அதற்கு அவன், "அரசே! உலகங்கள் பதினான்கு என முன்னோர் மொழிவர். எனினும், பொதுவாக உலகங்கள் சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என மூன்றாகும். சுவர்க்கத்திலே பலதேவர்கள் இருப்பினும், அவர்களிற் சிறந்தவன் இந்திரனே. இதனை யறிவுறுத்த ஒரு கை உயர நோக்கியிருக்கிறது. பாதாள வுலகிலே பலரிருந்தாலும், பரந்தாமனது ஆசீர்வாதம் பெற்ற பரமபக்தன் பலிச்சக்கரவர்த்தியே பெரியோன் என்று சுட்டிக்காட்ட ஒரு கை கீழ்நோக்கி நிற்கிறது. அவ்விரு உலகினுக்கும் இடையிலுள்ள இப் பூவுலகில் பல வேந்தர்கள் இருந்தாலும், எல்லோரிலும் சிறந்தவன் மத்தியபதி மன்னவனே என்று விளக்க மற்றொரு கை மத்தியில் நீண்டு நிற்கிறது" என்று கூறினன். தன்னை முகஸ்துதி செய்வது போல் அமானுக்கு அவ்வசனம் காணப்பட்டபோதிலும், பீமனது புத்திசாதுர்யத்திற்கு வியந்து, அவனையே சமஸ்

தான கவியாக நியமித்துக் கொண்டான். அதுகண்டு பீம சேனன் பெரிதும் மகிழ்ந்தானுயினும், தன் சகோதரப் புல வர்கள் பிறநாட்டில் புலம்பி நிற்பதைக்கேட்க அவன் மனம் சகிக்கவில்லை. மகா கவியாகிய கம்பர், கடைச்சங்கப் புலவர் திலகமான நக்கீர் போன்ற பெருமான்களைப் போல் பீம னும் பெருந்தன்மை பொருந்தியவன். ஆதலின், அமரன் மகிழ்ந்துநின்ற சமயம் பார்த்து, அவ்வித்துவான்களை மீண் டும் வரவேற்று, ஆதரிக்கும்வண்ணம் வேண்டிக் கொண் டான். பீமனது வேண்டுகோளைத் தட்டிநடக்க அமரனுக்கு மனமில்லை. ஆதலால் எல்லாக் கவிராயர்களையும் தருவித்து, முன்போல் ஆதரித்து வரலாயினன். அங்ஙனம் அமரன் பெருந்தன்மை காட்டியதற்காக, "அரசே! யான் இனிமேல் மனிதரிலே தங்களிடமன்றி வேறு யாரிடமும் எதையும் கை நீட்டி வாங்குவதில்லை" யென்று சபதஞ்செய்து கொடுத் தான் அப் பீமசேனன்.

அத்தகைய வீமசேனனும் நம் கெயித சிம்மனுடன் பூமதத்துக்குப் போயினன். அரண்மனையிலே விவாகம் நடக்குமாயின், பல வகையான கலைகளில் தேர்ச்சி பெற்ற பற்பல புலவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். அது போல் பூமதத்திலே கெயித சிம்மனுக்கு மணம் நடந்து கொண்டிருக்கையில், எல்லா வித்வான்களுக்கும் பெண் வீட்டார் வேண்டுமளவு பரிசுகள் வழங்கினர். அதுகண்ட பீமகவியும் பரிசில்பெற ஆசைகொண்டான் மதிமயங்கி. வேறு யாரிடமும் எதையும் கைநீட்டி வாங்குவதில்லையென அமரசிம்மனுக்கு அன்று கொடுத்த வாக்குறுதியை அவன் மறந்து விட்டான்போலும். ஆதலின், அவனும் யானை, குதிரை, பசு, பட்டாடை, பணம் முதலிய வெகுமதிகள்

பெற்றான். பெற்றபின், பழைய வாக்குறுதி அவனுக்கு ஞாபகம் வரவே, அவன்மனம் பெரிதும் நடுங்கத் தொடங்கியது. உடனே, "செல்வத்தைக் கண்டு சிந்தைகெட்டுவிட்டோமே! இனி எங்ஙனம் அரசன் முகத்தில் விழிப்பது? உலகினரை எங்ஙனம் நோக்குவது?" என்று வருந்தி, மானமிழந்து வாழ்வதைவிட, மாய்ந்துவிடுவதே மேலென மதித்து, ஓர் ஈட்டியை எடுத்துக் குத்திக்கொண்டு மாண்டு போயினன். அத்தருணத்தில்தான் நம் கெயித சிம்மன் அம்மங்கைக்குத் திருமாங்கல்யம் தரிக்கப் புகுந்தான். அச்சமயத்தில், சித்தூரின் சிறந்த கவிஞன் கொல்லப்பட்டுப் போயினான் என்னுஞ் சொல் அவனது காதில் இடிமுழக்கம் போல் விழுந்தது.

அவ்வளவுதான் தாமதம். கெயிதசிம்மன் தன்கைதனிலிருந்த திருமாங்கல்யத்தை அங்ஙனமே தரையில் போட்டு, "என் சமஸ்தானகவி, ஹாரின் மாளிகையில் அல்லவா கொல்லப்பட்டான்? ஆதலால் இப்பூமதம் என்னும் நாட்டை நிர்மூலப்படுத்தாமலிரேன்" என்று சபதம் செய்தான். ஹாரும் கெயித சிம்மனைப்போல் பதட்டங்கொண்டு விட்டனர். விதி வழியே மதிசெல்லு மல்லவா ? அவர்களும் கடுங்கோபங் கொண்டு, "முன்னம் அமரன் நம்குலப் பெண்ணை மணக்க மறுத்து, நம்மை அவமானங் கண்டான். இப்பொழுதோ அவன் பிள்ளை அப்பனை விஞ்சிவிட்டான். தாலிகட்டப் போகும் சமயத்திலே, மணத்தை உதறித் தள்ளியுள்ளான். எனவே நாமும் பழிக்குப் பழிவாங்க வேண்டும்" என்று கொதித்தனர். முந்திய நிமிஷத்திலே மனக்களிப்பு நிரம்பி மணக்கோலங்கொண்டு நின்ற மாளிகை மறுகணத்திலே மனக்கொதிப்புக்கும் கடும்பகைக்கும் உறைவிடமாக மாறி

விட்டது. ஆயினும் அச்சமயத்திலே ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர்புரியவில்லை. வஞ்சனையாகப் போர்புரிய சுத்த வீரருக்கு விருப்பமிராது. ஆதலின், செயித சிம்மன் சித்தூருக்குத் திரும்பிப் படை திரட்டலானான். ஹாரும் யுத்தத்துக்கு ஆயத்தமாயினர். அங்ஙன மிருக்கையில், பங்குனி மாதத்தே வேட்டை விழாநாள் வந்தது. அந்நாள் ராஜபுத்திரில் பலரும் வேட்டைக்குப் போகாமலிரார். அவ்வண்ணமே பூண்டி நாட்டதிபதியான லாலாஜி வேங்கை வனத்துக்கு வேட்டையாடப் போயினன். அவ்வனத்தின் வேறொரு பக்கத்திலே அச்சமயம் செயித சிம்மனும் விலங்குகளை வேட்டையாடி நின்றான். அப்போது லாலாஜி வந்திருக்கும் செய்தி சித்தூர் வேந்தனுக்குத் தெரியவந்தது. உடனே, செயிதசிம்மன் தன் வீருடன் சென்று லாலாஜியை எதிர்த்தான். அவ்விருவரும் நேர்நின்று வாட் போர் புரிந்தனர். நெடுநேரம் சமர்செய்தும், ஒருவரை யொருவர் வெல்லவில்லை. ஆனல் முடிவிலே மாமனும் மணமகனும் மாண்டுபோனார்கள். உடனே லாலாஜியின் மனைவி தன் கணவனுடன் உடன் கட்டையேற, அவள் பெண்ணோ தன் காதலனான செயிதனுடன் தானும் தீக்குளித்தனள். அப்பொழுது, "பங்குனிமாதத்து வேட்டை விழாவிலே, சித்தூர் ராணாவும் பூண்டிநாட்டரசனும் சந்திப்பின், இவ்விதமே இருவரும் பகைகொண்டு மடிவர்" என்று அப்பெண்ணும் தாயும் சாபமிட்டுச் சென்றனர். அவர்களிட்டுப் போன சாபம் பொய்க்காமல், பல சமயங்களில் அவ்வண்ணமே நிகழ்ந்திருக்கிறது. இதன் விவரம் அவ்வவ்விடத்தில் விளங்கக் கூறப்படும்.

ராஜு இலட்ச சிம்மன் 1373—1398.கி.பி.

செயித சிம்மன் போர்முனையிலே பொன்றி வீழ்ந்த பின், ராஜுவாக வந்தவன் இலட்ச சிம்மன். அவன் காலத்திலே மத்தியபதி பல வழியிலும் பெருமை பெறலாயிற்று. நீர்வளமும் நிலவளமும் நிரம்பிக் கிடக்கலாயின; வீரரின் வெற்றியும் அவ்விதமே வெகுவாக ஓங்கி வந்தது. நடு நாட்டின் எல்லைப் புறத்திலே மேருவாரம் என்ற மலைநாடு ஒன்றுண்டு. அம் மலைநாட்டினர் மேரவர் எனப்படுவர். அவர்கள் சிற்சில சமயங்களிலே சித்தூர் நாட்டில் புகுந்து, குடிமக்களுக்குச் சிறுமை யிழைத்து வந்தார்கள். அது கண்ட இலட்ச சிம்மன் வாளா விருக்கவில்லை; சீறியெழுந்தான் அம்மேரவரின்மீது. அவர்களோ தங்கள் இனத்தினரான வில்லவரைத் துணைகொண்டு போர் கொடுத்தார்கள். எனினும் மத்தியபதி வீரரின் முன்னிலையில் அவர்களுடைய போர்வன்மை பலிக்கவில்லை. முடிவிலே உயிர் தப்பினால் போதுமென அம் மலைநாட்டினர் ஓட்டம் பிடித்தனர்; தலை நகரான விராடகிரியையும் விட்டுக்கொடுத்தனர் காணிக்கையாக. அப்பால் அவர்களுடைய கொட்டம் குலைந்தது. தன் வெற்றியின் அறிகுறியாக இலட்ச சிம்மன் அங்கே ஒரு நகரை நிருமித்தான். அதன் நாமம் வேதநகரம். அதுவே எல்லைப் புறத்தில் காவலாக நிற்கும் கோட்டையுமாயிற்று. இறைவனாக வந்தவுடனே, இலட்ச சிம்மன் இழைத்த முதற் செய்கை அதுவே.

பின்னர் தன் மூதாதைகளைப் போல் நாட்டின் நலத்தைப் பெருக்குவதில், அவன் தன் கருத்தைச் செலுத்தி

னன். பூதத்துவ விற்பன்னரை வருவித்துப் பூமியைச் சோதிக்கவே, அரிய உலோகங்கள் கிடைக்கக்கூடிய இடங்களை அவர்கள் கண்டுபிடித்தார்கள். சவரம் என்னும் பிரதேசத்திலே சுரங்கங்கள் பல தென்பட்டன. அக்கனிகளை ஆராய்ந்து பார்த்த வளவில், எழுவகை உலோகமும் ஏராளமாக அகப்பட்டது. அச்சுரங்க நிதியைக்கொண்டு, இலட்சசிம்மன் சித்தூர் நகரை அழகு பெறச் செய்தான். முன்னம் பட்டாணியனல் பாழ்பட்டுப் போன சித்தூர் இப்போது சீரும் சிறப்பும் பெறலாயிற்று. அந்நகரிலே எங்கு பார்த்த போதிலும், விசித்திரமான வேலைப்பாடமைந்த தேவாலயங்களும், வனப்பு வாய்ந்த ராஜ மாளிகைகளும் அழகின் உருவான அந்தப்புர அரண்மனைகளும் நிரம்பலாயின. அவன் காலத்திலே அழகுபெற எழுந்த மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கணக்கிட்டுரைக்க முடியாது. அங்ஙனம் அவன் அரிய ஆலயங்களும் கோயில்களும் சமைத்ததனால், சிற்ப சாஸ்திர விற்பன்னரும் கலைஞான வல்லவரும் போதரவு பெற்றுப் பெருமையுடன் வாழ்ந்து வந்தார்கள். அப்பால், அவன் நாட்டின் நீர் வளத்தைக் கருதி, நானுதிசைகளிலும் நீர் நிரம்பிய ஏரிகள் கட்டிவைத்தான்; குளங்கள் வெட்டிவைத்தான்; நதிகளை நன்கமைத்தான்; வாராவதிகளும் கல்லணைகளும் கட்டி வைத்தான். ஆண்டவனுக்கு அபாரமான செலவில் அவன் கட்டிவைத்த ஆலயம் இன்னும் ஆகாயமளாவ நின்று நிலவுகிறது. அங்ஙனமே நிலவிநிற்கும் சில மாளிகைகளும் உள. அவைகளின் வேலைத்திறனைப் பார்க்கப் பார்க்கப் பரமானந்தம் உண்டாகும். அதனால் அவன் பெயரும் புகழும் இப்போதும் ராஜபுதனத்திலே நிலை பெற்றுள.

புத்திர பாக்கியத்தில் அவன் மிகவும் பெருத்தவன். பல புத்திரர் அவனுக்குப் பிறந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் போன விடமெல்லாம் புகழ்க்கொடி தூக்கினோராவர். ஆதலின், அவர்களுடைய பெயராலேயே லவண வந்தர், தூலவந்தர், சந்திரவந்தர் என்ப பல வமிசங்கள் தோன்றிப் பரவலாயின. அவனது தலைப்பிள்ளையின் பெயர் சந்திர சிம்மன். அவனே இளவரசு மாவான். சந்திரன் இவ்வுலகைக் களிக்கச்செய்வது போல், சந்திர சிம்மனும் மத்தியபதி வாசிகளை மகிழச் செய்தனன். முன்னாளிலே தன் தந்தை சந்தனுவைக் களிப்பிக்க வேண்டி, தேவவிரதன் என்னும் பெரியோன் தனக்குரிய அரசுரிமையைத் தம்பியருக்களித்துப் புகழ்பெற்றது பிரசித்தம். அவ்விதமே நம் சந்திர சிம்மனும் தன் தகப்பன் இலட்ச சிம்மன் மனங் குளிரும் வண்ணம் தன்னரசை முழுமனதுடன் தன் தம்பிக்குத் தந்தனன். அத்தகையோனைக் கலியுக பிஷ்மனெனக் கூறுதல் பொருந்தும். அதன் காரணத்தை இங்கே விரிவாக விளம்புவோம்.

ராஜ் புதனத்திலே மற்றொரு நாட்டின் பெயர் மாருவாரம். அந்நாட்டில் அரசு செலுத்தியவன் பெயர் ராவ் ரணமல்லன். அவனுக்கு அழகின் வடிவமான பெண்மணியொருத்தி யிருந்தனள். ராணாவின் வமிசத்தில் அவளை வாழ்வுபெறச் செய்யவேண்டுமென ரணமல்லன் பேராவல் கொண்டு நின்றான். சந்திர சிம்மனது சீலத்தையும் சிறப்பையும் அவன் நன்குணர்ந்தவன். ஆதலின், தன் புதல்வியை அச் சந்திரனுக்கே மணம்பேச வேண்டுமென அவன் துணிவு கொண்டு, மணவோலை யனுப்பினான் மத்திய பதிக்கு. மாருவாரப் புரோகிதரும் மணத்திற்குரிய

தாம்பூலமும் தேங்காயும் தாங்கிச் சித்தூர் சேர்ந்தார். அப்பொழுது, ராஜா இலட்சசிம்மன் தன் மந்திரிகளும் பிரதானிகளும் புடைசூழ அத்தாணி மண்டபத்திலே கொலு வீற்றிருந்தான். மணவோலை தாங்கிவந்த புரோகிதருக்குத் தக்க மரியாதைகள் செய்யப்பட்டன. அச்சமயம் சந்திரசிம்மன் அரண்மனையில் இல்லை; வேட்டைநிமித்தம் கானகம் போயிருந்தனன்.

சந்திர சிம்மன் சடுதியில் வந்து விடுவானென அனைவரும் கூறினர். வந்த புரோகிதர் அரசவையிலேயே காத்திருந்தார். ராஜா இலட்சசிம்மன் தன் அமைச்சருடன் விநோதமாக உரையாடி நின்றான். அப்பொழுது, "யானோ நாடிநரைத்துப் பழுத்துப் போன கிழவன். என் போன்ற கிழவன் வேடிக்கையாக விளையாடும் வண்ணம் பால வயதுள்ள பெண் பிரதிமையை அனுப்பவில்லையென மதிக்கின்றேன்" என்றனன் இலட்சசிம்மன் தன் மீசையில் கை போட்டு. அப் பரிகாச வார்த்தையைக்கேட்ட அனைவரும் ஆனந்தங்கொண்டு நகைத்தனர். இது விஷயம் அரண்மனையெங்கும் பரவியது. இதற்குள் சந்திர சிம்மனும் வந்து சேர்ந்தான் வனத்திலிருந்து. உடனே மணவோலை விஷயமும் தந்தையின் பரிகாசச்சொல்லும் அவனுக்குத் தெரிய வந்தன. அவ்வளவில் அவன், "ஒரு சமயம் நம் தந்தை அம்மாதை மணக்க மனத்தகத்தே மதித்துள்ளார்போலும். இல்லையேல் அங்ஙனம் பரிகாசமாகப் பேசியிரார். ஆதலின் அப் பெண் இனி யெனக்குத் தாயாவாள். அவளை யான் மணத்தலென்பது மாபாவம்" என்று மதித்து விட்டான். அதன்பின்பே, அவன் அரசவை போகவும் நேர்ந்தது. அரசவை போனதும், அவனது உள்ளக்கருத்தை

அனைவரும் உணர்ந்து கொண்டனர். ராணா இலட்ச சிம்மனோ தன் மைந்தனது மனக்கோளை யறிந்து மறுகினன். எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், சந்திர சிம்மன் இணங்கவில்லை. பின்பு "வலுவில் வந்த ஸ்ரீதேவியைத்தள்ளி விடுவது போல், மணந்து கொள்ள மைந்தன் விரும்பவில்லையென விளம்பிவிடுவதா? அங்ஙனம் மண வோலையை மறுத்துவிடின், மாருவார மன்னவனது பகைவந்து நேரலாம். தவிர, வலுவில் வந்த வாழ்வைத்தட்டி விடுவதும் ராஜபுத்திரருக்கு அழகாகுமா" என இலட்ச சிம்மனுக்குப் பலவாறு சிந்தனை யுண்டாகி விட்டது. முடிவில், தானே மணந்து கொள்வதாக ராணா துணிந்தனன். ஆனால், அப்போதும் சிந்தாகுலம் தோன்றாமலில்லை.

எங்ஙனமெனில், சந்திர சிம்மனே மூத்தபிள்ளை, அவனே இளவரசுமாவான். பேராற்றலும் வீரமும் படைத்தவன்; பேரறிவும் ஆண்மையும் பொருந்தியவன். அவனைத் தவிர இன்னும் பல புதல்வர் உளர். போதாக் குறைக்கு அப்பெண்ணின் வயிற்றிலும் பிள்ளை பிறப்பின் அரசுக்காக அடங்கா வைரம் விளையக் கூடும். போரும் நிகழலாம். எனவே யாது செய்வதென இலட்ச சிம்மன் நெடு நேரம் சிந்தித்த பின்பு சந்திர சிம்மனை அருகிலழைத்து, "எனதருமை மைந்த! நீயோ அம்மங்கையை மணக்க மறுக்கின்றாய். மணவோலையைத் தட்டிவிட எனக்கு மனமில்லை. ஆதலின், யானே அந்நங்கையை மனைவியாகக் கொள்ளக் கருதியுள்ளேன். ஆனால் அவள் வயிற்றிலும் பிள்ளை பிறப்பின், அரசுரிமையை யாருக்களிப்பது? இதுவே எனது சிந்தனை. உனது கருத்தை யறிய ஆவலுளது" என்று வினவினன். அதுகேட்ட சந்திரன் சிறிதும் தயங்காது, "எந்

தாய்! தங்கள் விருப்பை நிறைவேற்றிவைக்க யான் தட்டாது காத்திருக்கின்றேன். அதுவே யான் பெறக்கூடிய பெரும் பேறுகும். அதன்முன், இவ் வாசுரிமை எம்மாத்திரம்? மாருவார மங்கையினிடம் உதிக்கும் மைந்தனுக்கே முடிசூட்டுங்கள். நம் ஏகலிங்க மூர்த்தியின்மேல் ஆணை. அதில் எனக்குச் சம்மதமே" என்று அடிபணிந்து கூறினான். அம் மொழிகேட்ட அனைவரும் சந்திரனது தியாக புத்தியைக் கண்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டனர்; பிதாவின் வாக்கை வேதவாக்காக மதிக்கும் பெருந்தன்மையைக் கண்டு ஆனந்தங் கொண்டனர்; சந்தனுவின் மைந்தன் பீஷ்மனும் நம் சந்திரனுக்கு ஈடாகான் என்றியம்பிக் களித்தனர். ராணு இலட்ச சிம்மனும் அகமிக மகிழ்ந்தானென நாம் கூறவேண்டியதில்லை. சுருங்கச் சொன்னல், மாருவார மங்கை ராணுவின் மகிஷிபாயினள். அதே சமயம் இலட்சசிம்மன் தன் சகோதரியை ராவ் ரணமல்லனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அக்காலை ஸ்ரீதனமாக நாற்பது கிராமங்களும் தாள நகரும் மாருவார மன்னவனுக்குக் கிடைத்தன. மாருவார நாடு அந் நாளில் அவ்வளவு மகிமையுடன் விளங்கவில்லை. ஆதலின் சித்தூரைச் சார்ந்து நிற்பதே தனக்குப் பெருமையென அந்நாட்டரசன் நினைத்திருந்தான். அது காரணமாக, மத்தியபதியின் முதல் சிற்றரசாக அம் மாருவாரம் விளங்கிவாலாயிற்று.

ராணு இலட்ச சிம்மனது போர் வன்மைகளில் இரண்டொன்றை இங்கே எடுத்தியம்புவோம். ராஜ புதனத்திலுள்ள இதர நாட்டரசர் அனைவரும் சித்தூரைச் சிறப்பித்து வந்தனர்; சிலர் கப்பங்கட்டியும் வாழ்ந்து வந்தனர். ஆனல், ஜயபுரி நாட்டைச் சேர்ந்த ராஜபுத்திரரிலே ஒரு

பகுதியினர்மட்டும் அடங்கி வாழவில்லை. அது கண்ட இலட்சசிம்மன் தன் படைவகுப்புடன் சென்று, அவர்களை வெற்றி கொண்டு, வாகைசூடித் திரும்பினான். பின்பு, டில்லியில் சக்கரவர்த்தியாக விளங்கிய முதும்மது ஷாலோடி என்பான் மிக்க பதட்டங்கொண்டு திரிந்து வருவதாக இலட்ச சிம்மனுக்குத் தெரியவந்தது. அது கேட்ட ராணுவுக்கு மனம் பொறுக்கவில்லை. ஆதலின் அம் மன்னவனையும்போரில்புறங்கண்டு அவனது கொட்டத்தையும் குலைத்தான். அதன்மேல், டில்லியரசன் பழிக்குப் பழிவாங்கக் கருதிப் பெரும்படைகொண்டு மீண்டும்போருக் கழைத்தனன். அவ்வளவில் ராஜபுத்திர வீரர் சினந்தெழுந்தனர். இருபக்கத்துப் படைகளும் வேதநாம் என்னும் நகரில் சந்தித்து, ஒன்றையொன்று உக்கிரமாகத் தாக்கினின்றன. முடிவிலே சித்தூர் வீரருக்கு,டில்லிவீரர் புறங்காட்டிப் போயினர். அச் சமரில் இலட்ச சிம்மன் காட்டிய போர்த்திறமை பகையரசருக்குப் பதைபதைப்பையும், இதர ராஜபுத்திரருக்குப் பரமகளிப்பையும் தட்டாதளித்ததெனவே சரித்திரம் சாற்றும். அங்ஙனம் அவன் வைபவமாக வாழ்ந்து வருகையில், அவன் புகழ் எங்கும் பரவிவந்தது. அவன் புத்திரரும் பேரன்மாரும் அப்புகழை இன்னும் பரப்பிக்கொட்டி வந்தார்கள். மாருவார மங்கையினிடமாக ஒரு மைந்தன் தோன்றி மிகவும் செல்வமாக வளர்ந்து வந்தான். அப்பால், இலட்ச சிம்மனுக்கு அந்திய காலம் நெருங்கி விட்டது.

முன்னாளிலே மன்னவர் நெடுங்காலம் அரசுசெலுத்திய பின்னர், ராஜ்ய பாரத்தை மைந்தர்மீது சுமத்தி நாட்டை விட்டுக் கானகஞ்சென்று அருந்தவ மியற்றுவர். அரசனு

யிருந்த காலத்திலே தாம் அறிந்தும் அறியாமலுஞ் செய்து விட்ட பாவமனைத்தும் போகவேண்டுமென்பதே அத்தவத்தின் கருத்தாகும். அங்ஙனம் தவவாசம் செய்யாமற் போயின், நாட்டின் நலத்திற்காகப் போர்புரிந்து, அக்களத்தினிடையே ஆவிதுறந்து வீரசுவர்க்கஞ் செல்லமுயலுவர். அவ்வழக்கம் மிகவும் புராதனமானது. உதாரணமாக, அயோத்திமா நகரில் ஆட்சி செலுத்திய தசரத சக்கரவர்த்தி தன் மந்திரிமாரைக் கூட்டி வைத்து, "மதியமைச்சர்காள்! உங்களது உதவியால் பல்லாயிர வருஷ காலம் பூவுலகை அரசாண்டு வந்தேன். இப்போதோ எனக்கு மூப்பு வந்துவிட்டது. இனியும் அரச போகத்தை நச்சியிருத்தல் பெருமை யாகாது. ஒன்று, செருக்களத்தில் ஆவிநீத்து வீரசுவர்க்கம் புகவேண்டும்; இல்லையேல் துறவறம் பூண்டு கானக மேகவேண்டும். இரண்டுமின்றியிருப்பின், இராமன் தாதை மூப்படைந்த பின்னரும் போகமாக வாழ்கின்றான் என்று உலகம் என்னை ஏசாதோ? ஏசுமென்பது திண்ணம். ஆதலால், இராமனுக்கு அரசை நல்கி, இப்பேதமையான பிறப்பைத் தொலைக்கத் தவவேடந் தாங்கி வனமெய்தப் போகின்றேன்" என்று புகன்றதை இந்துக்களில் அனைவரும் அறிவர். அங்ஙனமே இலட்சசிம்மனும் சிந்திக்கலாயினன். ஆனால் தவவேடம் பூண்டு கானகம் போகாமல், போர்க்கோலம் பூண்டு வீர சுவர்க்கம் பெறவே முனைந்து நின்றான். அதற்கேற்ப அச்சமயம் கயா என்னும் புண்ணிய பூமி முகம்மதியரின் வசப்பட்டுக் கிடந்தது. அதனை மீட்கக் கருதிப் போர்புரிந்து அமரருலகு செல்வோம் எனவே இலட்ச சிம்மன் தீர்மானங் கொண்டு விட்டனன்.

ஆனால், அதற்கு முன்னம், அரசை ஓர் ஒழுங்கு படுத்திச் செல்லவேண்டு மல்லவா? அதுபற்றி, அரசின் மீது அவன் சிந்தனை சென்றது. மாருவார மங்கையினிடமாகத் தோன்றிய புதல்வனுக்கு அச்சமயம் வயது ஐந்தே. அக்குழந்தையின்மீது அவனுக்கு மோகம் அதிகம். அது பற்றியே அம் மைந்தனுக்கு மோகலன் எனப் பெயர் கொடுத்தனர் போலும்! மேலும், இளைய மனைவியின்மீது அவனுக்கு அதிக ஆசையும் நேசமும் இருந்து வந்தன. தன் பிள்ளையே பட்டத்துக்கு வரவேண்டுமென அவள் ஆவல்கொண்டு நின்றாள். அதனைத் தட்டி நடக்க அவனுக்கு மனம் வரவில்லை. ஆதலின், தன் மூத்த பிள்ளையை விளித்து, "அப்பனே! நம் கயா நகரம் அன்னியரின் வசம் அடங்கிக் கிடக்கிறது. ஆதலின் தண்டெடுத்துப் போர் புரியப் போகின்றேன். என் கடைநாளும் குறுகி விட்டதால், அப் போரிலே மீண்டு வருவேனென யான் மதிக்கவில்லை. வீரசுவர்க்கம் புகுந்துவிடவே துணிந்து விட்டேன். ஆதலால் அரசைப்பற்றிய கவலை மனத்தை அலையச் செய்கின்றது. உன் தம்பி மோகலனுக்கு எங் நாட்டையளிக்கலாம்? இனிமையுடன் உனது கருத்தை இயம்ப வேண்டும்" என்றனன் இலட்ச சிம்மன். உடனே சந்திர சிம்மன், "எந்தாய்! இனியுமா சிந்தனை? அன்றே உரைத்து விட்டேன் அரசுரிமையை விட்டுக்கொடுக்க. என் தம்பி மோகலனுக்கு முடிசூடி மகிழுங்கள். என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்ற செல்வமன்றோ? இதில் என்ன தடை? தாங்கள் போருக்குப் புறப்படுமுன், தங்கள் மனமும் கண்ணுங் களிக்க, மோகலன் முடிதரிக்கட்டும். இதுவே யான் தங்களிடம் வேண்டும் வரம்" என்று கை

கூப்பி நின்றான். தன் மைந்தனுரைத்த வசனத்தைச் செவியிலேற்ற இலட்ச சிம்மன் உள்ளும் புறமும் ஒக்க மகிழ்ந்து, அம் மூத்தபிள்ளையை மார்புறத்தழுவி, அகங் குளிர்ந்து ஆசிர்வதித்தான். சித்தூர் வாசிகளும் சந்திரனுரைத்த மொழிதனைச் செவிக்கமுதெனக் கேட்டு, அவனைப் போற்றி நின்றனர். என்னே பிதாவைக் களிப்பித்த புதல்வனது பெருமை!

பின்பு மோகலனுக்கு முடிசூட்டப்பட்டது. உடனே அம்மோகலனை மத்தியபதி மன்னவனென மதித்து, முதலில் முடிசாய்த்து வணங்கி நின்றவன் நம் சந்திரசிம்மனே. அதன் பின்புதான், மற்ற மன்னவரும் பிறரும் மோகலனை வணங்கலானார்கள். அவ்விதம் சந்திரன் தனக்குரிய அரசுரிமையை இளையவனுக்காக விட்டுக் கொடுத்ததனால், அவன் பெயரை நிலைநாட்ட, “அவனே மந்திரிகளில் முதல்வனாக இருந்து அரசை நடத்தவேண்டும். மேலும், ராஜலிகிதங்களில் மோகலனது கைச்சாத்துக்குமுன், சந்திரனது வேல்கம்பின் வடிவம் பொறிக்கப்படவேண்டும்.” என்று ஏற்பாடாயிற்று. பின்னர் இலட்ச சிம்மன் கயா நகரஞ் சென்று கடுஞ் சமர்புரிந்து, தான் கருதிய வண்ணம் வீரசுவர்க்கம் போய்ச் சேர்ந்தான்.

119154

ராஜா மோகலன் 1398—1419.கி.பி.

சந்திர சிம்மனது தியாக புத்தியால் மோகலனுக்குப் பட்டங் கிடைக்கலாயிற்று. அச்சமயம் அவனுக்கு வயது ஐந்தே. ஆதலின் பெயருக்கு மட்டும் அவன் அரசனாக விளங்கி வந்தான். அவன் அன்னையே அரசியாகவும் மந்திரியாகவும் இருந்தவள். ஆனால் உண்மையில் அரசை நடத்தியவன் நம் சந்திர சிம்மனே. அரசுரிமையை அச்சந்திரன் மனமார விட்டுக்கொடுத்ததாக முந்திய கதையிலேயே கூறியுள்ளோம். எனினும் தம்பிக்கு உரிய வயது வரும் வரையில், அரசைச் சீராக நடத்திவர வேண்டுமென்பதே அவன் கருத்து. அதுபற்றியே அவன் அரசியலில் சிரத்தை காட்டலாயினன். அவனது தியாக புத்தியையும், பெரு மதியையும், அரசு நடத்தும் திறமையையுங் கண்டு களியாதார் இல்லை. குடிமக்களும் பிறரும், குறுநில மன்னவரும் வீரபுருஷரும் அவனைப் பரம பக்தி விசுவாசத்துடன் போற்றி வந்தார்கள். இதனால், அவன் பெயரும் புகழும் தேசமெங்கும் பரவி வந்தன. எல்லோரும் சந்திர சிம்மன், சந்திரசிம்மன் என்று கூறியே கைகூப்பி வணங்கி நிற்பர். எண்ணறப் படித்து எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பெரும் பேதமைத்தே என்பர். அதுபோல் மாருவார மங்கை பேதைமதி கொண்டுவிட்டாள். "நம் மைந்தன் மோகலன் முடிசூடியிருக்க, மக்களனைவரும் சந்திரசிம்மனையே சாலச் சிறப்புடன் மதித்து வருகின்றனர். மோகலன் என்று மகிமையாக மொழிவாரைக் காணேமே. அங்ஙனம் மக்கள் அனைவரும் சந்திரனையே சிறப்பித்து வருவ

தால், ஒரு சமயம் அவன் அரியணையில் அமர்ந்துவிட ஆசை கொள்ளவும் கூடும். இதற்கு என்ன செய்வது" என்று அசூயையும் ஐயமும் கொண்டு, அகத்தே அழுங்கினள். ஆயினும், சந்திர சிம்மனது நேர்மையிலும் நடையிலும் யாதொரு பிழையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அங்ஙனமிருந்தும், அவளது அசூயையோ சிற்சில சமயங்களில் வெளிப்பட்டுத் தாண்டவமாடும். இதனைச் சந்திர சிம்மன் உணர்ந்து கொள்ளாமலில்லை.

உணர்ந்திருந்தும் தன் தம்பியின்மீதுள்ள அன்பின் மிகுதியினாலும், அவனுக்கு வயதுவரும் வரையில் அரசைச் செவ்வனே நடத்திவர வேண்டுமென்னும் அவாவினாலும், அரசியின் முணுமுணுப்பை அவன் சட்டை செய்யவில்லை. அந்நங்கையின் அசூயையோ நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. அதனை எத்தனை நாள் சந்திர சிம்மன் சகித்திருப்பான்? ஒருநாள் அச் சிற்றன்னையின் சிறுமையும் அசூயையும் வரம்புகடந்து விட்டன. அவ்வளவில், அவன் அவ்வரசியை யணுகி, அடிபணிந்து "அன்னாய்! என் தந்தையிடம் தந்த வாக்குறுதியின் வண்ணம், இந்நாள் காறும் அரசியலை நன்கு நடத்தி வந்தேன். என் தம்பி வாலிபவயது பெறும் வரையில், அரசுக்கு ஆபத்து வாராமல் காக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். ஆயினும், ஆண்டவனுக்கு அது சம்மதியில்லை போலும்! இனி, யான் இங்கிருக்க இயலாது. எனக்கு விடைதாருங்கள்." என்று கூறிப்போய் விட்டான் மாந்தையம்பதிக்கு.

அம்மங்கை நல்லாள் மாருவார மன்னன் மகள். அக் காலத்தே மாருவார நாடு அவ்வளவு ஏற்றத்துடன் இருக்கவில்லை. ஆதலின், அதன் அதிபனான ராவ் ரணமல்லன்

மத்தியபதியின்மீது ஆசை வைக்கலானான். ஆனால் சந்திர சிம்மன் அரசியலை நடத்திவருமளவும், அவன் தன் ஆசை வலையை வீச இடமில்லாது போயிற்று. சந்திரசிம்மன் எப் போது தொலைவான் என்றே ரணமல்லன் அண்ணாந்து நின்றனன். அங்ஙனமிருக்கும் சமயத்தில்தான், சந்திர சிம்மன் பரம சலிப்புடன் நடுநாட்டைவிட்டுப் போயினன். அது செய்தி ராவ் ரணமல்லனுக்குத் தெரியவந்தது தான் தாமதம். தன் புதல்வன் ஜோதனை யனுப்பினான் முதன் முதலாக. ராவ் ஜோதனை அப்பெண்ணும் அன்புடன் வர வேற்றனள்; அரசையும் அவனிடம் ஒப்படைத்தனள். அப் பால் தகப்பனும் வந்து சேர்ந்தான். நாளடைவிலே மாரு வாரர் மத்தியபதி யெங்கும் நிரம்பிவிட்டனர். சித்தூர் அர சின் சிறந்தபதவிகளிலே, மத்தியபதி வாசிகள் மருந்தினுக்கு மில்லை. முடிவிலே, அரசை அடியோடு கைக்கொள்ள ஜோதனும் ரணமல்லனும் சூழ்ச்சி புரியலானார்கள். அது கண்ட சித்தூர் வாசிகள் அனைவருக்கும் பெருந் திகில் தோன்றிவிட்டது. பெண்புத்தி பேதமைத்தே என்று சிலர் சிந்தித்தனர்; கேடுவருமுன்னே மதி கெட்டுவந்ததே யென்று சிலர் கலங்கினர்; சந்திர சிம்மன் தங்கியிருப்பின், அன்னியர் இங்கு தலைகாட்ட முடியுமோ என்று சிலர் ஏங்கினர். அரசியும் மதியைப் பறிகொடுத்தேனே என் றழுதுபுலம்பினள். அவ்வண்ணம் அவள் அழுது நிற்கும் நேரத்திலே, கோரச் செயலொன்று நிகழலாயிற்று. அதன் விவரம் யாதெனில்,

பல சோதாரிலே ஒருவன் பட்டத்துக்கு வந்ததும், மற்றையோர் தனித்தனி பிரதேசங்களைப் பெற்று, அரண் மனையை விட்டுவிலகி வசித்து வருவர். அங்ஙனம் சந்திர

சிம்மனது தம்பிகளில் ஒருவனான ரகுதேவன் என்பான் கயிலைவாரத்திலே காலங்கழித்து வந்தான்; அவன் அழகின் உருவம்; ஆடவர் திலகம்; வீரர் விளக்கம்; ஆதலால், மத்தியபதி மக்கள் அனைவரும் அவனைத்தமது ஆருயிர் போல் கருதிவந்தனர். அவனோ தன் தமையன் அகன்ற தினம் முதல், ரணமல்லனது ஆசைவலையைத் தூரவிருந்தே தந்திரமாக அரிந்துவந்தான். ஆதலின் அவனைத்தொலைத்து விடவேண்டுமென ரணமல்லனுக்கு உள்ளூர ஓர் எண்ணம் உதித்து நின்றது. ஆயினும் நேர்நின்று போர்புரிந்து அவ் வாலிபனை மாய்க்க மாருவாரனுக்கு மனவுறுதி பிறக்க வில்லை; வஞ்சனையாக வதைக்க வேண்டுமென்றே விருப்ப முண்டாயிற்று. ராஜபுத்திரவேந்தரும் பாளையக்காரரும் தங்கள் மனத்தில் குடிகொண்டுள்ள ஒருவனுக்கு விலையுயர்ந்த பட்டாடைகளை வெகுமதியாக அளிப்பதுண்டு. அப்பரிசைப் பெற்று மகிழ்தல் பெருமையாகும். இந்த உபாயத்தைக் கையாண்டு ரகுதேவனை மாய்த்துவிட, அம் மாருவாரன் மதித்தனன். அதனை ரகுதேவன் அறியவில்லை. அங்ஙனமிருக்கையில், ராஜபுத்திரரனைவரும் விரும்பிக் கொண்டாடும் பெருநாளொன்று வந்தது. அச்சமயத்திலே சித்தூர் அரண்மனையிலிருந்து வழக்கம்போல் பலருக்கும் பட்டாடைப் பரிசுகள் போயின. நம் ரகுதேவனுக்கும் மிக அழகிய ஆடையொன்று அனுப்பப்பட்டது. ஒரு பாவத்தையு மறியாத அவ் வாலிபன் பூரிப்புடன் பட்டாடையைத் தரித்துக்கொண்டான். அதிலே கொடிய விஷம் ஊட்டப்பட்டிருந்தது. ரகுதேவன் அதனை அணிந்து கொண்ட சிறிது நேரத்திற் கெல்லாம், உடலில் தோன்றிய வியர்வையின் மூலம் விஷம் தலைக்கேறிவிட்டது. பல

சொல்லிப் பயனென்ன? அவ்வாலிபன் அக்கணமே ஆவி நீங்கினன். அது விஷயம் அரசிக்கு எட்டியது. அவ்வளவில் அவள் இடியேறுண்ட நாகம் போல் நடுநடுங்கினுள். ரகுதேவன் ஆவி நீங்கியதை அறிந்த சித்தூர் மக்களில் கண்ணீர்விடாதார் கிடையாது. மாருவாரனது மனப் போக்கை மதித்தறிந்த பலரும், மோகலனுக்கும் அக்கதி தான் நேருமென அஞ்சிநின்றனர்.

அத்தகைய நிலைமையில் அந்நங்கை என்ன செய்வாள்? தலைக்குக் கொள்ளியை விலைக்கு வாங்கிக்கொண்டேனே என்று கதறினுள்; பேதை மதியால் பரிசுத்தனை சந்திர சிம்மனைப் பறிகொடுத்தேனே என்று பதறினுள்; இனி, யாரிடம் சரண் புகுவதென்று சிந்தித்துப் புலம்பினுள். பின்பு சந்திரனே கதியெனக்கருதி, "மாண்புள்ள மைந்த! யான் பெண்மதியால் பேதுறுகின்றேன். என் பாலனைப் பாதுகாப்பார் யாருமிலர். ஆதலின் நானும் அவனும் உனதடைக்கலம்" என்றுசொல்லி ஓலையனுப்பினள். சந்திர சிம்மன் சலித்துப்போய் சித்தூரை விட்டு வந்தனனுயினும், மாருவாரனது மாயத்தை உய்த்துணராமலில்லை. சமயம் வாய்க்கும் போது, அவனது சதியைச் சிதைத்துவிடலா மெனவே சிந்தித்து நின்றுன். அரசியினிடமிருநது நிருபம் வந்ததும், அஞ்சேலென ஆறுதல் சொல்லிப் பதிலனுப்பி விட்டு, மாருவாரனது எண்ணம் மண்ணுகும் வழியை நாடி நிற்கத் தலைப்பட்டான். சந்திர சிம்மன் சித்தூரைவிட்டு வருகையில், அவனுடன் இருநூறு வில்லவ வீரரும் கூட வந்தனர். ஒருதினம் அவர்களை யழைத்து, "வீரர்காள்! நீங்கள் அனைவரும் நம் பழம்பதி சென்று, கோட்டைவாயிலைக் காக்கும் வேலையில் தந்திரமாக அமரவேண்டும். அதற்

கப்பால் ஆகவேண்டிய காரியங்கள் பலவுள." என்றறிவித்தான். அவ்வாறே அவர்களும் கோட்டையின் காவலராக அமர்ந்து ஊழியம் புரிந்துவந்தார்கள். பரம்பரையாக அவர்கள் அவ்வேலை பார்த்து வந்தவர்கள். ஆதலின் வெகு இலகுவாக அவர்களுக்குக் காவல்வேலை கிடைக்கலாயிற்று. அந்நாளிலே சித்தூர்வேந்தர் சில சமயங்களில் கோட்டையைவிட்டு வெளிப்பட்டு, அருகிலுள்ள கிராமங்களை யடைந்து, ஆங்கிருக்கும் ஏழை மக்களுக்கு நல்லுண்டியும் பட்டாடையும் பரிந்தளிப்பர். அங்ஙனமே மோகலன் நாள்தோறும் செய்துவரும் வண்ணம் சந்திர சிம்மன் திட்டப்படுத்தினன். பன்னாள் வரையில் அவ்வண்ணமே நடந்து வந்ததனால், அதில் ஒருவருக்கும் ஐயப்பாடு பிறக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு தினத்திலே அரசிளங் குமரனை நம் சந்திர சிம்மன் சந்திப்பதாக ஏற்பாடாயிற்று.

சித்தூருக்கு அருகாமையில் கஜகுண்டம் என ஒரு கிராமம் இருந்தது. அக் கிராம வாசிகளுக்குச் சிற்றுண்டியும் விலை பெற்ற ஆடையும் அரசிளங் குமரன் ஒரு தினம் மனமுவந்தளித்தான். அன்றுதான், ராஜகுமாரனை நம் சந்திரன் சந்திப்பதாக ஏற்பாடு. ஆதலின் சந்திரசிம்மன் தோன்றுவான் என ராணு மோகலனும் ராஜப்புரோகிதனும் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தனர். எனினும் குறிப்பிட்ட நேரம் வரையில் சந்திரசிம்மன் தோன்றவில்லை. ஆகவே மனவாட்டத்துடன் அவ்விருவரும் சித்தூருக்குத் திரும்பிப் போயினர். மதிற்புறத்தை யடையும் வரையில் அவர்கள் மனமும் கண்ணும் பின்னேக்கியே இருந்து வந்தன. சொல்லிய வண்ணம் சந்திரசிம்மன் வரவில்லையே யென வருந்தி, அவர்கள் கோட்டை வாயிலைத் தாண்டிய

வளவில், நாற்பது குதிரை வீரர் கனவேகமாக அவ்வாயிலில் புகுந்தனர். வாயில் காவலாளர்களோ ஏது மறியாதவர் கள் போல், "நீங்கள் யார்? புதிய மனிதர்களாகவே தென் படுகின்றீர்கள்" என்று வினவவே, "காவலர்காள்! நாங்கள் அயல் கிராமவாசிகள். அரசிளங்கோவுக்கு மெய்காவலாக அரண்மனை வரையில் செல்வோம். அப்பால் அரசையடி பணிந்து ஊர் திரும்பி விடுவோம்" என்று சொன்னான் சந்திரசிம்மன். அவனுக்குப்பின் நூற்றுக்கணக்கான வீரர் ஆயுதபாணிகளாக வந்தனர். அனைவரும் உட்புறக் கோட் டையைக் குறுகியவுடனே, மாருவார வீரருக்கு ஐயம் நிகழ்ந்தது. நிகழவே, அவர்கள் சந்திர சிம்மனது வீர ரைத் தடுக்க முயன்றனர். இனி, நம் சூழ்ச்சி அம்பலத் துக்கு வந்தாக வேண்டுமெனச் சந்திரனுக்குத் துணிவு பிறந்துவிட்டது. உடனே அவன் தனது வீரரை நோக்கி னான் ஜாடையாக. அக்கணமே ரணமல்லனது காவலரும் பிறரும் வெட்டுண்டு வீழ்ந்தனர். வெட்டுண்டு வீழாமல் நின்ற மாருவாரரோ ஆருயிர் தப்பினால் போதுமென அவ் விடத்தை விட்டோடினர் விரைவாக.

சந்திர சிம்மனுக்கோ ராவ் ரணமல்லன் மீதுதான் எப்போதும் கண். ஆதலின் அவனை நாடிச்சென்றான். அச் சமயம் ரணமல்லனிருந்த நிலைமையும் அடைந்த கதியும் சிலருக்குப் படிப்பினைகளாகும். ஆதலின், அவற்றை இங்கு விளங்கவுரைப்போம். சித்தூர் அரண்மனையிலே அரசிக்கு அழகிற்சிறந்த சேடியொருத்தியிருந்தனள். அவளழகைக் கண்டு ராவ் ரணமல்லனுக்கு அடங்காமோகம் பிறந்து விட்டது. ஆதலின் அவளைத் தன் வசஞ் செய்துகொள்ள அவன் பல வழிகளிலும் முயன்று பார்த்தான். அதற்கு

அச் சேடி சிறிதும் இடங்கொடுக்கவில்லை. பின்னர் தன் செல்வச் செருக்கினாலும் அதிகார மிடுக்கினாலும் அவன் பலவந்தஞ் செய்தனன். அதன்மேல் அவள் வேறுவிதியின்றி யிணங்கநேர்ந்தது. என்றாலும் அவளது உள்ளம் ஓயாது கொதித்துவரவே, பழிக்குப்பழி வாங்க வேண்டுமென அவள் காலங்கருதி யிருந்தனள். நகர்ப்புறத்தே சந்திர சிம்மன் தோன்றி மாறுவாரா ரனைவரையும் மாய்த்துக் குலைத்து வரும் நேரத்திலே, ராவ் ரணமல்லன் காமவெறி யுடன் கஞ்சாமயக்கமுங் கொண்டு கிடந்தான். ஆதலின் அரண்மனைக்கு வெளியே, வெட்டுண்ட சிரங்கள் தரையில் உருளுவதையும், இரத்த ஆறு வெள்ளமாகப் பெருகுவதை யும், அவன் அறியவில்லை. அச் சேடிப் பெண்ணோ, ரண மல்லனை நோக்கி வாள்வீரர் வெகுளியுடன் வருவதை யுணர்ந்து கொண்டனள். உடனே அவனது நீண்ட தலைப் பாகையைக் கொண்டு, அவனைப் பஞ்சணையோடு பிணைத்து விட்டு, ஆருமறியாது அகன்று விட்டனள் அம் மாளிகை யிலிருந்து. பின்னர் சிறிது நேரத்திற் செல்லாம் வாள் வீரர் தோன்றித் தாக்கமுயலவே, அவனுக்கு மயக்கம் தெளிந்தது, வெறியும் விலகியது. பஞ்சணையில் படுத் திருந்த வண்ணம் அவன் சிங்கநாதஞ் செய்தெழுந்தான். அப்போது பஞ்சு மெத்தையோ அவன் முதுகுக்குக் கேடயம்போல் விளங்கலாயிற்று. படுக்கையின் பக்கமிருக்க வேண்டிய ஈட்டியையும் வாளையும் எடுத்து வீசப்பார்த்தான். ஆனால் அவ்விரண்டும் அகப்படவில்லை. பஞ்சணையோடு பஞ்சணையாக அவனைக் கட்டிப்போட்ட காரிகை அவ்விரண் டையும் ஒளித்துவைத்த பின்னரே ஒதுங்கிப் போயினள் போலும். அவனோ சரீரபலத்திலே பாண்டவ பீமனது

புதல்வனைப் போன்றவன். சலியாத மனவலியும் வாய்ந்தவன். பகைவருக்குப் புறங்கொடுக்கும் பான்மையனுமல்லன். ஆதலின், எதற்கும் அஞ்சாது, அருகிலிருந்த பித்தளைப் பாத்திர மொன்றைப் படைக்கலமாகத் தாங்கி நின்று, பல வீரரைப் பரிபவப்படுத்தினான்; சிலரைச் சிறி மாய்த்தான். இன்னுஞ் சிலரை எட்டி யுதைத்தான்; மற்றுஞ் சிலரை முழங்காலினால் முட்டித்தள்ளினான். என்றாலும், ஏற்ற ஆயுதமின்றி எத்தனை நேரம் பலரை எதிர்த்துப் போர்புரியமுடியும்? சந்திர சிம்மனது வீரரும் அவனை யணுகிமாய்க்க முடியவில்லை. ஆதலின், அவனை முடிவிலே சுட்டு வீழ்த்தினர். பிறன்பொருளையும் பெண்ணையும் வஞ்சிக்கு மொருவன் வேறு எக்கதி யடையக்கூடும்?

தந்தை மாய்ந்து சாயும் தருணத்திலே ஜோதன் மற்றொரு மாளிகையில் மறைந்து கிடந்தனன். தனது தகப்பனுக்கும் பரிவாரத்துக்கும் நேர்ந்த கதியை யுணர்ந்தவுடனே அவன் உயிருக்கஞ்சி ஓட்டம் பிடித்தனன் ஒருவரு மறியா வண்ணம். அவன் ஏறிச்சென்ற குதிரை கனவேகமாகப் பறந்து சென்றதனால், அவன் உயிர் தப்பினான்; இன்றேல், தாதையைப் பின்பற்றித் தேவருலகம் போயிருக்க வேண்டும். சந்திர சிம்மன் சும்மா விருக்கவில்லை. தக்க பாதுகாவலில் மோகலனை வைத்த பின்னர், அச்சமயம் மாருவாரத்தின் தலைநகரான மாந்தாரத்தின்மீது படையெடுத்துச் சென்றான். தலைநகர் கை தவறினாலும், தலை தப்பினால் போதுமென ராவ் ஜோதன் அந்நகரையுந் துறந்து போயினன் தோல்வியுற்று. பின்னர் பன்னீராண்டு வரையில், அம்மாந்தா நகரம் மத்தியபதிக்கு உட்பட்டுக் கிடந்தது.

மோகலன் வாலிபவயததடையும் வரையில் நிகழ்ந்த வற்றை இதுகாறும் குறிப்பிட்டு வந்தோம். இனி, அவன் தானே அரசுநடத்திய காலத்தே நேர்ந்த விஷயங்களை விளம்புவோம். அவன் அரசு புரியத் தொடங்கிய காலத்தில்தான், மத்திய ஆசியாவிலிருந்து தைமூர் என்பான் படைகொண்டு வந்து, வடஇந்தியாவில் பல கொள்ளையும் கொலையும் நடத்திக் கொடுமை புரிந்தான். ஆனால், அவன் நடுநாட்டை எட்டிப் பார்க்கவில்லை. அந்நாளில் டில்லியிலே முகம்மதியர்தாம் அரசு செலுத்தி வந்தனர். டில்லி பாட்சாவின் பேரனொருவன் கூர்ஜ்ஜர நாட்டின்மீது தண்டு கொண்டு புறப்பட்டான். மத்தியபதியில் புகுந்தே அவன் போக வேண்டும். அவ்விதம் போயின், மத்தியபதி மக்கள் பலவித்திலும் வருந்த நேரும். அது கண்ட மோகலன் தனது துணைவருடன் சென்று, அம்முகம்மதியனை வழி மறித்தான். அதன் பலனாக இருதிறத்துப் படைகளுக்கும் போர் மூண்டது. அச் சமரிலே முகம்மதியன் முதுகு காட்டி, மத்தியபதிக்குள் புகாதொழிந்தனன். டில்லியரசன் சேனையை மோகலன் முறியடித்தனால், அவ்வெற்றி எங்கும் பரந்து மோகலனை மேன்மையுறச் செய்தது.

தனது பிதாவைப்போலவே அவனும் சித்தூரைச் சிறப்பிக்கலானான். பல அரண்மனைகளும் ஆலயங்களும் அவன் காலத்தே அழகுபெறச் சமைக்கப்பட்டன. அவனுக்கு லீலாபாய் என்னும் பெண்ணொருத்தி யிருந்தனள். அழகின் அவதாரமான அப்பெண்ணரசியை ஜயசில மேரு என்னும் நாட்டரசன் மைந்தன் ஜயதானுக்கு மணம்பேசினான். அவ்வாறே மணமகன் புறப்பட்டு வந்தான் அம்மங்கையை மனைவியாகக் கொள்ள. வரும் வழியிலே காடையொன்று

வலதுபுறமிருந்து கூவியது. ராஜபுத்திரர் சகுனத்தை விசேஷமாக மதிப்போராவர். அதிலும் மணவினைக்குச் செல்லுங் காலையில், அதனை ஆழ்ந்து பார்ப்பது இயற்கையே. காடை கூவியதைக் கேட்ட ஜயதரன் தன் குதிரையை நிறுத்திச் சகுன சாஸ்திரியை அழைத்து வினவினன். சகுனம் சரிப்பட்டு வரவில்லையென அவன் சொன்னவுடனே, ஜயதரனுக்குக் கவலை தோன்றிவிட்டது. அன்று அனைவரும் அப்பால் செல்லாமல், அவ்விடத்திலேயே தங்கியிருந்தனர். மறுதினம் பயணமாகிச் சிறிது தூரம் சென்றவுடனே, பெண் புலி யொன்று உறுமியது. உடனே சகுனம் வல்லான் வந்து, "அரசே! மணப்பெண்ணுக்கு ஏதோ மாசிருக்க வேண்டுமென்று எண்ணுகின்றேன்" என்றனன். அதன்மேல் ஜயதரனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பின்னர் ஒற்றனொருவனை யனுப்பி, மங்கையின் நலத்தை மதித்துவர வேண்டுமென ஏற்பாடாயிற்று. அங்ஙனமே, சகுன சாஸ்திரி சித்தூர் சென்று, வெகு தந்திரமாக விஷயத்தை யறிந்து வந்தான். லீலாபாய்க்கு ஊனமுண்டென்று அவன் தெரிவித்தான். அதனை மெய்யென நம்பிய ஜயதரன், அம்மகளை மணக்க மனமொப்பவில்லை. அப்பால் அவன் தனது பாளையக்காரரில் ஒருவனது பெண்ணை மணந்துகொண்டான். இவ்வளவும் அப்பாளையப்பட்டின் சூழ்ச்சியென நாளடைவில் ஜயதரனுக்குத் தெரியவந்தது. மத்தியபதியின் மங்கைக்கு ஓர் ஊனம் உண்டென்று உரைத்தாலல்லாமல், தன்னெண்ணம் நிறைவேறாதென அப்பாளையக்காரன் கருதியே, அங்ஙனம் சூழ்ச்சி புரிந்தனன். இதன் விவரம், இந்நூலின் அடுத்த பாகத்திலே விரிவாகக் காணப்படும்.

தான் எதிர்பார்த்திருந்த மணமகன் வாராமற்போகவே ராணு மோகலன், அசைலதாஸன் என்னும் பெருவீரனுக்குத் தன் மகளை மணம்புரிந்து கொடுத்தான். அவ்விவாகத்துக்கு எண்ணிறந்த வீரரும் மன்னவரும் வந்திருந்தனர். அவர்களின் தொகை கணக்கிலடங்காது. விருந்தினர் அனைவருக்கும் தேவையான நறு நெய்யும்பாலும் நிரப்பிவைக்க, ராணு மோகலன் இரு குளங்கள் கட்டிவைத்தான். ஒவ்வொன்றின் பரப்பு, 125 அடி நீளம், 50 அடி அகலம், 50 அடி ஆழம், ஆகுமென்றால், மணத்தில் நிரம்பியிருந்த மக்களின் தொகையை யாவரும் மதித்துக்கொள்ளலாம். விவாக காலத்திலே மணமகன் கோருவதை மாமன் மனமுவந்து தருவதுண்டு. அதன்படி, அசைலதாஸன் தன் நாட்டினுக்கு வேற்றரசரால் படையெடுப்பு நேரின், மத்தியபதி கைகொடுக்க வேண்டுமெனப் பணிவுகாட்டி விரும்பினன். மோகலனும் அங்ஙனமே ஒருப்பட்டான் உதவி புரிய. ஒரு சமயம் மத்தியபதியின் மலைநாட்டினர் கலகமாகக் கிளம்பினர். அவர்களை யடக்கக் கருதி மோகலன் தன் படையுடன் போனான். மாதாம் என்னுமிடத்திலே படைவரிசைகள் தங்கி யிருந்தன. அச்சமயம் அசைலதாஸன் புதல்வன் தீராஜன் வந்து, "ராணுஜி! எமது நாட்டின்மீது மாளவ மன்னன் படையுடன் வந்துள்ளான். முன்னம் தாங்கள் என் தந்தைக்கு வாக்களித்த வண்ணம், இச்சமயம் தட்டாது தலைகொடுக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனன். அதற்கு, மலைநாட்டினரின் மமதையைப் போக்கியதும், புறப்பட்டுவந்து போர்த்துணையாவதாகப் பதிலளித்தான் மோகலன். ஆனால் அதற்குள் அவன்காலம் தீர்ந்துவிட்டது. இதன் விவரம் பின் வருமாறு:—

மோகலனது மூதாதையான கெயித சிம்மனது தேவியரில் தச்ச மாதொருத்தி யிருந்தனள். அப் பெண்ணின் பேரழகில் ஈடுபட்டே அவன் அவளை மனைவியாக மணந்து கொண்டான். கெயித சிம்மனுக்கு அம் மங்கையினிடம் இரண்டு மைந்தர் பிறந்தனர். அவ்விருவரில் ஒருவன் பெயர் சாகன்; மற்றவன் பெயர் மயூரன். அவர்கள் ராணு மோகலனது பாளையக்காரராக விளங்கி வந்தார்கள்; இருவரும் சுத்தவீரர்கள்; மன்னவனிடம் பேரன்பு பொருந்தியவர்கள். அவர்களுக்கும் ஒரு பாளையப்பட்டுக்கும் உள்ளூரக் கடும்பகை யிருந்துவந்தது. ஆதலின், அவ்விருவரையும் அவமானங் கண்டுவிட வேண்டுமென அப்பாளையக்காரன் சமயம் பார்த்திருந்தான். இது செய்தி மோகலனுக்குத் தெரியாது. ஒரு நாள் மாலைப் பொழுதிலே மாதர நகரின் பூங்காவொன்றில் மோகலன் தனது பாளையப்பட்டுகள் புடைசூழ விற்றிருந்தான். அச் சோலையிலே மா, பலா, அசோகு, மந்தாரம் முதலிய பல அழகிய மரங்கள் நிறைந்திருந்தன. அம் மரங்களிலே ஒன்று, வேந்தனது மனத்தையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அவ் விருட்சம் இன்னதென அவனுக்கு விளங்கவில்லை. ஆதலின், தனதருகேயிருந்த பாளையக்காரனை வினவினான். அப்பாளையப்பட்டுக்கும் அம்மரத்தின் பெயர் புலப்படவில்லை. ஆனால் தச்ச மாதின் வயிற்றிலுதித்த இருவரையும் அவமானப்படுத்த இதுவே தருணமென நினைத்து, "அரசே! அருகிலிருக்கும் சாகனையாவது மயூரனையாவது வினவின், பெயர் விளங்கும்" என்று ஓதினான் காதோடு. அவ்வசனத்தில் வஞ்சனை யுளதென மோகலன் எங்ஙனம் மதிக்க முடியும்? தனது சிறிய தந்தையர் இருவரையும் விளித்து வின

வினுன் பாதபத்தின் பெயரைப் பகரும் வண்ணம். ஒரு பாவத்தையும் உணராமல் அம் மோகலன் வினவிய் போதி லும், "நன்று! நன்று! நம்மைச் சாதிபற்றி ஏசக்கருதியே அரசன் வினவினன்" என அவ்விருவரும் வஞ்சினங்கொண் டனர். அது மனத்தகத்து நிகழ்ந்ததே யொழிய அப் பொழுது புறத்தே தலைகாட்டவில்லை. இல்லாவிடத்துப் பசி யைப்போல் செல்லாவிடத்துக் கோபமும் அச் சமயத்தில் என்ன செய்ய முடியும்? பின்னர், அனைவரும் மாலைக்கடன் கழிக்கப் போயினர். மோகலனும் பூங்காவை விட்டகன்று, பாசறையில் புகுந்து, மாலைக்கடன் கழித்ததும், முன்ன வனைத்தொழுது நின்றான் மெய்ம்மறந்து. அச்சமயம் தச்ச மாதின் புதல்வர் இருவரும், பாசறையில் புகுந்து, தனியே நின்ற ராணுவை மாய்த்துவிட்டனர். அப்பால், ஆங்கிருப் பின், ஆபத்து நேருமென அவர்களுக்குத் தோன்றியது; உடனே வேறோரிடம் ஓடிப்போயினர். போயினபின், சித் தூரை வசப்படுத்திச் சிம்மாசனத்தில் ஏறலாமெனவும் அவர்களுக்கு ஆசை யுண்டாயிற்று. ஆனால், மோகலனது மைந்தனான கும்பகாமன் அவர்களது ஆசையைப் பாழாக்கி விட்டான். பின்பு, இருவரும் தம் உயிருக்கஞ்சி மலைக் கோட்டையில் மறைந்து நின்றனர். அவ்விதம் மோகலன் ஆவியிழவாமல் இருந்திருப்பின், பல வீரச்செயல்கள் புரிந்து, எங்கும் தன்புகழை நன்கு பரப்பியிருப்பான். ஆயினும் வினைவலியைத் தடுக்க யாவராலாகும்? அவனுக்கு மூன்று பிள்ளைகள். அவர்களில் மூத்தவன் பெயர் கும்பகர்ணன்.

மகா ராணா கும்பன் 1419—1469.கி.பி.

மோகலன் மரித்ததும், அவன் மைந்தன் கும்பன் அரியணை ஏறினன். மத்தியபதியைப் பரிபாலித்து வந்த பார்த்திபரில் கும்பன் மிகச் சிறந்தவன். அவன் குமாரக் கடவுளைப்போல் வீரமும் அழகும் நிரம்பியவன்; போர் நூலைக் கரைகண்டு புகழ்பெற்றவன்; பல கலைகளிலும் நன்கு பயின்று பெருமதி எய்தியவன்; புஜபல பராக்கிரமும் மிகுதியாகப் பெற்றவன். இத்தகைய கும்பனது காலத்திலே மத்தியபதியின் பெருமை பல வழியினும் ஓங்கி வந்தது. ராஜ புத்திரரிடம் விசித்திரமான குண விசேஷமுண்டு. கண்ணிமைப் பொழுதில் அவர்கள் கடும்பகை கொண்டு கொதித்துக் கிளம்புவார்கள்; அப்பால் நொடிப் பொழுதிலே அப்பகையை மறந்து, பரம நேசங்கொண்டு, மணமும் பூண்டு மகிழ்வார்கள். உதாரணமாக, மோகலனது வாலிப வயதில் சித்தூருக்கும் மாருவாரத்துக்கும் மிக்க வைரம் விளைந்ததை முந்திய கதையில் குறிப்பிட்டுள்ளோம். அப்பகையின் பொருட்டு, மாருவார மன்னவனான ரணமல்லன் சித்தூரிலே கொல்லப்பட்டுப் போனன்; அவனது தலைநகரும் கைப்பற்றப்பட்டது. அங்ஙனமிருந்தும், ரணமல்லனது பேரப்பிள்ளை தூதன் என்பவனுக்கும் நம் கும்பனுக்கும் நெருங்கிய நேசம் ஏற்படலாயிற்று. இதற்குக் காரணம் மணவினையே. அத்தூதனது மகள் மீராபாய் என்பாள் கும்பகன்னனுக்கு மனைவியாயினள். உடனே, இரு நாட்டுக்கும் முன்னமிருந்த பரமவைரம் பறந்து விட்டது. ஒருவன் எவ்வளவு பலசாலியாக இருப்பினும், ஏற்ற

துணையை நாடிப் பகை முடித்தல் இயற்கையே. திருமாலின் அவதாரமான ஸ்ரீராமபிரான் இலங்காதிபனைப் போரில் புறங்காணவே, சுக்கிரீவனது நட்பை நாடிக் கொண்டதாகப் புராணங்கள் புகலுகின்றன. மகாராணா கும்பன் போராற்றலும் மிக்க வீரமும் படைத்தவன் என்பதில் ஐயமில்லை. எனினும் தன் பகையை முடிக்க, மாருவார ராஜவம்சத்தின் பேராதரவை நாடிநின்றான். அதற்கிணங்கி, உதவிபுரிய முன்வந்த வீரன் பெயர் சந்திரவதனன். கும்பனது தந்தை மோகலனை மோசமாக மாய்த்த பின்னர், சாகனும் மயூரனும் சும்மா விருக்கவில்லை; மத்தியபதியின் அரசுரிமையை அடைந்துவிடப் பெருமுயற்சி செய்துவந்தனர். ஆதலின், அவ் விருவரையும் வாட்டினாலன்றி, நம் கும்பன் நிம்மதியாக அரசுபுரிய முடியாது. அதற்காக அவன் தன் தோழன் சந்திரவதனனுடன் பெருஞ் சேனைகொண்டு சென்று, அவ்விருவரையும் எதிர்த்துப் போர்புரிந்தான். அவ்விருவரும் சமர்செய்ய மாட்டாமல் ஓட்டம் பிடித்தனர். ஆனாலும், நந்நாட்டின் மீதிருந்த ஆசைமட்டும் அவர்களைவிட்டு ஓடவில்லை. ரதகூடம் எனப்படும் பலமான கற்கோட்டையில் பதுங்கிக்கொண்டு, சூழ்ச்சி புரிந்துவந்தனர். ஆகவே அக்கோட்டையைக் குறுகி, அவர்களைக் குலைக்கக் கருதினான் கும்பன். அங்ஙனமிருக்கையில், சாகனும் மயூரனும் ஒரு ராஜபுத்திரனது குமரியைக் கவர்ந்துபோயினர். அந்த ராஜ புத்திரனுக்கோ அவர்களை எதிர்த்துப் போர்புரிய ஆற்றல் இல்லை; துணைவலியுமில்லை. தனக்கும் தன் மகளுக்கும் மானபங்கம் நேர்ந்துவிட்டதேயென அவன் ஆற்றொணாத் துயர்கொண்டு அழுது நின்றான். அப்பால், ஆபத்துக் காலத்திலே அரசன் கை

கொடானே என்று கருதி, அக் கும்பகன்னனிடஞ் சென்றுன் முறையிட்டுக் கொள்ள. அச்சமயத்தில்தான், கும்பனும் சந்திரவதனனும் ரதகூடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர் வீரருடன். வழியிலே ராணுவை அவன் சந்தித்தும், தன் மகளுக்கு நேர்ந்த கதியைக்கூறிப் பெரிதும் புலம்பினன். உடனே கும்பன் அவனைத் தேற்றி ஆறுதல் சொல்லியபின் அம்மூவரும் ரதகூடஞ் சேர்ந்தனர்.

சாகனும் மயூரனும் வசித்துவந்த மாளிகையோ ஒரு மலையின் உச்சியில் இருந்தது. படையுடன் உச்சி சென்று தாக்கலாமெனல் கூடாதகாரியம். ஆகவே சில வீரருடன் சென்று, மலையின் மீதேறி, மதிலைத் தாண்டிப் புகுந்து, மல்யுத்தஞ் செய்து மாய்க்க வேண்டுமென்று கும்பகன்னனுக்குத் தோன்றியது. உடனே அம்மலையின் மீதேறிச் செல்வதற்கான வழிகளனைத்தும் ஆராயப்பட்டன. அதற்குள் மாலைப் பொழுது வந்துவிட்டது. இரவில் ஏறிச்செல்வதே பலவிதத்திலும் நலம் பயக்குமென அம்மூவரும் கருதினர். அவர்களுடன் துணையாக ஏறிச்சென்ற வீரர் வெகு சிலரே. ஏறிச்சென்ற பாதையோ ஒற்றையடிப் பாதை. வழி நெடுக இருமருங்கிலும் முட்செடிகள் நிரம்பியிருந்தன. மேலும் கொடிய விலங்குகள் வாழும் புதர்களும் மிக அதிகம். மலையோ செங்குத்தாக இருந்தது; பாறைகளோ வழ வழப்பாகச் சலவைக் கற்கள்போலிருந்தன. எங்கும் அந்தகாரமே மூடிக் கிடந்தது. அத்தகைய பாதையிலே இரவில் எங்ஙனம் ஏறிச்செல்லுவது எனப் பிறர் மன்மொடிந்து போயிருப்பர். ஆயினும், கருமத்திலேயே கண்ணுயிருப்போர் கஷ்டங்களைக் கருதுவரோ? கனவிலும் கருதாரென்பது திண்ணம். அவர்கள் ஒருவரை

யொருவர் பற்றிக்கொண்டு, பாறையின்மீது வெகு சாமர்த்தியமாக ஏறிச் சென்றார்கள். சிறிது தூரம் சென்றவுடனே, ஒரு புதரில் பெண்புலியின் கண்மணிக ளிரண்டும் மினுமினு வென்று பிரகாசமாக விளங்கின. அதுகண்ட சூரியன் புலியுளதென்று குறிப்பாக வுணர்த்தினன் சந்திர வதனனுக்கு. உடனே, அச் சந்திர வதனன் தனது ஈட்டியை உறையிலிருந்து உருவி, வெகு பலமாக வேங்கையைக் குத்தவே, அது அலறிக்கொண்டு ஆவியை விட்டது. அவ்வனம் புலிபொன்றியது நற்சகுனமே யென்று சூரியனும் கும்பனும் களிப்பெய்தினர். பின்னர் அனைவரும் மலையுச்சி போய்ச்சேர நடுநிசியாகி விட்டது. அங்கிருந்த கோட்டையின் மதில்சுவரை ஒவ்வொருவராகத் தாண்டலாயினர். அப்பொழுது, ஒரு வீரனுடைய ரணபேரிகை கைதவறிக் கீழே விழுந்தது. அது உருண்டுருண்டு பாறையின்மீது புரளவே, கனத்த சத்தம் உண்டாயிற்று. அவ்வரவங் கேட்டுத் துயிலுணர்ந்த சாகனது குமாரி கோவென்று கதறினள். அதனால் உறக்கம் நீங்கிய சாகன் தன் மகளைத் தட்டிக்கொடுத்து, “என் குழந்தாய்! ஏன் கதறுகின்றாய்? இது கார்காலம். வானகத்தே மேகங்கள் குவிந்து கிடக்கின்றன. அதனால் இடி முழக்கம் கேட்கின்றது. நீ ஏன் அஞ்சி அலறுகின்றாய்? நம் பகைவர் வருவரெனப் பீதி கொள்கின்றனையோ? அவர்களுக்கு நாமிருக்குமிடம் தெரியாது. கயிலை வாரத்திலே கலங்கிக் கிடக்கிறார்கள். கடவுளைத் துதித்துக் கண் துயில்வாயாக” என்று கூறிய பின், தானும் தூங்கி விட்டான். பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் கும்பனும் சந்திரவதனனும் சாகனது மாளிகைக்குள் புகுந்து சிங்கநாதஞ் செய்தனர். அக்கர்ஜ்ஜனை காதில்

விழவே, சாகனுக்கும் மயூரனுக்கும் உறக்கமயக்கம் சற்றே தெளிந்தது. அவ்விரு பாதகரும் என்ன செய்வர்? அடித்துச் சுருட்டிக்கொண்டு அமளியை விட்டெழுந்தனர். அவர்களுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. எனினும், பஞ்சணையின் பக்கமிருந்த பட்டாக்கத்தியை எடுத்துக்கொண்டு வாட்போர் புரியத் தலைப்பட்டனர். உயிருக்காக ஓரிருவர் ஒரு பக்கமும், மகளுக்கும் மணிமுடிக்குமாகச் சிலர் மற்றொரு பக்கமும் நின்று சமர் புரியவே, வாட்போர் மிக்க வைரமாக நடந்ததென நாம் சொல்ல வேண்டியதில்லை. அப்போரில் களைத்துப்போன சோதரர் இருவரும் மல்யுத்தத்திலும் முனைந்து பார்த்தனர். அதிலும் அச் சகோதரர் கும்பனுக்குப் பின்னிடைந்து போயினரே யன்றி, வெற்றி பெறவில்லை. சுருங்கச் சொல்லின், முடிவிலே அவ்விருவரும் கும்பன் கையில் குத்துண்டு மாண்டு போயினர். உடனே சூரியன் தன்மகளை மீட்டுக் கொண்டான்; கும்பனோ தன் பகையை முடித்து மனக்கலக்கம் நீங்கினன்; சந்திரவதனனோ துணைபுரிந்து வாகை சூடினேமென அகங்களித்தான். பின்பு அனைவரும் தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர். பட்டத்துக்கு வந்த மறு கணத்திலேயே, கும்பகன்னன் தன் பகையை முடித்துப் புகழ்பெற்றதைக் கேள்வியுற்ற மத்திய்பதி மாந்தர் அனைவரும் மகிழ்வெய்தினர். இனி அரசுக்கு ஆபத்தில்லையென ஆறுதலுங் கொண்டனர்.

மகா ராணா கும்பனது சரிதத்தைக் கூறத் தொடங்கு முன், அச்சமயம் நம் தேசத்திலே முகம்மதிய ராஜ்யங்கள் இருந்துவந்த நிலைமையைச் சிறிது சொல்லவேண்டும். தைமூர் என்பான் மத்திய ஆசியாவிலிருந்து வந்து, வட இந்தியாவிலே நிர்த்தூளி செந்தூளி பரப்பிப் போயின பின்னர்,

டில்லி ராஜ்யம் சின்னபின்னமாகி விட்டது. அதற்கு முன்னம், டில்லிக்கு உட்பட்டுக் கிடந்த முகம்மதியச் சிற்றரசுகளான விஜயபுரம், கோவலகுண்டம், மாளவம், கூர்ஜ்ஜரம், கல்பி, முதலியன தனியரசாகி விட்டன. அவ்விதம் தனியரசாகு முன்னம், அவைகளிற் சில தங்களைச்சுற்றியிருந்த ராஜபுத்திரச் சிற்றரசுகளைப் பல வருஷகாலமாக வாட்டி வந்தன; அதனால், ராஜபுத்திர அரசுகளிற் சில தலை வணங்கிவிட்டன வென்பது உண்மையே. ஆயினும், தலை வணங்காது தீரமுடன் நின்றனவும் பலவாகும். அங்ஙனம் ராஜபுத்திரச் சிற்றரசுகள் அல்லலுக்கு ஆளான போதிலும், வல்லரசான மத்தியபதி சிறிதும் சலியாது தன் பெருமையைக் காத்துவந்தது. அதனால் அம் முகம்மதியவரசுகள் ஒருவாறு நடுநாட்டைக் கண்டு அஞ்சியே நின்றன வென்று கூறுதல் மிகையாகாது. ஆனாலும் சமயம் பார்த்து, மத்தியபதியை வாட்ட வேண்டுமென அவைகளுக்கு உள்ளூர உதித்துக்கிடந்த எண்ணம் மட்டும் போகவில்லை. தனியே எதிர்த்தால் தலை தப்பாதென்பது நிச்சயம். ஆதலின், மாளவம், கூர்ஜ்ஜரம் ஆகிய இரண்டுஞ் சேர்ந்து, மத்தியபதியின்மீது தண்டெடுத்து வந்தன. அது கண்ட கும்பனும் பெரும்படை திரட்டிப் புறப்பட்டான். அப்படையிலே ஐம்பதாயிரம் குதிரை வீரரும், ஐம்பதாயிரம் வேல் வீரரும், ஈராயிரம் யானைவீரரும் இருந்தனரென அறியவருகிறோம். பகைவனது சேனையைத் தன் பதிக்குள் புகவிடாமல், அதனை எல்லைப் புறத்திலேயே கும்பன் வழிமறிக்கலானான். மாளவ நாட்டின் பரந்த வெளியில் இருதிறத்துப் படைகளும் சந்தித்துக் கை கலந்தன. அப்போரின் கடுமையை விரித்துக்கூறுதல் எளிதன்று. அம்

முகம்மதிய வரசுகள் பல ராஜபுத்திரரை நீண்ட நாளாகத் துன்புறுத்தி வந்திருப்பதையும், பலவந்தமாக இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்திருப்பதையும், ராஜபுத்திர மங்கையரைச் சிறைசெய்து மானபங்கமிழைத் திருப்பதையும், மதித்துப் பார்த்த மத்தியபதி வீரர் வீராவேசத்துடன் போர்புரிந்தனர். முகம்மதிய வீரர்களோ தங்கள் மதத்தைப் பரப்பவும், அரசை நிலைநிறுத்தவும் கருதிக் கொடுமையே காட்டிச் சமர் செய்தார்கள். மதப் பற்றுக்காக முகம்மதியர் சிறிதும் தயங்காது உயிர் துறப்பரென்பது உலகப் பிரசித்தம். மரபின் மானத்துக்காக ராஜபுத்திரரோ உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே வழங்குவரென்பதும் உண்மை. அங்ஙனம் இரு பெருஞ் சேனையும் மூர்க்கமாகப் போர்புரியின், எத்தனை தலைகள் வெட்டுண்டு வீழ்ந்திருக்க வேண்டும்? எவ்வளவு வேகமாக இரத்தஆறு ஓடியிருக்க வேண்டும்? என்பதை யாவரும் ஊகித்துக் கொள்ளலாம். மதத்தையும் மரபையும் பெரிதாக மதித்த அத்தனை பெயரும் ஆவிநீத்தனர்; உயிரை ஒரு பொருட்டாகக் கருதிநின்றோர் மட்டும் முதுகுகாட்டிப் போயினர். முடிவில் மத்தியபதியின் பக்கமே வீரலட்சுமி விளங்கி நின்றாள். மாளவநாட்டரசனான முகம்மது என்பான் கும்பனிடம் சிறைபட்டான். அதுகேட்டு முகம்மதியச் சிற்றரசுகள் திகில்கொண்டு தேம்ப, ராஜபுத்திரச் சிற்றரசுகளோ அச்சம் நீங்கி ஆறுதல் அடைந்தன. அப்பெருமித வெற்றியை நிலைநாட்டக் கருதி வெற்றிமண்டபமொன்று கட்டி வைத்தான் கும்பகன்னன். அம்மண்டபம் ஒன்பதடுக்கு உப்பரிகை கொண்டது; அடி யகன்று மேலே போகப்போகக் குறுகிய வடிவினது. அதன் உயரம்

122 அடி. முதல் அடுக்கு உப்பரிகை 35 அடி சதுரங்கொண்டது. ஒன்பதாவது அடுக்கு மாளிகையோ $17\frac{1}{2}$ அடி சதுரம் வாய்ந்தது. ஒவ்வொரு உப்பரிகையிலும் சித்திர வேலைப்பாடான தூண்களும் பிறவும் மிக அதிகம். ஒன்பதாவது உப்பரிகையின் மீதே, கண்ணைக் கவரும்படியான கோபுரம். அக்காலத்திலே பாரத பூமியில் அதற்கு நிகரான அழகிய மண்டபம் எங்கும் இல்லை. அதனைக் கட்டி முடிக்க நேர்ந்த செலவு தொண்ணூறு லட்சம் ரூபாய்; இப்போது அம் மண்டபம் சற்றே உருக்குலைந் திருந்தும், தனது கம்பீரமான தோற்றத்தில் மட்டும் குன்றி விடவில்லை. ஒவ்வோர் உப்பரிகையிலும் உள்ள கும்பனது மூதாதைகளின் சிலைகள், காண்போரின் கருத்தையும் மனத்தையும் கவர்ந்து கொள்ளும். உச்சியிலுள்ள உப்பரிகையிலே, கிருஷ்ண பகவான் புல்லாங்குழல் கொண்டு, கோபிகைகளுடன் குரவைக் கூத்தாடுவது போல் சமைந்துள்ள சிலைகளின் நேர்த்தியைநோக்க இரு கண்கள் போதா. கும்பன் அதனைக் கட்டி முடித்துக் களி மகிழ்வெய்தப் பத்தாண்டுகள் பிடித்தன. அக் கொடும் போரின் விவரங்களெல்லாம் அம் மண்டபத்தின் மதில்களிலும் சுவர்களிலும் வரையப்பட்டுள. அவற்றிலே ஒரு கவிதையின் கருத்து யாதெனில், மாளவ, கூர்ஜ்ஜா நாடுகளின் மன்னவர்கள் கடல்போல் பரந்த பெருஞ் சேனையுடன், நிலமகள் நடுங்கவும் வானத்தே தூளி கிளம்பவும், கம்பீரமாகவே வந்தார்கள்; ஆனால் மான்கூட்டத்தி னிடையே வேங்கைப் புலி பாய்வதுபோல், அச் சேனையின் மத்தியிலே கும்பன்புகுந்து, முகம்மதியரை முறியடித்து மகிமை பெற்றான் என்பதாகும்.

மாளவ மன்னன் சிறைபட்டது ஒருபுறமிருக்க, அவ்

விரு வேந்தரின் தளவாடங்களும் கும்பன் கையில் சிக்கின. அம்மன்னன் முகம்மது ஆறுமாத காலம் சித்தூரிலே சிறை கிடந்தான். அப்பொழுது, அவனைக் கும்பகன்னன் ராஜமரியாதையில் யாதொரு குறைவுமின்றி நடத்தி வந்தான் என்பதைக் குறிப்பிடல் வேண்டும். போர்முகத்திலும் பகைவரிடம் பெருந்தன்மை காட்டுதல் ராஜ புத்திரரின் இயல்பு. அங்ஙனமிருக்கச் சிறைபட்டவனைச் சிறுமைப் படுத்துவதென்பதை அவ்வீரர் கனவிலும் கருதார். அதிலும் கும்பகன்னன் சிறுமையென்பதே எந்நாளும் அறியாதவன். ஆதலின், முகம்மதிய சரித்திர ஆசிரியர்களும் அக்கும்பனை வாயாரவாழ்த்தி மனமாரப் புகழ்ந்து பேசி யிருக்கிறார்கள். அத்தகைய ஆசிரியர்களில் சிறந்து விளங்குவோன் அபுல் பாஸல். சிறைபட்ட பகைவனை நேசனைப்போல் அக்கும்பன் கருதி, ஆறுமாதகாலம் வைத்திருந்தபின், யாதொரு நிபந்தனையுமின்றி வரிசையுடன் அனுப்பினான். குண விசேஷத்தில் அதனைவிடச் சிறந்த துண்டோ? அவ்விதம் பகைவரிடம் பெருந்தன்மை காட்டுவோரை அன்றும் இன்றும் காண்பதரிது. வரிசையுடன் முகம்மதை அவன் விடுவித்தானாயினும், அம்மன்னவனது மணிமுடி மட்டும் கும்பனது கொலுமண்டபத்திலே பல்லாண்டுகள் வரையில் இருந்து வந்ததாக அறிகிறோம்.

இரண்டு முகம்மதிய வாசரைப் போரில் புறங்கண்டு, வெற்றி மண்டபம் சமைத்ததைக் கேள்வியுற்ற வுடனே, டில்லியரசனுக்குக் கோபம் பொங்கிவிட்டது. அக்காலத்திலே இந்துக்களும் முகம்மதியரும் ஓயாமல் போர்புரிந்து வந்தனர். அதில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. தோல்வியுற்ற காலத்தும், ராஜ புத்திரர் தலை வணங்

காமல், வீரமே விளைத்து வந்தனர். அதுகண்ட முகம்மதி யருக்கு மனம் பொறுக்கவில்லை. போதாக் குறைக்கு இந்து அரசனொருவன் முகம்மதிய மன்னரிருவரை முதுகு கண்டனென்றால், டில்லி யரசனுக்கு உள்ளமும் உடலும் கொதித்தது இயற்கையே. ஆதலின் அவன் கும்பனது பெருமையைக் குலைக்க எண்ணி, எண்ணிறந்த வீரருடன் போருக்கு வந்தான். அதுகேட்ட மாளவ நாட்டரசன் முகம்மது என்பான் தனது நன்றி யறிவுக்கு ஓர் அறிகுறியாகக் கும்பனுக்குப் போரிலே உற்ற துணையாயினன். ஜானவம் என்னும் நகரின் அருகே இரு பக்கத்துப் படைகளும் எதிர்த்துநின்றன. அக்காலையில் இருதிறத்து வீரரும் தீரத்தில் குன்றாது போர் புரிந்தனர். ஆயினும், முடிவிலே டில்லியரசனே “உயிர் மிஞ்சினால் போதும்; கும்பனது பலத்தை யுணராமல் கொதித்து வந்துவிட்டோம். பின் புத்தியின் பலன் புறங் கொடுத்தலே” என்றெண்ணி வந்தவழியே போயினன் வாட்டத்துடன். அதனால், டில்லி யரசுக்கு அதற்குமுன் அழியாது எஞ்சிநின்ற மதிப்பும் பறந்துபோயிற்று. வீரமாதின் பேரருள் பரிபூரணமாக இருந்ததனால், கும்பன் போனவிடமெல்லாம் வாகை சூடியே திரும்பி வந்தான். அச்சமயம் அழியாச் சிறப்பு வாய்ந்திருந்த நாகதுர்க்கம் என்னும் நகரின்மீது கும்பன் படையெடுத்துச் செல்லவே, அங்கும் அவனுக்கு வெற்றி மாலை கிடைத்தது. அவ்வாறெல்லாம் வீரமாது ஒருபுறம் நின்று அவனைக் கடைக்கணித்து வருகையில், பூமகளும் அவனைத் தன் கருணையினால் களிப்பித்து வந்தாள். அதனால் பூவிமகளை அவன்களிக்கச்செய்த விவரத்தை விளம்புவோம்.

மத்தியபதிக்குக் காவலாக விருந்த அழியாக் கோட்

டைகள் எண்பத்து நான்காகும். அவற்றில் கும்பகன்னன் கட்டியவை முப்பத்திரண்டு. இவற்றில் மிகவும் வன்மை வாய்ந்தது கும்பமேரு எனப்படும். அதற்குக் கோமள மேரு எனவும் ஒரு பெயர் உண்டு. எத்தகைய ஆற்றல் படைத்த சேனையும், அக்கோட்டையின் முன்னே தலை நீட்ட முடியாது என்றால் அதன் வன்மையை நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. அற்புத மலையின் சிகரத்திலே அவன் அழகிய மாளிகையொன்று கட்டி, அதனைத் தனது உறைவிடமாகக் கொண்டனன். அதிலுள்ள ஆயுத சாலையும் காவல் கூடமும் இன்னும் அழியாதுள. நாட்டின் பாதுகாவலைக் கருதிப் பல கோட்டைகளை எழுப்பியதோடு அவன் நின்று விடவில்லை. நீர்வளத்தைக் கருதி, கூர்ம சாகரம் என்னும் மிகப்பெரிய ஏரியை வெட்டி வைத்தான். அதனால் ஆயிரக்கணக்கான நிலங்கள் முப்போக விளைவு தாலாயின. அவ்வண்ணம் அவன் அமைத்து வைத்த ஏரிகளும் ஓடைகளும் நீர்நிலைகளும் தடாகங்களும் பலவாகும். மதப்பற்றை மதித்துப் பார்ப்பின், அவன் கட்டிச்சென்ற ஆலயங்கள் ஒன்றிரண்டல்ல. மும்மூர்த்திகளுக்கும் அவன் அபாரமான செலவில் மிகப் பெரிய கோயில்களைக் கட்டி வைத்தான். அவை யனைத்தும் சிற்பசாஸ்திர வன்மைக்கு ஓர் உறைவிடமாகும். மேற் கண்டவாறெல்லாம் கும்பகன்னன் கோட்டைகளும் ஆலயங்களும் கட்டி, நாட்டின் வளத்தை நன்கு பெருக்கிப் போரிலும் வாகைசூடி, விளங்கியதைக் கண்டு, இவன் அமரனது மறுபிறப்போ, இலட்சனது அவதாரமோ என்று பலரும் போற்றத் தொடங்கினர். ஆண்டவனது பேருளால், கும்பன் தொட்டதெல்லாம் தங்கமாகவும்

செய்ததெல்லாம் சிறப்பாகவும் நினைத்ததெல்லாம் நலமாக வும் முடிந்தன. வெற்றிக்கும் புகழுக்கும் விளைவிடமாக அவன் விளங்கியதோடு, பக்திக்கும் இருப்பிடமானான். கும்பனை மகா பண்டிதர்களில் ஒருவனென அக்காலத் தில் அனைவரும் கூறிவந்தனர். பொதுவாக அரசர்கள் தங்களது போர் வீரத்திலும் தேவியரின் பேரழகிலும் மயங்கிக் கிடப்பார்கள். கும்பன் அங்ஙனமிருக்கவில்லை. ஓய்வு கிடைத்த போதெல்லாம் நீதி நூல்களைப் படித்து வந்தான்; தோண்டத் தோண்ட மணற்கேணி ஊற்றெடுப் பதுபோல் அவனது அறிவும் ஞானமும் வளர்ந்தோங்கி வந் தன. கீதகோவிந்தம் என்னும் அரிய நூலுக்கு அவன் எழுதியுள்ள உரைநூல் உச்சிமேல் வைத்துக் கொண் டாடும் பெருமை பெற்றது. பரமனைத் துதித்து வரும் பக்தியிலே அவனுக்கு இணையாக யாருமிருக்கவில்லை.

பலவிதத்திலும் பாக்கியவானாக விளங்கிய மகா கும் பன் களத்திர பாக்கியமும் பெற்று மகிழ்ந்தவன். அவன் தேவியரில் முதன்மையானவள் மீராபாய். அவள் அவனைப் போலவே பக்தி வைராக்கியமும் ஞான சீலமும் நிரம்பிய வள். பேரழகிலே பெருமை பெற்றவள். அறிவிலே ஔவைப் பிராட்டிக்கு அடுத்தபடியானவள். கீதகோவிந்தம் என் னும் நூலை அவளே இயற்றியதாகவும் சிலர் சொல்லுவர். இது எங்ஙனமாயினும், கிருஷ்ண பரமாத்மாவின் மீது அவள்பாடியுள்ள பாடல்கள், கிருஷ்ண கர்ணாமிருதம், சிவா னந்தலஹரி, திருவாசகம் முதலியவைகளைப் போல் பக்தி ரஸம் நிரம்பியவை. சொல்லருமைக்கும் பொருள் பெரு மைக்கும் உதாரணமாக அவளது கவிதைகள் காணப்படும். இன்றும் அக்கவிதைகள் ராஜபுதனத்திலே பக்தியுடன்

பாடப்பட்டு வருகின்றன. வடஇந்தியாவிலே அவள் தரிசிக்காத தலம் கிடையாது. அவளது பக்தியின் முதிர்ச்சியைக் கண்ட சிலர் "இவள் வேதாந்தப் பித்தேறியவள்" எனவும் விளம்பியுள்ளார். ஒரு சமயம் பிருந்தாவனஞ் சென்று, ஐம் பொறிகளையு மடக்கி, மனத்தை மாயவன்பால் நிறுத்தி, மெய்ம்மறந்து துதித்த காலையிலே, கண்ணபிரானது தேவியான ராதை தோன்றிக் காட்சியளித்தனளெனவும், உடனே அந் நங்கை நந்தனுரைப்போல் ஜோதியுடன் ஜோதியானு ளெனவும் சொல்லப்படுகிறது.

மகாராணு கும்பன் தனது நாட்டையும் குலத்தையும் விளக்கவேண்டி, வீரதீரங் காட்டியதை மேலே சொன்னேம். காதல்வீரங் காட்டியதையும் இங்கே குறிப்பிடுவோம். அவன் காலத்திலே ஜாலவாரம் என்ற குறுநாடொன்றிருந்தது. அதனை ராஜபுத்திரனொருவன் பரிபாலித்து வந்தான். அவனுக்குத் திருமகளைப்போல் அழகு வாய்ந்த புதல்வி யொருத்தி யிருந்தனள். தன் மனதுக்கு உகந்த மணாளனொருவனைத் தேர்ந்துகொள்ள அவள் சுயம் வரம் குறித்திருந்தாள். அதற்கு ராஜபுத்திரரிலே பற்பல அரசரும் வீரரும் போயிருந்தனர். மண்டபத்தில் திரண்டு வீற்றிருந்த ராஜகுமாரர் அனைவரையும் விடுத்து மாருவாரனொருவனுக்கே அவள் மணமாலை சூட்டினள். சுயம்வர சமயத்திலே, மாதொருத்தி ஒரு மைந்தனுக்கு மாலையிட்டாலும், வீரனொருவன் அவளைக் கவர்ந்து செல்லலாம். அவ்விதம் கவர்ந்து சென்ற வீரனை மாலைபெற்ற மைந்தன் வெற்றிகொண்டு அம்மங்கையை மீட்காமற் போயின், கவர்ந்து சென்றவனே அவள் கணவனுவான். அவ்வாறே கும்பனிடமிருந்து அம்மங்கையை மீட்க, மாருவார ராஜ

குமாரன் முயன்றும் முடியவில்லை. ஆதலின் அவள் கும்பனது தேவியாயினள். மாருவார மைந்தனே அந்த அவமானந் தாங்க முடியாமல், அவளை மீட்கத் தனது ஆயுளளவும் முயன்று கொண்டே யிருந்தனன்; எனினும் அவனால் ஆகவில்லை அவளை மீட்டுவிட.

அவ்விதம் பல துறையிலும் புகழ்பரப்பிய மகா ராணா கும்பகன்னன் ஐம்பது வருஷகாலம் அரசுபுரிந்து வந்தான். அப்பொழுது அவன் மத்தியபதியை ராஜபுதனத்தின் திலகம்போ லாக்கினன். இன்றும் ராஜபுதனத்திலே பலரும் மகா ராணா கும்பன் என்றால், மதிப்புடன் பேசி நிற்பர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த கும்பன் பண்டைவினையின் பயனால், 1469-ம் வருஷம் கொல்லப்பட்டுப் போயினன். அவ்விதம் கொன்ற பாதகனும் அவன் பெற்ற பிள்ளையே. அப்பாவியின் பெயர் உதய சிம்மன்.

அமரசிம்மனது காலத்திலே சாரணரென்போர் மத்தியபதியில் வந்து குடியேறினரெனவும், அக்குலத்தினரே கவிகளாகவும் சோதிடராகவும் விளங்கலாயினரெனவும். முன்பே சொல்லியுள்ளோம். அதற்கு முன்னும் பின்னும் அந்தணர் அத்தொழில்களில் அமர்ந்து அரசவையில் பெருஞ் சிறப்புக்குப் பாத்திரமா யிருந்து வந்தனர். அதனால் அவ்விரு குலத்தினருக்கும் மிக்க பொறாமை ஏற்படலாயிற்று. சாரண குலத்தைச் சேர்ந்த ஒருவனால் ஆவிபோமென வேதியரொருவர் கும்பகன்னனுக்குக் கூறினார். மேலும், அச்சாரணர் வேறு விதத்திலும் அம்மன்னவனது மதிப்பை யிழந்து விட்டனர். ஆதலின், அக்குலத்தினர் அனைவரையும் அவன் நாடுகடத்தி விட்டான். அம்மரபினனொருவனே உதயனுக்கு உடந்தையா யிருந்தவன்.

உதய சிம்மன் 1469—1474 கி.பி.

மகா ராணு கும்பகன்னனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் ரவி மல்லன்; இளையவன் பெயர் உதயன். அவ்விருவரிலே இளவரசா யிருந்தவன் ரவிமல்லனே. இவன் தன் தந்தையினிடம் வாஞ்சையும் வைக்கவில்லை; மிக்க பக்தியும் காட்டவில்லை; மதிப்பும் கொள்ளவில்லை. அடக்கமின்றி நடக்கும் பிள்ளையி னிடம் அரசை எங்ஙனம ஒப்படைக்க முடியுமென்று கும்பனுக்குக் கோபம் பிறந்து விட்டது. அதனுல், ரவி மலலன் நாடு கடத்தப்பட்டுப் போயினுன். எனவே, உத யனுக்குத்தான் பட்டங் கிடைக்கவேண்டும். தந்தைக்குப் பின் பட்ட மேறுதல் நிச்சய மாயினும், அதுவரையில் பொறுத்திருக்க அப்பாவி விரும்பவில்லை. வெகு விரைவில் சிம்மாசனம் ஏறிவிட வேண்டுமென அவனுக்கு ஆசைப் பேய் பிடித்துவிட்டது. அவ்வளவில் அவன் தன் தந்தை யைக் கொன்று போட்டனன். என்ன கொடுமை! என்ன கொடுமை! அரசியலை நச்சி, அரிய தந்தையை மாய்க்கவும் மைந்தனுக்கு மனம் வரும் போலும்! அதுபற்றியே அறி வுடையோர், "சீ! இச்செல்வம் வேண்டாம். வனத்தகத்தே தவம்புரிந்து, விமலநாதனைத் தேடி யடைவோம்" என்று கூறி உலகை வெறுத்துப் போயுளர்.

தந்தையைக் கொன்ற மாபாவி 1469-ம் வருஷம் அரி யணையில் அமர்ந்தான். அவ் வரியணை அவனை எங்ஙனம் தாங்கியதோ அறியோம். அடாது செய்வோனுக்கு ஐசு வரியமும், உயிர்க்கொலை புரிவோனுக்குப் பிள்ளையும்

கிடைக்குமென்ற வசனம் பொய்க்குமோ? அப்பாவியின் சரிதம் விரிவாகக் கூறப்படவில்லை. கொலைபாதகனைப் பற்றி விரித்துரைக்க யாருக்கு மனமிருக்கும்? கொலைபாவி யொருவன் ஐந்து வருஷகாலம் அரசாண்டான் என்றுதான், அந்நாட்டின் சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. உதயன் பட்டமேறியும் பயனில்லை. பிதாவைக் கொன்ற பாவியென இனத்தார் அனைவரும் அவனை வெறுத்தனர். படைவீரரில் பலரும் அவன் முகத்தில் விழிப்பதும் பாவமென அகன்று போயினர். நிலமகளும் அவனது ஆட்சியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பி நின்றனள். அதுவே சமயமெனக் கண்ட பகைவரில் சிலர் நடுநாட்டில் புகுந்து, பல விடங்களைக் கைப்பற்றிக் கொள்ளலாயினர். அவனோ தனக்கு ஆதரவு வேண்டுமெனக் கருதி, இதா நாட்டரசருக்கு மண்ணைக் கொடுத்து, அவர்தம் நட்பை நாடினன். அவன் உயிருடன் திரிந்த ஐந்து வருஷ காலத்திற்குள் மத்தியபதியின் பெரும்பாகம் பிறர்வச மாகிவிட்டது. பாளையக்காரரில் பலரும் போய் விடவே, சிலரை யேனும் சரிப்படுத்திக்கொள்ள, அவர்களிட மிருந்து அவன் கப்பம் வாங்கவில்லை. மாருவார மன்னவனது நட்புக்காகப் பல பூமிகளை அவனுக்கும் வழங்கினான். அவ்விதமெல்லாம் உதயன் செய்தும், அவனை மதிப்பாருமில்லை, போற்றுவாருமில்லை; அரசென அன்புடன் அழைப்பாருமில்லை. கண்டோரும் கேட்டோரும் அவனைக் குடிகேடன் என்றே கூறி வந்தனர். ஆதலின் யாது செய்வதென அவன் சிந்தித்து நின்றான். அங்ஙன மிருக்கையில் டில்லியரசனுக்கு மகளைக் கொடுத்து, மகிமை பெறலாமென அவனுக்குத் தோன்றியது. அதனை யுணர்ந்த மத்தியபதி வாசிகள் "அந்தோ இப்

பாவி மண்ணைக் கொடுத்துப் பல மன்னவரை நேசஞ்செய்ய முயன்றும் பலிக்கவில்லை. முடிவில் மகளையும் முகம்மதி யனுக்கு மனைவியாக்கக் கருதினனே! ஈசா! இதுவும் உனது திருவிளையாடலோ ?" என்று மனங்கலங்கி நின்றனர். அதனைக் கேள்வியுற்ற ரவிமல்லனே, இதுதான் சமயமெனக் கருதி, அரசில் ஆசைகொண்டு, ஒரு படையுடன் வந்தான் சித்தூரின்மீது. அப்பொழுது, பாளையக்காரரில் பலரும் ரவிமல்லனுக்குப் பக்க பலமாயினர். ராஜ பக்தியோ தேச பக்தியோ கொண்டு, உதயன் பக்கத்திலே உதவியாக நிற் பார் ஒருவருமில்லை. பணமும் பிரதேசமுங் கிடைக்கலா மென்ற பேராசைபிடித்த சிலரே படைத்துணை யாயினர் உதயனுக்கு. அவ்விதம் போருக்கு நின்ற இருவரில் ரவி மல்லனே வெற்றி பெற்றான். உடனே உதயன் டில்லிக்கு ஓடித் தன் மகளைத் தருவதாக முகம்மதியனிடம் புகன்று போர்த்துணை வேண்டினன். பெண்ணாசையினால் டில்லி யரசனும் போருக்கிணங்கிவர ஆயத்தமானான். ஆனால் வரு வதற்கு முன், மணமாகி விடவேண்டுமென்று முகம்மதியன் விரும்பியதனால், அங்ஙனமே முகூர்த்த நாளும் குறிக்கப் பட்டது. தன் மகளை யழைத்துவர அவன் டில்லி யாண மனையைவிட்டு வெளியே தலை காட்டியதுதான் தாமதம். நிர்மலமாயிருந்த வானகத்திலே திடீரென்று மேகங்கள் குவிந்து குமுறவே, அவன் தலையிலே இடி விழுந்தது. தந்தையைக் கொன்ற பாவிக்குத் தெய்வமே தண்டனை விதித்தது போலும். உடனே மத்தியபதி வாசிகள் மனக் கலக்கம் நீங்கி ஆறுதலடைந்தார்கள். நிலமகளும் அகங் குளிர்ந்தாள். ரவிமல்லனது தீரத்தையும் தேசபக்தியையுங் கண்ட மக்கள் அனைவரும் அவனையே அரசாக்கினர்.

ராஜு ரவி மல்லன் 1474—1509.கி.பி.

ரவி மல்லன் 1474-ம் வருஷத்திலே சித்தூர் வேந்தனாயினன். தனது வீரத்தினாலும் விரகினாலுமே அவனுக்கு அரியணை கிடைத்தது. அதுகண்ட அவன் தம்பியின் மைந்தர் பொறாமை கொண்டு, பகைத்தெழுந்து குரோதித்து வந்தனர். தம்பியான உதயன் தன் மகளை டில்லி சுல்தானுக்குத் தருவதாக வாக்களித்ததை முந்திய கதையில் கூறியுள்ளோம். மத்தியபதி மங்கையை மனைவியாகப் பெற்று 'மகிழலாமென அச்சுல்தான் மனப்பால் குடித்துக்கொண் டிருந்தனன். ஆனால் ஆண்டவனோ வேறுவிதமாக விதித்து விட்டான். உதயன் தலையில் இடி விழவே, டில்லி யரசனுடைய ஆசையிலும் மண் விழுந்தது. அதனால், அச் சுல்தான் கொண்டுநின்ற துயரம் கூறுந் தரமன்று. அங்ஙனம் அவன் ஒருபுறம் புலம்பி நிற்கையில், மற்றொரு புறத்திலோ உதயன் குமார் இருவரும் சோகமுடன் தேம்பி யிருந்தனர். அவ்விருவரில் ஒருவன் பெயர் சாகசமல்லன்; மற்றவன் பெயர் சூரிய மல்லன். தந்தைக்குப்பின் தங்களுக்கே அரசு கிடைக்குமென அவர்கள் கருதி யிருந்தார்கள். ஆயினும் அது கைகூடவில்லை. ஆதலின், யாது செய்வதென அவ்விருவரும் கூடி யோசித்தனர். டில்லி சுல்தானை யடைந்து, படைத் துணை கொண்டு, முயன்று பார்க்கலாமென அவர்களுக்கு ஆசை பிறந்தது. உடனே, அவ்விருவரும் டில்லிக்குப் போயினர். அம்மன்னவனும் அவர்களை அதி அன்புடன் வரவேற்றனன். இருதிறத்தினரும் ஒருவர் கருத்தை ஒருவர் உணர்ந்து

கொண்டனர். கருதியிருந்த காரிகை கிடைக்கவில்லையே யெனக் கலங்கிநின்ற காவலனும், பிதாவுக்குப்பின் பட்டங் கிடைக்குமெனப் பார்த்திருந்து ஏமாறிப் போன புதல் வரும் கருத்தொருமித்துக் கனகோபத்துடன் போருக்குப் புறப்பட்டார்கள். டில்லி யரசுக்கு உட்பட்ட அத்தனை படையும் திரண்டெழுந்து, திரைகடல் போல் வந்தது.

அதனையறிந்த ராணு ரவிமல்லன் வாளா விருப்பனே தானும் ஒரு பெருஞ் சேனையுடன் போருக்கு ஆயத்த மானான். அவன் சேனையிலே 58 ஆயிரம் குதிரை வீரரும் 11 ஆயிரம் வாள் வீரரும் இருந்தனர். தவிர, மந்திரபதி யின் சிற்றரசுகளான அற்புதம், கிரநகாம் ஆகிய இருநாடு களும் அவனுக்குப் பக்கபலமாயின. சுல்தானது சேனை வந்து தாக்குமுன், ரவிமல்லன் விரைந்து சென்று, போர் தொடுத்தான். இரண்டு படையும் கடுங் கோபங்கொண்டு சண்டை செய்தன. உதயன்மைந்தர் இருவரும் ஆண் சிங் கங்களைப் போல் சமர்முறுக்கினர். அவர்களுக்கு ரவிமல் லன் சிறிதும் சளைக்கவில்லை. நெடுங்காலம் கடுமையாகவே போர் நடந்துவந்தது. அச்சமயம் நேர்ந்த உயிர்ச் சேதமும் உதிரப் பெருக்கும் பகர முடியா. காற்று வேகமாக வீசு கையில், மாங்கனிகள் குலேகுலேயாக உதிர்வது போல், வாள்வீச்சிலே வீரர்சிரங்கள் வரிசை வரிசையாக வீழ லாயின. வெள்ளமே போல் உதிரமும் பெருகியோடியது. முடிவிலே, டில்லி சுல்தான் புறங்காட்டிப் போர் முனையை விட்டுப் போயினன். உதயன் புதல்வரும் தங்கள் எண்ணம் வீணுக முதுகுகொடுத்தனர். ராணு ரவிமல்லன் வெற்றி கொண்டு தன் தலைநகருக்குத் திரும்பினன். தனது தம்பி யின் மைந்தர் இருவரும் போர்புரிந்த போராற்றலைக் கண்டு

அவன்மனங் களிகொண்டு நின்றது. தவிர, இரத்த சம்பந்தமும் அவனை விட்டகலவில்லை. ஆதலின், "இத்தகைய வீரம்படைத்த புத்திரர் இருவரும் பகைகொண்டா நிற்க வேண்டும்?" என்று அவன் கண்கலங்கினான். அங்ஙனம் ரவிமல்லன் கலங்கி நிற்கும் சமயத்திலே, அவ்விருவரும் தோன்றி, அவனைச் சரண் புகுந்தனர். அவ்வளவில், ராணுவுக்குக் கருணை பிறந்துவிட்டது. உடனே அவன் அக்குமாரிருவருக்கும் இரண்டு நாடுகளை யளித்து ஆதரிக்க லாயினன். அப்பால், போரிலே தனக்குத் துணை புரிந்த இருவேந்தருக்கும் அவன் தன் மகளிரைத்தந்து மகிழ்வித்தான். டில்லி யரசனைப் புறங்கண்ட வுடனே அவனது வீரம் எங்கும் பரவலாயிற்று. அதனால், சிறிது காலம் அவன் கவலையின்றி அரசுபுரிந்து வந்தான். ஆனால், மாளவ மன்னன் முகம்மது கில்ஜி என்பானே போருக்கு வந்தான் ஒரு பெரும் படையுடன்.

அக்காலம், மாளவம், கூர்ஜ்ஜரம் முதலிய நாடுகள் முகம்மதியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அந்நாட்டரசரோ இந்துக்களின்மீது ஓயாது போர்நடத்தி வந்தனர்; முகம்மதிய மதத்தைத்தழுவும் வண்ணம் பலவந்தஞ் செய்தனர்; மறுத்தவர்களுக்கு மரண தண்டனை விதித்தனர்; சிற்சிலரைச் சித்திரவதைக்கும் ஆளாக்கினர்; ராஜபுத்திர மங்கையரைக் கவர்ந்துசென்று, அவர்களைக் காதல் மனைவியராகக் கொண்டனர். படைச்செருக்கும், மதவெறியுங்கொண்டு, அம்மன்னவர் விளைத்த கொடுமை விளம்புந்தரமன்று. அது கண்டு, மனம்பொறாது, மானமே பூண்டு, மடிந்துபோன ராஜபுத்திருக்குக் கணக்கில்லை; மானத்தை மதித்துத் தீயில்குதித்த மங்கையரின் தொகையும் கொஞ்ச

மன்று. அவ்விதம் பலரும் தமதாருயிரைத் துறந்து வருகையில், பஞ்சைகளான சிலர் விதியின்றி அம் மதத்தைத் தழுவினர்; கோழைகளான சில குமரிகள் அம் மாற்றுனை மணாளனாகக் கொண்டனர். அவ்வாறு ஒருபுறம் விபரீதம் விளைந்துவர, மத்தியபதியோ உதயனிழைத்துப் போன செயல்களால் சீர்கெடலாயிற்று. அஃதோடு, டில்லி லைதான் போருக்குவந்து போனதாலும், அந் நாடு சற்றே நடுமாற்றம் கொண்டது. ஆதலின், இதுவே சமயமெனக் கருதிய முகம்மது கில்ஜி சேனைகொண்டு வந்தான் சித்தூரின் மீது. உதயன் மைந்தர் இருவரும் வீராவேசங்கொண்டு போர்புரிந்து, அம் முகம்மதின் சேனையை முறியடித்தோட்டினர். அம் முகம்மதோ மனவலி நிரம்பி மமதைகொண்டவன்; மதவெறியும் போர் வெறியும் பொருந்தியவன். ஆதலால், மீண்டும் மீண்டும் படைகொண்டுவந்தான் போருக்கு. எனினும், ஒவ்வொரு முறையும் முதுகுகாட்டி யோடும்படி நேர்ந்ததேயொழிய, ஒருமுறையாவது அவன் வேற்றிபெற முடியவில்லை. அவ்விதம் அவனைப் பன்முறையும் புறங் கண்ட வீரபுருஷர் உதயனது புதல்வரே. அவ் வெற்றியையே அவர்கள் தங்களது மூத்த தந்தைக்குக் காணிக்கையாகச் செலுத்தி நன்றியறிவைப் புலப்படுத்தினர்கள். முடிவிலே அக்கில்ஜியரசன் சித்தூர் வேந்தனுடன் சமாதானஞ் செய்து கொண்டான் விதியின்றி.

ராணா ரவிமல்லனுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் சங்கரசிம்மன், பிருதிவி ராஜன், ஜயமல்லன் எனப் படுவார்கள்; அம் மூவரும் மகாவீரசாலிகள்; மத்தியபதியின் சரிதத்திலே பெரிதும் புகழ்பெற்றவர்கள்; அத்தகைய சிறந்த புத்திரரைப் பெற்றெடுத்தும், ரவிமல்லன் மன

மகிழ்ச்சியுடன் வாழமுடியவில்லை. நாடும் சீர்குலைந்து நலங் குறையலாயிற்று. ஏனெனில் அம் மூவரும் நேசங்கொண்டு வாழாமல், தம்முள் மாறுபட்டுப் பகைத்துக் கிடந்தனர். புத்திரர் மூவரும் சச்சரவு செய்து நிற்பதைக்கண்டு, தகப்பன் துயர்கொள்ளாமலிருக்க முடியுமோ? அங்ஙனமின்றி மைந்தர் மூவரும் சகோதர வாஞ்சைகொண்டு வாழ்ந்து வந்திருப்பின், ரவிமல்லனது அரசியல் பெருஞ் சிறப்பெய்தியிருக்கும். நாடும் நலத்தில் பெருகியிருக்கும். ஆயினும் என்ன செய்யலாம்? அம்மூவரில் மூத்தவன் சங்கர சிம்மன்; இளையவன் பிருதிவி ராஜன். அவ்விருவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். மூன்றாவனான ஜயமல்லனோ மற்றொரு தாய்க்குத் தோன்றியவன். அவர்களில் சங்கர சிம்மனே இளவரசாவான். அதற்குரிய வீரதீரமும் நற்குண நற்செயல்களும் அவனிடம் நிரம்பியிருந்தன. எதையும் ஆராய்ந்தறிந்து, அடக்கமும் அமரிக்கையுங் காட்டியே நடப்பான். பிருதிவிராஜனோ அவ்விதமில்லை. வீரத்திலும் தீரத்திலும் நிகரற்றவனாயினும், ஆத்திரமும் படபடப்பும் அதிகமாகப் படைத்தவன். தோள்வலிகாட்டிப் புகழ்க் கொடி தூக்கவேண்டுமென்ற பேராவல் கொண்டவன்; ஒரு கணமேனும் வாளாவிருக்க விரும்பாதவன்; தோள்தினவு அவனது துடுக்கையும் மிடுக்கையும் பெருக்கியே வந்தது. இருவருக்கும் இளையவனான ஜயமல்லனோ யாவற்றிலும் அவர்களுக்கு இளையவனே. அம் மூவரும் தமது இளமையிலே பாமநேசத்துடன் பழகிவந்தனர். சூரியமல்லனும் அம்மைந்தருடன் கூடியே வாழ்ந்துவந்தான் நேசமாக.

ஒரு நாள் அந்நால்வரும் உல்லாசமாக உரையாடி நின்றனர். அப்பொழுது, அரசைப்பற்றிய பேச்சு நிகழ்ந்

தது. இளவரசாகிய தனக்கே அரசுரிமை உரியதென்றான் சங்கரசிம்மன். அதுகேட்ட பிருதிவிராஜனே, விதிப்படி தனக்கே அரசுகிடைக்குமெ[illegible]ன கர்வமுடன். உடனே மூத்தவன் மற்றையோரை நோக்கி, "இளவரசுக்கே அரசு கிடைப்பது இயல்பு. அதன்படி, மத்தியபதியின் பத்தாயிரம் நகரங்களுக்கும் நானே வேந்தாக வேண்டும். அங்ஙனமிருக்க, என் தம்பியோ, தனக்கே ராஜவாழ்வை விதி கூட்டுவிக்கும் என்றுரைக்கின்றான். ஆதலின், யாவருக்கு அரசு கிடைக்குமெனச் சோதிடம் பார்ப்போம். சகுனமும் சார்பாக நிற்பவனுக்கே அரசு உரியதாகும். அதில் எனக்குத் திருப்தியே" என்று கூறினன். ஜயமல்லனுக்கும் அரசில் ஆசையில்லாமலில்லை. சகோதரர் மூவரும் அவ்விதம் பேசிவருகையில், சூரியமல்லனுக்கும் அரசில் ஆசைபிறந்தது. அதனுல், அவர்களுக்குள் சச்சரவு நிகழ்வதை அவன் வளர்த்து வந்தனன்.

அப்பால் அந்நால்வருமாக ஒரு சகுன சாஸ்திரியிடம் போயினர். அந்நாட்டிலே வேங்கைக் குன்றமென ஒரு சிறு மலையுண்டு. அது உதயபுரி நகருக்கு ஒரு காத தூரத்தில் உள்ளது. அங்கே ஆரூடம் சொல்வதில் சாலவும் சிறந்த சாரணகுல மங்கை யொருத்தி யிருந்தனள். அந்நான்கு குமாரரும் அந்நங்கையின் மனைக்குப் போயினர். போனதும், பிருதிவிராஜன், ஜயமல்லன் ஆகிய இருவரும் ஆங்கிருந்த பஞ்சணை யொன்றில் அமர்ந்து கொண்டனர். சங்கரனே அங்குக் கிடந்த புலியாசனமொன்றில் பொருந்தி யமர்ந்தான். கடைசியில் வந்த சூரியமல்லன் அப்புலித் தோலாசனத்தில் பட்டதும் படாததுமாக வீற்றிருக்கலாயினன். உடனே அம் மங்கை ராஜ குமார

ரின் முன்னே தோன்றி, அவர்களை ஆசீர்வதித்து, "மைந்தர்காள்! வந்த காரியம் யாதோ?" என்று வினவினள். அதற்கு "ஆருடம் பார்க்க வந்தோம்" என்றியம்பினன் பிருதிவி. அவள் சிறிது நேரம் சிந்தனை செய்துவிட்டு, "அரசிளங் குமரர்காள்! உங்கள் நால்வரி[illegible]த்தில் ஏற்றிருப்போனே புவிக்கரசாவான். அவனருகே அமர்ந்திருப்போனுக்கு அரசிலே ஒரு சிறு பங்கு கிடைக்கும்" என்று கூறினள். அவ்வளவு தான் தாமதம்.

பிருதிவி ராஜனுக்கு அடங்கா ஆத்திரமும் அசூயையும் கிளம்பி விட்டன. "ஆருடமாவது சோதிடமாவது? சங்கரனுக்கா சிம்மாசனம்? அவன் ஆவியுடன் இருப்பினன்றோ அரியணையில் அமர்வான்?" என்று கொதித்து உடைவாளை உருவி வீசினன் சங்கரனை நோக்கி. அதுகண்டு கலங்காத சங்கரனும் தனது வாளையும் ஈட்டியையும் ஒருங்கே உருவி யெழுந்தனன். இருவரும் தமதுயிரைத் துரும்பென மதித்து, நெடுநேரம் வாட்போர் புரிந்தனர். கடைசியில் சங்கரன் சிறிது சலிக்கவே, அவன் கழுத்தைக் குறிகொண்டு, பிருதிவியின் வாள் வந்துவிட்டது. அப்பொழுது, சூரிய மல்லன் சடுதியிலே தடுத்திராமல் போயின், சங்கரனது ஆருயிர் அக்கணமே அகன்றிருக்கும்; ஆருடமும் பொய்த்துப் போயிருக்கும். சூரிய மல்லனது சாமர்த்தியமே அவ் விரண்டையும் நிலைபெறச் செய்தது. அப்பால், சங்கரன், சூரிய மல்லன் ஆகிய இருவரும் ஒரு பக்கமும், பிருதிவிராஜன், ஜயமல்லன் ஆகிய இருவரும் மற்றொரு பக்கமுமாக நின்று வீரம்விளைத்தனர். சங்கரனுக்கு உடலிலே ஐம்பெருங் காயங்கள் உண்டாய் விட்டன. ஒரு கண்ணும் குருடாய் விட்டது. ஆதலின் பிழைத்தால்

போதுமெனக் கருதி அவன் ஓர் ஆலயத்திலே மறைந்து கொண்டான். ஆனால் அங்கும் ஆபத்து நேரும்போல் தோன்றியது. உடனே அவ்விடத்தை விட்டகன்று சிவானந்தம் என்னும் நகரம் போய்ச் சேர்ந்தான். போரில் பட்ட புண்களையும், வழிவந்த களைப்பையும் சங்கரன் தாங்க முடியவில்லை. உடலெங்கும் உதிரம் பெருகி வழிந்துகொண்டிருந்தது. அதுகண்ட வேதன் என்னும் வீரன் அவ்விளவரசை வரவேற்றுப் புண்களுக்கும் மருத்துவம் புரிந்தான். அத்தருணத்தில் சங்கரனை மாய்க்கக் கருதி முனைந்துவந்தான் ஜயமல்லன். வேதனுக்கோ வந்துவிட்டது கோபம். படுகாயமடைந்து கிடக்கு மொருவனைக் கொலைபுரிய வருங் கொடியோனைக் குலைக்க வேண்டுமென்று கோபம் பிறந்தது. மேலும்; தனது உயிரைப் பறிகொடுத்தாவது, அச்சங்கரனைக் காக்க வேண்டுமெனவும் ஆவலுண்டாயிற்று. உடனே அவ்வேதன் ஜயமல்லன்மீது சீறிப் பாயவே, இருவருக்கும் கடும்போர் மூண்டது. இதற்கிடையே தப்பியோடும் வண்ணம் சங்கரனுக்குச் சைகை செய்தான் அவ்வேதன். அவ்வாறே சங்கர சிம்மனும் விரைந்து போயினன் வேறோரிடத்தைநாடி. அப்பால் அக்கொடுஞ் சமரிலே வேதன் தனதுயிரைச் சங்கரனுக்காக வழங்கினான். இன்றேல் ஜயமல்லனது கையால் சங்கரனுக்கு மரணம்நேர்ந்திருக்கும். என்னே மன்னுயிரைக் காக்கத் தன்னுயிரை வழங்கிய வேதனது பெருந்தன்மை ! அஞ்சி வந்தோரை ஆதரிக்கும் பொருட்டு ஆருயிர் வழங்கல் ராஜபுத்திர வீரரின் குணவிசேஷம்.

சூரிய மல்லனும் பிருதிவிராஜனும் படுகாயத்தால் களைத்துப்போயின பின்பே போரைநிறுத்தினர். நாளடைவிலே பிருதிவி ராஜனது காயங்கள் ஆறிவிட்டன. உடனே

அவன் சங்கரனைத் தேடி மாய்க்க, முனைந்து நின்றான். இது செய்தி சங்கரசிம்மனுக்குத் தெரியவந்தது. ஆதலி[illegible] னது கண்ணில் படாவண்ண[illegible] வேடம் பூண்[illegible] வரத் தலைப்பட்டான் அச் சங்கர சிம்மன். [illegible] துடன் மறைவாக வசித்து வந்தாலும், வயிறு வளர்க்க வகை வேண்டுமன்றோ? பிற்காலத்திலே ஒருநூறாயிரம் வீரருடன் பேபர் சக்கரவர்த்தியை எதிர்க்கப்போகும் பாக்கியம் படைத்த சங்கர சிம்மன் விதியின்றி ஓர் ஆட்டிடையனிடம் வேலைக்கமர்ந்தான். அரசகுலத்தில் பிறந்து, அரிய செல்வத்துடன் வளர்ந்து வந்த சங்கரன் ஆடு மேய்ப்பதும் தலைவிதியல்லவா? வினைப்பயனை வெல்வதற்கு வழியுமுண்டோ? நாள்தோறும் ஆடுகளைக் கானகத்திற்கு ஓட்டிச்சென்று, வயிறார மேய்த்துவரின், நாலைந்து கவளம் சோறு கிடைக்கும். இல்லையேல் அன்னம் சுன்னந்தான். ஒருதினம் அவனுக்குப் பசியதிகரித்துவிட்டது. ஆதலின், அன்னமளிக்க வேண்டுமெனத் தனது தலைவனை வேண்டிநின்றனன்; அதற்கு "ஆடுகளை மேய்த்துவர இன்னும் செல்லவில்லை. அன்னத்தில் மட்டும் கண்ணாகஇருக்கின்றாய்." என்றான் இடையன் மட்டத்தனமாக. என்ன செய்வான் சங்கரன்? தன் விதியை நினைத்துப் புலம்பினான் ஆற்றுவாரின்றி. அம் மானக்கேடான நிலையில் சங்கரன் புலம்புவதைக் கண்ட சில ராஜபுத்திரருக்கு மனம் சகிக்கவில்லை. உடனே அவர்கள் சங்கரசிம்மனை நோக்கி, "வாலிப! என் கலங்குகின்றனை? சிறிதும் அஞ்சவேண்டாம். விரைவில் வாழ்வு வரும்." என்று தேற்றினர். பின்னர் அவன் ஆடுமேய்க்குந் தொழிலைத் துறந்து, அவர்களுடன் ஸ்ரீநகரம் போயினன். அப்பால் அந்நகரத் தலைவன் கூர்மசந்தனிடம் அவர்கள்

அனைவரும் போர் வீரராகப் போயமர்ந்தனர். ஒரு நாள் [illegible] வேட்டையாடப் போனார்கள். நெடு நேரம் [illegible]ாடியபின் அனைவருக்கும் மிக்க களைப்புண்டாய் [illegible]மல், சங்கரசிம்மன் அவ் வனத்திலிருந்த ஓர் ஆலமரத்தின் அடியில் சற்றே படுத்துறங்கலானான். அவன் நண்பர்களோ அப்பால் ஓரிடத்திலே உல்லாசமாகப் பேசியிருந்தனர். ஆலமரத்தின் இலைகள் மிக அடர்த்தியாக விருந்தும், அவன்முகத்திலே சூரியகிரணம் தாக்கலாயிற்று. அச்சமயம் மரப் பொந்திலிருந்து மாநாகமொன்று வெளிப்பட்டு வந்தது. சங்கர சிம்மன்மீது சூரிய கிரணம் படுவதைக்கண்ட அரவம் தனது படத்தை விரித்துக்கொண்டு, அவன் சிரத்துக்குமேலே குடைபோல் பிடித்துநின்று ஆடியிருந்தது. உடனே வலியன் என்னுங் குருவி வந்து, அம் மாநாகத்தின் தலையிலே வீற்றிருந்து, கீச்சுக் கீச் சென்று கூவியது. அங்ஙனமிருக்கையில் ஆட்டிடையனொருவன் அவ்வழியே போயினன். அவன் சகுன சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றவன். பாம்பு படமெடுத்தாடிக் குடைபோல் குவிந்துநிற்பதையும், குருவியொன்று அதன் சிரத்தில் அமர்ந்து கூவுவதையும், நோக்கியவுடனே, சங்கரனுக்குச் சிம்மாசனம் கிடைக்குமென அவனுக்குத் தோன்றியது. அப்பால் அவ்விடையன் கூர்மசந்தனை யடைந்து, "அரசே! சமுகத்தில் போர்த்தொழில் புரிந்து நிற்கும் புதிய இளைஞன் வெகு சடுதியில் பூமண்டலாதிபதியாவான். ஆதலின் அவனை யன்புடன் போற்றிவரல் வேண்டும்" என்று கூறிப்போயினன். சங்கரன் துயிலுணர்ந்ததும், தனது நண்பர்கள் அளித்த சிற்றுண்டியைப் புசித்துவிட்டு, நகரஞ் சேர்ந்தான். சேர்ந்ததும், ஸ்ரீநகர அரசனே அவனுக்குத்

தன் மகளைத் தந்து, மிகவும் மரியாதையாக நடத்திவர லானான். ஆனால் அவனுக்கு அரசுகிடைக்கு மென்பதைக் கூர்மசந்தன் ஒருவரிடமும் வெளியிடவில்லை. திடீரென வாழ்வு வந்ததைக்கண்டு சங்கரன் மட்டும் சிந்தித்து நின்றான். இம்மட்டில் சங்கர சிம்மனை நிறுத்திவைப்போம். இனிமேல், பிருதிவி ராஜனைப்பற்றிப் பேசுவோம்.

தன் மைந்தர் கலகமிட்டதும், சங்கரனுக்கு மிக்க காயம் பட்டதும், ராணா ரவிமல்லனுக்குத் தெரியவந்தன. பராக்கிரமசாலிகளான புத்திரர்களைப் பெற்றெடுத்தும், அவர்கள் இங்ஙனமா மாறுகொண்டு நிற்கவேண்டு மென ரவிமல்லன் பெரிதும் கலங்கினன். சங்கரன் வருவானென வெகு நாள் காத்திருந்தும், அவன் வரவில்லை. படுகாயங் கொண்டு போனவன் உயிருடன் உளனோ, அல்லது அப்படு காயத்திற்கு இரையாகி விட்டனனோ, எனவும் ராணாவுக்கு ஐயமுண்டாகி விட்டது. ஆற்றொணாத் துயரமும் வந்து சூழ்ந்து கொண்டது. அது காரணமாக ராணா, பிருதிவி ராஜன்மீது அடங்காத கோபங் கொண்டான். முடிவில் மைந்தனை விளித்து, "இளவரசன் போனவிடம் புலப்படவில்லை. நீயோ கட்டுக் கடங்காத காளையாகத் திரிகின்றாய். மேலும் உனக்கோ எப்போதும் போரிலேயே விருப்பஞ் செல்கின்றது. ஆதலின், இனி, நீ இங்கிருத்தல் கூடாது. உன் தோள்வலியைக் கொண்டு நீ வாழ்ந்து கொள்ளலாம்" என்று கட்டளை யிட்டுவிட்டான். பிருதிவி ராஜன் அடங்காப் பதட்டங் கொண்டிருந்தும், தந்தை தந்த கட்டளையை மீறி நடக்கவில்லை ; கலகமும் செய்ய வில்லை. தன் தந்தையை யடைந்து, அவர்தம் அடிபணிந்து, "எந்தாய்! ஆண்டவனருளால் எனக்குத் தோள்வலி நிரம்ப

ளது. அதனையே துணையாகக் கொண்டு, செல்கின்றேன்'' என்று கூறி அக்கணமே சித்தூரைவிட்டுப்போயினன். அச்சமயம் அவனுடன் உயிர்த்துணைவராக வீரர் ஐவர் போயினர். அறுவரும் பயணமாகிப் பல நகரங்களைக் கடந்து, கோத்துவாரம் என்னும் நாடடைந்தனர். அங்கே அவர்களை ஆதரிப்பார் யாவருளர்? ஒருவருமில்லை; கையிலும் காசில்லை; பசியோ வயிற்றைக் கல்லியது. பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்பதுண்மையே. ஆனால், ராஜபுத்திராகப் பிறந்து பிச்சைபுக அவர்கள் விரும்பவில்லை. ஆதலின் பிருதிவி ராஜன் தனது கணையாழியைக் கழற்றி, அதனை ஒரு வர்த்தகனிடம் ஈடு வைத்து, அதன் விலைக்கான உணவுப் பொருள்கள் வாங்கினன். அம் மோதிரத்தை வர்த்தகன் உற்று நோக்கியவுடனே, அது ராஜகுமாரனது ஆழியென அவனுக்குப் புலப்பட்டது. அக்கணமே அவன் பிருதிவி ராஜனை வணங்கி, ''அரசிளஞ்சிங்கமே! அறியாது பிழைத்து விட்டேன். அதனைப் பொறுத்தருள வேண்டும். இனி உன்னிடம் நான் வேண்டும் வரம் ஒன்றுண்டு. அஃது என்னவென்றால், உதயனது காலத்திலே, நம் மத்தியபதியின் மகிமை மங்கலாயிற்று. அப்பால் மாற்றரசர் மனங்கொதித்துப் படை கொண்டு வந்தனர். இப்போதோ நீயும் உன் சகோதரரும் பகை கொண்டு நிற்கிறீர்கள்; அதுகண்ட நம் பகைவர் பதட்டங் கொண்டு திரிகின்றனர். உதாரணமாக அறவல்லி மலையில் வசித்துவரும் மீனவரோ முன்போல் கப்பம் கட்டுவதில்லை. தனியரசாகக் கருதித் தருக்குடன் திரிந்து வருகின்றனர். இம் மட்டோ? அவர்கள் நமது நாட்டின் நகரங்களில் புகுந்து கொள்ளையும் கொலையும் புரிந்து வருகிறார்கள்.

அவர்களை அடக்குவாரில்லை. அரசுக்காக அண்ணனுடன் நீ ஓயாப் போர்புரிந்து வருதல் அழகன்று, ஆண்மையு மன்று. அம் மீனவாது மிடுக்கை முதலில் அடக்கித் தீர வேண்டும். அதற்கு வேண்டிய உதவிபுரிய யான் ஆயத்தமா யிருக்கின்றேன்" என்று கூறினன்.

வர்த்தகனுரைத்த வார்த்தையினைக் கேட்டவுடன், பிருதிவி ராஜனுக்கு வீராவேசம் பிறந்து விட்டது. உடனே அவன் மாறுபெயர் பூண்டு, அம்மீனவர் தலைவனிடம் வீரனாக வேலைக் கமர்ந்தான். அவன் நண்பர்களும் அங்ஙனமே அமர்ந்தார்கள். சிறிது காலஞ் சென்றவுடனே, வசந்தகால வேட்டை விழா நாள் வந்தது. அப்பொழுது மீனவனது வீரர் அனைவரும் தமது மாளிகை போயினர் மனைவி மக்களுடன் மகிழ்ந்திருக்க. ஆதலின், அம்மீனவர் தலைவன் தக்க மெய்காவலின்றி யிருந்தான். அதுவே நல்ல வேளையெனக் கருதிய பிருதிவி ராஜன், அம்மீனவர் தலைவனைத் தாக்கத் தனது நண்பர்களை ஏவினன். தானோ அரணின் கோட்டைவாயிலிலே காத்துநிற்கலானான். போதுமான காவலின்றித் தனித்துநின்ற அத் தலைவன் என்ன செய்வான்? திடீரென்று வீரர் தோன்றித் தாக்கவே, அவனுக்குத் திகைப்புண்டாகி விட்டது. ஆபத்திலிருந்து தப்பி, ஆவியிழவாம லிருந்தால் போதுமென நினைத்து, அந்நகரை விட்டோடினன். ஆனால், கோட்டையின் வாயிலிலே பிருதிவிராஜன் காத்துநிற்பதை அவன் அறியவில்லை. அவ்வாயிலைக் குறுகியவுடனே, பிருதிவி ராஜனது வேல் கம்பு அத் தலைவனைத் தரையில் வீழ்த்தி விட்டது. அது கண்ட மீனவர் போருக்கெழும்பினர். அவர்களுக்கும் அக் கதி நேர்ந்ததே யொழிய வேறில்லை. அதனால், எஞ்சிநின்ற

மீனவர் பிருதிவி ராஜனுக்கு அடி பணிந்து விட்டனர். அச் செய்தி கோத்துவார மெங்கும் பரவிற்று. அதுகேட்ட பிற பகைவரும் அடங்கிவாழ ஒருப்பட்டனர். அவ்விதம் கோத்துவார மெங்கும் அமைதி ஏற்பட்டதைக் கண்டு, குடிமக்கள் அனைவரும் அளவிலா ஆனந்தங் கொண்டனர். இது இயற்கையே. நம் பிருதிவிராஜனை இந்நிலையில் நிறுத்தி விட்டு, ஜயமல்லனது கதியைக் கூறுவோம்.

தட்சசைலம் என்பது மத்தியபதிக்கு அப்பாலுள்ள ஒரு குறு நாடாகும். அதனை ஆண்டுவந்த அரசன் பெயர் ராவ் சூரதன். அவன் ராஜபுத்திரரிலே அக்கினி குலத்தைச் சேர்ந்தவன். அவனது நாட்டை முகம்மதிய மன்னனொருவன் கைப்பற்றிக் கொண்டுவிட்டான். அதனால் சூரதன் தனது நாட்டைத் துறந்து, வேதநாம் என்னும் நகரில் வசித்து வந்தனன். தனது நாட்டை மீட்கப் பன்முறை முயன்று பார்த்தும், சூரதனால் முடியவில்லை. அதுபற்றி அவனுக் குண்டான துயரம் சொல்லுந் தரமன்று. அவனுக்கு அருமை மகளொருத்தி யிருந்தனள். அவளது அழகின் நலத்தைக் கண்டுங் கேட்டும் களியாதார் இல்லை. தன் தந்தை நாடின்றி நிற்பதைக் காணக்காண அவளது உள்ளமும் உடலும் ஒருங்கே சோர்ந்தன. ஒரு சமயத்திலே அப்பெண் ஆண்வேடம் பூண்டு, சில ஆடவருடன் புறப்பட்டு, அந்நாட்டை மீட்க முயன்றனள். அப்போது அவள் காட்டிய வீரச் செயலைக் கண்டு, ஆடவரும் வியந்து நின்றனர். பகைவர் பெருவலி பெற்றிருந்ததனால், அவள் தனது நாட்டை மீட்க முடியவில்லை. அதுபற்றி அவள் தன் தந்தையினும் பன்மடங்கு துயர்கொண்டு நின்றனள். அவளுக்கு உத்தேசம் பதினாறு வயதிருக்கும். அவளோ

கலியாண மாகாத காரிகை. அப்பெண்ணின் பேரழகையும் பெரு வீரத்தையும் கேள்வியுற்ற பலரும் அவளை மணக்க விரும்பினர். நாட்டை மீட்டுக் கொடுக்கும் வீரனைத் தவிர்த்து, வேறு எவரையும் மணப்பதில்லை யென அவள் விரதங் கொண்டிருந்தாள். அவளது விரதத்தை நிறைவேற்றி வைத்து, அவளை மணந்துகொள்ள ஒருவராலும் ஆகவில்லை. அங்ஙன மிருக்கையில், அம்மங்கையை மனைவியாக அடைய வேண்டுமென ஜயமல்லன் பெரிதும் விரும்பினான். அதற்கு அந்நங்கை, "அரசிளஞ் சிங்கமே! உனக்கு ஆண்மை யிருப்பின், எனது நாட்டை மீட்டுத்தருக. அங்ஙனமே தரின், தாராபாய் உனக்கு மாலைபிடுவாள்." என்று கூறினள். அவ்விதமே மீட்டுத் தருவதாக அவனும் வாக்களித்தான். ஆனால், நாட்டை மீட்பதற்குள், அம்மங்கையின் அழகிலே அவனுக்கு அடங்கா மையல் பிறந்தது. அரச குமாரன் என்னும் செருக்கும் சிறந்து நின்றது. அதனால் அம்மங்கையை முரட்டுத் தனமாகக் கைபிடிக்க முயன்றான். அதுகண்ட அவள் தந்தைக்குச் சிறிதும் மனம் பொறுக்கவில்லை. ஆதலின், ஜயமல்லனை அவன் கொன்று போட்டான் கணப்பொழுதிலே.

அவ்விஷயம் ரவிமல்லனுக்கு எட்டியது. எட்டியவுடனே, அவன் துயர்க்கடலில் ஆழ்ந்து விட்டான். ராணாவின் நிலைமை பரிதபிக்கத் தக்கதன்றோ? மூத்தபிள்ளையும் இளவரசுமான சங்கர சிம்மன் போனவிடம் புலப்படவில்லை. இளையவனான பிருதிவிராஜனோ நாடுகடத்தப் பட்டுப் போயுள்ளான். மூன்றாவனோ மோகங் காரணமாகக் கொல்லப்பட்டுப் போயினன். புத்திரசோகம் பொல்லாதல்லவா? பட்டத்துக்கும் பிள்ளையில்லை. அச்சமயத்தில்

சிலர் ரவிமல்லனை யடைந்து, பழிக்குப் பழிவாங்கவேண்டு மென வற்புறுத்தலாயினர். அதற்கு அவன், "என் புத்திர சோகத்தால், பழிவாங்குவதாயின், அது ராஜபுத்திருக்கு ஆண்மையன்று, அழகுமன்று. தனது நாட்டை யிழந்து தவிக்கும் தந்தையின் துயரையுணராது, மங்கையின் விரத்தைப் பங்கப்படுத்த ஒருவன் முயலின், அத்தகையோன் என் மைந்தனுயிருப்பினென்? அவனுக்கு அக்கதி நேர்ந்தது பொருந்தும்; அத்தகைய பிள்ளை என் பிறந்ததென்பதே எனது வருத்தமாகும். அங்ஙனமிருக்க, நான் எங்ஙனம் அச் சூதனைப் பழிவாங்குவது? அவனை யாற்றுவதன்றோ எனது கடமை" என்று புகன்று, அச்சூதனுக்கு ஒரு சிறு நாடளித்து ஆறுதலும் சொன்னான். ஆனால் "நம் வயிற்றில் உதித்த மைந்தன் தட்ச சைல நகரை மீட்டுத்தராது போயினனே, இது நம் வமிசத்துக்கே வசையாகுமே" என்று அவன் புலிம்பி நின்றது இவ்வளவு அவ்வளவு அன்று. அச்சமயத்தில்தான், கோத்துவாரத்திலே பிருதிவி ராஜன் வீரக்கொடி தூக்கியசெய்தி அவன்காதில் விழலாயிற்று. உடனே ரவிமல்லன் தன் மைந்தனை மன்னித்து, அவனை யன்புடன் அழைத்துக் கொண்டனன். தன் தம்பிக்கு நேர்ந்த கதியையும், அவனால் தன் குலத்திற்குண்டான வசையையும் நினைக்கநினைக்க அப்பிருதிவி ராஜனுக்கு மனம் பொங்கியது. தட்ச சைல நகரை மீட்டுத்தந்து, தாராபாயை மணக்காது போயின், நான் ராஜபுத்திரனல்லன் என அவன் தன் தந்தைக்குச் சபதஞ் செய்துகொடுத்தனன். அதே சமயத்தில், பிருதிவி ராஜனது பெயரையும் புகழையும் அப்பெண்மணி அறியலானாள். அறியவந்ததும், "அவ்வீரன் வந்து நமது நாட்டை மீட்டுத் தாரானோ?

அவனுக்கு மாலையளிக்கும் மகிமை நமக்குக் கிடைக்காதோ" என அவளும் சிந்தித்து நின்றனள். பின்னர், அவ்வீரசிங்கம் ராவ் சூரதனையடைந்து, நாட்டை மீட்டுத் தருவதாக ஆறுதல் சொல்லினன். அவ்வுரை கேட்ட தாராபாயோ உடனே மனமுவந்து வந்து, அவனுக்கு மாலை சூட்டினள். அப்பால் அந்நாட்டை முகம்மதியரிடமிருந்து மீட்பதற்கான உபாயங்கள் ஆராயப்பட்டன. முடிவில் பிருதிவிராஜன் ஐந்நூறு வீரருடன் புறப்பட்டான். தாராபாயும் தன் காதலனை விட்டுப்பிரிய மனமில்லாது, தானும் ஆட்வருடை தரித்து, வாளும் வேலுந்தாங்கி, அவ்வீரருடன் போயினள். அனைவரும் அத்தட்ச சைல நகரை யடைந்த சமயம், அங்கே அல்லா பண்டிகை நடந்து கொண்டிருந்தது. பண்டிகையின் கடைசி தினத்திலே ஆடம்பரமான ஊர்வலம் நடக்குமென்பது பிரசித்தம். அந்த ஊர்வலத்திலே பிருதிவிராஜன், தாராபாய், ஆகிய இருவரும் கலந்துகொள்ளவே, மற்ற வீரரோ நகரின் மதில் புறத்தே மறைவாக இருந்தனர். ஊர்வலம் அம் முகம்மதிய மன்னவனது மாளிகையை நெருங்கியது. அதனுடன் கலந்துகொள்ளக் காத்திருந்த அக்காவலனும் சாளரத்தின் வழியே தலையைநீட்டி நோக்கினன். நோக்கியதும், "வேற்று மனிதரிருவர் ஊர்வலத்தில் தென்படுகின்றனர். அவர்கள் யாரோ தெரியவில்லையே" என்று அவன் வினவினன். அவ்வளவில், தாராபாய் குறிபார்த்து விட்ட அம்பொன்று அவனைக் கீழேவீழ்த்தவே, அதனைத் தொடர்ந்து, பிருதிவிராஜன் வீசியெறிந்த வேல்கம்போ ஆவியைக்கவர்ந்தது.

குலத்தலைவன் தரையில் சாய்ந்தான் என்பதைக் கேட்டவுடனே, ஊர்வலத்திலிருந்த அனைவரும் திக்பிரமை

கொண்டு விட்டனர். அதுவே சமயமெனக் கண்ட பிருதி வியும் தாராபாயும் தங்கள் துணைவருடன் கூடிக்கொள்ளக் கருதிக் கோட்டைவாயிலைக் குறுகினார்கள். அதற்குள் ஆங்கிருந்த வாயில்காப்போன் யானையின்மீதேறிவந்து அவ் விருவரையும் எதிர்த்தனன். உடனே தாராபாய் சிறிதும் சலியாது அக்குஞ்சரத்தின் துதிக்கையை நோக்கித் தனது வாளை வீசவே, அக்கை இரண்டு துண்டாகி நிலத்தில் விழுந்தது. உடனே யானையோ அலறிக்கொண்டு வெருண் டோடிவிட்டது. அம் மிருகத்தை மடக்கித்திருப்ப யாவுத் தன் முயன்று முயன்று பார்த்தும் முடியவில்லை. அதற்குள் நகர்ப்புறத்தே காத்திருந்த ஐந்நூறு வீரரும் ஆயுதபாணி களாக ஆவேசத்துடன் வந்து, அவ்விருவருக்கும் பக்கபல மாயினர். உடனே முகம்மதியரின் சேனை திரண்டு வந்தது. திடீரெனப் போர் விளைந்ததனால், முகம்மதியர் தமது சேனையை நன்கு அணிவகுக்க முடியவில்லை. எனினும் அவர்கள் மனஞ்சலியாமல் மூர்க்கமுடன் சமர் முறுக்கினர். பிருதிவிராஜனோ தனது வீரரை நன்கு அணிவகுத்து, அரும்போர் செய்தான். தாராபாய் தனது வாளினால் பகைவரில் பலரைப் பலிகொண்டாள். மூன்று நாழிகைக் குள் யுத்தம் முடிவுபெற, அக்காதலனும் காதலியும் வாகை சூடினார்கள். போரிலே ஆவிதுறந்தவர்கள் போக, எஞ்சி நின்ற முகம்மதியரோ அந்நகரை விட்டுப் போயினர் நள் ளிரவிலே. அதுகேட்ட ரவியல்லனும் சூரதனும் பெருங் களிப்பெய்தித் தமது மக்களை வாழ்த்தினர். பின்னர் வேத விதிப்படி பிருதிவி ராஜனுக்கும் தாராபாய்க்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.

அப்பால் நாட்கள் பல சென்றன; தட்சசைல நகரைக்

கைப்பற்றியிருந்த முகம்மதியனுக்குத் தம்பி யொருவன் இருந்தனன். தன் தமையன் ஆவியிழந்ததைக் கேட்டு அவனது உள்ளம் கொதிப்புக் கொண்டது. உடனே அவன் பெருஞ் சேனையுடன் வந்து, பிருதிவி ராஜனைப் போருக்கு அழைத்தனன். எச்சமயம் சமர் வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பிருதிவி ராஜனே பரமகளிப்புடன் புறப் பட்டான் சமர்புரிய. சண்டை மிக உக்கிரமாகவே நடந்தது. அதில், தமையனைப் போலவே தம்பியும் ஆவி யிழந்து போனன். அச்சமயம் அஜமேரு நகரில் மல்லூகான் என் பான் அரசு செலுத்தி வந்தான். அவன் சுத்த வீரர்களில் ஒருவன். முகம்மதிய மன்னவரில் இருவர் ராஜபுத்திரனது கைதனில் சிக்கி ஆருயிர் நீங்கினரென்பதைக் கேட்ட வுடனே, அவனுக்கு மனந்தாளவில்லை. ஆதலின், பிருதிவி ராஜனைப் போரில் புறங்கண்டு, பழிவாங்க வேண்டுமென அவன் பெரும்படை யொன்று திரட்டலானன். அதுசெய்தி நம் பிருதிவி ராஜனுக்கு எட்டியது. சிங்கத்தை அதன் குகையிலேயே குலைப்பதுபோல், மல்லூகானை அஜமேரு நகரிலேயே அதம் பண்ணவேண்டுமென்று பிருதிவிராஜன் தன் துணைவரை யழைத்தனன். அப் பிருதிவியின் வீரத் தைக்கண்டு வியந்துநின்ற ஓராயிரம் வீரர் உடனே திரண்டுவந்தனர். அப்படையுடன் பிருதிவி ராஜன் அஜ மேரு நகரை யணுகவே, இருபடைகளும் அந் நகர்ப்புறத் தில் கைகலந்தன. நவாப்பின் வீரர் ராஜபுத்திரரின் முன் னிலையில் பஞ்சுபோல் பறந்தனரே யன்றி, முனைந்து நின்று சமர்செய்ய வில்லை. மல்லூகான் மகாவீரனயினும், சிங்கத்தைக் கண்டோடும் யானைபோலாயினனே யன்றி வேறன்று. அதனல் பிருதிவியின் புகழ் ராஜபுதனமெங்

கும் பரவிற்று. முகம்மதிய அரசுகளெல்லாம் பிருதிவி ராஜனது பெயரைக் கேட்டுப் பீதிகொண்டு பிரமித்தன. ரவி மல்லனே தன் மைந்தனது வீரங்கண்டு வியந்திருந்தான்.

அப்பிருதிவி ராஜனது வீரச் செயல்களைக் குறிக்கும் சரிதங்கள் பலவுள. அவற்றில் இன்னும் சிலவற்றை இங்கு எடுத்துரைப்போம். ஒரு சமயம் ராணு ரவிமல்லனும், மாளவ மன்னனது பிரதிநிதியும் பேசிக்கொண்டிருந்தனர். அயல்நாட்டரசனது பகையை வலுவில் தேடிக்கொள்ள ராணுவுக்கு விருப்பமில்லை. அதனால் அப்பிரதிநிதிக்கு அளவு கடந்த மரியாதைகள் காட்டப்பட்டன. அருகிலிருந்த பிருதிவி ராஜனுக்கோ அது சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும், தந்தையைத் தட்டிப் பேசவும் அவனுக்கு மனம் வரவில்லை. தோள்வலியும் வீரமும் நிரம்பிக் கிடக்கையில்; பணிவு காட்டி நடப்பதா என அவன் முணு முணுத்து நின்றான். அதனை முகக்குறிப்பினு லுணர்ந்த ரவிமல்லன் தன் மைந்தனை நோக்கி, "வீரனே! பதற வேண்டாம், வாலிப வயது உன்னை வாளா இருக்க விடவில்லை போலும். நீயோ பல மன்னரைச் சிறை செய்யும் பெரு வலிபுடையவன்; யானே நம் மத்தியபதிக்குப் பங்கமின்றி பாதுகாத்துவந்தால் பொதுமென விரும்பி நிற்பவன்" என்று கூறினன். அவ்வார்த்தை அம்பினுங் கடுகி அப்பிருதிவியின் உள்ளத்தில் தைக்கலாயிற்று. உடனே அவன் அரசவையை விட்டகன்றான். அவ்வளவில் ஈராயிரம் வீரர் பிருதிவியைத் தொடர்ந்து போயினர்; மற்றொரு நகரத்தை யடைந்தவுடனே, அங்கிருந்தும் ஐயாயிரம் குதிரைவீரர் அக் குமரனுக்குப் பக்கபலமாக வந்தார்கள். அப்பால் பிருதிவி ராஜன் மாளவநாட்டில் புகுந்து, அதன் நகரொன்றைக்

கொள்ளை யாடினன். அது கேட்டு அந்நாட்டு மன்னன் தன் படையுடன் வந்தான். இரவிலே ஓரிடத்தில் இரு பக்கத்துப் படைகளும் பாசறையில் தங்கியிருந்தன. நடுநிசியில் பிருதிவிராஜன் அம் மாளவனது பாசறையை யடைந்து, அவனைச் சிறைசெய்து விட்டான். அதுகேட்ட முகம் மதியப்படை பிருதிவிராஜனைத் துரத்தி வந்தது. உடனே அவன் அவர்களை நோக்கி, "மன்னவனை மாய்க்க வேண்டுமென்று யான் வரவில்லை. சிறைசெய்து செல்லவே வந்துள்ளேன். என் தந்தையிடம் சென்று, அன்னவனைப் பணியச்செய்ததும், விட்டுவிடுவேன். ஆதலின் நீங்கள் கொதித்து வரவேண்டாம். அங்ஙனமின்றி நீங்கள் போர் தொடங்கின், உங்கள் அரசனது ஆவி போய்விடும். நீங்களும் மாண்டு மடியும்படி நேரும்" என்று சொல்லினன். மதி கலங்கிப்போன முகம்மதியரும் அதற்கு மனமொப்பி யிருந்தனர். பின்னர் அம்மன்னவனுடன் பிருதிவி ராஜன் தன் தந்தையின் சமுகஞ் சென்று, பாதம் பணிந்து, "அரசே! மாளவ நாட்டின் பிரதிநிதியை இங்கு அழையுங்கள். என்னருகே நிற்பது யாரென அப்பிரதிநிதி பகர்வான்" என்று பணிவுடன் புகன்றனன். அதுகேட்ட ரவிமல்லன் என்ன சொல்வான்? பிருதிவி ராஜனைப் புகழ்வதைவிட வேறொன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. மாளவனும் மனமகிழ்ந்து, பிருதிவியின் வீரத்தைப் போற்றினன். அப்பால், அம் மன்னவனைத் தக்க மரியாதையுடன் தந்தையும் தனயனும் வழி யனுப்பினர்.

ரவிமல்லனது மைந்தருக்குள் மாறுபாடு வளருவதற்கு ஒருவிதத்தில் சூரிய மல்லனே காரண புருஷன். அம் மைந்தர் பகைத்தெழுந்து மடிந்துபோயின், அரசுரிமை

தனக்கே கிடைக்குமென்பது அவனது ஆசையாகும். அவர்கள் மூவரிலே இளவாசான சங்காசிம்மன் சென்ற விடம் புலப்படவில்லை. இளையவனோ நாடு கடத்தப்பட்டுப் போயினன். கடையவனோ காரிகையை நாடிக் கால்மாறுன் அங்ஙன மிருந்த சமயத்திலே, மத்தியபதிக்கு இளவா சில்லாதிருந்தது. அது வரையில் சூரியமல்லனுக்கு அா சைப்பற்றிய சிந்தனை உதிக்கவில்லை. இளவாசாக யாரும் இல்லாமல் போனவுடனே, "பட்டத்துக்கு வருவார் நம்மை யன்றி யாருமிலர். அரசிலொரு பங்கு கி[illegible]குமென அன்று அச்சரணமாதும் சொல்லி யுள்ளாள். ஆதலின், முயன்று பார்ப்போம்" என்று கருதினன் சூரிய மல்லன். அதற்கான சூழ்ச்சிகள் பலவும் நடந்தேறின. அச்சதியில் அவனுக்குத் துணையாக நின்றவன் சாரங்க தேவன். அவ் விதம் இருவரும் சதியாலோசனை செய்து வருங்காலத்தில் தான், கோத்துவாரத்திலே பிருதிவிராஜன் புகழ்பரப்பிய செய்தி ராணுவுக்குத் தெரிய வந்தது. அப் பிருதிவியை ரவிமல்லன் விரும்பி யழைத்துக் கொண்டதும், "சங்காளை வெருட்டி யோட்டி விட்டோம். ஜயமல்லனும் நல்ல வேளை யாக மாண்டுபோயினன். எஞ்சியுள்ள சூரிய மல்லனையும் மாய்த்துவிட வேண்டும்" என்று அவ்வாலிப வீரன் சிந் திக்கலானன். அவ்விதம் சூரியமல்லன் ஒருபுறமும், பிருதிவி ராஜன் வேறொருபுறமும் சிந்தித்து நிற்கையில், ஒரு வரது சூழ்ச்சியை மற்றவர் அறியலாயினர். எனவே, அவ் விருவருக்கும் பகை வளர்ந்து, வைரம் பாய்ந்து விட்டது.

அச்சமயத்தில் எவ் விதத்திலேனும் இந்துக்களின் அரசை வாட்ட வேண்டுமென்று விரும்பி நின்றவன் முஸா பர் எனப்படுவான். இவன் மாளவ நாட்டதிபன். இவ

னது உதவி சூரிய மல்லனுக்குத் தட்டாது கிடைத்தது. உடனே அச்சூரியன் தனது துணைவருடன் படைகொண்டு சென்று, மத்தியபதியின் இரண்டு நகரங்களை வசஞ்செய்து கொண்டான். திடீரென்று போர் மூண்டதனால், ராணு ரவிமல்லன் பெரும்படை திரட்ட முடியவில்லை. எனினும் கிடைக்கக் கூடிய வீரருடன் விரைவில் களம் புகுந்தான். கம்பீரம் என்னும் நதிக்கரையிலே இருதிறத்து வீரருக்கும் யுத்தம் நடந்தது. பகைவன் பக்கம் பெருஞ் சேனையிருக்க, ராணுவின் பக்கத்திலோ ஒரு சிறிய படையே யிருந்தது. ஆனாலும் ரவிமல்லன் ஒரு சிறிதும் தளர்வடையவில்லை. தானும் வீரனுடன் வீரனாகக் கலந்து முன்னணியில் நின்று மொய்ம்புடன் சமர்முறுக்கினான். அதில் அவனுக்கு உடலெங்கும் 22 காயங்கள் உண்டாய் விட்டன. உதிரமோ ஆறுபோல் பெருகி யோடியது. அதன் பின்பு, போர் புரிய அவனால் ஆகவில்லை. களைத்துப்போய் ரணகளத்திலே வீழ்ந்து விட்டான். அதுகண்ட மத்தியபதி வீரரும் மனங் கலங்கி நிற்கலாயினர். அச்சமயத்திலே, ஓராயிரம் தேர்ந்த வீரருடன் தோன்றினான் நம் பிருதிவி ராஜன். உடனே ராணுவுக்கும் வீரருக்கும் தைரியம் பிறந்தது. மைந்தனைக் கண்டதும், மன்னவன் தனது நோயை மறைந்தனன். பின்னர் கடும்போர் மும்முரமாக நடக்கலாயிற்று. பிருதிவி ராஜன் சூரிய மல்லன்மீதே கண்ணுயிருந்து, அவனது காயமனைததும் காயப்படுத்தினான். எனினும் சூரிய மல்லன் சோர்ந்தானில்லை. சரீர திடமும் மனவலியும் நிரம்பப் பெற்றவனாதலின், சமரை முன்னையினும் மூர்க்கமாக நடத்தினான் அச்சூரியன். இருபக்கத்திலும், சிறந்த வீரபுருஷரிருவர் சினந்து நிற்கையில், ஒரு பக்கமாவது வெற்றிபெற

வில்லை. கடைசியிலே இருவரும் களைத்துப் போயினர். பின்பே சண்டை சிறிது நிற்கலாயிற்று. என்றாலும் இரு பக்கத்துப் படைகளும் ஒன்றையொன்று அடுத்து நின்று பாசறையில் தங்கி யிருந்தன. அப்பால் நிகழ்ந்த செய்தி யாவரையும் மூக்கில் விரல் வைத்து வியக்கச் செய்யும்.

அந்நாள் பாரதப் போரிலே, பாண்டவர் ஒரு புறமும், கௌரவர் மற்றொரு புறமுமாக நின்று, பகலிலே ஒருவரை யொருவர் வெட்டிக் குவித்து வந்தும், இரவிலே அனைவரும் ஓரே பந்தியில் வீற்றிருந்து, உண்டி கொண்டனரென்று பலரும் கேட்டிருக்கலாம். அத்தகைய அருங்குணம் ராஜ புத்திரரிடமும் உண்டென்பதை விளக்கிக்காட்ட நம் சூரிய மல்லனும் பிருதிவி ராஜனும் தக்க சான்றாவர். சூரிய மல்லன், சாரங்க தேவன் முதலியோர் ஒரு பக்கமும், பிருதிவி ராஜன், ரவிமல்லன் ஆகிய இவர்கள் மறு பக்கமு மாகப் பாசறையில் தங்கி யிருந்தனர். அன்றிரவிலே பிருதிவி ராஜன் தான் காயப்படுத்திய சூரிய மல்லனைக் காணப்போயினன். அப்பொழுதுதான், சூரியன் தனது காயங்களுக்கு மருத்துவம் செய்துவிட்டு, அமளியிலே அசையாமல் படுத்துக் கிடந்தான். கை கால்களை அசைத் தாலும், காயங்களின் கட்டு சிதறிப்போய், மிக்க நோயுண் டாகுமென்று வைத்தியன் விளம்பியிருந்தான். ஆயி னும், பிருதிவி ராஜனைக் கண்டவுடனே சூரிய மல்லன், "அப்பனே வருக" என்றழைத்தனன் ஆர்வமுடன்; பின்பு அமளியை விட்டெழுந்து, அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். படுக்கையை விட்டெழுந்து. கை கால்களை யசைத்தனால், சில காயங்களின் கட்டுகள் குலைந்து போயின; மரண வேதனையும் உண்டாயிற்று. அதனை அச்

சூரியன் சிறிதும் சட்டை செய்யவில்லை. சோதரனைக் கண்டதும், சூரியனது சோகமும் வேதனையும் பறந்துபோயின போலும்! பின் இருவரும் ஆர்வமுடன் பேசியிருந்தனர்.

பிருதிவி:—அண்ணு! புண்கள் எவ் வண்ணமுள? படுக்கையை விட்டெழுவதால் அவை மிக்க வேதனையுண்டு பண்ணுமே.

சூரியன்:—அப்பனே! உன்னைக் கண்ட வளவில், என் காயங்கள் ஆறிவிட்டன; வேதனையும் பறந்து விட்டது.

பிருதிவி:—நல்லது. எப்போது யான் ராணுவாக முடிதரிப்பது? அப்பேறு எனக்குக் கிட்டுமோ? அது கிடக்கட்டும். உன்னைக் காணவேண்டுமென ஆவல் கொண்டு வந்தேன். இச்சமயம் எனக்குப் பசி யதிகம். ஏதேனும் சிற்றுண்டி தரின் நலமாயிருக்கும்.

உடனே அறுசுவையும் கலந்த உணவு ஆயத்தமாயிற்று. இருவரும் ஒரே தட்டில் அவ்வுண்டியை ஆசையுடன் புசித்தனர். பின்பு வழக்கம்போல் தாம்பூலமும் வந்து சேர்ந்தது. ஆகாரத்திலும் தாம்பூலத்திலும் விஷமூட்டிப் பகையை முடிப்ப துண்டாயினும், அவ்வஞ்சனை வழியைச் சூரியமல்லன் சிறிதும் சிந்திக்கவில்லை. பிருதிவிராஜனும் அச்சூரியன்மீது சந்தேகங் கொள்ளாது உண்டியும் தாம்பூலமும் உட்கொண்டான் உள்ளக் களிப்புடன்.

பிருதிவி:—எனதருமைச் சூரிய! நாளையதினம் இருவரும் போரை ஒருவாறு தீர்த்து விடலாகாதோ? சடுதியில் தீர்ந்தால் நலமா யிருக்கும். என் கவலையும் அகலும்.

சூரியன்:—தம்பி! நல்லது. அங்ஙனமாயின் அதிகாலையிலேயே உனது வீரருடன் வருவாயாக. அப்பனே! போய்வா.

அங்ஙனமே மறுதினம் இரு சேனைகளும் அதிகாலையிலேயே சந்தித்துச் சமர் தொடங்கின. சூரிய மல்லன், முன்தினத்திலே படுகாயமடைந்து, படுக்கையில் கிடந்தும், மறுதினம் போருக்கு வராமலில்லை. ஆனால் முன்னணியில் நின்று போர் புரியாமல், பின்னணியில் நின்று வீரரை உற்சாகப்படுத்தி வந்தான். அவன் பக்கம் முன்னணியில் நின்று சமரை நடத்தியவன் சாரங்கதேவன். அத்தினம் போரை ஒருவாறு முடித்துவிட வேண்டுமென வெண்ணி, இரு படைகளும் கை கலந்ததனால், போர் மிக உக்கிரமாக நடந்தது. அதன் கோரத்தை என்னென்று சொல்லுவது! வீரரின் வாள்கள் பல சிரங்களை வெட்டிவீழ்த்தின; வேல் கம்புகளோ பலருடைய மார்பகத்தைப் பிளந்தெறிந்தன; அம்புகளோ பலருடைய ஆவியைப் போக்கின; ஈட்டிகளோ பலருடைய குடர்களைப் பிடுங்கி வீசின. அதனால், இரு பக்கத்திலும் மிக்க உயிர்ச்சேதம் விளைந்தது. சாரங்க தேவனுக்கு உடலெங்கும் 35 காயங்கள் பட்டன: பிருதிவி ராஜனுக்கும் காயம் படாமலில்லை. இவனுக்கு ஏழு இடங்களில் பெருங் காயம் உண்டாயிற்று. அத்தினம் போரிலே சிறிது கைமேலாயிருந்தவன் பிருதிவி ராஜனே. சூரியமல்லனோ தானும் தனது உயிர் நண்பனும் பலத்த காயமுண்டு, வீரரிலும் பலரை யிழந்து விட்டதனால், பின் வாங்கிப் போயினன். அவ்விதம் பின்வாங்கிச் சென்று, சாதரம் என்னும் பிரதேசம் சேர்ந்ததும், அச்சூரியன் சும்மா விருக்கவில்லை. மீண்டும் போர் நடத்தப் படைதிரட்டினான்.

அதனை யறிந்த பிருதிவி ராஜன் அவ்விடஞ் சென்று அவனை மல் யுத்தத்திற்கு அழைத்தனன். முன்னாளிலே வீமனும் துரியோதனனும் ஒருவர்மீ தொருவர் கறுக்

கொண்டு மல் யுத்தம் புரிந்ததுபோல், சூரியமல்லனும் பிருதிவி ராஜனும் மற்போர் புரிந்தனர். அதில் ஒருவருக்காவது வெற்றி கிடைக்கவில்லை. அப்பொழுது, பிருதிவி ராஜன், சூரியமல்லனை நோக்கி, "யான் உயிருடன் இருக்கும் வரையில், உனக்கு மத்தியபதியிலே ஊசி முனையளவும் பூமி கிடைக்காது" என்று சபதஞ்செய்து வீரம்பேசினான். அதற்குச்சூரியனோ, "அப்பனே! அப்படியா? உன்னுடலைப் புதைப்பதற்கு வேண்டியவளவு பூமிதான் உனக்கு நடு நாட்டில் கிடைக்கும். அதற்கு மேல் சிறிதளவு இடங்கூட உனக்குக் கிட்டாது" என்று பதில்தந்தான் வைரங்கொண்டு. அப்பால், இருவரும் படைதிரட்டிப் போருக்கெழுந்துவரப் பிரிந்துபோயினர். அவ்வாறே சில நாட்களுக்கெல்லாம், அவ் விருவரது படையும் வேதநகரம் என்னும் நகரில் சந்தித்தது. இந்த யுத்தத்தின் கடுமையும் கூறுந்தரமன்று. சுருங்கச் சொல்லின், சூரியமல்லன் தன் படையின் நலத்தைக் கருதிப் பின் வாங்கிச் சென்று, ஒரு வனத்தில் தங்கியிருந்தான். குதிரைகளும் வீரரும் மரத்தடியிலே படுத்திருக்கையில், சூரியமல்லனும் சாரங்கதேவனும் உரையாடிக் கொண்டு தீயில் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். அச்சமயம் இரவு பதினைந்து நாழிகையிருக்கும். திடீரென்று ஒரு பேரரவம் சூரியன் செவியில் விழுந்தது. அதனை உற்று நோக்கி உய்த்துணர்ந்ததும், பிருதிவி ராஜனே வருகின்றானென அவன் தனது நேசனுக்குக் கூறினன். அவ்விதம் அவன விளம்பி வாய்மூடுமுன், பிருதிவியின் வீரர் அம்மரத்தடியில் குழுமிச் சிங்கநாதஞ் செய்தனர். உடனே சூரியமல்லனது வீரர்களும் துயில் நீங்கியெழுந்தார்கள் கோபாவேசத்துடன். இரவிலே ஒருவர்

முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. ஒரே குழப்பமுண்டாகிவிட்டது; ஒவ்வொருவரும் கைக்கு வந்தவாறு வாளை வீசினர். அதனால், இன்னான், இனியான் என்ற வேற்றுமையில்லாது போயிற்று. வீரரின் சிரங்கள் தரையில் உருண்டோடின; குதிரைகளின் தலைகள் வெட்டுண்டு வீழ்ந்தன; அப்பொழுது, பிருதிவிராஜன் சூரியனையே கருத்தில் கொண்டு, கத்தியை வீசினான். உடனே சாரங்க தேவன் தோன்றி அவ்வாள் வீச்சைத் தடுத்திராமல்போயின், சூரிய மல்லனது தலையும் பூமியில் புரண்டுபோயிருக்கும். அந்தகாரத்தினால் எங்கும் குழப்பமே நிரம்பி யிருப்பதைக் கண்ட சூரியன், "அப்பா! பிருதிவி! இனி யாம் போரைச் சிறிது நிறுத்துவோமாக. யான் இறந்து படின், என் மைந்தர் போர்வீரராகவேனும் வேலையில் அமர்ந்து வாழ்ந்து வருவர்; காலமுங்கழிப்பர். நீ இறந்துவிட்டாலோ உலகம் என்னையே ஏசும். ரவிமல்லன் பெற்றெடுத்த மூன்று பிள்ளைகளில், மூத்தவன் மறைந்துபோய்க் கடையவனும் கொல்லப்பட்டுப் போயிருக்க, இடையவனையும் சூரியன் மாய்த்துவிட்டானே? ரவிமல்லனுக்குப் பின் பட்டமேறப் பிள்ளை யில்லையே, ஈமக்கடன் புரியவும் ஒருவனாவது மிஞ்சவில்லையே என்று பலரும் வருந்துவர். அதுவே இச்சமயம் என் சிந்தையை வாட்டுகின்றது" என்று கனிவுடன் கூறினான். உடனே இருவரும் வாளை உறையிலிட்டு, ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டனர். அச்சமயம், பிருதிவிராஜன், "எனதருமைச் சோதர! யான் வருங்காலையில் உன் தோழனுடன் நீ உரையாடிக் கொண்டிருந்தனையே. அதென்ன?" என்று வினவினான். அதற்கு "வெற்றி வீர! உண்டபின், ஒன்றுக்கும் உதவாத விஷயத்தைப் பற்றிப்

பேசியிருந்தோம்” என்றான் சூரியமல்லன். பின்பு, அனைவரும் அவ் வனத்திலே இரவை ஒருவாறு கழித்தனர். பொழுது புலர்ந்ததும், பிருதிவிராஜன் காளிபூஜை செய்ய விரும்பி, அதற்கு வரும்வண்ணம் சூரியமல்லனை யழைத்தான் அன்புகாட்டி. அச் சூரியனுக்கோ நோயின்வேதனை மிகவும் அதிகமாயிருந்தது. அமளியை விட்டசையவும் இயலவில்லை. அதனால், தன் தோழன் சாரங்கதேவனை யனுப்பினான் தனது சார்பாகப் பிரசாதம் பெற்றுவர.

பிருதிவி ராஜனும் கிரமப்படி காளிபூஜை புரிந்தான். சாக்த முறைப்படி முதலில், ஓர் எருமை பலியிடப்பட்டது. பின்னர் ஓர் ஆட்டைப் பலிகொடுக்க, அவன் தனது வாளை வீசினான். அவ்வீச்சோ சாரங்கதேவனைக் குறிகொண்டு, வேகமாக வந்தது. அவ்வஞ்சனையை யறிந்த சாரங்கனும் தனது உடை வாளையுருவி நிற்கவே, இருவரும் நெடுநேரம் சளைக்காமல் வாட்போர் புரிந்தனர். ஒருவராவது உயிரை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. மூர்க்கமும் பிடிவாதமுங் காட்டிப் போர்புரிந்து வருகையில், சாரங்கதேவனது சிரமும் காளிக்குப் பலியாயிற்று.

உடனே அப் பிருதிவிராஜன் விரைந்துசென்று, சூரியமல்லனது பாசறையில் புகுந்து, அதனைக் கொள்ளையாடினன். தனது உயிர்த்தோழனைப் பறிகொடுத்த வருத்தம் ஒரு புறமும், தாங்கமுடியாத புண்ணின் வேதனை மற்றொரு புறமும், பிருதிவியிழைத்த கொடிய வஞ்சனை வேறொரு புறமும், வாட்டி நிற்கவே, சூரியமல்லனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. எதிர்பாராத வண்ணம் பிருதிவிராஜன் வந்து தாக்கியதனால், அச் சூரியனது வீரரும் திகிலடைந்து விட்டனர். அதனால் மிகவும் விரைவாக அப் பிருதிவி

ராஜன் வாகைசூடினன். சூரியமல்லனே முதுகுகாட்டி யோடலானன். ஓடவே, வேதநாம் என்னும் நகரம் பிருதிவியின் வசமாயிற்று. சாதாம் என்னும் பிரதேசத் தையும் அவனடையும் வண்ணம் விட்டுவிட நம் சூரியனுக்கு மனம் வரவில்லை. ஆதலால் அதனை அந்தணருக்குப் பகிர்ந்து கொடுத்தனன். நான் மறையாளருக்குக் கொடுத்த நிலத்தையும் சரி, கிடைத்த சொத்தையும் சரி, வசஞ் செய்துகொள்ள ராஜபுத்திரரில் ஒருவருக்கும் மனமிராது. பண்டைக்காலத்திலே மாந்தாதா என்னும் மன்னவன் வேதியருக்குப் பதினைந்து ஆயிரம் ஏக்கர் பூமிகளை வழங்கிப் போனன். அப்பால் பலவருஷ காலஞ் சென்றதும், அப் பூமிக்குரியோர் இல்லாது போயினர். அங்ஙனம் இல்லாது போயினும், அவற்றை வசஞ்செய்து கொள்ள மத்தியபதி மன்னவன் மனமொப்பவில்லை; பிறரும் உழுது பயிரிட ஒருப்படவில்லை. ஆதலால் அப்பூமிகள் நெடுங்காலம் தரி சாகவே கிடக்கலாயின. பாமனது சொத்தையும், பூசுரரின் சொத்தையும் கைப்பற்றிக் கொள்ளுதல் கொடும்பாவ மென ராஜபுத்திரர் அஞ்சுவர். ஆனது பற்றியே சாதாம் என்னும் பிரதேசத்தை வசஞ் செய்துகொள்ள அப்பிருதிவி ராஜனுக்கு மனந் துணியவில்லை.

தனக்கு வசமான இரண்டு பிரதேசங்களிலே, ஒன்று பிருதிவிராஜனிடம் சென்றுவிட்டது; மற்றென்றோ மறைய வரின் மானியமாகி விட்டது. எனவே, எவ்விடத்தில் தங்கி வாழ்வதென்று சிந்தித்துக் கொண்டே அச் சூரியமல்லன் வழி நடந்தான். அன்று சாணமங்கை சொல்லிய ஆரூட் மும் பலிக்காது போமோ என்றும் கருதலானன். அச் சமயம் ஓநாயொன்று ஆட்டுக் குட்டியை இழுத்துச்செல்ல

முயன்றது. ஆனால் தாயாடு தன் குட்டியை விட்டுவிட விரும்பவில்லை. ஆதலின், அவ்வாடு ஓநாயுடன் போர்புரியத் தொடங்கியது. அதனை நற்சகுனமெனக் கருதிய சூரியன் அவ்விடத்திலேயே ஓர் அழகிய அரண்மனையும் பலமான கோட்டையுங் கட்டினான். பின்னர் அவ்விடத்தைச் சுற்றியிருந்த ஆயிரம் கிராமங்களையும் தனது வசஞ்செய்து கொண்டான்; முன்னம் அச் சாரணமங்கை மொழிந்த வண்ணம், அரசு கிடைக்காமல் போயினும், அரசில் ஒருசிறு பங்கு அவனுக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் அத் தலமே பிரதாபகிரி என வழங்கலாயிற்று. சூரிய மல்லனுடைய சரித்திரம் அம்மட்டில் நிற்க, இனி பிருதிவிராஜனது கதையை முடிப்போம்.

சூரியமல்லனை ஒருவாறு ஓட்டியபின், சங்கரசிம்மன்மீது பிருதிவியின் கவனஞ்சென்றது. சங்கரன் உயிருடனிருப்பின், அவனையும் தொலைத்துவிட வேண்டுமென்பதே பிருதிவியின் விருப்பம். அதற்காக அப் பிருதிவிராஜன் ஒற்றரை ஏவி, நாடெங்கும் உசாவிவரச் செய்தான். அவர்களும் அங்ஙனமே சென்று ஆராய்ந்து பார்த்தனர். அப்பொழுது, ஸ்ரீநகரத்திலே சங்கரன் தங்கி யிருப்பதாகப் புலப்பட்டது. உடனே, பிருதிவிராஜன், "ஸ்ரீநகரத்தலைவ! உனதரண்மனையில் சங்கரசிம்மன் சரண் புகுந்திருப்பதாகத் தெரியவருகிறது. இக்கடிதங் கண்டதும், அவனை உன் மாளிகையிலிருந்து அகற்றிவிட வேண்டும். இல்லையேல், உனது நாட்டையும் இழப்பாய்; ஆவியையும் பறிகொடுப்பாய். இதுவே, வீரசிங்கமான பிருதிவிராஜன் விடுக்கும் நிருபம்" என்று வரைந்து, போர்வீரன் வசம் அதனை விரைந்தனுப்பினன். அக் கடிதங்கண்ட கூர்மசந்தன் சிறி

தும் கலங்கவில்லை. அரசு கிடைக்குமென்ற அவாவினால் முன்னம் மகளைத் தந்திருக்க, இப்போது அடைக்கலமும் அளித்து நின்றான். உயிரும் நாடும் ஒருங்கே போயினும், அடைக்கலமாயுள்ளவனை ஆபத்துக்காலத்தில் கைவிட்டுவிட ஸ்ரீநகரத்தான் மனமொப்பவில்லை. "வீரமுளதேல் வந்து பார்க்கலாம். சங்கரனைக் கைவிடமுடியாது" என்று பதில் கொடுத்தான் பிருதிவிராஜனுக்கு. ஸ்ரீநகரத் தலைவனான அக் கூர்மசந்தன் சுத்தவீரன்; மேலும், அக்கினி குலத்தைச் சேர்ந்த அதிசூரன். ஆதலால், அத்தகையோனைப் போரில் எதிர்த்து நிற்க, அப் பிருதிவிராஜன் விரும்பவில்லை. வஞ்சனை புரிந்து மாய்க்கலா மெனவே காலங் கருதியிருந்தான்.

ரவிமல்லன் தனது புத்திரிகளில் ஒருத்தியை அற்புத நாட்டரசனுக்கு மணம் புரிவித்தானென முன்பே சொல்லியுள்ளோம். அந்நாட்டரசன் பெயர் பிரபு ராவ். அவன் மகாவீரன்; புத்திமானுமாவான், ஆனால் பண்டை வினையின் பயன்போலும்! அபினி மயக்கம் அவனை அடிமை கொண்டு விட்டது. அளவுக்கு மிஞ்சினால், அமுதமும் விஷமாகும். அளவுமீறி அபினி யுண்டாமல், அது மிக்க அனர்த்தம் விளைக்குமன்றோ? மொந்தை மொந்தையாக மதுபானம் பண்ணுவோன் அறிவழிந்து, மதிமயங்கி, அல்லல்படுவது போலவே பிரபு ராவும் அல்லல் படலாயினன். கஞ்சா குடித்த வுடனே, அவனுக்கு மூளை கலங்கிவிடும்; மானமும் அபிமானமும் பறந்துபோம். அருமை மனைவி யென்பதும் தெரியாது போகும். ஆதலின், அவளை அவன் ஏசுவான், அடிப்பான், உதைப்பான்; கத்தியால் குத்தக் கருதுவான்; பஞ்சணையில் படுக்க விடான்; வெறுந்தரையில் படுத்துறங் கும் வண்ணம் பலவந்தஞ் செய்வான். அங்ஙன மிருந்தும்,

அப் பெண்ணோ தன் விதியை நினைத்து வருந்தி, வெகு நாள் பொறுமை பூண்டிருந்தாள். முடிவிலே, அப் புருஷனுடன் வாழ்வதைவிடுத்துப் பிறந்தவீடுசென்று, அவனை வெறுத்துவிடக் கருதினள். அதுமுதல், நாதனகத்திருத்தல் தீயின்மேலிருத்தல்போ லாயிற்று. ஒருதினம் அவள் ஆற்றொணுத் துயரங்கொண்டு, "இனி யான் ஒரு கணமும் கணவனகத்தில் தங்கியிருக்கமுடியாது. கஞ்சாக்குடியனுக்கு வாழ்க்கைப்பட்டுக் காலமெல்லாம் கஷ்டப்படுவதா? ராணுவின் மகளாகிய யான் அடியும் குத்தும், உதையும் வதையுமா படவேண்டும்? சடுதியில் வந்து, என்னை அழைத்துச் செல்லாமல் போயின், எனதாவி போய்விடும். அப்பால் பிரேதத்தைத் தான் பார்க்கலாம்" என்று தனது சகோதரன் பிருதிவி ராஜனுக்கு நிருபம் வரைந்தனுப்பினள்.

அதனை நோக்கியவுடனே சங்கரனை மாய்க்க வேண்டுமென்ற எண்ணம் அச்சமயம் அவனை விட்டகன்றது; முதலில், பிரபுராவைத் தொலைத்துவிட வேண்டுமென்றே ஆத்திரம்பிறந்தது. உடனே, அப்பிருதிவி பயணமானுன் அற்புத நகரின் அரண்மனைக்கு. அந்நகர் சேர்ந்த நேரம் நடுநிசியாகும். ஆயினும், அப்பொழுதே பிரபு ராவின் படுக்கையறையில் புகுந்து, அவனது மார்பகத்தே ஏறியமர்ந்து, ஈட்டியை உருவி நீட்டினுன் நெஞ்சத்தின் நேராக. அவ்வளவில் துயிலுணர்ந்த அற்புதத்தான் யாதுசெய்வான்? கையும் காலும் நடுங்கக் கதறியழுதான். பிருதிவி ராஜனோ பாபுராவின் புலம்பலைப் பொருட்படுத்தவில்லை; அவனைக் கொலைபுரிந்து விடவே முனைந்து நின்றுன். அச் சமயம், பாபுராவின் மனைவிக்கோ மனமிளகிவிட்டது. ஆதலின், தன் மணுளனை மன்னித்துவிடும் வண்ணம், தனது சோதரனை

வேண்டிக்கொண்டனள். அதுகேட்ட அப் பிருதிவிராஜன் தனது தமக்கையை நோக்கி, "நங்காய்! உனது வேண்டு கோளுக்கு இணங்கியே இப்பாதகனை மன்னித்தல் வேண் டும். ஆனால், இவன் தானிழைத்த பிழையை மதித்து, உன்னை யடிபணிவனு? அங்ஙனமாயின், அதுவே மரணத் திற்கு மாறுன தண்டனையாகும்" என்று கொதித்தனன். திக்கற்ற பாபுராவோ அவ்விதமே தன் மனைவியின் பாத ரட்சையைச் சிரத்தின்மீது தாங்கிநின்று, உயிர்ப் பிச்சை பெற்றுன். அப்பால் பிருதிவி ராஜன் அவ்விடமே ஐந்து நாள் தங்கியிருந்தனன். அப்பொழுது, அம் மூவரும் மனவேற்றுமையின்றிப் பழம்பகையை மறந்தவர்போல் வாழ்ந்து வந்தனர். பின்னர் பிருதிவி ராஜனுக்குச் சங்கா னுடைய ஞாபகம் வந்துவிட்டது. உடனே அங்கிருந்து புறப்பட்டான் அவ்விருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு. நாவுக்கினிய சிற்றுண்டி செய்வதில் பாபுராவ் பெரிதும் வல்லவன். அத்தகைய சிற்றுண்டிகளை அவன் பிருதிவி ராஜனுக்கு வழங்கினுன் பகைமுடிந்ததின் பயனுக.

அற்புத நாட்டிலிருந்து புறப்பட்டு வந்த பிருதிவி ராஜன் கும்பமேரு நகரைக் குறுகியதும், அவனுக்குப் பசி யதிகரித்தது. ஆதலின், ஆங்கிருந்த நீரோடை யொன்றில் தங்கி, அச் சிற்றுண்டியை ஆர்வமுடன் புசிக்கலானுன். அவ்வளவிலே, அவ் வுண்டியிலிருந்த விஷம் அவன் தலைக் கேறிவிட்டது. இனி, நெடுநேரம் தனதுயிர் தரியாதெனவும் அவனுக்குத் தோன்றியது. உடனே, அவன் "என்கண்ணே! பெண்கள் நாயகமே! எனதாயுள் இன்றோடு முடிந்துவிடப் போகிறது. கடைசி முறையாக உன்னைக்கண்டு, விடை பெற்று, வேறுலகம்போக விரும்பி நிற்கின்றேன்" என்று

தனது தேவி தாரைக்குத் தூதுவிடுத்தான். அதனை யறிந்த தாராபாய் தாங்கொணுத் துயர்கொண்டு, நாதனைக்காண வந்தாள் வெகு வேகமாக. கும்பமேரு வென்னும் குன்றி லிருந்து அந் நீரோடைக்கு ஆறுமைல் தூரமே உண்டு. வாயுவேகமாக ஓடக்கூடிய பரியின்மீதேறி, விரைந்து வந்தும், தன் புருஷனை உயிருடன் பார்க்க முடியவில்லை. அதற்குள் அவனுடைய ஆவி போய்விட்டது. சவத்தை நோக்கியவுடனே, அவளுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பல சொல்லிப் பயனென்ன? அவள் தனது கணவனுடலைத் தாங்கிக்கொண்டு, தானும் தீயில்குளித்து, ஆவியைத்துறந்த னள். வெற்றி வீரனும் வீரமாதும் அங்ஙனம் மண் ணுலகைத் துறந்து விண்ணுலகம் போயினர். இளமை யிலேயே பல பராக்கிரமச் செயல்கள் புரிந்து, எங்கும் வெற்றிமாலையே பெற்றுப் போனவிடமெல்லாம் புகழே பரப்பிய பிருதிவி ராஜன் அற்ப ஆயுளுடன் முடிந்தனன். அச்சமயம் பிருதிவி ராஜன் மாளாது இன்னும் சிறிது காலம் ஆவிகொண்டு வாழ்ந்திருப்பின், இந்தியாவின் சரித் திரம் வேறுவிதமாக முடிந்திருக்கும். மரிக்குந் தருவாயிலே அவனுக்கு வயது இருபத்தியேழுதான்.

பெரும் பெயரும் புகழும் படைத்த பிருதிவிராஜன் மாண்டுபோனதே ராணு ரய்மல்லனுக்கு ஆறுநோயாக முடிந்தது. மூன்று மைந்தரில், அரியணையேற ஒருவரு மில்லையே யென அவன் பெரிதும் புலம்பி நின்றனன். அத் துயரமே அவனது முடிவுக்குக் காரணமாயிற் றெனலாம். ஏனெனில் அதற்கப்பால் அவன் நெடுநாள் உயிருடனிருக்க வில்லை; 1509-ம் வருஷத்திலே பரகதி யடைந்தனன்.

ராணு சங்கர சிம்மன் 1509—1530, கி.பி.

சங்கர சிம்மன் 1509-ம் வருஷம் ராணுவாக அரியணை ஏறினுன். இளமையிலே அவனுக்கு நேர்ந்த கதியைக் குறித்து முந்திய கதையில் விளக்கக் கூறியுள்ளோம். தனது மாமன் மாளிகையிலேயே வெகு நாள் அவன் தங்கியிருந்தனன். தம்பியும் தந்தையும் ஆவி நீங்கிய பின்பு, பட்டத்துக்குப் போட்டியில்லையென நன்கு புலப்பட்டது. பின்னரே, சங்கரசிம்மன் உலகமறிய வெளிப்பட்டான். மத்தியபதி வாசிகளும் அவனை அன்புடன் வரவேற்று, அரியணையில் அமர்த்தி, முடியும் சூட்டினர். மனிதருக்கு வாழ்வு சிலகாலம், தாழ்வு சிலகாலம் என்பதற்குச் சங்கரனே தக்க சான்ருவான். ஒருவனுக்குத் தீமை வந்தடைவதும், நன்மைதான் சேருவதும், பழவினையின் விளைவே யாகும்.

சங்கரசிம்மன் சிம்மாசனம் ஏறியதும், தனது நன்றியறிவை நாடறியச் செய்தனன். அவன் காலங்கழிக்கக் கலங்கிநின்ற காலத்திலே, அவனைக் காத்துவந்தவன் கூர்மசந்தனே. அப்பால், அக்கூர்மன் தனது குமாரியையுங் கொடுத்து ஆதரித்தான்; அதன் பின்போ, "சங்கரனைக் கைவிடாமற் போயின் காலகதியடைய நேரு" மென்று பிருதிவி ராஜன் பயங்காட்டிய காலத்தே, பன்மடங்கு பரிவுடன் போற்றி வந்தான். அத்தகைய நன்றியை யாவர்தான் மறக்க முடியும்? சங்கரசிம்மன் மறப்பனே? அரியணையில் அமர்ந்தவுடனே, அக் கூர்மனது குமாரன் ஜகமல்லனுக்கு அஜமேரு என்னும் நகரை யளித்து, ராவ் என்ற பட்டப்பெயரையும் வழங்கினுன் அச் சங்கரன்.

—

புத்திரர் தமக்குள்ளே மாறுபட்டுக் கிடந்ததால், நாடு கலங்குன்றி யிருந்ததை ரவிமல்லன் ஒருவாறு சீர்படுத்தினன்; ஆயினும் அதனை முற்றிலும் திருத்தியவன் சங்கரனே. சிம்மாசன மேறிய சிறிது காலத்திற்குள், அங்ஙனம் சங்கரன் சீர்செய்ததுகண்டு குடிகள் அனைவரும் அவனைப் புகழ்ந்தனர். அதற்குமுன்பே டில்லியாசு சின்ன பின்னமாகிப் போனதை முன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். சித்தூரைச் சுற்றி நான்கு பக்கத்திலும் மாளவம், கூர்ஜ்ஜாம், விஜயபுரம் எனப் பல முகம்மதிய நாடுகள் தோன்றியிருந்தன. அவ்விதம் எங்கு பார்த்தாலும் முகம்மதியநாடுகள் நிரம்பிக்கிடந்தும், அவற்றிலெதையும் மத்திய பதி பொருட்படுத்தவில்லை. அங்ஙனம் பொருட்படுத்தாதிருக்கும் வண்ணம், அதன் அரசர்கள் வீர சிங்கங்களாக விளங்கி வந்தார்கள். அவ்வுயரிய நிலைமை கெடாத வண்ணம் காக்குங்கடமையைச் சங்கரனும் செவ்வனே நிறைவேற்றி வந்தான். டில்லி, மாளவம் கூர்ஜ்ஜாம் ஆகிய நாட்டரசர் சங்காசிம்மனது பேராற்றலை நன்குணாவில்லை. அவர்கள் படை கொண்டுவந்து, பெரும் போர் புரிந்தனர்; புரிந்தும் புறங்காட்டிப் போனார்களேயல்லாமல், வெற்றிபெறவில்லை.

மாளவ நாட்டிலே கடைசியாக அரசு செலுத்தியவன் பெயர் முகம்மது. அவன் 1510-ம் வருஷத்திலிருந்து, அப்பால் இருபது வருஷகாலம் சுல்தானாக இருந்து வந்தான். அச்சமயத்திலே அவனுக்கு முதன் மந்திரியாக விளங்கியவன் மதன ராய் என்பவன். இவனுடைய பேருதவியினாலேயே அவனுக்கு அரசுகிடைத்தது. ஆதலின், மதன ராயினிடம் அரசன் பேரன்பு காட்டிவந்தான். அதுபற்றி மதனனிடம் முகம்மதிய அதிகாரிகளுக்கும் பிரபுக்களுக்கும்

அருமை வளர்ந்து வரலாயிற்று. அது காரணமாக, அம் மதனனை எவ்விதத்திலேனும் மாய்த்துவிட வேண்டுமெனவும் அவர்கள் சதிசெய்து வந்தார்கள்; சுல்தானுக்கும் மதன னுக்கு மிடையே பகையை மூட்டிவிடவும் முயன்று பார்த் தார்கள்; எனினும், அவர்களது முயற்சியில் ஒன்றேனும் பலிக்கவில்லை. மதனனும் பழிவாங்குவது போல், அந்த அதிகாரிகளையும் பிரபுக்களையும் சபையிலிருந்து அகற்றி வைத்தான்; அவர்களுக்குப் பதிலாகத் தனது இனத்தின ரான ராஜபுத்திரரையே அமர்த்தினன். அதனால், முகம் மதியருக்கு மிக்க கோபம் உண்டாகிவிட்டது. என்றாலும், மதனனை எதிர்த்துக் கொல்ல அவர்களால் ஆகவில்லை. ஆதலின், "மாளவத்திலே எங்கும் இந்துக்களே நிரம்பி விட்டார்கள்; மசூதிகளை இடித்துத் தள்ளி முகம்மதியரை யும் வதைக்கிறார்கள்; சுல்தானோ மதனன் மொழிந்த வண்ணமே நடந்து வருகின்றான்; நம் மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. விரைவில்வந்து அம் மதனனை மாய்க்கா விட்டால், அவன் தனது பிள்ளையையே பட்டத்தில் அமர்த்தி விடுவான். அங்ஙனமானல், முகம்மதியரும் முகம்மதிய மதமும் மறைந்துபோக நேரும். ஆதலால் சடுதியில் சேனையுடன்வரின், மதனனையும் சுல்தானையும் தொலைத்து, நமது மார்க்கத்தைக் காக்கலாம்" என்று அவர் கள் டில்லி சுல்தானுக்குச் சொல்லியனுப்பினர். அவ்விதம் அவர்கள் சதிசெய்ததற்கு முதற்காரணம், மதனனை மாய்க்க வேண்டுமென்பதே. அதற்கடுத்த படியாக, முகம்மதின் சோதரனான சாகிப்கான் என்பானைப் பட்டத்தில் அமர்த்த வேண்டுமெனவும் அவர்களுக்கு ஆசையிருந்தது.

அச்சமயம் டில்லி சுல்தானாக இருந்தவன் பெயர் சிக்கந்

தர் லோடி. மார்க்கத்துக்குப் பங்கம் என்று செவியில் பட்டவுடனே, அவன் 12 ஆயிரம் வீரரை யனுப்பினான் போர்புரிய. அதே சமயத்தில் அவர்களுடைய சூழ்ச்சியிலே கூர்ஜ்ஜா அரசன் முஸாபரும் கலந்துகொண்டான். இரு பெருஞ் சேனை சமர்புரிய வந்தும், மதனராய் சிறிதும் மனஞ் சோரவில்லை. தனது தோள்வலியால், கூர்ஜ்ஜா சேனையை முதுகுகாட்டி யோடும்வண்ணம் முறியடித்து விட்டான்; பின்பு, அச்சநிகாரருக்கும் டில்லிப்படையின் தலைவனுக்கும் பகையை மூட்டிவைத்தான். அதனால், சுல்தானது சேனையோ வந்தவழியே போய்விட்டது. அதுகண்ட கலகக்காரர் மதனனிடம் சரண் புகுந்தனர். அப்பால் முகம்மதுக்கோ மதனன்மீதிருந்த பேரன்பு இன்னும் பெருகி வளரலாயிற்று. எனினும் அம் முகம்மதியரின் சதி நின்றபாடில்லை. கரைக்கக் கரைக்கக் கல்லுங் கரையுமென்றால், இளகிய மனது எம்மாத்திரம்? முடிவிலே முகம்மதின் மனம் மாறுபட்டு விட்டது. உடனே அவன் தனது சேனையிலிருந்த நாற்பதாயிரம் ராஜபுத்திர வீரரைத் திடீரென வேலையைவிட்டுத் தள்ளினான். ராஜபுத்திர வீரருக்கோ கோபம் பொங்கி விட்டது. பொங்கி விட்டதும், அவ்வீரர் மதனனை யடைந்து, "இந்த அவமானத்தை இனி யாங்கள் தாங்க மாட்டோம். பட்டாணியருக்கு நாம் எத்தனை காலம் கட்டுப்பட்டுக் கிடப்பது? உன் மைந்தனை ஒரு நொடியிலே அரியணையில் அமர்த்துவோம். இதற்குச் சம்மதி தரவேண்டும்" என்று வேண்டி நின்றனர். ராஜபுத்திர வீரர் சினங்கொண்டு மனங் கொதிப்பாராயின், அதனைத் தாங்குதல் யாருக்கு மரிது. அதுகண்ட முகம்மது மனங்கலங்கி, அறிவழிந்து தேம்பலானான். மதனனும்

மனமிளகி அவ்வீரரை ஒருவாறு சாந்தப்படுத்தினன். பின்பு, அம்முகம்மதியரின் சூழ்ச்சி காரணமாக, முகம்மது மீண்டும் அவ்வீரரின் மனத்தைப் புண்படுத்தத் தொடங்கி விட்டான். மதனனையே கொன்றுபோட அவன் துணிந்தானென்றால், நாம் அதிகஞ் சொல்லத் தேவையில்லை. தனது மதிவன்மையால் மதனன் அப் படுகொலையிலிருந்து தப்பிப் படுகாயத்துடன் திரும்பினன். பின்னர் அம்முகம்மது, கூர்ஜ்ஜர நாட்டதிபன் மூஸாபருடன் கூடி, ராஜபுத்திரரில் பலரைக் கொன்று குவித்தான். அப்பொழுது உயிரிழந்த ராஜபுத்திரருக்குக் கணக்கில்லை. உடனே மதனன் சித்தூருக்கு ஓடிவந்து, ராணு சங்கரனது உதவியை நாடினன். தன் குலத்தினரில் பலர், முகம்மதியரின் கோபவெறிக்கு ஆளாகி, ஆருயிர் நீங்கியதைக் கேட்டவுடனே, சங்கரசிம்மனுக்கு அச்சங்கர மூர்த்தியைப்போல் கோபம் வந்துவிட்டது. உடனே சித்தூர் சேனையும் போருக்குப் புறப்படவே, இருதிறத்துப் படைகளும் மதவெறியும் வைரமுங்கொண்டு போர் புரிந்தன. ஒருமுறை அல்லது இரண்டுமுறை போர் நடந்ததென்பதில்லை. ஓயாமல் பதினெட்டு முறை சண்டை நடந்து வந்தது. அதில் ஆவிநீங்கிய முகம்மதியரைக் கணக்கிட்டுரைக்க முடியாது. ராஜ புத்திரரில் சிலரே உயிர் துறந்தவர்கள். முகம்மதென்பான் மகா வீரத்துடன் போர்புரிந்தானாயினும், கடைசியில் சங்கர சிம்மனிடம் சிறைப்பட்டான். அவ்வெற்றியை யுணர்ந்த இதர முகம்மதிய மன்னவர் நடுக்கங்கொண்டு, அடங்கிக் கிடந்தனர்.

சிறைப்பட்ட முகம்மதை ராணு சங்கர சிம்மன் மிக்க மரியாதையாகவே நடத்தி வந்தனன். அவனது காயங்களையெல்லாம் தக்க மருத்துவரைக் கொண்டு ஆற்றுவித்தான்.

பின்னரே அம் முகம்மதுக்கு அறிவு வந்தது. உடனே அவன் தனது விடுதலையைக் குறித்து வேண்டி நின்றனன். பெருந்தன்மைக்கு ஓர் உறைவிடமான சங்கர சிம்மன் தனது வீரர் ஆயிரவருடன் அவனை மாளவ நாட்டுக்கனுப்பி முடியும் சூட்டு வித்தான் என்பதைக் குறிப்பிடவேண்டும். பகைவனிடமும் படைமுகத்தும் பெருந்தன்மை காட்டுதல் ராஜபுத்திரரின் குண விசேஷம். மகாராணா கும்பனும் அங்ஙனம் பெருந்தன்மை காட்டியிருப்பதை, அக் கும்ப நாமனது சரிதையில் முன்னம் கூறியுள்ளோம்.

முகம்மது சிறைப்பட்ட செய்தி டில்லி சுல்தானுக்குத் தெரியலாயிற்று. உடனே அச்சுல்தான் கொண்டகோபம் கூறுந்தரமன்று. அல்லாவுதீன் காலத்திலிருந்தே டில்லி சுல்தான்களுக்குப் பரம்பரையாக மத்தியபதிமீது வைர மிருந்துவந்தது. அதனால் சுல்தான் தனது சேனைகொண்டு வந்து, சங்கரனைப் போருக்கழைத்தான்; தானே சேனாபதி யாகவும் முன்னின்று, கடுஞ்சமர் செய்தான். ஆயினும் தோற்றோடிப் போயினனேயன்றி வெற்றிபெற முடியவில்லை. தனது முயற்சி சிதறிப்போன காலத்தும், அவன் சிந்தையி லிருந்த கோபம்மட்டும் அடங்கவில்லை. மீண்டும் தண்டு கொண்டு வந்தான் சங்கரனுடன் சமர்செய்ய. அப்பொழுது, டில்லி வீரர் மத்தியபதி வீரரின் கையில் சிக்கிப் படாதபாடு பட்டனர்; டில்லி ராஜவமிசத்தைச் சேர்ந்த ஒருவனும் ராஜபுத்திரரிடம் சிறைப்பட்டான். அதன் பின்பு தான், டில்லி சுல்தானுக்குச் சினமில்லாது போயிற்று.

மேலே கண்ட வண்ணம், பல முகம்மதிய வாசுகளை முறியடித்து, ராணா சங்கர சிம்மன் வாகை சூடியது கேட்ட ராஜபுதன அரசர் அனைவரும் அவனை முன்னையிலும் பன்

மடங்கு போற்றிவரத் தலைப்பட்டனர். வட இந்தியாவிலே எல்லா நாடுகளுக்கும் சித்தூரே திலகமாக விளங்கும் பெருமை பெற்றது. ஜோதிபுரி, ஜெயபுரி, பூண்டி, ஆகிய பேரரசுகளும் சங்கரனுக்குக் காணிக்கை செலுத்திவந்தன; சிற்றரசுகளான குவாலியர், அஜமேரு, சிகரம், ரவிசேனம், கல்பம், சாந்தாம், ராமபுரம், அற்புதம் முதலியனவும் அச் சங்கரனையே சக்கரவர்த்தியென மதித்துவந்தன; அரச ரென்னும் பட்டம்பெற்ற எழுவரும், அவர்களுக்கு அடுத்த படியான அதிபர்கள் ஒன்பதின்மரும், குறுநில்ல மன்னர் களான நூற்று நால்வரும் சங்கர சிம்மனது பரிவார மாயினர். அவன் காலத்தில்தான், மத்தியபதி மகா உன்னத பதவியடைந்தது. அந் நடுநாட்டினை எதிர்க்கத்தகுந்த ஆற்றல்படைத்த அரசொன்றுகூட அக்காலத்தில் இருக்க வில்லை. துருக்கிஸ்தானத்திலிருந்து பேபர் என்பான் வந்து, பாரதபூமியில் தோன்றியிராமல்போயின், சங்கரசிம்மனே இந்துஸ்தானத்தின் சக்கரவர்த்தியாக முடிதரித்திருப்பான்.

அவ்வளவு ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த சங்கர சிம்மன் முன்னம் தன் தம்பியைக்கண்டு மறைந்து வாழ்ந்து வந்ததேன்? புஜபல பாக்கிரமத்தால் போருக்கெழும்பி வந்து, பிருதிவியை முடித்திருக்கக்கூடாதோ? என்று சிலர் சிந்திக்கலாம். அவ்விதம் சிந்திப்பதும் இயற்கையே. பொது வாகச்சொல்லின், ராஜபுத்திரர் சோதிடத்தையும் சகுனத் தையும் பெரிதும் நம்பியிருப்போராவர். இக்காலத்திலுள்ள சிலர் அவர்களை மூடபக்தியும் மூட நம்பிக்கையும் நிரம்பிய சிகாமணிகள் என்று கூசாமல் கூறக்கூடும். இது எங்ஙன மாயினும், சங்கரசிம்மனே அவ்விரண்டிலும் மிக்க நம் பிக்கை கொண்டவன். மணி மந்திர ஔஷதம், தெய்வ

கிருபை, குருவருள், ஞானந்தருமுறை, யந்திரசாதனம், முதலியவற்றை மெய்யென மதிப்பின், அவை மெய்யாகவே முடியும்; பொய்யெனப் புகலின், பொய்யாகவே போம். அவ்வாறே “சரணமாதின் ஆருடம் பலிக்கும்: நமக்கு அரசும் கிடைக்கும்” என்று கருதியே சங்கரன் வாளாவிருந் திருக்க வேண்டும். அல்லது சோதானுடன் சண்டைக்குப் புறப்பட்டால், நாடு நலங்குன்றி, வீணே குடிமக்களும் கலங்கி யழிவரெனக் கருதி, அவன் சும்மா இருந்திருக்க வேண்டும்.

சங்கர சிம்மன் பெருமித வெற்றிபெற்று வந்ததற்குக் காரணமான கதையொன்றுளது. சங்கரனது காலத்திலே போஜன் என்னும் ராஜபுத்திரனொருவன் இருந்தான். அவன் அஷ்டமா சித்திகளிலும் தேர்ந்தவன்; பரமனிடம் பரம பக்தியுங் கொண்டவன்; மிக்க ஆசார சீலன்; அவனது புகழ் அக்காலம் தேசமெங்கும் பரவியிருந்தது. முன்னை நல்வினையின் பயனால், அப் போஜன் சங்கரசிம்மனுக்கு உயிர்த்தோழனாயினன். அது காரணமாக அவன் மந்திரத் தகடொன்று அடித்துக் கொடுத்தான் சங்கரனுக்கு. அதனைக்கழுத்தில் அணிந்து கொண்டு, போரில் புகுந்தால், பகைவரைப் புறங்கண்டு வெற்றிகொண்டே திரும்பலாம். சங்கரசிம்மன் போருக்குப் போன பொழுதெல்லாம் அத னாலேயே வாகை சூடிவந்தான். ஒருதினம் அவன் நீராடி நிற் கையில், அத்தகடு முதுகின்பக்கம் திரும்பிவிட்டது. அது கண்ட காவலன் மிக்க கவலை கொண்டான். அப்பொழுது, “அரசே! மானிடப் பகைவனொருவன் வந்துவிட்டான். ஆதலின் ஜாக்கிரதை, ஜாக்கிரதை” யென அந்தரத்தி லிருந்து அசரீரி வாக்கு வெளிப்பட்டது.

அப்பால் சில நாட்களுக்கெல்லாம் பேபர் என்பான் சங்கரனுடன் போருக்கு வந்தனன். அதனைப்பற்றி யுரைக்கு முன்னம், போஜனிடம் சங்கரன் கொண்டிருந்த பயபக்தி விசுவாசத்தை விளக்கவேண்டும். காலக்கிரமத்திலே போஜன் பரகதி சேர்ந்தான். அதுகேட்டு சங்கரன் பெரிதும் வருந்தி, இனி யழுது பயனில்லை யென்று உணர்ந்துகொண்டு, அப் போஜனுக்காக ஓர் ஆலயங்கட்டுவித்தான்; இதர ஆலயங்களைப்போல், அதற்கும் நாள் தவறாமல் பூஜை நடக்கும் வண்ணம் ஏற்பாடு செய்தான். இன்றும் அக்கோயிலிலே அணையாமல் விளக்கு எரிந்து கொண்டு வருகிறது.

பேபருக்கும் சங்கரனுக்கும் நடந்த சமரைக் குறிப்பிடுமுன், பேபரின் சரிதத்தைச் சுருக்கிக் கூறவேண்டும். நம் பாரத பூமிக்கு மேற்கே, துருக்கிஸ்தானம் என்ற ஒரு தேசமுளது. அக்காலத்திலே அது பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. அந்நாட்டினர் மோகலாயர் எனப்படுவர். பேபர் என்பான் அம்மோகலாய மரபினன். அவன் தந்தை ஒரு குறுநாட்டின் காவலனா யிருந்தனன். தந்தை தீர்ந்த பின்பு, மைந்தனுக்கே பட்டங் கிடைத்தது. அப்பொழுது அவனுக்கு வயது பன்னிரண்டுதான். சிறு பிள்ளைதானே சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளானென்று கருதிய சிலர் அவனது நாட்டைக் கைப்பற்றக் கருதினர். அச்சமயம் சில தோழரின் உதவியால் அவன் தனது நாட்டைக் காத்துக் கொண்டான். வேறு சில நாடுகளும் அவன் வசமாயின. பதினாறு வயதுக்குள் அவன் தனது வீரத்தை வெளிப்படுத்தி எங்கும் புகழ்க்கொடி நாட்டினன். பின்னர் அவனுக்குக் கஷ்டம் நேர்ந்துவிட்டது. உயிருக்கஞ்சி ஓடவும்

நேர்ந்தது. அப்பால் சில நாடுகளை அவன் பிடித்தான்; மீண்டுமிழந்தான்; தெய்வத்தின் சித்தம் திரும்பிவிடின், மன்னர்தம் வாழ்வும், மண்டலீகர் மேடையும். மகத்தான பெருஞ் செல்வமும் கனவாக முடியுமென்பதற்கு வேறு சான்று வேண்டுமோ? எவ்வளவோ அவன் முயன்று பார்த்தான் தனது நாட்டை மீட்க. அவன் முயற்சிகளெல்லாம் வீணுபின; உடனே அவன் துருக்கிஸ்தானத்தை விட்டு வந்து, காபூல் அல்லது காம்பிலி நாட்டை வசப்படுத்திக் கொண்டான். தனது மூதாதையான தைமூர் என்பான் டில்லியின்மீது முன்னம் படையெடுத்து வந்து, பெரு நிதியுடன் திரும்பிய செய்தி அவனுக்கு நன்கு தெரியும். ஆதலின் டில்லியின்மீது படைகொண்டுவந்து, அதனை வசஞ் செய்து, தானே அரசாள வேண்டுமென அவனுக்கும் ஆசை பிறந்து வளர்ந்தது. அதற்கு முதல்படியாக, அவன் பாஞ் சால நாட்டை ஜயித்துக் கொண்டனன். பின்பு 1510-ம் வருஷத்தில்தான், சிந்துநதியைக் கடந்துவந்து, உள்நாட்டில் புகுந்தனன். அச்சமயம் டில்லியில் அரசு செலுத்தியவன் பெயர் இப்ராஹிம் லோடி. அந்த டில்லியரசிலே உட்பகை நிரம் பிக்கிடந்தது. அதனால் வெகு இலகுவாக, டில்லியை அவன் வசஞ்செய்து கொண்டான். அவன் டில்லியிலே சிம்மாசனம் ஏறிய வருஷம் 1426; அப்பால் ஆக்ரா நகரும் அவனது கைவசமாயிற்று. பிறகு வேறு சில நாடுகளும் அவனை அரசனென அன்புடன் அங்கீகரிக்கலாயின.

அத்தகைய பேபருக்கும் சங்கரசிம்மனுக்கும் 1528-ம் வருஷம் கார்த்திகை மாதம் கடும்போர் நிகழ்ந்தது. மீண்டும் மேல்திசையிலிருந்து முகம்மதியர் தோன்றி, இப்பாரத நாட்டிலே அரசை நிலைநாட்டுவதா என்று சங்கரசிம்மன்

நினைத்தனன். பேபரோ, "நாம் பல முகம்மதிய மன்னவரை எவ்விதமோ அடக்கி விட்டோம். இந்துக்களின் அரஜ்லே மத்தியபதிதான் நடு நாயகமாக விளங்கிவருகிறது. அதனையும் அடக்கிவிடின், தடையின்றி அரசாளலாம்" என்று ஆவல்கொண்டனன். இச் சந்தர்ப்பத்தில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். பேபர் தனது சரிதத்தைத் தானே எழுதியுள்ளான். அதில், "நான் காம்பிலி நாட்டிலிருந்த பொழுது, சங்காசிம்மன் எனக்குத் தூதனுப்பினன். நான் டில்லியின்மீது படையெடுத்து வரின், அவன் ஆக்ராவின்மீது படைகொண்டு செல்வான் என்பதே அத் தூதின் கருத்தாகும். அங்ஙன மிருக்க, நான் டில்லி, ஆக்ரா இரண்டையும் கைப்பற்றிக் கொண்ட பின்பும், அச்சங்கரன் அசையவில்லை" என்று கண்டிருக்கிறது. இதனைப்பற்றி மத்தியபதியின் சரிதத்தில் ஒரு வார்த்தையும் காணப்படவில்லை. பேபரின் சேனைகள், ஆக்ரா, சிகாம் ஆகிய இரண்டு நகரங்களிலிருந்தும் புறப்பட்டு வந்தன. சங்காசிம்மனுக்காக ராஜபுதனத்திலுள்ள அத்தனை வீரரும் திரண்டெழுந்தனர். மத்தியபதி மன்னவன் சேனையிலிருந்தோர், 80 ஆயிரம் குதிரை வீரரும், 20 ஆயிரம் வில்வீரரும் 5 நூறு யானை வீரருமாவர். அப்போரிலே சங்காசிம்மனுக்கு உதவி புரியாத ராஜபுத்திர வீரரோ தலைவரோ இல்லை. சில முகம்மதிய மன்னவரும் மத்தியபதியின் சேனைக்குப் பக்கபலமாகப் போயினர்.

விஜயா என்னு மிடத்திற்கு ராஜபுத்திரச் சேனை சென்றதும், மொகலாயரின் முன்னணிகள் முனைந்து வந்து சங்காசிம்மனைத் தாக்கலாயின. உடனே கடும்போர் தொடங்கியது. அதில் மொகலாய முன்னணித் துருப்

புகள் முற்றிலும் மாண்டு போயின. இரண்டொருவரே உயிர்தப்பிப்போய் உள்ள விஷயத்தை உணர்த்தினர் அம் மொகலாயனுக்கு. உடனே பேபர் மீண்டுமொரு படை வகுப்பையனுப்பினான். அதற்கும் அதேகதிதான் நேர்ந்தது. அது கேட்ட மொகலாயரில் பலர் மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தனர். மற்றுஞ் சில மொகலாயர் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் சேனையை விட்டோடினர்; பேபரின் படைத்தலைவரிலும் இரண்டொருவர் நட்டாற்றில் கைவிடுவதுபோல் அம் மொகலாயத் தலைவனை விட்டகன்றனர். இவ்வளவும் போதாதென மொகலாயரின் சோதிடனோ, "நமக்கு இப்போது நல்ல காலமில்லை; சகுனம் தட்டுகிறது. தோல்விதான் கிடைக்கும், வெற்றி கிடைக்காது" என்று கூறினான். எல்லாவற்றிற்கும் மேலாக, அப் பேபரின் சேனையை ராஜபுத்திரர் நான்கு பக்கத்திலும் சூழ்ந்து கொண்டனர். அதனால் பேபரும் அவனது படை வீரரும் கூண்டிலகப்பட்ட வேங்கையைப் போல் விழித்தனர். அந்நிலைமையில் மொகலாயன் யாது செய்வான்? "டில்லியில் நாம் அரசாளச் சங்காசிம்மன் சம்மதிப்பின், அவனுக்கு நாம் கப்பங்கட்டி வாழலாம். ஆழந்தெரியாம லல்லவா காலிட்டுக் கொண்டோம்? எப்படியாவது உயிர் தப்பினால் போதும். வேற்று நாட்டில் வந்து, இவ்விதம் மாட்டிக் கொண்டோமே" என்று தனக்குத்தானே சிந்திக்கலானான். எதற்கும் தனது தளகர்த்தருடன் கலந்து பேசலாமென அவனுக்குத் தோன்றியது. அவ்வாறே அவர்களை வரவழைத்து ஆலோசித்தனன். அவர்களோ, புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி, என்ற பழமொழிக்கு ஓர் உதாரணமாக விளங்கி நின்றார்கள். அவர்களில் ஒருவராவது,

ஆண்மை காட்டிப் பேசவில்லை; வீரம் விளைப்பதாக வாக்குறுதி தாவில்லை; சமயத்திலே நல்ல யோசனை சொல்லக்கூடிய அமைச்சரும் வாய்திறக்கவில்லை; பெருநிதி படைத்துப் பெருமையுடன் விளங்கிய பிரபுக்களின் முகத்திலும் ஈயாடவில்லை. அதுகண்ட பேபர் அவர்களிடம் வேதாந்த வைராக்கியம் பேசித் தைரிய மூட்டத் தலைப்பட்டான்.

இப் பூவுலகில் உதிக்கும் ஒவ்வொருவனும் ஒரு நாள் இறந்தே தீரவேண்டும். மானிடராகிய நாம் மறைந்த பின்பு, ஆண்டவன் ஒருவனே என்றும் அழியாதிருப்பவன். வாழ்வென்னும் களியாட்டத்தில் மயங்கிக்கிடப்போர் சிரஞ்சீவிகளாக இருக்க முடியாது. மானமிழந்து வாழ்வதை விட மானத்துடன் மரிப்பதே மேலாகும். பூதவுடம்பு போயினும், புகழுடம்பு ஒரு நாளும் போகாது. ஊனமான ஊனிலையிருக்கும் உயிரினைத்துறந்து, மானமாம் பூணைப் பூத்தலே அவனிமேல் எவர்க்கும் வரிசையளிக்கும். அத்தகைய நிலைமையில் ஆண்டவன் நம்மை இப்போது அமர்த்தியிருக்கிறான். போரிலே மாண்டால் வீரசுவர்க்கம் புகுவோம்; வெற்றி பெற்றாலோ இன்னும் சிறப்பாக விளங்குவோம். முன்வைத்தகாலைப் பின்வாங்குவோன் பேடியன்றோ? பின்வாங்கின், வீரருக்கு அது அழகுதான் ஆகுமா? ஆண்மை தான் ஆகுமா? உலகமும் நம்மை நகுமன்றோ?

அவ்விதமெல்லாம் பேபர் வேதாந்தம் பேசிப்பார்த்தான். அவன் துணைவரோ அதற்குக் காது கொடுப்பதாயில்லை. கோழைகளாகவே குன்றிக்கிடந்தனர். அதன்மேல், அவனுக்கும் மனம் தளர்ந்துவிட்டது. இளமைமுதல் பல கஷ்ட நஷ்டங்களுக்கு அவன் ஆளானவனே; ஆயினும், மானிடனன்றோ? ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றான்.

சில தினம் வரையில். அவன் மிக்க தெய்வபக்தி கொண்டவன். உதாரணமாக, டில்லியை அவன் பிடித்தவுடனே, அனைவரும் அவனைப் பாராட்டினர். அப்பொழுது, அவன் "அன்பர்காள்! ஒருவரும் என்னைப் பாராட்டவேண்டாம். எல்லாம் வல்ல ஆண்டவனையே பாராட்டுங்கள்; எனக்கு வெற்றிதேடித் தந்தவன் அவனே. அவன் ஆட்டிவைத்த படியே நாம் ஆடுகின்றோம்." என்று கூறியுள்ளான். அத்தகைய புத்திமானாகிய பேபர் தன் சிந்தாகுல நேரத்திலும் தெய்வத்தை நினைத்து, "எல்லாம் உனது திருவிளையாடல். என்செயலால் ஆவது ஒன்றுமில்லை." என்று துதிக்கலானான். உடனே அவனுக்குத் தைரியம் பிறந்தது. பிறந்ததும், "நம்மிடம் ஏதோ குறையும் பாபமும் உள; அதனால் தான் சுத்தி தடுமாறுகிறது" என்று கருதி நின்றான். மதுபானமென்னும் மாபாவம் தன்னை விட்டகலவில்லை யென அவனுக்கு நன்கு புலப்பட்டது. உடனே, "மனமே! எத்தனை நாள் நீ பாபத்தில் அழுந்திக் கிடப்பாய்? மோகத்திலும் மூழ்கிக் கிடப்பாய்? பச்சாத்தாபமாவது கொள்ள மாட்டாயோ? தீவினையில் மூழ்கி நீ சிதைந்து விட்டனையே! விகாரத்தின் அடிமையாகவும் ஆகிவிட்டனையே! இப்படியா நீ அழியவேண்டும்; இப்பொழுது, மதத்தை நிலை நாட்ட வல்லவா நீ புறப்பட்டுள்ளாய்; ஆதலின் பாவத்தை இன்றோடு விட்டுவிடு. விட்டுவிடின், நீ பரிசுத்தனுவாய், ஆண்டவனது அருளும் கிட்டும்" என்று தாயுமானவரைப்போல் மனத்துடன் புலம்பினன். பின்னர் மதுபானஞ் செய்வதில்லை யென அவனுக்கு வைராக்கியம் பிறந்தது. உடனே அப்பானத்திற்காக வைத்திருந்த தங்கக்கிண்ணம், வெள்ளிக் கோப்பை முதலியவைகளை உடைத்தெறிந்தான்; அத் தங்

கத்தையும் வெள்ளியையும் பக்கிரிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான்; மதுவை நிரப்பி வைத்திருந்த பானைகளை யெல்லாம், பூமியிலே குழிவெட்டிப் புதைத்தான். அவ் விடத்திலே அன்னசாலை யொன்று கட்டிவைத்தான்; அங் ஙனம் அவன் சபதஞ் செய்ததைக் கண்டு, தாகர்த்தரிலும் பிரபுக்களிலும் முந்நூற்றுவர் அவனைப் பின்பற்றி அவ் வாறே சபதங்கொண்டனர். அதுவே சமயமெனக் கண்ட பேபர் மீண்டும் தன் வீரரைக் கூட்டிவைத்து, "வீரர்காள்! நாம் அனைவரும் மதத்துக்காகப் போர்புரிகின்றோம்; அதில் ஆவியைக் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். என் றைக்காயினும் ஒருநாள் இவ்வுடல் அழிந்தே தீரும். ஆனால் ஆன்மா அழியாது. அந்த ஆன்மாவைப்போல் புகழும் இழி வும் என்றும் அழியா? ஆதலின், அல்லாவை நம்பி, மதத்துக் காக உடலைக்கொடுங்கள்" என்று சொல்லியவுடனே, தள கர்த்தர், வீரர், பிரபுக்கள், பக்கிரிகள், அமைச்சர் முதலிய அனைவரும் குர்ஆனைக் கைதனில் தாங்கி, மதத்துக்காக உயிர் துறக்கவும் சித்தமாயுள்ளோம் என்று ஆண்மையும் வீரமும் காட்டிச் சபதஞ் செய்துகொடுத்தார்கள். அதன் பிறகு, பேபருக்குப் புத்துயிர் வந்ததெனலாம்.

மேற்கண்டவாறு பேபரொன்பான ஒரு மாதகாலம் வரையில் கலங்கிக் கிடந்தான். சங்கரசிம்மனே அப்பகை வனது படையின் முன்னணியை இருமுறை வாட்டி வதைத்து, மூலப்படையை வளைத்துக்கொண்டும் வாளா விருந்தானென்றே புலப்படுகிறது. பகைவனைப் புறங்கண்டு, வாகையேசூட விரும்பி நிற்குமொருவன் அங்ஙனம் ஒரு மாதகாலம் வாளாவிருந்த காரணம் யாதோ அறிகிலோம். சங்கரசிம்மன் போரில் பயிற்சி யில்லாதவனல்லன்; மதி

வன்மையும் ராஜ தந்திரமும் நன்கு நிரம்பியவன்; போர் நூலிலும் சாலப் பயின்றவன். ஆயினும் கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே என்னும் பழமொழி பொய்க்குமோ? அச் சங்கரன் மதிமோசம் போனது அவ்வளவு தானோ? தனது படைவீரரில் பலரும் பொன்றிப் பிரபுக்களிலும், பலர் பேதுற்று நின்ற காலையிலே, பேபர் மதிமயங்கிக் கிடந்தானல்லவா? அச்சமயம், "டில்லியாசையும் அதனைச் சார்ந்த நாடுகளையும் அரசாளும் எண்ணம் என்னை விட்டுவிடின், போரை நிறுத்திப் புறங் கொடுத்து, மத்தியபதிக்குக் கப்பங்கட்டி வாழ்ந்து வாவும் காத்திருக்கின்றேன். இதற்கு இணங்கின், நலமாயிருக்கும்" என்று அம்மொகலாயன் தூது விடுத்தான். அந்த உடம்பாட்டுக்கு ராணு சங்கரசிம்மன் மனமொப்பவில்லை. இப்பாரத நாட்டிலே அன்னியவரசை அண்டவிடக் கூடாதென்பதே அச்சங்கரனது கருத்தா யிருந்தது. அது சரியே. ஆயினும், மாற்றாசனை முறியடித்துப் புகழெய்தக் கிடந்த நற்சமயத்தை அவன் கைநழுவ விட்டதின் கருத்தென்ன? பகையரசன் பலங்குன்றி மனங்கலங்கி நிற்குங் காலையில், அவனைத்தாக்கி வாகை பெறுதல் கூடாதெனவோ அவன் கருதி யிருக்கவேண்டும். அது ராஜபுத்திரர்களிடம் காணப்படும் அளவுகடந்த தயாளகுணமே யாகும். அங்ஙனமே பேபரும்கருதித் தனது சரிதையில் பெருமையாக எழுதி வைத்துப் போயுள்ளான்.

படைவீரரும் தளகர்த்தரும் சபதஞ் செய்தபின், பேபருக்குத் தைரியம் பிறக்கலாயிற்று. உடனே அவன் தான் தங்கி யிருந்த இடத்தைவிட்டு, இரண்டு மைல்தூரம் முன்னேறி வந்தான் படைகொண்டு; ராஜபுத்திர வீரரைக்

கொன்றுகுவிக்க, அவ்விடத்திலே பீரங்கிப் படையையும் நியமித்தான். அவ்விதம் பேபர் முன்னேறிவந்த செய்தி மத்தியபதி மன்னவனுக்குத் தெரியவந்தது. அக்கணமே ராஜபுத்திர வீரர் மொகலாயச் சேனையைக் குறுகி, அதனை வலது புறத்திலும் மத்திய பாகத்திலும் தாக்கிப் போர் தொடுத்தனர். பகைவனது பீரங்கிப் படையோ அக் குதிரை வீரர் ஒவ்வொருவரையும் ரணகளத்தில் சுட்டு வீழ்த்திக்கொண்டே வந்தது. அது கண்டும், மத்தியபதி வீரர் மனங்கலங்காது, முன்னேறிச் சென்றனர். அவ்விதம், மீண்டும் மீண்டும் முன்னேறிச் சென்றவர்களில், ஒருவராவது உயிருடனிருக்கவில்லை; அனைவரும் வீர சுவர்க்கமே புகுந்தனர். ஆனது பற்றி அச் சித்தூர் சேனையில் நேர்ந்த சேதம் கொஞ்சமன்று. ராஜ பக்திக்கும் தேச பக்திக்கும் விளைநிலமான மத்தியபதியின் புத்திரர்கள் அவ்வுயிர்ச் சேதத்தை ஒரு பொருட்படுத்தவில்லை. படையனைத்தும் மாண்டுபோக நேர்ந்த காலத்தும், பகைவனை வதைக்க வேண்டுமென்றே முன்னேறி வந்துகொண்டிருந்தனர். சங்கர சிம்மனுக்குத் துணைபுரிய வந்த அரசர் எழுவரும், மகுடவர்த்தனர் ஒன்பதின்மரும், பட்ட வர்த்தனர் ஒரு நூற்றுவரும் அவ்விதமே மாண்டு நின்றார்கள். அவர்களுடைய தேசாபிமானத்தையும் ராஜ விசுவாசத்தையும் நாம் என்னென்று புகழ்ந்துரைப்பது! அவர்கள் வீரசுவர்க்கம் புகுந்ததை விரித்துரைப்பதே சாலும். தங்கபுரத் தலைவனான உதய சிம்மன் தனது வீரர் இருநூறு பெயருடன் ஆவி துறந்தான்; சாலம்பர நாட்டதிபதியான ரத்தினசிம்மன் முந்நூறு பெயருடன் மாண்டுபோனான்; மாருவார ராஜ குமாரனான ரவிமல்லன் தனது தோழருடன்

உயிர் வழங்கினன்; சுவர்ணகிரியின் காவலனுகிய ராம தாஸன் தனது படைவீரருடன் சுவர்க்கமே புகுந்தான்; பௌரகுலத் தலைவனுன கோகுலதாஸன் தனது மரபின் மானத்தை நிலைநிறுத்திக் களத்திலே மடிந்துபோனுன்; சோனக மரபினரான மாணிக்க சந்தன், சந்திரபாணன் ஆகிய இருவரும் அப் படுகளத்திலேயே ஆவியிழந்தனர்; கடைசியிலே டில்லியில் அரசு செலுத்திய லோடி வமிசத் தினனுன ஹுஸேன்கானும் உயிர்வழங்கினன்; அருஞ்சமர் புரிந்து, வீரமே விளைத்து, உயிர்துறந்த வீரரை வரிசை யிட்டுச்சொல்ல இயலாது. ராணு சங்கரசிம்மனும் படுகாய மடைந்து போனுன்; அவ்விதம் தனது பரிவாரத்தில் பலரை யிழந்து, தானும் படுகாய மடைந்து நின்ற காலத்தும், சங்கரசிம்மன் சிறிதும் மனஞ்சலிக்க வில்லை. வெற்றியொன்றையே கருதித் தனது வீரரை உற்சாகப் படுத்தி வந்தனன். அதனுல், மொகலாயச் சேனை முறியடிக்கப்பட்டு வெருண்டோடிப் போகுந் தருணத்தி லிருந்தது. வர்கைகூடும் நேரம் நெருங்கி விட்டதென மத்தியபதி வீரரும் மனமகிழ்ந்து நின்றனர். வேலெறிவந்து தாக்கத்தாக்க வேங்கையின் வீரம் எங்ஙனம் குன்றுதிருக் குமோ, அங்ஙனமே ராஜபுத்திரரின் வீரமும் குன்ருது நிலைநின்று வந்தது. அந் நேரத்திலே, அந்தோ! கோடரிக் காம்புபோன்ற கொடும்பாவி யொருவன் மண்ணுசை கொண்டு, துரோகம்புரியத் துணிந்து விட்டான். அப்பாத கனே சங்கர சிம்மனது படைவகுப்பில் முன்னணியை நடத்தி நின்றவன்; கொடும் போர் புரிந்து, முன்னம் மொகலாயரைக் குமைத்தவனு மாவான். ஆயினும், பல பிரதேசங்களை வழங்குவதாகப் பேபர் சொல்லியனுப்பிய

வுடனே, அப்பாவி தனது படையுடன் அவன்பக்கம் போய் விட்டான். முன்னணியில் நின்று மொய்யமர் முறுக்கிய வன் திடீரென்று மொகலாயனது பக்கம் போயினதைச் செவியிலேற்ற வுடனே, சங்கர சிம்மனது சிந்தை கலங்கி விட்டது. அச் சமயத்தில் மத்தியபதி மன்னவன் என்ன செய்வான்? பின்வாங்கி விட்டான் மனவாட்டத்துடன். மரபைக்கெடுத்த மாபாவி படுமோசம் புரியாதிருந்திருப் பின், மொகலாயனது வாழ்வும் விருப்பமும் அன்றோடு முடிந்திருக்கும். பாரத பூமியிலே அன்னியரின் அரசெது வும் நிலை நின்றிராது; எனினும் தனிப்பட்ட மானிடனைப் போல், ஒரு மரபுக்கும் வாழ்வு தாழ்வு ஆகிய இரண்டும் மாறி மாறி வருமன்றோ? ஒரு தேசத்துக்கும் அங்ஙனமே யாகும். அதனைத் தடுக்க வல்லார் யாவருளர்?

போர் முனையிலிருந்து பின்வாங்கிய சங்கர சிம்மன் சித்தூருக்குச் செல்லாமல், மேவத மலைச்சாரல் சேர்ந்த னன்; மறுபடியும் பேபருடன் போர்புரிந்து, வாகை சூடினாலன்றிச் சித்தூரில் புகுவதில்லை என்று சபதங்கொண் டான். ஆயினும் அச் சபதத்தை நிறைவேற்றும் வண்ணம், இன்னும் சிறிது காலம் அவன் உயிருடனிருக்கவில்லை. அத் தோல்வியைக் கண்டு மனம்பொறாமல் மண்டை வெடித்து, அவன் மண்ணைத் துறந்தனன் போலும். ஒரு சமயம், விஷத்தால் அவனது ஆவி அகன்றதோ என்று ஐயங்கொள்ளவும் இடமுண்டு. இது எங்ஙனமாயினும் சுத்த வீரனான சங்கரன் அதே வருஷத்தில் சிவசங்கர மூர்த்தியின் சீர்பாத மடைந்தனன். அவனது ஆற்றலையும் வீரத்தையுங் குறித்து அவன் பகைவனான பேபரே புகழ்ந்து பேசியிருக் கின்றான். தவிர, அவன் பின்வாங்கிய காலத்தில், அவனைத்

தாத்திச்சென்று, முடிவான வெற்றிபெறவும் பேபர் விரும்ப் வில்லை. எனவே, மீண்டும் சங்காருடன் போர்புரிய அப் பேபர் மனந்துணிய வில்லையென்றே நாம் மதிக்கவேண்டும்.

சங்கா சிம்மன் திடசரீரீ ; பேராற்றல் படைத்தவன்; மிக்க அழகு பொருந்தியவன்; அவன் கண்கள் நீண்டு பரந் திருக்கும். போரிலே அவன் பட்டகாயத்துக்கும் ஊனத் துக்கும் கணக்கில்லை ; தம்பி பிருதிவி ராஜனுடன் போர் புரிந்த சாலையில் ஒரு கண்ணை யிழந்தான் ; டில்லியரசடன் சண்டை செய்ததில் ஒரு கையை யிழந்தான் ; மற்றொரு யுத்தத்திலே பீரங்கிப் பிரயோகத்தினால், உடலிலே அவ னுக்கு ஓர் எலும்பு நொறுங்கிப் போயிற்று. வேல்கம்பினு லும் உடைவாளினுலும் அவனது உடலில் பட்டபுண்கள் ஓர் எண்பதாகும். ஒரு வீரனை அவனது காயத்திலுள்ள காயங்களைக்கொண்டு நன்குமதிக்கலா மென்பர். அங் ஙனம் மதிப்பின், சங்கான் சுத்தவீரனுவான் ; மாளவநாட் டரசனை முஸாபரா அவனுடைய மாளிகையிலேயே சிறை செய்த தீரம் அனைவராலும் போற்றத் தக்கது. எதற்கும் அசையாத கோட்டையெனப் பெயர்பெற்ற ரண தம்பரத்தை அவன் தாக்கிய ஆற்றலைக் கண்டு, அக் காலத்து அரசர் அனைவரும் பெரு வியப்புற்றனர்.

சங்கா சிம்மனுக்கு எழுபிள்ளைகள். அவர்களில் மூத் தவர்களான இருவர் வாலிப வயதடையு முன்பே காலகதி யடைந்தனர். ஆதலின், மூன்றாவது பிள்ளையே பட்டமேறி னன். சங்கா சிம்மனைப்போல், முன் யோசனையும் நிதான மும் தீரமும் வாய்ந்த ஒருவன், அவனுக்குப் பின் அரியணை யில் ஏறியிருப்பின், பேபரின் சந்ததியார் இந்தியாவில் அரசாண்டிருக்க முடியாதென்றே மொழியலாம்.

ராணா ரத்தின சிம்மன் 1530—1535 கி.பி.

மகாராணா சங்கா சிம்மனுக்கு ரத்தின சிம்மன் மூன்றாவது பிள்ளை. மூத்த இருவரும் மாய்ந்து போனதால், மூன்றாவது மைந்தனுக்கு முடிகிடைக்கலாயிற்று. ஆதலின், ரத்தின சிம்மன் 1530-ம் வருஷம் பட்டமேறினான். தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சீலை என்பர். அங்ஙனமே, ரத்தினன் தன் தந்தையைப் போலவே போரில் வல்லவன். போராற்றலும் ஆண்மையும் படைத்தவன்; குலப்பெருமையை இன்னும் வளர்க்கவேண்டுமென்ற கருத்துக்கொண்டவன். ஆனால், பிருதிவி ராஜனைப் போல் படபடப்பும் பதட்டமும் வாய்ந்தவன். பட்டத்துக்கு வந்த காலையிலே அவன் காளைப் பருவத்தினனாக இருந்தான். அப்பருவத்தைக் கடந்து, உலக அனுபவம் நன்கு பெற்று, நீண்டகாலம் உயிருடன் இருந்திருப்பின், தனது தந்தை நிறைவேற்றாது போன சபதத்தை அவன் நிறைவேற்றியிருப்பான்.

சங்கானுக்குப் பல தேவிகள் இருந்தார்கள். பொதுவாக, ராஜபுத்திர மன்னவர் பல மங்கையரை மணப்பதுண்டு. விவாக பூர்வமாக எழுவருக்கு மேற்பட்ட மனைவியரைக் கொள்வதில்லை யானாலும், காமக் கிழத்தியாக வெகு மாதரைக் கொள்வதுண்டு. இரண்டு தாரம் படைத்தவன் படாத பாடுபடுவான் என்பர் பெரியோர். ஆயினும், பலமனைவியரைக் கொண்டு, யாவருக்கும் மனத்தாங்கலின்றி, அனைவரையும் சமரஸப்படுத்தி, அரண்மனையை நடத்த முடியாதவனா அரசை நேர்மையாக ஆள முடியும் என்று ராஜபுத்திரர் விளம்புவது வழக்கம்.

தன் பிள்ளையே முடிசூடிப் பட்டத்துக்கு வரவேண்டு மென்று தாய் விரும்புவது உலக இயற்கை. சங்கரன் மனைவியரில் ஒருத்தி, தனது குமாரனே முடிதரிக்க வேண்டுமென்று கருதினள். ஆயினும், உயிருடனிருக்கும் புதல்வரில் மூத்தவனுக்கே முடிசூட்டுவது வழக்கம். அதனை முற்றிலும் மதியாத அம் மங்கை தனது மகனைப் பட்டத்தி லேற்றக் கருதி அப்பேபரின் உதவியை நாடினள். அதற்கு ஈடாக, ரணதம்பரம் என்னும் பிரதேசத்தைத் தந்து, வெற்றியின் அடையாளமாக மாளவ மன்னனிடமிருந்து பறித்த கிரீடத்தையும் கொடுப்பதாகச் சொல்லி ஒரு தூதனுப்பினாள். இதற்கு மந்திரி யொருவனும் உடந்தை யாக இருந்தனன். ஆனால் பேபரோ அதற்கு இசைய வில்லை. ராஜபுத்திர வீரரின் போராவேசத்தால் வேசாறிப் போனவன் மீண்டும் அவர்களுடன் மல்லுக்கு நிற்க மன மொப்பவில்லை யென்றே கூறவேண்டும். இது நிற்க, மாளவ மன்னனான முகம்மது என்பான் சங்கா சிம்மனிடம் சிறைப் பட்டுக்கிடந்து, அப்பால் விடுதலை பெற்றன னென்றும், சங்கரனது பெருந்தன்மையால் அவனுக்கு மீளவும் அந் நாட்டரசு கிடைத்த தென்றும், முந்திய சரிதத்தில் சொல்லியுள்ளோம். சங்கானுடைய தயவால் தனக்கு உயிர்ப்பிச்சை கிடைத்ததென்பதை அவன் மறந்து விட்ட னன். அன்றியும், ரத்தின சிம்மனது வீரதீரத்தையும் உணரவில்லை யென்று காணுகின்றது. ஆதலின், அவன் ஒரு பெரும்படை திரட்டிவந்து, மத்தியபதியைத் தாக்கலா னான். புலிக்குப் பிறந்தது பூனையாகி விடாது. அங்ஙனமே சங்கரனுக்குப் பிறந்த பிள்ளை பேடியா யிருக்குமோ? அம் முகம்மதின் நன்றிமறத்தலைக் கண்டதும், ரத்தின சிம்ம

னுக்குச் சினம் பொங்கியது. பொங்கவே, பெரும்படையுடன் சென்று சமர்புரிந்தான். மத்தியபதி வீரர் முன்னே, முகம்மது நிற்க முடியவில்லை. தலைதப்பினால் போதுமென வந்தவழியே ஓடினன். அவ்விதம், ரத்தினன் வெற்றிபெற்ற பின், பொல்லாத காலத்தினால் அவன் கடும்பகைதேடிக் கொண்டான். அதற்கு அவனது மதியீனமே காரணம்.

அக்காலத்திலே ஜயபுரி நாட்டில் அரசு செலுத்தியவன் பெயர் பிருதிவிராஜன். அவனுக்கு மிக அழகு வாய்ந்த மகளொருத்தி யிருந்தனள். பட்டத்துக்கு வருமுன்பே ரத்தினனுக்கும் அவளுக்கும் காந்தருவ முறையில் அந்தரங்க விவாகம் நடந்திருந்தது. அதனை யாரும் அறியார். ரத்தினன் பட்டத்துக்கு வந்ததும், அவளை முறைப்படி பகிரங்கமாக மணந்துகொள்ளவில்லை. அச்சமயம் பூண்டி என்னும் நாட்டை யாண்டு வந்தவன் ராவ் சூரியமல்லன் எனப்படுவான். இவனுக்கு அந்த அந்தரங்க விவாக விஷயம் தெரியாது. ஆதலின் அப் பெண்ணைச் சூரியமல்லன் மனைவியாகக் கொண்டனன். சூரியனது புகழ் சூரியனைப் போல் பரந்திருந்ததனால், ஜயபுரி மங்கையும் அவனையே ஆசையுடன் மணாளனாகக் கொண்டு, அகமகிழ்ந்தாள். அக்காலத்தே, பூண்டி, ஜயபுரி, முதலிய நாடுகள் மத்தியபதியின் சிற்றரசுகளே. எனவே, "நம் சிற்றரசு ஒருவன் நமது காதலியைக் கைபிடித்தனன் அல்லவா" என்று ரத்தினசிம்மனுக்கு மிக்க கோபம் மூண்டுவிட்டது. ஆயினும், அதனை அவன் அச்சமயம் அடக்கிக்கொண்டு, சமயம் பார்த்திருந்தான் பழி வாங்க. ஈதிங்ஙன மிருக்க,

அச்சூரியமல்லனது தங்கை சூரியபாய் எனப்படுவாள். அவளை ரத்தினன் மணந்திருந்தான். ரத்தினனது சோதரி

யோ சூரியமல்லனுக்கு வாழ்க்கைத்துணையானவள். அந்த உறவுடன், சிற்றரசு என்ற முறையிலும், சூரியமல்லன் பன்முறை சித்தூர் அரண்மனையில் தங்கியிருப்பதுண்டு. கஞ்சா குடிப்பதில் அவன் யாவரையும் விஞ்சிவிடுவான். ஒருதினம் அக் கஞ்சா மயக்கத்தினால் அவன் சித்தூர் அரண்மனையில் அயர்ந்து தூங்கியிருந்தனன். அப்பொழுது மத்தியபதியின் பாளையப்பட்டுகளில் ஒருவன், விளையாட்டாக ஒரு துரும்பை எடுத்து, அவனது காதிலிட்டுக் குடைந்தனன். உடனே சூரியமல்லன் துயிலுணர்ந்து, தன் வாளையெடுத்து வீசினன் வேகமாக. அவ்வளவிலே அப் பாளையப்பட்டின் மண்டை பூமியில் புரண்டது. விளையாட்டே வினையாய் முடிந்ததென்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ? தந்தை கொலையுண்டதைக் கண்டு தனயன் வாளாவிருப்ப தெங்ஙனம்? பழி வாங்குவதைப் பரம கடமையாகக் கொள்ளுதல் ராஜபுத்திரரின் இயற்கை. அதன்படி அப் பாளையப்பட்டின் மைந்தனுக்கும் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற உணர்ச்சி யுண்டாகி, ஓங்கி வளர்ந்தது. அதனால், அவன் தன் வேந்தனான ரத்தினனை யடைந்து, "அரசே! சூரியமல்லன் நமது அரண்மனையில் அடிக்கடி தங்கிக் கிடப்பதற்கு ஏதோ விசேஷ காரண மிருக்க வேண்டும். அந்தப் புரத்து அழகுதனில் அவனது சிந்தை செல்கின்றது போலும்" என்றுரைத்தனன். அவ்வுரையோ எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றியது போலாயிற்று. ஒரு பிழையுடன் இன்னொரு பெரும் பிழையும் கூடிக் கொண்டது; ஆதலின் பழிவாங்கியே தீரவேண்டுமென ராணா ரத்தின சிம்மன் இன்னுமதிகமாய் வைரங் கொண்டு விட்டான். அவ்வேந்தனது கோபக் கனலை

வளர்க்க மற்றொன்றும் நிகழ்ந்தது. ஒருதினம் சூரியபாய் தனது புருஷனுக்கும், சகோதரன் சூரியமல்லனுக்குமாகத் தனது கையால் சிற்றுண்டி செய்துவைத்து, இருவரையும் அழைத்து, அதனைப் பரிமாறினள். ராஜபுத்திர மங்கையர் தம் கணவனுடன் உடன்கட்டை யேறும் பத்தினிப் பெண்டிராயினும், பிறந்தகத்தின்மீது பெரும்பற்றுள்ளோ ராவர். அப்பற்று இக்காலத்தே நம் தமிழ் மாதரிடமும் காணப் படும். இருவரிலே சூரியமல்லன் மகா பலவான்; மிக்க உணவும் உண்பான். அவ் விருவரின் பரிகலங்களையும் எடுத்துச் சுத்தஞ் செய்கையில், "என் சகோதரன் புலி போல் உணவனைத்தையும் புசித்திருக்க, என் காதலனோ பாலனைப்போல், உணவை உட்கொள்ளாது, அங்கு மிங்கும் இறைத்திருக்கின்றான்" என்றனள். சோதரனை மதிப்பாகப் பேசிக் கணவனை அவமதிக்க வேண்டுமென்ற கருத்துடன் அவள் அவ்விதம் கூறவில்லை; மனம் மாறுபட்டுள்ள ரத்தின னுக்கோ அது, வேண்டுமென்று விளம்பிய அவமானமாகக் காணப்பட்டது. அவளது நாவில் சனிபகவான் வீற்றி ருந்து அவளை அவ்வண்ணம் விளம்பச் செய்தான்போலும்! கோபக்கனல் கொழுந்துவிட்டு எரிந்ததாயினும், அக்கணத் திலேயே பகையை முடிக்க ரத்தினன் துணியவில்லை.

அப்பால், வசந்த காலம் வந்தது. அப்பொழுது, ராஜ புத்திரர் அனைவரும் தவறாது வேட்டையாடுவர். அவ் வேட்டைக்கு நந்ததம் என்னும் வனம் வருவதாக ரத்தினன் சொல்லினன் சூரியனிடம். வசந்தகால வேட்டையிலே மத்தியபதி மன்னவனும் பூண்டியரசனும் கூடிக் கலந்து கொள்ளின், அது அனர்த்தமாகவே முடியுமென ஒரு சாபம் உண்டு. அதன் விவரம் முந்திய கதை யொன்றில்

கூறப்பட்டுள்ளது. அச்சாபமிருந்தும், ரத்தினசிம்மன் வேட்டைக்குப் போயினன். அவனுடன் அப் பாளையப்பட்டின் புதல்வனும் போனான். அனைவரும் அவ்வனத்தே வேட்டையாடிக் களித்து நிற்கையில், "அதோ முள்ளம் பன்றி வருகிறது; உடனே அதனைக் கொல்லவேண்டு" மென்றான் ராணா ரத்தினன். அவ்வளவிலே அப் பாளையப்பட்டின் பிள்ளை, சூரியமல்லனைக் குறிபார்த்து ஓர் அம்பு எய்தனன். சூரியமல்லனோ கழுகுபோல் கூரிய கண்ணுடையவன். ஆதலின், அம்பு வருவதை யுணர்ந்து, அதனைத் தன் அம்பினால் அழித்துப்போட்டான். வஞ்சனையாக அம்பு வந்ததை அவன் அறியான். எனவே, தற்செயலாக அம்பு தவறிவந்து நம்மைக் குறிகொள்ளலாயிற்று என்றே கருதி யிருந்தனன். பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம், ராணாவின் தோழனும் ஓர் அம்பை எவினான் அச் சூரியமல்லனது மார்பைக் குறிகொண்டு. அப்பொழுதுதான் வஞ்சனை யுளதென அச் சூரியனுக்குப் புலப்பட்டது. அவ்வம்பையும் அவன் முன்போலவே முறித்தெறியத் தவறவில்லை. உடனே ரத்தினன் தனது குதிரையின்மீது வேகமாக ஏறிச்சென்று, அவனை வாளால் வெட்டித் தள்ளினன். தள்ளவே அவன் படுகாயமடைந்து பூமியில் சாய்ந்தான். என்றாலும் அரை நொடியில் எழுந்துநின்று, தனது மேலாடையினால் காயத்தைக் கட்டிக்கொண்டு, "ராணா ரத்தின சிம்ம! நீ இப்போது தப்பி யோடிவிடலாம்; ஆனால் உனது கொலைத்தொழில் காரணமாக, மத்தியபதிக்கே நாசமூட்டிவிட்டாய் என்பது மட்டும் நன்கு ஞாபகமிருக்கட்டும்" என்று கூவினன். அப்பொழுது, ரத்தினனைத் தொடர்ந்துவந்த பாளையப்பட்டின் மைந்தனோ, "மன்னவ! சூரியனுக்கு இன்னும் உயிருளதே"

என்று கூறினன் இரக்கமின்றி. உடனே ராணு ரத்தினன் விரைந்து வந்து, காயமுண்டு சாய்ந்து கிடக்கும் சூரியனை மறுபடியும் தாக்கலானன். அவ்வளவில் சூரியனே ரத்தின னது உடையைப்பிடித்திழுத்து, அவனைக் குதிரைமீதிருந்து கீழே தள்ளி, அவன் மார்பின்மீது அமர்ந்து கொண்டு, ஒரு கையால் அவனது குரல்வளையைத்திருகி, மற்றொரு கையை நீட்டித் தனது கட்டியை எடுத்தான் குத்திக் கொல்ல. என்ன வைரம்! என்ன வைரம்! முடிவில் இருவரும் மாண்டுபோயினர். அக்கணமே அரசன் கொல்லப்பட்டான் என்ற செய்தி புண்டிக்குப் பறந்தது. சூரியனது தாயின் காதிலும் அது எட்டியது. உடனே அத்தாய், "என் மைந் தன் மட்டுமா இறந்துபோனன்? தன் பகைவனும் அவன் கொல்லவில்லையோ" என்று கவலையும் ஆவலுங் கொண்டு வினவினள். பகையைக் கொன்றபின்பே, புத்திரன் பொன் றினன் என்று தெரியவந்ததும், அவளது மனம் ஒருவாறு ஆறுதலடைந்தது. பின்னர் அவ் விரு வேந்தரின் தேவி யரும் தத்தம் கணவருடன் கட்டையேறினர். அவ்விடத்தே அதன் அறிகுறியாகச் சிலைகள் அடித்து வைக்கப்பட்டன.

ராணு ரத்தின சிம்மன் ஐந்து வருஷகாலமே அரசு செலுத்தியிருந்தான். தன் தந்தையின் வைரியான பேப ரைப் புறங்காண வேண்டுமென அவனுக்கு மிக்க ஆவலிருந் தது. அம்முரிய காரியங்களைச் செய்யுமுன், அனங்கனது வலையில் சிக்கி உழலலாயினன். பட்டமேறியதும் அப் பெண்ணை அவன் உலகறிய மணந்திருந்தால், அத்தகைய அனர்த்தம் நேர்ந்திராது. அம்மங்கையும் தனது அந்த ரங்க விவாகத்தை மதித்து, மறுமணத்தை மறுத்திருப் பின், அப்படுகொலை விளைந்திராது.

ராணு விக்கிரமஜித்தன் 1535—1541.

இரத்தின சிம்மன் ஆவி நீங்கியதும், அவனது சகோதரனுன விக்கிரமாதித்தன் என்பான் பட்டமேறினன். அவனுக்கு விக்கிரமஜித்தன் எனவும் வேறொரு பெயருண்டு. சித்தூரின் துர்ப்பாக்கியத்தால், அவன் அரசாள வந்தனன் போலும். ஏனெனில், அவனிடம் அரசுக்குரிய நேர்மையுமில்லை ; நியதியுமில்லை. சிற்றரசுகளையும் பாளையப்பட்டுகளையும் அவன் சிறப்பாக நடத்தவில்லை. கடுகடுப்பும் படபடப்பும் மனே விகாரமுமே அவனிடம் நிரம்பிக்கிடந்தன. இரத்தின சிம்மன் அனங்கனது வலையில் சிக்கி உழன்றனனுயினும், அனைவரையும் அவன் ரமிக்கச் செய்து வந்தான். விக்கிரமனே அனைவரையும் வெறுக்கச் செய்யும் குணக்கேடே கொண்டிருந்தனன். அரசவையில் வீற்றிருந்து அவன் அரசியலைக் கவனிப்பதில்லை. மல் யுத்தத்தைக் கண்டு மகிழ்வதிலும், கோழிச்சண்டையைக் கண்ணுற்றுக் களிப்பதிலுமே காலங்கழித்து வந்தான்.

அரசனுயிருப்போன் அங்ஙனம் இருப்பின், யாருக்குத்தான் அவனிடம் அன்பும் மரியாதையும் இருக்கும்? குடிமக்கள் அவனை வெறுத்தனர் ; சிற்றரசுகளும் பாளையப்பட்டுகளும் அவனது செயலைக்கண்டு சிந்தை கலங்கினர். போதாக்குறைக்கு விக்கிரமன் அவர்களது பகைநோயை இன்னும் பெருக்கி வந்தான். ராஜபுத்திர வீரர் வேல்களைத் தாங்கிக் குதிரைமீதிருந்து போர் புரிவதையே பெருமையாக மதிப்பர் ; நிலத்தில் நின்று சமர்புரிவதில் அவர்களுக்குச் சிறிதும் விருப்பமிராது. கோட்டைகள் தாக

ளாக்கப்படும்காலத்தில்தான், பரியைவிட்டிறங்கி அவர்கள் போர்புரிவார்கள். ஆதலின் அக்காலத்தே ராஜபுதன நாடுகளில் குதிரைப் படைதான் அதிகம்; அப்படையே சீரும் சிறப்பு முடையது. அங்ஙன மிருக்கையில், விக்கிரமனோ அதற்கு நேர்மாறாக நடக்கலானான். குதிரைப்படையில் அவனுக்கு வெறுப்புத் தட்டியது. ஆதலின், காலாள் படையையே பெருக்கினான்; குதிரை வீரர் பணத்துக்காகப் போர்புரிவதில்லை; தங்களுக்கு விடப்பட்டுள்ள மானியங்களுக்காகவே சமர்செய்வர். பாளையப்பட்டுகளும் தங்களுக்குக் கிடைத்துள்ள நிலங்களின் தொகைக்கு ஏற்றவாறு, வீரருடன் சென்று சமர் செய்வதே வழக்கம். அதனால், அவர்களிடம் தேசாபிமானமும் ராஜபக்தியும் நிரம்பியிருந்தன. மாதச் சம்பளத்துக்காகப் போர்புரியும் காலாளரிடம் அத்தகைய மேன்மைக் குணம் காணப்படுவது அருமையாகும். அங்ஙனமிருக்கக் காலாட்களையே விக்கிரமன் கனப்படுத்தினான்; குதிரைவீரரைப் புறங்கணித்து வந்தான். அதனால், மரபின் பெருமையும் போரில் முறைமையும் அவமதிக்கப்படுவதாகப் பலரும் கருதி விட்டனர்.

பாளையக்காரரின் பேருதவியால் அரசு நடந்துவரும் பொழுது, அவர்களின் மனப் போக்கையும் விருப்பையும் மதித்து அரசு நடத்தல்வேண்டும். அங்ஙனமாயின், அரசன் போற்றப்படுவான்; அவர்களை அலட்சியஞ் செய்யின், எங்ஙனம் அவர்கள் அரசனைப் போற்றிவர முடியும்? அவர்களின் மனம் நோகும் வண்ணம், விக்கிரமன் நடந்துவரவே, நாட்டின் நன்மை குன்றத்தலைப்பட்டது. காவலும் ஒழுங்கும் குலைந்துபோகலாயின; வேந்தனுக்கும் வீரருக்கும் இடையே வெறுப்புத் தோன்றி யிருப்பதைக் கண்டு மலை

நாட்டு வாசிகளான, மேரவர், மீனவர் முதலிய முரட்டு ஜாதியினரோ கொள்ளையிலும் கொலையிலும் கூசாமல் இறங்கிவிட்டனர்; ஆதலின் குடிமக்களது ஆடுமாடுகள் களவு போயின; சுருங்கச் சொல்லின், மத்தியபதியின் மகிமை மங்கலாயிற்று. அதனால் குடிமக்கள் யாவரும் கும்பலாக வந்து, விக்கிரமனிடம் தங்கள் குறையை முறையிட்டுக் கொண்டனர். விநோத விளையாட்டுக்களில் வீழ்ந்துகிடந்த விக்கிரமனோ தனது பாளையக்காரரை ஏவினான். அதற்கு அவர்கள், "குதிரைவீரர் பயன்படுவரோ? கனம்பெறும் காலாட்கள் இல்லையோ?" என்று இலேசாகச் சொல்லி விளும்பப் பேசாமலிருந்து விட்டனர்.

அச்சமயம் கூர்ஜஜர நாட்டில் அரசு செலுத்தியவன் பெயர் பகதூர் கான். அவன் முன்னம் பிருதிவி ராஜனால் சிறை செய்யப்பட்ட முஸாபரின் மைந்தன்; முன்னம் தன் தந்தைக்கு நேர்ந்த கதியை நினைத்து நினைத்து, அவன் வருந்தி நின்றது இவ்வளவு அவ்வளவு அன்று. ஆதலின் பழிவாங்க வேண்டுமென அவனுக்கு மிக்க ஆத்திரம் இருந்து வந்தது. அதற்காக அவன் காலங் கருதியிருந் தான். அவ்விதமிருக்கும் சமயத்தில், நடுநாட்டின் சீர் கேட்டை அவன் அறியலானான். அறிந்ததும், இதுவே தக்க சமயமென அவனுக்குத் தென்பட்டது. ஆயினும் துணை யின்றிச் சென்று போர்புரிய அவன் மனம் துணியவில்லை; மத்தியபதியின் வீரரை முறியடிக்க, மிகுந்த பலம் வேண்டு மென விரும்பினன். உடனே அருகிலுள்ள முகம்மதிய நாடுகளை நாடினன் துணைக்காக. அவ்வரசுகளுக்கும் மத்திய பதியினிடம் நீண்டகாலமாகப் பொறாமை யுண்டு. தவிர, தலைவணங்காமல் மத்தியபதி வாழ்ந்து வருவதைக் கண்டும்

அவைகள் உள்ளூரப் பொறுமியிருந்தன, அதனால், பகதூர் ஷாவுக்கு அந்நாடுகள் பக்கபலமாயின. உடனே அவன் பெரும் படையுடன் மத்தியபதியை நோக்கி வந்தான். அச்சமயம் விக்கிரமனோ களியாட்டத்துக்காகப் பூண்டி நாடு போயிருந்தனன். பகையரசர் வந்துவிட்டதை யறிந்ததும், பெரும் படை யொன்று திரட்ட அவனுக்கு அவகாசமில்லை. அவகாசம் இருந்திருப்பினும், அக் குதிரைவீரர் தமக்கிருந்த மனநோயால் தலைகொடுக்க வாரார் என்பதும் திண்ணம். சம்பளத்துக்காகச் சேவகம் செய்யும் சிறிய காலாட்படையையே அவன் திரட்ட முடிந்தது. பகைவனிடம் பெரும்படை யிருப்பதையும், தன்னிடம் மிகச் சிறிய படையே இருப்பதையும், அவன் உணர்ந்துகொண்டனன். ஆயினும் அவன் ராஜபுத்திரனல்லவா? குலத்துக்குரிய வீரமும் வலியும் அவனுக்குத் துணையாக நின்றன. அத்துணையையும் படையையுங் கொண்டு, அவன் போருக்குப் புறப்பட்டான். காலாள் வீரரோ அவ்வளவு தேசாபிமானங் கொண்டு சண்டை செய்யவில்லை. தவிர அவர்கள் பெரு வெள்ளத்துக்குமுன் தோன்றும் கண்ணிவாய்க்கால்போல் கலங்கி விட்டனர். என்னசெய்வான் விக்கிரமன்? ஏங்கிப் போய்ப் பின்வாங்கினன் அச்சேனைக்கஞ்சி. உடனே முகம்மதியச் சேனையோ சித்தூரை நோக்கி வந்துவிட்டது. சித்தூருக்கு ஆபத்தென்று தெரியவந்தால், மத்தியபதி வீரர் மட்டுமேயல்லாமல், ராஜபுதன வீரர் அனைவருமே திரண்டு வருவர். மேலும், அன்னிய மதத்தினர் படை கொண்டு வந்துளரெனின், ராஜபுத்திரரில் ஒருவரும் வாளா விரார். அத்தகைய சிறப்பு சித்தூருக்கு மட்டுமே உண்டு. அவ்வரிய நகரைக் காக்க வந்தவர்களில், யாரை முன்மை

யாகக் கூறவேண்டுமென்றால், பூண்டி நாட்டரசன் அர்ச்சுன சிம்மனையே சுட்டிச் சொல்லவேண்டும். அந்த அர்ச்சுனனுக்கு முன்னம், அரசாண்டுவந்த சூரியமல்லனுக்கும், மத்தியபதி மன்னவனாயிருந்த ரத்தின சிம்மனுக்கும் கடும் பகை யிருந்து வந்ததையும், அதனால் அவ்விருவரும் ஒருவரை யொருவர் கொலை புரிந்துகொண்டு ஆவி நீங்கினரென்பதையும், முந்திய கதையில் கூறியுள்ளோம். எனினும் பழிக்குப் பழிவாங்கியாய் விட்டதென்றால், ராஜபுத்திரரின் வைரம் பறந்து போம். அர்ச்சுனஹரன் சித்தூரின் சிற்றரசன் என்பதோடு, சங்கா சிம்மனுக்குத் தன் சகோதரியை மனைவியாகக் கொடுத்திருந்தவனு மாவான். அச்சோதரியின் வயிற்றிலே உதயசிம்மன் என்னும் குழந்தையும் உதித்திருந்தது. அச்சிசுவே பட்டத்துக்குரிய இளவரசுமாகும்.

இரண்டாவதாக, பாகசிம்மனைச் சொல்ல வேண்டும். அவன் யாரெனில், சங்காசிம்மனது தம்பியான பிருதிவிராஜனுடன் போர்புரிந்து, மத்தியபதியின் அரசாக விரும்பிப் பெருமுயற்சி புரிந்த சூரியமல்லனது பிள்ளை. எனவே அவனிடமும் தாயாதிக் காய்ச்சல் இருந்திருக்க வேண்டும். ஆனாலும், சித்தூருக்கு ஆபத்து என்று கேட்டவுடனே அவனும் தலைகொடுக்க வந்தான் சிறிதும் தயங்காமல். சிறிது காலத்துக்குமுன் பரம வைரிகளா யிருந்த இரண்டு குடும்பத் தலைவர்கள் அங்ஙனம் தேசாபிமானத்தால் இரத்தஞ் சிந்த வந்தனரென்றால், மற்ற ராஜபுத்திர வீரரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? விக்கிரமனது விபரீதத்தைக் கண்டு, வேறுபட்டு நின்ற சிற்றரசரும் பாளையக்காரரும் பரிவுடன் விரைந்து வந்தனர் சித்தூரைப் பாதுகாக்க. நமது மத்திய இந்தியாவிலுள்ள முகம்மதிய அரசுகள் பல

வும் ஒன்றுகூடி, மிகவும் முனைந்து, சித்தூரைச் சீரழிக்கக் கருதியது இதுவே முதல் தடவை. அப் பழம்பகையைப் பாழ்படுத்தியே தீருவதென அப்பகைவர் கோபவெறி கொண்டு நிற்கலாயினர்; ராஜபுத்திரரோ, தம் குலத்தினரின் நடுநாயகமான நகரத்தை முடிவுவரையில் காத்தே தீருவதெனக் கங்கணம் கட்டிக்கொண் டிருந்தனர். இரு திறத்தினருக்கும் மதவைரமும் மிகுந்து நின்றது. ஆனது பற்றி, அச்சண்டை மிகவும் மூர்க்கமாகவே நடந்துவரலாயிற்று. ராஜபுத்திர வீரரைவிட அம் முகம்மதியர் பீரங்கிப் படையில் வலுத்திருந்தனர். தவிர, கோட்டைச் சுவர்களிலே பகைவர்கள் சுரங்கம் வைத்தார்கள். பீரங்கிப்படை ஒருபுறம் அக் கோட்டையைத் தகர்க்க, அச் சுரங்கமும் மற்றொருபுறம் திடீரென வெடிக்கலாயிற்று.

மலை யுச்சியின்மீது கல் பாறைகளால் கோட்டை கட்டப்பட்டிருந்தும், சுரங்கவெடியின் அதிர்ச்சியால் ஓரிடத்திலே ஐம்பது கஜ தூரம் பிளவு ஏற்பட்டுவிட்டது. சுத்தவீரனான அர்ச்சுனசிம்மன் தனது துணைவர் ஐந்நூறு பெயருடன் அப்பிளவைக் காத்து நின்று, உட்புகா வண்ணம் பகைவரை வழிமறித்தான். அதனால் அங்கே கைகலந்த கடும்போர் நடந்தது. தன் துணைவரில் பலர் இறந்தும், அர்ச்சுனன் மனமசையவில்லை. உடலெங்கும் அம்புதைத்து, ஆறாக உதிரம் பெருகி, மூர்ச்சை யடைந்த காலத்திலும், கர்ணன் சலியாது போர்புரிந்தது போலவே, அர்ச்சுனனானும் வாட்போர் புரிந்து பலரை வெட்டிவீழ்த்தினான். ஆயினும், மற்றொரு சுரங்கம் வெடிக்கவே, அவனும் அவன் துணைவரும் பாறையுடன் பாறையாகத் துகளாயினர். அர்ச்சுனனது ஆற்றலுக்கும் இணை யுண்டோ?

பின்பு, ராவ் துர்க்கன் என்னும் சிற்றரசன் பல வீரருடன் அப்பிளப்பினிடையே வந்துநின்று, முகம்மதியரில் பலரை மாய்த்தான். முடிவில் அவனும் தன் தோழருடன் மாண்டு போகும்படி நேர்ந்துவிட்டது. அங்ஙனம் வீரரிலே பலர் ஓயாது மடிவதைக் கண்டு, மற்றவர்களுக்கு மனஞ் சலிக்குமோ என்று கருதிய ஜாவேரிபாய் என்னும் அரசியோ, ஆடவருடை தரித்து, மார்பகத்தே வீரகவசம் பூண்டு, பெரு வீரருக்குத் தலைவியாகநின்று, கடும்போர் புரிந்து பகைவரிலே பலரைப் பலிகொண்டனள்; முடிவிலே அவளும் முகம்மதியரால் மாய்க்கப்பட்டு, மாநிலத்திலே சாய்ந்து போனாள். அதுகண்ட வீரருக்கோ முன்னையினும் பன்மடங்கு வீராவேசம் ஓங்கிவளர்ந்துவிட்டது. அதனால் ஒவ்வொருவரும் உயிரைத் துரும்பாக மதித்து, ஒரு சிறிதும் தளராமல் ஆருயிரைக் கொடுத்தனர். அத்தகைய கொடும் போரிலே, தலைவர்பலரும் பொன்றிவிடவே, உயிர் தப்பி நின்றவர்களின் தொகை வெகுகொஞ்சமே. ஆதலால் சித்தூர்க் கோட்டை வீழ்ந்துவிடுமென வீரானைவருக்கும் புலப்பட்டது. பகைவரோ ஒவ்வொரு நிமிஷமும் முன்னேறி முனைந்து வந்துகொண்டிருந்தனர்.

அச்சமயம் விக்கிரமஜித்தன் சித்தூரில் இல்லை; பின் வாங்கிச் சென்றவன் எங்ஙனம் சித்தூரை நோக்கமுடியும்? அந்நகரம் பகைவர்கையில் வீழ்வதா யிருந்தால், முடித்தலையொன்று பலிகொடுக்க வேண்டும்; அவ்விதம் பலி கொடுத்தாலன்றி, அதனை அப்பால் மீட்கப் பத்திரகாளியின் அருள் கிட்டாது. அதுபற்றியே, முன்னம் ராணு இலட்சுமண சிம்மன் தன்னையும் தன் பிள்ளைகளையும் சேர்த்து, 12 முடித்தலைகள் பலிகொடுத்தான். இதன் விவரம் முன்பே ஓரிடத்

தில் விரிவாகச் சொல்லப்பட்டுளது. அவ்வாறே இப்பொழுதும், முடித்தலை கொடுக்க வேண்டுமென்று, எஞ்சியிருந்த ராஜபுத்திரர் கருதினர். பலியாவான் ராஜ வம்சத்தானாக இருத்தல வேண்டும். அதற்கு யாருளர் என்று எல்லாரும் கலங்கிநிற்கையில், சூரியமல்லனது பிள்ளையான பாகசிம்மன் தன் இனத்தினரை நோக்கி, "வீரர்காள்! ஏன் நீங்கள் கலங்கவேண்டும்? சித்தூருக்காக எனது சிரத்தைப் பலியிட நான் சித்தமா யிருக்கின்றேன். நமது குலத்தைச் சேர்ந்த விராதிவீரர்களெல்லாரும் மடிந்தபின்பு, உயிர்வாழ எனக்கு மனமில்லை. இப் போரிலே இறப்பதில் எனக்கு மிக்க விருப்பம் உளது. அங்ஙனமின்றி, யான் எங்ஙனம் வீர சுவர்க்கம் செல்ல முடியும்? எனது மரபையும் ராஜவம்சத்தையும் எவ்விதம் யான் காக்கமுடியும் உயிர்கொடாது" என்று தீரமுடன் கூறினன். உடனே அவனுக்கு முடிசூட்டப்பட்டது. ராஜ மரியாதைகளான குடை, கொடி, சாமரம் முதலியன அவனை அலங்கரித்து நின்றன. அவனைப் பலியிடுமுன், தீக்கடவுளை அவர்கள் களிப்பிக்க வேண்டி யிருந்தது.

அக்காலத்தே முகம்மதியர் ஒரு நாட்டின்மீது வெற்றி கொண்டால் அதன் அறிகுறியாகப் பலமங்கையரைச் சிறை செய்து, மனைவியராகக் கொண்டு மனமகிழ்வதுண்டு. அவ்விதமே சில மங்கையரை முன்னம் அவர்கள் சிறைசெய்து, ஆசியாத்துருக்கியிலுள்ள பாக்தாத் சுல்தானுக்கு அனுப்பியுளர். பகைவராகப் போர்புரியும் முகம்மதிய மன்னரோ மகா மூர்க்கத்துடன் நிற்பதனால், மங்கையரை மானபங்கப் படுத்தாம லிரார். ஆதலின், சித்தூரிலுள்ள மங்கையர் பலரும் தீயில்குளித்து மானத்தைக் காத்துக்கொள்ள முற்பட்டனர். அவ்வளவில் பெண்மக்கள் அனைவரும்

துநீராடிப் பட்டாடைகளைப் பாங்காக உடுத்தி, மஞ்சளும் குங்குமமுமணிந்து, அக்கினி குண்டத்தையணுகினர். உதய சிம்மனது தாயும் அர்ச்சுனஹரனது தங்கையுமான ராணி கர்ணவதி என்பாள் 13 ஆயிரம் பெண்மணிகளுக்கும் முதலில் சென்று, அக்குண்டத்தில் குளித்து ஆவிநீத்தனள்; பின்பு அத்தனை பெயரும் அவளைத் தொடர்ந்தனர் தீக் குழிக்கு. தீயில் குளிக்க மனமில்லாதவர்களோ விஷமுண்டும், ஈட்டி கொண்டு குத்திக் கொண்டும், உயிரை விட்டனர்.

அப்பால் ஆடவரனைவரும் மஞ்சள் நிற உடை தரித்து, மகதேவனைத் துதித்துக் கோட்டைக் கதவுகளைத் திறந்து போட்டு, வாளுடன் வெளிக் கிளம்பினர். அவ்வளவிலே இருபக்கத்து வீரரும் உருத்தெழுந்து ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்தவே, ரணகளத்திலே பிணங்கள் மலைபோல் குவிந்தன; கோட்டையிலிருந்து கிளம்பிய வீரரில் ஒவ்வொருவரும் மடியும் வரையில் முதுகுகொடாது போர் புரிந்து, பலரை மாய்த்த பின்பே, உயிர் துறந்தனர்.

மானமும் கற்புமே பூஷணமென மதித்து ஆவிநீத்த பெண்களின்தொகை பதின்மூன்றுயிரம்; முகம்மதியருக்கு முதுகுகொடாமல் மாபின் பெருமையைக் கருதி, வீர சுவர்க்கம் புகுந்த ஆடவரின் தொகையோ, 32 ஆயிரமாகும். அத்தனை உயிரைப் பலிவாங்கிய பின்பே பகதூர்ஷா வெற்றிபெற்றான். எனினும் அந்நகரினுள்ளே புகுந்து பார்த்தவுடனே, அவன்மனம் திடுக்கிட்டது. ஏனெனில், மானிட உடலின் அவயவங்கள் வெட்டுண்டு, எங்கே பார்த்தாலும்சிதறிக் கிடந்தன; சித்தூரோ சிவந்தஆடை தரித்தது போல்இரத்தத்தால் மூடப்பட்டுக் கிடந்தது. முன்னம், அல்லாவுதீனிடம் அந்நகர் சிக்கியகாலத்திலே, அத்தகைய கோர

மான காட்சிதான் அங்கே நிரம்பி யிருந்தது. எனவே, பகைவரிடம் பட்டுச் சித்தூர் சீரழிந்தது இது இரண்டாவது தடவையாகும். வெற்றிக் களிப்புடன் பகதூர்ஷா அந்நகரில் இருந்தனனாயினும், பதினான்கு நாட்களுக்கு மேல் அவன் அங்கிருக்க முடியவில்லை. அதைவிட்டு ஓடிப் போகும்படியே நேர்ந்தது. அதன் காரணம் யாதெனில்,

சித்தூருக்கு நேர்ந்துள்ள பேராபத்தைக் கண்டு, ஜாவேரிபாய் என்னும் ராணியும் போர்க்கோலம் பூண்டு, ரணகளத்தே மடிந்தபின்னர், ராணி கர்ணாவதிக்குக் கவலை யதிகரித்தது. "பச்சைப் பாலனான உதயசிம்மனைக் காக்க வேண்டும், அஃதோடு சித்தூரின் சீரழிவையும் தடுக்க வேண்டும்" என்பதே அவளுக்கிருந்த கவலை. குழந்தையாகிய உதயசிம்மனைப் பூண்டிக்கு அனுப்பி, ஓரளவு கவலை தீர்ந்தனள். பின்பு சித்தூரைக்காக்க யாது செய்யலாமென ஆலோசித்து, அப் பேபரின் பிள்ளையும் வலியாதனுமான ஹுமாயூனுடைய உதவியை நாடினள். அதற்கு அறிகுறியாக ரட்சாபந்தனம் என்னும் அரிய அடைக்கலப்பாசம் ஒன்றை அனுப்பினாள் அம்மன்னவனுக்கு.

இச்சந்தர்ப்பத்தில், ரட்சாபந்தனம் என்பதின் வரலாற்றை விளக்குவோம். தனது கற்புக்கோ மானத்துக்கோ பங்கம் நேருமெனத் தோன்றுங்காலையிலும், தனது தாய் நாட்டினுக்குப் பேராபத்து விளையுமென்று தெரியுங்காலத்திலும், அதனைக்காத்து மாசின்றி வெளியேற ராஜபுத்திர மங்கையர் தம்மாலியன்ற மட்டும் பெருமுயற்சி செய்வர்; அவ்விதம் பெருமுயற்சி செய்தும் பலிக்காமல் போய், ஆபத்தும் தலைமிஞ்சி விட்டாலோ, அக்கணமே அம் மங்கையர் தமது நாட்டில் வீரசிகாமணி யாரென நன்கு

ஆராய்ந்து, “வெற்றி வீர! பேராபத்து நேர்ந்[illegible]ள்ளது அதனைக்காப்பது உனதுகடமை. நீ சுத்த வீரனென[illegible]க் கேள்வியுற்று, உனது உதவியை நாடுகின்றேன். அதற்கு அ[illegible]யா ளமாக இதோ ரட்சாபந்தனம் அனுப்பியுள்[illegible]ன்” என்று கூறித் தன் உயிர்த்துணையைத் தூதனுப்[illegible]ர். அவ்வீரனை அம்மங்கையர் முன்பின் பாராதவர்களாகவும் இருப்பர்; அந்த ரட்சாபந்தனமோ அம்மங்கையின் நிலைமைக்கு ஏற்றவாறு, பட்டுக்கயிறாகவோ, தங்கக் கடகமாகவோ, வயிரம் வைத்திழைத்த வளையலாகவோ இருக்கும். ராஜகுமாரி ஓர் ஏழைக்கும், ஓர் ஏழையின் மகள் ஓர் அரசகுமாரனுக்கும் அனுப்புவதுண்டு. தேர்ந்த வெற்றிவீரனாக இருக்கவேண்டுமென்பதே அம்மாதரின் கருத்தா யிருக்கும். அவ்வீரனது குலப்பிரிவையோ பதவியையோ அம்மாதர் கவனியார். ஒரு பெண்ணினிடமிருந்து ரட்சாபந்தனம் வந்துவிடின், உண்மை வீரனாயிருப்போன் அதனை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். அவள் விரும்பிய வண்ணம் உதவி புரிவதில், அவன் தனது உயிரை[illegible]யிழக்க நேரினும் நேரலாம்; அப்பொழுது அவன் தனது ஆருயிரை ஒரு பொருட்டாக மதியான்; உயிரை யிழவாமல், அப்பெண்ணின் கோரிக்கையை நிறைவேற்றிவைப்பின், என்ன பல[illegible]ன் கிடை[illegible]பகதூர் நாடு கிடைக்குமா, அல்லது அப்பெண் ந[illegible]மீட்டதும், வளா, என அவன் எதையும் சிந்தியான். அ[illegible] கையால் வண்ணம் உதவிபுரிந்து, காரியத்தைச் சாதிப்பி[illegible] மரியா நம் கடமையை நிறைவேற்றியவ ராவோம். உல[illegible]ன், ராஜ எத்தும்; உயிர்போயினும், புகழுடம்பு நிற்கு[illegible]ணிழந்த அவன் கருதுவான். அவனும் அப்பெண்[illegible] ராஜ அறியாதவனாக இருப்பினும் இருப்பான். ரட[illegible]

தைப் பெற்றுக் கொண்டதும், அவன் அவளது சுவீகார சோதர[illegible]வான்; அவளும் அவனது சுவீகார சோதரியா[illegible]ள். கடமையை நிறைவேற்றும் வரையில், அவ்விருவருக்கும் அத்தகைய உறவே நிகழ்ந்துவரும். என் கோரிக்கையை [illegible]டேற்றின், நான் உனக்கு மாலையிடுவேன் என அப்பெண் கன்னியாயிருப்பின் ஒரு சமயம் சொல்லலாம். கோரிய காரியம் சித்தியானதும், அவள் அங்ஙனமே அவனுக்கு மாலையிட்டு, அவனை மணாளனாகப் பெறுவாள். ரட்சாபந்தனம் பெறுவதை ஒரு பெரும் பெருமையாகவே வீரர் மதிப்பர். புகழுடன் வளர்ந்து புகழுடன் போகவேண்டுமென்று விரும்புவோர், அதனைப் பெருமையாக மதியாமல் வேறு எங்ஙனம் மதிக்கக்கூடும்? ரட்சாபந்தனத்தைப் பெற்றுக் கொண்டவுடனே, அவ்வீரன் தனது நிலைமைக்கு ஏற்பத் தானும் பட்டு, பொன், ரத்தினம் ஆகிய ஒன்றினாலான ரட்சாபந்தன[illegible] அனுப்பித் தன் சம்மதியைத் தெரிவித்து ஆறுதல் சொல்வான்.

சங்கர சிம்மனது [illegible]விகளில் ஒருத்தியான ராணி கர்ணவதியும் அவ்[illegible]தமே ஹுமாயூனுக்கு ரட்சாபந்தனம் அனுப்பினள். [illegible] பிள்ளையாகிய உதய சிம்மனைக் காக்க [illegible]டுமென்[illegible]தோடு, சித்தூரையும் காக்க வேண்டுமென் அது க[illegible]கோரிக்கை. அவன் முகம்மதியனாயினும், பின் யோசி[illegible]ன் பெருந்தன்மையையும் வீரத்தையும் நன் அரசனை[illegible] ராணா சங்கனுக்கும் பாபருக்கும் யுத்தம் முடியா[illegible]லையில், அவனும் கூடவிருந்து போரை நடத்திய சபையை[illegible]லமான நோக்கமும் பெருந்தன்மையும் பொருந் அவனை[illegible]த வீரனுமாவான்; ஆதலின், அவன் அதனை கலங்[illegible]ண்டு, ராணிக்குத் தைரியம் சொல்லியனுப்பி

னுன். ஆனுல், அவன் வருவதற்குள் சித்தூர் வீழ்ந்து விட்டது. என்றாலும், அவன் தன் வாக்கை நிறைவேற்றாமலில்லை. ரட்சாபந்தனத்தை மதித்தே அவன் சித்தூரை மீட்க வந்தானுயினும், அதற்கு மற்றொரு காரணமும் உண்டு.

டில்லியில் அரசு செலுத்திய இப்ராஹிம் லோடி என்பானைப் புறங்கண்டே பேபர் பட்டம்பெற்றான். அவனுக்குப்பின் அவன் பிள்ளையான ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தனன். அந்த இப்ராஹிம் லோடி இறந்துபோய் விட்டபோதிலும், அவனது தம்பியான அல்லாவுதீன் என்பானே டில்லி யரசைக் கைப்பற்ற முயன்றனன். அதற்கு அப் பகதூர்ஷா உதவியா யிருந்தான். தவிர, "மத்திய இந்தியாவின் முகம்மதியச் சிற்றரசுகளை ஜயித்தால்தான், டில்லி யரசுக்கும் மதிப்புண்டாகும்; அரசும் நிலைக்கும்" என ஹுமாயூனுக்குத் தோன்றியது. அக்காரணத்தினுலும், பகதூர்ஷாவை ஹுமாயூன் எதிர்க்க வந்தானெனலாம்.

ராணி கர்ணுவதி ரட்சாபந்தனம் அனுப்பிய காலையில், அவன் வங்காளத்தே போர்புரிந்து கொண்டிருந்தான். திடீரென்று அப்போரை நிறுத்திவிட்டு வந்துவிட, அவனால் முடியவில்லை. கூடிய விரைவில் அவன் விரைந்து வந்தானுயினும், அதற்குள் சித்தூர்க்கோட்டை சிதைக்கப்பட்டுப் போயிற்று. அப்பால் ஹுமாயூன் தோன்றி [illegible] மாலையிடு ஷாவை முறியடித்து, அந்நகரை மீட்டான்; அவன் கோரிய ராணு விக்கிரம ஜித்தனைத் தருவித்துத் தன் [illegible], "நாம் அவனது அரையில் உடைவாளைச் செருகி, உரி[illegible]கம் நம்மை [illegible]தையும் செய்தான். சித்தூர் மீட்கப்பட்டவுடன்" என்றே புத்திரர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. [illegible] முன்பின் குருடன் மீண்டும் கண்பெற்றுக் களிப்பதுபோல் ரட்சாபந்தனத்

புத்திரர் அனைவரும் களிகூர்ந்தனர். அதனால் விக்கிரம ஜித்தனுக்கும் அரசு கிடைத்தது. கிடைத்து மென்ன ? அவனுடைய குணக்கேடு அவனை விட்டகலவில்லை. பட்டுப் பட்டாயினும் புத்தி வாராதா என்பர் பெரியோர், விக்கிரம னுக்கோ படாதபாடு பட்டும் நற்புத்தி வரவில்லை. பிறவிக் குணம் எங்ஙனம் போகும் ?

கடுஞ்சொல்லும் படபடப்பும் காட்டிப் பாளையக் காரரை நடத்திவந்ததனால்தான். முன்னம் நடுநாட்டுக்கு அனர்த்தம் நேர்ந்தது. அரசையும் அவன் சிலநாள் இழந்து நின்றான். மீண்டும் அவன் தன் சிற்றரசுகளையும் பாளையக் காரரையும் உதாசீனமாகவே நடத்தி வந்தான். கேடு வரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே என்பது பழ மொழி. ஒருதினம் அவன் தன் சிற்றரசர்களும் பாளையக் காரரும் புடைசூழ, அத்தாணி மண்டபத்தே வீற்றிருந்த னன். அப்பொழுது பலரும் அவனுக்குக் குறிப்பாக நற் புத்தி புகட்டினர். அச் சிற்றரசுகளில் ஒருவன் ராவ் கூர்ம சந்தன் எனப்படுவான். அவன்தான் சங்கரசிம்மனை ஆபத் துக் காலத்தில் காத்துவந்தவன் ; வயதிலும் வரிசையிலும் அவனே மூத்[illegible]. அத்தகைய மூத்தோன் சொல்லும் [illegible]ர்த்தைஅ[illegible]மாகவேயிருக்கும். ஆனால்[illegible]க்கிரமனுக்கோ ப[illegible] அவன்[illegible] இருந்தது. உடனே அவ் விக்கிரமன் முன் ராஜபுத்திர[illegible]பாது, மூர்க்கமேகொண்டு, அக் கூர்மசந்தனை கறிந்தவன்[illegible]லேயே தாக்கினன். அந்த அவமானந் தாங்க நடந்த கா[illegible], சிற்றரசரும் பாளையக்காரரும் அக்கணமே, வன்; விசா[illegible] விட்டகன்று போய்விட்டனர். அகன்ற பின்னர், தியவன். [illegible] பட்டத்திலிருந்து போக்கினாலன்றி நாடு மிகவும் ஏற்றுக்கெ[illegible]கட்[illegible] விடுமென அவர்களுக்குத் தோன்றியது.

ராஜபுத்திரர் தமது அரசனுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒருங்கே வழங்குவர். அத்தகைய பெருங்குணம் வாய்ந்தோர் விக்கிரமஜித்தனை ராஜபதவியிலிருந்து விலக்கிவிடக் கருதினரென்றால், அவன் எத்துணை குணக் கேடனா யிருந்தானென நாம் விரித்துரைக்கவும் வேண்டுமோ? விக்கிரமனுக்குப் பதிலாக யாரை அரியணையில் அமர்த்துவதென அனைவரும் ஆலோசித்தனர். உதயசிம்மனை உடனே ஏற்றிவைக்கலாமென்றாலோ, அவன் அப்பொழுது சிறு குழந்தையாகவே இருந்தான். சிறு குழந்தையைப் பட்டத்தில் அமர்த்தினால், அவனுக்குப் பதிலாக ஒருவன் அரசை நடத்தவேண்டும். அங்ஙனமானால், ஒரு சமயம் கட்சிப் பிரதிகட்சி ஏற்படும். ஆதலின் தக்க வயதுள்ள ஒருவனை அரசனாக்கக் கருதினர். சங்காரனது தம்பியான பிருதிவிராஜனது பிள்ளை வனவீரன் என்பான் இருப்பதாகத் தெரியவந்தது. உடனே அனைவரும் அவனையடைந்து, "விக்கிரமன் வரவரக் கெட்டுவிட்டான். அவனை யாங்கள் இனி வேந்தனாக வணங்க மாட்டோம். உதயசிம்மனுக்கே அரசு உரியது. ஆனால் அவன் சிறு குழந்தை. அவன் வாலிப வயதடையும் வரையில், நீயே அரசை ஏற்றுக்கொண்டு ஆண்டுவர வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். அதற்கு அவனோ, "எனக்கு வேண்டாம் அரசு. அப்பாரத்தை என்னால் வகிக்க முடியாது. பட்டத்துக்கு உரியவன் இருக்க, யான் முடிசூடச் சம்மதியேன்" என்று மறுத்தனன். பின்னர், "சிறிது காலத்திற்குத்தான் ராஜ்ய பாரத்தை நீ வகிக்கவேண்டும். வேறு யாருமில்லை. நீ தட்டக்கூடாது" என்று கோரினர். அதன் மேல் வனவீரன் ஒருவாறு இசைந்தனன்.

வனவீர சிம்மன்

விக்கிரமனது விபரீதம் கரைகடந்து விட்டதனால்தான் வனவீரனை வேந்தனாக்கச் சிற்றரசரும் பாளையக்காரரும் சித்தங் கொண்டனர்; உடனே அவனுக்கு முடிசூட்டப்பட்டது. பச்சைக் குழந்தையான உதய சிம்மனும் வனவீரனது பாதுகாப்பில் வளர்ந்து வந்தான். அரியணையில் ஏறியமர்ந்து, அரசவாழ்வை உருசி பார்த்ததும், அவன் சித்தம் திரும்பிவிட்டது. ராஜ்ய பாரம் எனக்கு வேண்டாம், அதனை வகித்தல் இயலாத காரியம் என்று முன்பு மொழிந்த வனவீரனே, இப்போது, 'நாமே ஏன் நெடுங்காலம் அரசை ஆளக்கூடாது' என்று சிந்திக்கலாயினன்.

அறமே மிகவும் நிரம்பி அருள்பூத்த மனதுடையோரும் பெறுதற்கரிய செல்வம் பெற்றபின், சிந்தனை பிறிதாவரென்பது உலக இயற்கை. செல்வச் செருக்கில் ஆழ்ந்ததும், அவர்கள் தமது சுற்றத்தையும் துணையையும் நோக்கார்; பாப புண்ணியத்தைப் பாரார்; தீவினையின் விளைவையும் கருதார். இதற்கு வனவீரனே உதாரணமானான். நெடுங்காலம் அரசை யாளவேண்டுமாயின், விக்கிரமனையும் உதயனையும் விண்ணேற்றிவிட வேண்டுமென்று அவன் துணிவு கொண்டனன். உதயன், தாயும் தந்தையுமிழந்த அனாதைக் குழந்தை; ஆயினும் செவிலித்தாயோ அவனைத் தன் குழந்தையினும் பன்மடங்கு பட்சமுடன் வளர்த்து வந்தனள். வனவீரனது தோற்றத்தையும் போக்கையுங் கண்டு, அவளுக்கு ஐயுறவு நிகழ்ந்தது. ஆதலால், அல்லும் பகலும் அவனைவிட்டகலாது, அவன்மீதே கண்ணா யிருந்து வந்த

ளாள். அப்பொழுது அவனுக்கு வயது ஆறு. ஒருதினம் அவள் உதயனுக்குப் பாலன்னம் ஊட்டிக் கண்வளர்த்திய பின்பு, அயர்ந்திருந்தனள் அரண்மனையில். அப்போது அந்தப்புரத்திலே அழுகுரல் கேட்டது. உடனே அவள் விரைந்து சென்று, விஷயம் யாதென வினவினள். விக்கிரமனை வனவீரன் வாளுக்கு இரையாக்கினனெனவும், அதனால் மனைவியரும் பிறரும் புலம்புகின்றனரெனவும், அவளுக்குத் தெரியவந்தது. அப்பால் ஒரு வினாடிகூட அவள் அங்குத் தாமதிக்கவில்லை. உதயனுக்கும் அதே கதி நேர்ந்துவிடுமென்று கருதிப் பரபரப்புடன்வந்து, பாலனையெடுத்து, ஒரு பணியாளனிடம் கொடுத்துக் கோட்டைக்கு வெளியே அக்குமாரனை அப்புறப்படுத்தினள். பின்பு, தான் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தனது அருமைக் குழந்தையை உதயசிம்மனது படுக்கையில்கிடத்தி முன்போல் தானும் அயர்ந்திருந்தனள். அவ்வளவில் வனவீரன் ஈட்டியுடன் யமன்போல் தோன்றி, எங்கே உதயன் என்றனன். அதுகண்டு நடுங்கிய தாதி ஒன்றும் உரைக்க முடியவில்லை; ஏதேனும் விளம்பலாமென்றாலோ, உதடுகள் ஒருபுறம் துடித்து நின்றன. அப்பாவியோ மீண்டும் எங்கே உதயன் என்று கொதித்தனன். வாய்திறந்து விளம்பமுடியாத அத்தாதி தன் குழந்தை படுத்தயரும் தொட்டிலைச் சுட்டிக் காட்டினள். உடனே அப்பாதகன் கைதனில் இருந்த ஈட்டியோ அப்பாலனது மார்பில் பாயவே, அரைக்கணத்திற்கெல்லாம் அக் குழந்தையின் ஆருயிர் பறந்துவிட்டது. பல சொல்லிப் பயனென்ன? உதயசிம்மன் உயிர் நீங்கினன் என அரண்மனையிலிருந்தோர் அனைவரும் அழுதாற்றினர். பின்னர், அச்சவம் அடக்கஞ் செய்யப்பட்டது. அத்தாதியும்

உதயனுக்காக மாயக்கண்ணீர் வடித்தது கொஞ்சமன்று. தன்னிடம் அடைக்கலமாக வளர்ந்துவந்த அக்குழந்தையைக் காக்கக் கருதி ஒரு தாதி தன் குழந்தையைப் பறிகொடுத்தனள். என்னே தாதியின் விசுவாசம்! அவள் பெயர் பண்ணா. பண்ணா என்றால் ரத்தினம் என்பது அர்த்தம். உண்மையில் அவள் பெண்களின் ரத்தினமாவாள். அத்தாதியைப்போல் வேலையாளனும் அரசிளங்குமாரனிடம் பேரன்பு பூண்டவன். ஆதலின், உதயனை அவன் இரவிலேயே ஒருவருமறியாமல் கோட்டைக்கு வெளியே கொண்டு போயினன். போகுங் காலையில், நல்ல வேளையாக உதயனும் கண் விழிக்கவில்லை. பண்ணா குறிப்பிட்ட இடத்திலே பாலனை வைத்துக்கொண்டு, அப் பணியாளன் வழிமேல் விழி வைத்திருக்க, அவளும் அங்கே போய்ச் சேர்ந்தாள். சேர்ந்தபின், உதயனை எவ்விடத்தே அந்தரங்கமாக வைத்து வளர்ப்பதென இருவரும் யோசித்தனர். சித்தூருக்காக உயிர் துறந்த பாக சிம்மனது மைந்தன் சிம்மாரவினிடம் போகலாமென்று தோன்றியது. அவ்வாறே அவனை யடைந்து, உதயனை வளர்த்து வரும்படி வேண்டினர். அவனோ, “என்னாலாகாது. விஷயம் வெளியாயின், எனக்கும் என் குடும்பத்திற்கும் அனர்த்தம் நேரும்” என்று கூறிமறுத்துவிட்டான். அப்பால் இருவரும் அப்புத்திரனுடன் சென்று, தங்கபுரப் பாளையப்பட்டை வேண்டிக் கொண்டனர். அவனும் அச்சங்கொண்டு, ஆகாதென்று புகன்று விட்டனன். அதன் பின், கோமளமேரு என்னும் கோட்டையின் தளபதியை யடைந்து, குழந்தையை அவன் மடிமீதிருத்தி, ‘அரசிளஞ் சிங்கத்தைக் காக்கவேண்டும்’ என்று இரந்து நின்றனள் அத்தாதி.

அவனோ நடுநடுங்கித் தத்தளித்தான். அருகிலிருந்த அவனது தாய், "மைந்த! நீ சூரிய குலத்தில் தோன்றியவன் அன்றோ? உன் மூதாதைகளில் ஒருவனான சிபி, தன்னை யடைக்கலமாக வந்தடைந்த புறவுக்காக உயிரையும் வழங்கினனே! மற்றொரு மூதாதையான ஸ்ரீராமபிரான் தன் பகைவனது தம்பி விபீஷணனுக்கு [illegible]ளிக்க வில்லையா? அத்தகைய பாம்பரையில் தோன்றி[illegible] இச் சமயம் அடைக்கலமாக வந்துள்ள அரசகுமாரனை [illegible] முடியாதென்கின்றாய்! ஜீவதயையில் சிறந்த ஜெயின மதத்தைத் தழுவிய நீ, அடைந்தவர்க்கு அருளாயானால் உன் அறம் என்னாகும்? உன் ஆண்மைதான் என்னாகும்? உனது உயிர்போக நேரினும், உதயனை நீ பாதுகாத்தே தீர வேண்டும்; அவனோ சங்கா சிம்மனது பிள்ளை; சிறிது காலத்திற்கெல்லாம் அரசனாக வரவேண்டியவன். ஆண்டவன் இருக்கின்றார். அபாயம் வராது; எல்லாம் இனிது முடியும்" என்று கனிவுடன் கூறினள். அதன்மேல் அவன் ஒருவாறு மனமொப்பினன். பின்பு, அத்தாதியும் வேலையாளும் ஒன்று மறியாதவர் போல், திரும்பி வந்து, சித்தூர் அரண்மனையிலே தங்கள் தொழிலில் அமர்ந்திருந்தனர்.

கும்பமேரு என்னும் கோட்டையின் அதிபதி உதயனைத் தன் மருமானென அனைவருக்கும் விளம்பி வளர்த்து வந்தான். ஒரு தினம் அவன் மாளிகையில் விருந்தொன்று நடந்தது. அதற்கு மத்தியபதியின் சிற்றரசர், பாளையக்காரர், தனவந்தர், முதலிய பலரும் போயிருந்தனர். அப்பொழுது அவர்களிற் சிலர் உதயனை உற்றுநோக்கி, "இப்பாலனிடம் ராஜலட்சணங்கள் நிரம்பியுள. அங்ஙனமே நடையும் உடையும்உள; சங்காசிம்மனது சாயலும் காணப்

படுகின்றது" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். சிறிதுகாலஞ் சென்றபின், சுவர்ணகிரிச் சிற்றரசனும் சில பாளையக்காரரும் கும்பமேருவுக்குப் போயினர். அவர்களை வரவேற்று உபசரிக்க, உதயன் அனுப்பப்பட்டனன். அவன் அவர்களை எதிர்கொண் டழைத்த நேர்மையைக் கவனித்த காலை, [illegible]ன்னம் அவர்கள் கொண்ட ஐயுறவு உறுதிப் பட[illegible]று. அதனுல், "உதயன் உயிர் நீங்கவில்லை; உயிரு[illegible]னிருக்கின்ருன்" என்ற வதந்தி எங்கும் பரவிற்று. பரவவே, சிற்றரசுகளும் பாளையக்காரரும் கும்பமேரு சென்று, மீண்டும் அப் பாலனைப் பரீட்சை பார்க்கவே, உதயனே அவன் என எல்லாரும் தீர்மானித்தனர்.

உதயன், அந்தரங்கமாக வளர்ந்து வருவதை ஆதி முதல் அறிந்துள்ள மத்தியபதியின் பிரதம பாளையப்பட்டு, ஆம் அது உண்மை தான் என்று கூறி, நடந்த விஷயத்தை ஆதியோடந்தமாகச் சொன்னுன்; பின்பு, தாதியையும் வேலையாளையும் வருவித்து வினவ, அவ் விருவரும் நடந்த விஷயத்தை அவ்விதமே நவின்றனர். இனியும் இரண் டொருவர் ஐயங்கொள்ளலாம், அதனையும் அகற்றுவோம் என அப்பிரதம பாளையப்பட்டு கருதி, அம்மைந்தனுடன் சமமாக வீற்றிருந்து, அன்னமருந்தினன். பின்பு, சுவர்ண கிரிச் சிற்றரசன் தனது மகளை உதயனுக்கு மணம் புரிவித் தான். அப்பொழுது உதயனுக்கு வயது பதின்மூன்று. அப்பால் பாளையக்காரரே உதயனது பாதுகாப்பாள ராயினர். பின்னர் கும்ப மேருவிலேயே பலரும் உதயனை அரசனென மதித்து முடிகவித்து, மரியாதை செலுத்தினர். இனி, வன வீரனைப்பற்றிச் சிறிது கவனிப்போம். உதயனை அவன் கொலைபுரிந்த செய்தி நடுநாடெங்கும்

பரவிற்று; பாவவே அவனை வெறுக்காதார் ஒருவருமில்லை. அரசை விரும்பி, அரசிளங் கோவைக் கொன்ற பாவியின் முகத்தையும் பார்க்கக்கூடாதென்றே அனைவரும் கருதினர், செல்வச் செருக்கில் ஆழ்ந்துவிட்ட வனவீரனோ எதையும் லட்சியம் செய்யவில்லை. அரசுள்ள வரையில் அச்சமில்லை யென்று அகம்பாவங் கொண்டான். அது காரணமாகப் பாளையப்பட்டுகளில் ஒருவனைப் பெரிதும் அவமதிக்க லாயினன். சித்தூர் அரண்மனையிலே விருந்து நடப்பின், அதற்குச் சிற்றாசரும் பாளையக்காரரும் அழைக்கப்படுவர். அவர்களுடன் அரசனும் அமர்ந்து அரிய உணவு கொள் வான். அப்பொழுது அவர்கள் ராணுவுடன் தாராளமாகப் பேசி மகிழ்வர். ராணுவும் விநோதமாக உரையாடுவான். ஆனால் ஒருவருக்கொருவர் மரியாதை காட்டுவதில் எள்ளள வும் குறைவிராது. பாளையக்காரரிலே தனக்கு மிகப்பிரிய முள்ள ஒருவனுக்கு அரசன் தன் தட்டிலிருந்து உணவுப் பொருளை எடுத்தனுப்புவ துண்டு. அதனை அப்பாளையப் பட்டு பரம கௌரவமாகவே மதித்து மகிழ்வான். இதா பாளையக்காரரும் அவனுக்கு அத்தகைய மகிமை கிடைத் ததெனப் பெருமையுடன் பேசிக்கொள்வர். அவ்விதமே ஒரு தினம் வனவீரன் விருந்து நடத்தினான். அதற்குச் சில பாளையக்காரர் போயிருந்தனர். அவர்களில் ஒருவன் சந்திர சிம்மனது சந்ததியில் தோன்றியவன்; பெரும் புகழும் பெற்றவன். அவனுக்கு வனவீரன் தனது தட்டி விருந்து, சில உணவுப் பொருள்களை யனுப்பினான். அவ னுக்கோ வனவீரனது கொலைச் செயலைக்கண்டு பரம வெறுப்பிருந்தது. ஆதலின், அரசை அநீதியாக அடைந்த ஒருவனது கையிலிருந்து உணவுப் பொருளை ஏற்றுக்கொள்

வதா என அவனது மனம் பதைக்கலாயிற்று. பதைக்கவே, அவன் அதனை மறுத்தனன். உடனே வனவீரன் அவனை அவமதிப்பாகப் பேசி, அவனது நிலங்களையும் பூமிகளையும் பறித்துக் கொண்டான். அச்செயல் தங்களையே அவமதித்ததுபோலாகுமென இதர பாளையக்காரரும் பிணங்கினர். வனவீரனது செயல்கள் ஒவ்வொன்றும் அங்ஙனமே படு மோசமாயிருந்தன. அதனால் அனைவரும், "தலைக்குக் கொள்ளி, விலைக்கு வாங்கிக்கொண்டோமே? இனி என்ன செய்வது" என்று ஏங்கியிருந்தனர். அச்சமயத்தில் தான், உதயன் உயிருடனிருக்கும் செய்தி அனைவருக்கும் புலப் பட்டது. அதனால் அனைவரும் மேலே சொல்லிய வண்ணம், உதயனை யடைந்து அவனை அரசனாகக் கொண்டனர். சிற்றாசர்களிலும் பாளையக்காரரிலும் இருவரே உதயனை மதியாமல், வனவீரனது பக்கத்தில் இருந்தோராவர். அவ்விருவரையுங்கூட வனவீரன் மனம் நோகப் பண்ணினான். அதனால் இருவரும் கொதித்தெழுந்தனர் கோபங்காட்டி; உடனே வனவீரன் அவர்களில் ஒருவனை வாளுக்கிரையாக்கினான்; மற்றவனையோ அடிபணியச் செய்தான். இவ்விதம் பாளையக்காரர் அனைவரும் வனவீரனை விட்டகலவே, அவன் தனியே சித்தூரில் இருந்து வந்தனன்.

அங்ஙனமிருக்கையில், ஒருநாள் வனவீரன் தனது மகளின் மணத்துக்காக மிக்க ஏற்பாடு செய்தான். அதற்காக, 500 குதிரைகள்மீதும், 10 ஆயிரம் காளைகளின் மீதும் கச்சநாட்டிலிருந்து கலியாணச் சரக்குகள் வந்து கொண்டிருந்தன. அவைகளைப் பாளையக்காரர் வழிமறித்துப் பறித்துக் கொண்டனர். பின்னர் அப்பொருள்கள் உதயசிம்மனது விவாகத்துக்கு உதவின. அவ்விவாக சம

..த்திலே, ராஜபுதன நாடுகளிலுள்ள எல்லா அரசரும் தலை வரும், உதயனையே அரசனென மதிப்பதுபோல், அவனுக்கு மணவரிசை பலவும் அனுப்பினர். இவ்வளவும் வன..னுக்குத் தெரியவந்தன. அப்பொழுதும், இனி நம.. அரசு நிலைக்காது என அவன் அறிந்துகொள்ளவில்லை; இன்னும் பார்க்கலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். சித்தூரி.. அவனுக்கு மெய் காவலாகச் சில வீரரே யிருந்தனர். ஆகலின், இன்னும் பல வீர..ரை வேலையில் அமர்..ம் வண்ணம், அவன் தனது மந்திரிமாருக்குச் சொல்லினன். அமைச்சரும் அங்ஙனமே செய்வதாகச் சொல்லி, உ..யனை ஆதரிக்கும் வீரரில் ஆயிரவரைக் காவலராக அமர்த்தினர். கோட்டையைக் காவல் புரிந்து நின்றோரும் உதயனைச்சார்ந்திருப்போராயினர். அவ்வாறெல்லாம் திட்டஞ் செய்தபின்பு, சிற்றரசரும் பாளையக்காரரும் ஒருநி..் திடீரென்று உதயனுடன் சித்தூரில் புகுந்து, அத்தாணி மண்டப மடைந்து, அவ்வுதயனை அரியணையில் அ..ர்த்தி, அவனுக்கு முடிசூட்டினர். உடனே நகரமாந்தரும் ..ங்குவந்து சேர்ந்து, உதயனுக்கே காணிக்கை செலுத்தினர். ..து கண்ட வனவீரன் ஒன்றுந் தோன்றாது தயங்கினன். கொலை பாதகனாயிருந்த போதிலும், அவனைக் கொல்ல ஒருவரும் ஒருப்படவில்லை. அது அவனுடைய நற்காலம் போலும்! மனைவி மக்களையும் சொத்தையுங் கொண்டு, ஊரைவிட்டு ஓடி, உயிருடன் எங்கேனுஞ்சென்று வாழும்படி அவனுக்கு அனுமதி கிடைத்தது. அவ்வாறே அவனும் நாகபுரி சென்று, தன் காலத்தைக் கழித்தான்.

ராணா உதய சிம்மன் 1542 கி.பி.

ராணா உதய சிம்மன் 1542-ல் சித்தூரிலே சிம்மாசனம் ஏறினான். அப்பொழுது அவனுக்கு வயது பதின்மூன்று. பாளையக்காரரின் பரம ராஜவிசுவாசமே அவனுக்கு அரசு கிடைக்கச் செய்தது. தவிர, பன்னா என்ற தாதியின் பேரன்பினாலேயே அவனது உயிர் தப்பியதெனவும் முன்பே சொல்லியுள்ளோம். அத்தகைய பேராபத்திலிருந்து நீங்கி, அரியணையில் அமர்ந்ததுபற்றி, நடு நாட்டினர் அனைவரும் அகமிகக் களித்தனர். அச்சமயம் கவிஞர் களிகூர்ந்து கவனஞ் செய்த மங்களவாழ்த்து இன்றும் ராஜபுதனத்திலே மிகச் சிறப்பாக வழங்கி வருகிறது.

சங்கசிம்மனது காலத்திலே சித்தூர் உச்சஸ்தானம் அடைந்ததென மேலே சொன்னோம். அச் சங்கரன் இறந்தபின், சித்தூரின் சீரும் சிறப்பும் கீழ் நோக்கலாயின; அவனுக்குப் பின் பட்டமேறிய ரத்தின சிம்மன் கட்டுக்கடங்காத காளையாயிருந்து, ஐந்து வருஷத்திற்குள் ஆவி துறந்தான், அவன்பின் வந்த விக்கிரமனோ விபரீத வழியிலிறங்கி, அனைவருக்கும் வெறுப்பை யுண்டுபண்ணி, ராஜ வாழ்வை யிழக்கலானான். வனவீரனோ கொலைபாதகனாக முடிந்து போனான். அவனுக்குப் பிறகு வந்த உதயனும் அந்தோ! கோழையாயினன்.

உதயனிடம் அரசக்குரிய குணமும் இல்லை, நலமுமில்லை; குலத்துக்குரிய வீரமுமில்லை; ஆடவருக்குரிய ஆண்மையுமில்லை; சுருங்கச் சொன்னால், ஒன்றுக்கும் உதவாத உலுத்தனே யானான். மேலும், அவன் காமவலையில் சிக்கி,

அல்லும் பகலும் அதிலேயே ஆழ்ந்து கிடந்தான். பெயருக்கு மட்டும், அவன் அரசனாயிருக்க, அவனது கிழத்தியான தேவி என்பாளே அரசை நடத்துபவளாள்.

அச்சமயம் டில்லி நகரிலே அரசாக விளங்கியவன் அக்பர் எனப்படுவான். அந்த அக்பரோ எவ்விதத்திலும் உதயனுக்கு மேற்பட்டவன்; உதயனுடன் ஒப்பிடின், அவன் மகாவீரன்; மிக்க புத்திமான்; நாட்டின் பரப்பைப் பெருக்குவதிலேயே நாட்டங் கொண்டவன்; சாம, தான, பேத, தண்டம் என்னும் ராஜ தருமம் நான்கிலும் தேர்ந்தவன். எத்தகைய பகையையும் பக்குவமாகப் புறங்கண்டு, வாகைசூடும் ஆற்றலுடையவன். நம் இந்தியாவிலே மொகலாய அரசை உற்பத்தி செய்தவன் பேபரே. ஆனால் அவனது பேரனான அக்பர்தான், அவ்வரசை உண்மையில் நிலை நாட்டியவன். தனது இளமையிலேயே அவன் ராஜபுத்திரரின் வீரதீரத்தை நன்கறிந்தவன். ஆதலின், அவர்களைத் தனக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டுமென அவனுக்குப் பேராவல் பிறந்தது. அதுபற்றி, ராஜதந்திரங்கள் நான்கையும் அவன் மேற்கொண்டு, ராஜபுத்திரரை வசப்படுத்த முயன்றான். சாமோபாயத்தினால் சிலரை நேசப்படுத்தினான்; தானோபாயத்தினால், சிலரை உட்படுத்தினான். பேதோபாயத்தினாலும் சிலரை வசமாக்கிக் கொண்டான். ஆயினும் மத்தியப்பதிக்கோ நாலாவது உபாயத்தையே கையாளலாயினன். அதற்கு அனுகூலமாக, அம்மத்தியபதி அக்பரது பகைவனொருவனுக்கு உதவி புரியலாயிற்று. அக்பர்மீது பகைமை கொண்டு அப்பதி அங்ஙனம் உதவி புரியவில்லை; அடைக்கலமாக வந்தடைந்த ஒருவனைக் காக்க வேண்டுமென்று கருதியே, உபகாரஞ்

...து. அச்செயலை அக்பர் ஒரு சாக்காகக் கொண்டு, ...பதியின்மீது வர்மங்கொண்டனன். ஆயினும் அவன் ...ன பெரும்படை கொண்டு அந்நாட்டைத் தாக்க வரவில்லை. அதன் பலத்தைப் பரிசோதிக்கக் கருதி, மோதம் என்னும் ஒரு சிறு கோட்டையைத் தாக்கும் எண்ணம், தன் படையை அனுப்பினன். அக்கோட்டை மத்தியபதியின் சிற்றரசொருவனது சொந்த உறைவிடம். பகைவனது சேனை வந்ததைக் கண்டு, இரண்டு பாளையக்காரர் அக்கோட்டையைக் காத்து நின்றனர். 1561-ம் வருஷம் முழுவதும் அக்கோட்டையைப் பிடிக்க மொகலாயச் சேனை சண்டை செய்தது. அந்த ஒரு வருஷ காலம் அவ்விரு பாளையக்காரரும் தீரமுடன் அதனைக் காத்து, எதிரியைத் தடுத்துநின்றனர். ஆயினும், கடைசியிலே உணவுப்பொருள் தட்டிவிட்டது. கோட்டைக்குள்ளிருந்த வீரர் ஆகாரமின்றி மிகவும் வருந்தினர். அவ்விஷயம் மொகலாய தளகர்த்தனுக்குத் தெரியவந்தது. உடனே அவன்,, "நீங்கள் பணிவதானல், முற்றுகையை நிறுத்தி விடுவேன்" என்று அவ்விருவருக்கும் தூதனுப்பினன். போரில் பணிவதன் பதை உண்மைராஜபுத்திரர் அறிவரோ? வாகை சூடமுடியுமானல், வாகை சூடுவர்; இன்றேல் குடும்பத்தை மாய்த்துப் போரிலே மடிவர். அங்ஙனமே அவ்விரு பாளையக்காரரும் பணியாமல், தம் குலத்துடன் மடிந்து போயினர். அப்பால் 1566-ம் வருஷம் சித்தூர் படையெடுப்புக்கு அவன் ஆயத்தமானன். சித்தூரின்மீது படையெடுப்பென்றால், ராஜபுதனம் முழுவதுமே திரண்டு வருமென்பது அவனுக்குத் தெரியும். தவிர, ராஜபுத்திரத் தலைவர் பலரும் மத்தியபதி மன்னவனையே குலத்தலைவனெனக் கருதி வருவதையும்

அவன் அறிவான். ஆதலின், சாமம், தானம் ஆகிய இரண்டு உபாயங்களையும் மேற்கொண்டனன். அதனால், ஜெய்புரி போன்ற சில நாடுகள் அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து நட்பைத் தேடிக்கொண்டன; ஹிந்து சமூகத்திற்கு நன்மை புரிவதுபோல், சில காரியங்களை அவன் செய்யவே, ஹிந்துக்களிற் சிலர் அவனிடம் அன்பு காட்டலாயினர். ஆனது பற்றி, மத்தியபதியின் பக்கபலமாக நிற்கக்கூடிய பல அரசுகளும் ராஜபுத்திரக் குலங்களும் அப்பதியைக் கைவிட்டன.

உதய சிம்மனோ நாம் மேலே சொல்லிய வண்ணம், காமக்கடலில் ஆழ்ந்திருந்தான். அவனது காமக்கிழத்தியான தேவி இட்டதே சட்டமாக இருந்துவந்தது. பெண்ணேவல் செய்தொழுகும் பேடியொருவன் அரசாயிருக்கின்றனனே, அவனது உணர்வு இங்ஙனமா மாறுபட்டுக் கிடக்கும்; நாட்டின் சிறப்பும் செல்வமும் நீங்கித் தீமையன்றோ தலையெடுக்கும், என்று பாளையக்காரர் வருந்திநின்றனர். சித்தூர் வாசிகளோ அவ்வேசையை ஏசி நின்றனர். வேசையின் ஆசையில் உதயன் அழுந்திக் கிடக்கின்றனன் என்ற வசனம் அவளது காதில் எட்டியது. அதனால், அப்பெண் மிக்க நாணங்கொண்டு நாட்டின் நலத்தில் நாட்டங் கொள்ளலானாள். உதயனோ காமப்படுகுழியிலிருந்து கிளம்பாதிருந்தனன். இதற்குள் அக்பாது சேனை வந்துவிட்டது. சித்தூர் சீரழியின் அப் பழிச்சொல் தன்னையே சாருமென அவ்வேசை மனம் பதைத்துப் போர்க்கோலங் கொண்டனள்; ராணா ரணகளத்திற்கு வராமற்போயின், அவன்பொருட்டு யான் வருகின்றேன் என்று வீரம் பேசினள். உடனே சித்தூர் சேனை யுத்த சன்னத்தமாயிற்று. பாளையக்காரரும் வீராவேசத்துடன் கிளம்பினர்.

அவர்களது துணையை முன்னிட்டு, அவள் ஆண் சிங்கத்தைப்போல் அமர் செய்தாள். ராஜபுத்திர வீரரின் போர்த்திறமை இவ்வளவென்று அச் சண்டையில்தான் அக்பர் கண்டு கொண்டான். மிக மூர்க்கமாக அவனது சேனை சண்டைபோட்டும், ராஜபுத்திரரின் முன்னே நிற்க முடியவில்லை. அஞ்சாநெஞ்சு படைத்த அப்பெண்ணும் தன் வாளுக்குப் பல முகம்மதிய தளகர்த்தரை இரையாக்கினள். அதனால் மொகலாய அணிவரிசைகள் பொறி கலங்கி முறிபட்டன; அச்சேனையெங்கும் குழப்பமே நிரம்பிவிட்டது. அச்சமயம், அவள் சில வெற்றிவீரருடன் சென்று, அக்பரின் பாசறையையும் தாக்கினள். முடிவில் மொகலாயச் சேனை புறமுதுகு காட்டியோடிற்று. அக்பரோ முகவாட்டத்துடன் தேம்பி நின்றனன். ஆயினும், ஒரு பெண்ணுக்கு நாம் தோற்று வந்துவிட்டோமேயென அவன் புலம்பி, இந்த அவமானத்தைப் போக்கச் சித்தூரை எப்பாடுபட்டாயினும் பிடித்தே தீருவதென முனையலானன்.

குறிப்பு.

இராஜபுத்திர விஜயத்தின் முதல்பாகமும், மத்தியபதி சரித்திரத்தின் முன் பாதியும், இம்மட்டோடு இனிது நிறைவேறும். இரண்டாவது பாகத்திலே, மத்தியபதியின் பின்பாதி சரிதம் பூரணமாகும். ஈசனருளை முன்னிட்டு, இரண்டாம் பாகத்தை விரைவில் வெளியிடுவதாக விரும்பி நிற்கிறோம். அதில் வீர சிங்கங்களான பிரதாப சிம்மன், ஜயசிம்மன், ராஜசிம்மன் பீம சிம்மன் முதலிய மன்னவர் மொகலாய அரசை முடிவுவரையில் வெகு தீரமுடன் எதிர்த்து நின்று, வீரம் விளக்கும் செயல்கள் பலவும் விரிவாகக் கூறப்பெறும். சுபம்! சுபம்!! சுபம்!!!

Printed at the T. V. C. Press, Madras.

தமிழ் மக்களுக்கு

நம்பாரத தேசத்தின் புராதன பெருமையை விளக்கி, நம் மனதில் பண்டைக்கால சரித்திரத்தைப் [illegible] சரித்திர [illegible], காலத்துக்கேற்ற நவீன [illegible] தமிழ்மொழியில் வெளி [illegible] ஒன்றுதான் [illegible] [illegible] என்னும் [illegible] [illegible] பாரத [illegible] [illegible] வீர [illegible] [illegible] பெருமைக்கு [illegible] பொருத்தமான [illegible] விளங்குவோ [illegible] [illegible] முதலியோரின் சரித்திரம் [illegible] இரண்டாவது பாகத்தில், [illegible] முதலியோரின் [illegible]

[illegible]
32, [illegible] செட்டி வீதி,
[illegible], மதுரை.